அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை

தொகுதி 2

பதிப்பாசிரியர்கள்
டாக்டர் ஆ. தசரதன்
மொ. மருதமுத்து
மு. பரிமணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை 600 113.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்

தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை

தொகுதி 2

பதிப்பாசிரியர்கள்
டாக்டர் ஆ. தசரதன்
மொ. மருதமுத்து
மூ. பரிமணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Aracinar Kīḻtticaic Cuvaṭikaḷ Nūlakat Tamiḻc Cuvaṭikaḷ Viḷakka Aṭṭavaṇai Tokuti 2 (A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai. Volume 2.)
Editors	:	Dr. A. Thasarathan M. Maruthamuthu M. Parimanan
Publisher	:	International Institute of Tamil Studies
First Edition	:	1999
Publication No.	:	340
Language	:	Tamil
Paper used	:	TNPL 17 kg. Creamove
Size of the book	:	1/8 Demy
Printing types	:	11 points
No. of pages	:	xiv + 486
Price	:	Rs.110/-
No. copies	:	1000
Printed by	:	**Shri Vignesh Prints** 158/5, Lake View Road, West Mambalam, Chennai-33. Ph: 474 84 86
Subject	:	Catalogue of Tamil Manuscripts

Printed and published with the Financial Assistance from the Government of India, Ministry of Education & Culture, National Archives, Janpath, New Delhi, vide sanction letter F.No.31-1(99)/98 Grants dt.31-05-1999 and copyright vests with the Director, International Institute of Tamil Studies, Chennai-113.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழாய்வுகளில் சுவடியியல் ஆய்வும் அடங்கும். தமிழ் ஓலைச் சுவடிகளின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தும் வகையில் 1974 முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடியியல் பட்டய வகுப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. சுவடியியல் பட்டய வகுப்பு மாணவர்கள் ஆண்டு இறுதியில் நிறுவனச் சுவடியில் ஒன்றையோ பிற சுவடி நூலகங்களிலுள்ள ஒரு சுவடியையோ பெயர்த்தெழுதி, ஆய்வு செய்து நிறுவனத்திற்கு ஆய்வேடாக வழங்கி வருகின்றனர். இவ்வாய்வு ஏடுகளில் சில இந்நிறுவன வெளியீடுகளாக வந்துள்ளன. மேலும் சுவடிகள் தொடர்பான கருத்தரங்குகளும், பயிலரங்குகளும் இந்நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்துடன் இணைந்து திங்கள் தோறும் சுவடியியல் கருத்தரங்கைத் தொடக்க காலத்தில் இந்நிறுவனம் நடத்திவந்தது. அதன்பின்னர் 1980 முதல் சுவடிப் பதிப்புகளை வெளியிடத் தொடங்கியது. இதுவரை 47 சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

சுவடிகளை விளக்க அட்டவணை செய்து வெளியிடும் திட்டப்பணி இந்நிறுவனத்தில் 1983-இல் தொடங்கப் பெற்றது. இத்திட்டத்தின் பயனாகக் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் முனைவர் சூ. நிர்மலாதேவியால் அட்டவணை செய்யப் பெற்று, 'கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை (முதல்தொகுதி)' என்ற தலைப்பில் 1997-இல் நூலாக வெளிவந்தன. 1989-இல் 'Siddha Medical Manuscripts in Tamil' என்ற நூல் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்று நிறுவனத்தில் வெளியிடப்பெற்றது.

தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தயாரிக்கும் பணியின் தொடர்ச்சியாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள சுவடிகளைப் பாதுகாக்கவும், அட்டவணைப்படுத்தவும் 1991-இல் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் நிறுவன இயக்கநராக இருந்தபோது தில்லியில் உள்ள ஆவணக் காப்பகத்திடமிருந்து ரூ.5,000 பெறப்பட்டது. முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களும் நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணை செய்யப்பெறவேண்டுமென்று விரும்பிய முன்னாள் இயக்குநர் பொறுப்பிலிருந்த முனைவர் அன்னிதாமசு அவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

1995-96-இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்குத் தில்லி தேசிய ஆவணக் காப்பகம் ரூ.30,000/- வழங்கியது. இந்நிறுவனச் சுவடிகள் மூன்று தொகுதிகளில் 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை' என்ற தலைப்பில் முனைவர் டி. மகாலட்சுமியால் பதிப்பித்து நிறுவனத்தில் வெளியிடப் பெற்றுள்ளன. அந் நல்கையைத் தொடர்ந்து, 1996-97-இல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகளை விரிவாக விளக்க அட்டவணை செய்து நூலாக அச்சிட்டு வெளியிட ரூ.40,000-ஐ, தில்லி தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. அதன் பயனாக 1998ல் 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை'யின் முதல்தொகுதி வெளிவந்தது. இவ்வட்ட வணைப் பணிகள் தொடர்ந்து நடைபெற தில்லி தேசிய ஆவணக் காப்பகம் 1998-99க்காக ரூ. 2,00,000ஐ நல்கியது. அதன் விளைவாக இப்போது அட்டவணையின் இரண்டாம் தொகுதி வெளிவருகிறது. மிகவும் குறுகிய காலத்தில் விரிவாக இவ்விளக்க அட்டவணையின் இரண்டாம் தொகுதியைப் பதிப்பித்து வெளியிட்ட இதன் பதிப்பாசிரியர்களான முனைவர் ஆ.தசரதன், திரு மொ. மருதமுத்து, திரு மூ. பரிமணன் ஆகியோரை மனமுவந்து பாராட்டுகிறேன்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகளை விரிவாக விளக்க அட்டவணை செய்து இந்நிறுவன வெளியீடாக வெளியிடுவதற்கு அனுமதி நல்கிய தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்களுக்கும், பல்லாற்றானும் இவ்வட்டணைப் பதிப்புக்கு உதவிகளை நல்கிய அந்நூலகக் காப்பாட்சியர் அவர்களுக்கும், அந்நூலகப் பணியாளர்களுக்கும் நிறுவனம் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணைகளின் பதிப்புத் திட்டப்பணிக்கு மிகச் சிறப்பாக வழிகாட்டிவரும் பேராசிரியர் முனைவர் பொற்கோ அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றி. இத்திட்டப்பணி தொடங்குவதற்கு அனுமதி அளித்தும் இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டியும் வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி பணபாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதி நல்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தாருக்கும் நன்றி. இந்த அட்டவணையைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ விக்னேசு அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

பதிப்புரை

தமிழ்ச் சுவடிகள்

பழங்கால முதல் அண்மைவரை தமிழர்களின் பாரம்பரியப் பெருமைகளைப் பறைசாற்றும் இலக்கியங்கள், இலக்கணங்கள், நிகண்டுகள், காவியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், சோதிடக் குறிப்புகள், மருத்துவ, மாந்திரீகக் குறிப்புகள், யோகஞான தத்துவங்கள், இரசவாத வித்தைகள், வர்மக் கலைகள் போன்றவை பனை ஓலைகளில் எழுதி வைக்கப்பெற்றன. அவ்வாறு எழுதிவைக்கப்பெற்ற ஓலைச்சுவடிகளில் அழிந்தனபோக எஞ்சியவற்றுள் சில சுவடிகள் தற்போது நிறுவனங்களிலும் நூலகங்களிலும் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. சேகரிக்கப் பெறாத பல்லாயிரம் தமிழ்ச் சுவடிகளிருப்பது தெரியவந்துள்ளது.

சுவடி விளக்க அட்டவணைகள் வரலாறு

தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணைகள் தயாரிக்கும் முயற்சி இந்நூற்றாண்டின் முதலில் ஏற்பட்டது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் கி.பி. 1912 முதல் விளக்க அட்டவணை செய்யப்பெற்றன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கி.பி.1911க்கு முன்பு அந்நூலகத்திற்கு வந்தடைந்த தமிழ்ச்சுவடிகள் அட்டவணை செய்யப் பெற்று "A Descriptive Catalogue of Tamil Manuscripts in the Government Oriental Manuscripts" என்ற பெயரில் பதினொரு தொகுதிகளில் வெளியிடப் பெற்றுள்ளன. கி.பி.1911க்குப் பிறகு 1959 வரையில் அந்நூலகத்திற்கு வந்தடைந்த ஓலைச் சுவடிகள் A Triennial Catalogue of Manuscripts (மூவருட சுவடிவிளக்க அட்டவணை) என்ற தலைப்பில் 13 தொகுதிகளில் வெளிவந்தன. அதன்பிறகு தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை எனப் பெயர் பெற்று வெளியிடப் பெற்று வருகின்றன. இவ்வாறு இதுவரை 30 தொகுதிகள் அட்டவணை நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. 1956, 1961, 1962, 1977, எனும் ஆண்டுகளில் உ.வே. சாமநாதையர் நூலகத் தமிழ் ஓலைச்சுவடிகள் ஆறு தொகுதிகளில் விளக்க அட்டவணை செய்யப்பெற்று அந்நூலக வெளியீடுகளாக வந்துள்ளன. அதன் பின் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்

தமிழ்ச் சுவடிகளும் விளக்க அட்டவணை பெறத்தொடங்கின. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் அட்டவணை செய்யப்பட்டன. இதே காலகட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடிகளும் விளக்க அட்டவணை செய்யப் பெற்றுத் தொடர்ந்து அப்பணி நடந்து வருகின்றது. கல்கத்தா தேசிய நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளும், பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்துச் சுவடிகளும் அட்டவணை செய்யப் பெற்றன. ஆசியவியல் நிறுவனம் அந்நிறுவனச் சுவடிகளையும், உ.வே.சாமிநாதையர் நூலகத் தமிழ்ச் சுவடிகளையும், திருவாவடுதுறை ஆதீனச் சுவடிகளையும், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தின் மருத்துவச் சுவடிகளையும் அட்டவணை செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகளும் மூன்று தொகுகளில் அட்டவணைகளாக வந்துள்ளன. அண்மையில் அடையாறு நூலகச் சுவடிகளும் அட்டவணை செய்யப் பெற்றுள்ளன. இவ்வாறு நூலகங்களிலும் நிறுவனங் களிலுமுள்ள தமிழ்ச் சுவடிகள் அட்டவணை செய்யப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

வெளிநாடுகளிலுள்ள தமிழ்ச் சுவடிகள், அந்நாட்டவர் களாலும், பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்களாலும் தொகுக்கப் பெற்றன. பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் ஏறத்தாழ மூவாயிரம் சுவடிகளைக் கண்டறிந்து ஐந்து தொகுதிகளாகப் பகுத்து வைத்துள்ளார். மேலும் சில தன்னார்வ அமைப்புகளும் தனியார்களும் தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்து வைத்துள்ளமையும் தெரிய வருகிறது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வரலாறு

கர்னல் மெக்கன்சியாலும், டாக்டர் லெயிடன், வில்சன், சி.பி.பிரௌன் போன்ற அதிகாரிகளாலும் சேகரிக்கப்பெற்ற சுவடிகள் 'சுவடிகள் நூலகமாக' 1870-ல் சென்னை மாநிலக் கல்லூரியில் முதலில் இடம் பெற்று, பின்பு 1939 இல் சென்னைப் பல்கலைக் கழக நூலக வளாகத்தில் தற்போதுள்ள பெயரில் அமைந்துள்ளன. காலந்தோறும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்குச் சுவடிகள் வந்த வண்ணமிருப்ப

தாலும், அந்நூலகம் 1980க்குப் பின் இருக்கும் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் வருவதால் அத்துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்கள் சேகரிக்கும் சுவடிகளும் இந்நூலகத்திற்கு அனுப்பப் பெறுவதாலும் வேறு எங்கும் இடம் பெறாத அளவுக்கு அதிகமான சுவடிகளை இந்நூலகம் பெற்றுள்ளது. இங்குள்ள 16,500க்கும் அதிகமான தமிழ்ச் சுவடிகளில் சில சுவடிகள் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணைகளின் அமைப்பு சிறப்பும்

வடமொழிச் சுவடிகளின் விளக்க அட்டவணைகளின் அமைப்பிலேயே தமிழ்ச் சுவடிகளின் விளக்க அட்டவணைகளும் அமைந்துள்ளன என அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க முதல் அட்டவணையின் முகவுரை தெரிவிக்கின்றது.

> *"It has been prepared mainly on the lines of the Sanskrit descriptive catalogue. To a brief description of the manuscript containing the work under notice is added a very brief indication of the nature of the subject dealt with in the work, and extracts from the work itself are given to enable one to obtain an idea of its nature, style and value. In order to make the catalogue useful even to those who have not much knowledge of English, a brief description of every work in Tamil is also given after the extracts"*
>
> **(Preface: p.iii, A Descriptive Catalogue of Tamil manuscripts in the G.O.M.L. Vol.I. 1912).**

தொடக்க காலத்தில் மேற்காணுமாறு அமைந்திருந்தாலும் அதற்கடுத்த காலகட்டங்களில் வெளியிடப்பெற்ற அட்டவணைகளில் பொருள்வகைப் பாகுபாடும், சுவடிகள் சேரச்சேர தொடர்ச்சியாக அவற்றை அட்டவணை செய்தலும் காணமுடிகின்றது. சுவடிகள் D. எண்/R.எண் என எண்கள் இடப்பெற்று, தலைப்புகள் தமிழிலும் ஆங்கில எழுத்திலும் கொடுக்கப்பெற்றுள்ளன. 1. substance, 2. size, 3. pages, 4. lines, 5. character, 6. condition, 7. appearance, complete, summary, beginning, ending, 8. குறிப்பு என்ற அடிப்படையில் தமிழ்ச் சுவடிகள் விளக்கம் பெறுகின்றன.

நூல் தலைப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும், உரோமன் எழுத்துப் பெயர்ப்பிலும் அமைந்துள்ளது. சுவடி யாரிடமிருந்து எக்காலத்தில் வாங்கப்பட்டது என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. பல தொடக்கப் பாடல்களும், முடிவுப் பாடல்களும் ஒன்றுக்கு மேலாக எழுதப்பட்டிருப்பதும், குறிப்பு என்ற பகுதியில் மாற்றுச் சுவடிகள் அந்நூலகத்தி லிருந்தால் அதன் விவரமும், சுவடிக் குறிப்பும் (Colophon), பல நூல்கள் ஒரு சுவடிக் கட்டில் இருந்தால் அவற்றின் பெயர்களும், அவை இடம் பெறும் இதழ்களின் எண்ணிக்கை, பக்க எண்கள், ஆங்கிலத்தில் குறிப்புகள் என இந்நூலகச் சுவடி விளக்க அட்டவணைகள் அமைந்துள்ளன. அவ்வட்டவணைகள் பெரும்பாலும் ஒரே கட்டமைப்பைப் பெற்று இராயல் அளவில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் நூற்பெயர்களின் அகரவரிசைகளை உரோமன் எழுத்துப் பெயர்ப்பில் இட்டிருப்பதும், அட்டவணையில் எடுத்தாளப் பெற்றுள்ள சுவடிகளிலும் விளக்கங்களிலுமுள்ள ஆசிரியர் பெயர் அகராதி, பொருளகராதி அல்லது பொது அகராதி (General Index) போன்றவற்றை அமைத்திருப்பதும் அவ்வட்டவணையின் சிறப்பாகும். அவ்வட்ட வணைகளில் குறிப்பிடப்பெறும் 'D' எண்கள் கி.பி.1912 முதல் வெளியிடப் பெற்ற பதினொரு தொகுதிகளிலுள்ள தமிழ்ச் சுவடிகளைக் குறிக்கும் தொடர் எண்களாகும். அதைப்போன்று 'R' எண்கள் மூவருட சுவடி விளக்க அட்டவணை (Triennial catalogue) யில் வரும் தமிழ்ச் சுவடிகளின் எண்களாகும். ஆயினும் அண்மைக்காலத்தி லிருந்து வெளிவரும் அட்டவணைகளில் D, R வேறுபாடின்றித் தொடர் எண்கள் பெற்றுச் சுவடிகள் வருவது குறிப்பிடத் தக்கது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணைகள்: மாதிரியும், விளக்கமும்

நிறுவன நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பெற்றிருக்கும் தமிழ்ச் சுவடிகள் மிக அதிக அளவில் இருப்பது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தான். இந்நூலகம் ஏறக்குறைய தொன்னூறு ஆண்டுகளில் வெளியிட்டுள்ள சுவடிகள் விளக்க அட்டவணைகளில் பல தொகுதிகள் இன்று கையிருப்பில் இல்லை. சுவடி விளக்க அட்டவணை தயாரிப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள விரிந்த ஆய்வின்

காரணமாக அச் சுவடிகள் தொடர்புடைய பல செய்திகளை யும் ஒருங்கே கொடுக்க வேண்டுமென்ற காரணத்தாலும், ஏற்கனவே அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தால் அட்டவணை செய்யப்பட்ட தமிழ்ச் சுவடிகளுக்கு விரிந்த அளவில் விளக்கம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடிவிளக்க அட்டவணை தயாரிக்கும் திட்டப்பணி தொடங்கப்பட்டது. இப்பணிக்காகச் சுவடிகள் விளக்க அட்டவணை மாதிரிப்படிவம் கீழ்வருமாறு தயாரிக்கப்பட்டது:

I. **சுவடி பற்றிய பொதுச் செய்திகள்**

1. வரிசை எண். 2. (அ) சுவடி எண். (ஆ) சுவடிக் கட்டு எண். (இ) புத்தாக்கத் தாள் சுவடி எண். (ஈ) தாள் சுவடி எண். 3. தலைப்பு (அ) தமிழில். (ஆ) உரோமன் எழுத்துப் பெயர்ப்பில். (இ) சுவடியில் உள்ள தலைப்பு. 4. நூலாசிரியர். 5. காலம். 6. படியெடுத்தவர் (அ) இடம். (ஆ) காலம். 7. உரையாசிரியர் (அ) இடம். (ஆ) காலம். 8. சுவடி உள்ள நிறுவனம் / நூலகம். 9. சுவடியை வழங்கியவர். 10. சுவடியைப் பெற்றுக் கொண்டவர் (அ) இடம். (ஆ) காலம்.

II. **சுவடி அமைப்பு**

அ. ஓலைச் சுவடி அமைப்பு

1. தனிக் கட்டு / உட்கட்டு / தனி இதழ். 2. மொழி: தமிழ் / கிரந்தம் / பிறமொழி. 3. எழுத்து நிலை. 4. இதழ்களின் எண்ணிக்கை. 5. அளவு. 6. துளை விவரம். 7. சுவடிக் கட்டுமானம்: மூக்கு / கயிறு / நாராசம். 8. சுவடிக் கட்டை. 9. ஓலையின் வகை. 10. நரம்பு உள்ளது / இல்லாதது. 11. சுவடி நிலை நன்று / சிதைவு / நொறுங்கியது. 12. பக்கம் (பக்கங்களில் எழுத்துக்களின் நிலை) ஒரு பக்கத்தில் எழுதப்பட்டுள்ளதா? இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளதா?. 13. வரிகள் / பத்திகள் . 14. பா நடை / உரைநடை / பிற. 15. ஓலைகள் விடுபாடு, முதல் / நடு / இறுதி 16. நூல் முழுமை / குறை. 17. மொத்த வரிகள் / பாடல்கள் / வேறு:

ஆ. தாள் சுவடி அமைப்பு

1. அளவு. 2. பக்கங்கள். 3. வரிகள். 4. எழுத்து நிலை. 5. படி எடுத்த நாள். 6. படி எடுத்தவர் பெயர். 7. திருத்தம் செய்யப்பட்ட விவரம். 8. புத்தாக்கம் செய்யப்பட்ட விவரம் (Restored).

III. **நூல் அமைப்பு**

1. நூல் பொருண்மைப் பிரிவு. 2. இலக்கிய வகை. 3. நூற் செய்தி. 4. ஏட்டின் தொடக்கம். 5. நூல் தொடக்கம். 6. நூல் முடிவு. 7. ஏட்டின் முடிவு. 8. மூலம்/தழுவல்/மொழிபெயர்ப்பு.

9. மொழிநடை. 10. இலக்கிய/சமூக/வரலாற்றுச் சிறப்புச் செய்திகள். 11. சுவடிக் குறிப்பு (Colophon).

IV. மாற்றுச் சுவடிகள்/வேறு படிகள் (Variations)

1. இந்நூலகத்தில் மாற்றுச் சுவடிகள். 2. பிறநூலகங்கள்/நிறுவனங்களில் உள்ள மாற்றுச் சுவடிகள். 3. சார்புச் சுவடிகள்.

V. அச்சிட்ட விவரம்

1. இந்தச் சுவடி அச்சிடப் பெற்ற விவரம். 2. வேறு பதிப்புகள் விவரம். 3. இந்தச்சுவடி அச்சிற்குப் பயன்பட்ட விவரம்.

Vi. சிறப்புச் செய்திகள்

ஆறுபெரும் பகுதிகளில் சுவடி விவரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. முதலாவதாக அமையும் சுவடிபற்றிய பொதுச் செய்திகள் என்ற பிரிவில் 10 பொருள்களில் செய்திகள் அமைக்கப்பெற்றுள்ளன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக D. எண்கள் பெற்ற சுவடிகள், R. எண்கள் பெற்ற சுவடிகள், சில புத்தாக்கத் தாள்சுவடிகள், ஓலைச் சுவடிகளாக அல்லாது தாள்சுவடிகளாகவும் இடம்பெறுபவை என நான்கு வகையான சுவடிகள் இருப்பதால் 4 வகையான எண்கள் தரப்பெற்றுள்ளன. சுவடிகளின் நூற்தலைப்புகள் அந்நூலக அட்டவணைகளில் இடம் பெற்றிருப்பதைப் போன்றே இங்கும் இடம் பெற்றுள்ளன. இவை தமிழிலும் உரோமன் எழுத்துப் பெயர்ப்பிலும் இடம் பெறுகின்றன. சுவடியில் முதலிலும் இறுதியிலும் தலைப்புகள் ஏதாவது எழுதப் பெற்றிருந்தால் அவை அவ்வாறே இவ் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. பெரிய தடித்த எழுத்துக்களில் (big bold Letters) கொடுக்கப்பெற்றுள்ள தலைப்புகள் பெரும்பாலும் சுவடித் தலைப்புகளைப் பின்பற்றி அமைந் துள்ளன. ஆயினும் நூற்பொருள் அடிப்படையிலும் நூல் தொடக்க அடிகளின் அடிப்படையிலும் இத் தலைப்புகளில் சில மாற்றப்பட்டுள்ளன. படியெடுத்தவர் பெயர், காலம், இடம் ஆகியவை சுவடிக்குறிப்பில் (Colophon) இருக்கின்றவாறு இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவ் அட்டவணை யில் இடம்பெறும் எல்லாத் தமிழ்ச் சுவடிகளும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளனவாதலாலும் அச்சுவடியிலேயோ அந்நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணைகளிலேயோ சுவடிக்குரியவர், இடம் அதை இந் நூலகத்திற்காகப் பெற்றுக் கொண்ட காலம் இருந்தால் அவையும் இவ்வட்டவணையில் இடம் பெறும்.

சுவடி அமைப்பு என்ற இரண்டாவது பகுதியில் ஓலைச் சுவடி, தாள் சுவடி, புத்தாக்கத் தாள் சுவடி (Restored) ஆகியவற்றின் புற அமைப்புகள் 17/8 உட்பிரிவுகளில் தரப்பெற்றிருக்கின்றன.

மூன்றாவதாக அமையும் நூல் அமைப்பு என்ற பிரிவில் பதினொரு பகுதிகளில் நூலின் உள்ளமைப்புகள் விளக்கப் பட்டுள்ளன. மாற்றுச் சுவடிகள், வேறுபடிகள் என்ற நான்காவது பிரிவில் எடுத்துக் கொண்ட சுவடியின் மாற்றுச் சுவடிகள் இந்நூலகத்தில் இருப்பின் அவற்றின் விவரமும், பிற நூலகங்களில் இருப்பின் அவற்றின் விவரமும் கொடுக்கப் பெற்றுள்ளன.

அச்சிட்ட விவரம் என்ற ஐந்தாவது பிரிவில் தெரிந்த அளவிற்குச் சுவடியின் பதிப்பு விவரம் தரப்பட்டுள்ளது.

இறுதியாக உள்ள சிறப்புச் செய்திகள் என்ற பிரிவில் எடுத்துக் கொண்ட சுவடி தொடர்பான நூற்செய்திகள், நூற் தலைப்புகள், அதனுடன் சேர்ந்துள்ள சுவடிகளின் பெயர்கள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

இவ்வாறு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளைப் பார்த்து மேற்காணும் விவரங்கள் இவ் அட்டவணையில் தெரிந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டுள் ளன.

அட்டவணை செய்முறை விளக்கம்

வெளியிடப்பெற்ற முதல் தொகுதியில் 255 தமிழ்ச் சுவடிகளின் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இங்கு வெளியிடப்பெறும் இரண்டாம் தொதியிலும் 255 தமிழ்ச் சுவடிகளின் விளக்கங்கள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இச்சுவடிகளின் முறைவைப்பில் ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளது. சுவடி நூற்பொருள் அடிப்படையிலும் அவ்வப்போது கிடைக்கும் சுவடிகளின் தொடர்ச்சி அடிப்படையிலும் விளக்க அட்டவணைகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகளின் நூலகத்தில் தயாரிக்கப் பெற்றுள்ள நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, சுவடி நூற்பெயர்கள் அகரவரிசையில் முறைவைக்கப் பெற்றிருக் கின்றன. அதிலும் பாட்டு முதல் தொடர் அடிப்படையிலும், பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் நூல்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வாறு அகர வரிசையில் அமையும் சுவடிகள் அனைத்தும் அகத்தியர் பெயரிலேயே

அமைந்தவை. அகத்தியராலேயே பாடப் பெற்றவை என இச்சுவடிகளைப் பாடிவைத்தோர் சிலர் நம்புகின்றனர்.

இத்தொகுதியிலுள்ள சுவடி நூல்கள் பெரும்பாலும் வாதம், வைத்தியம், ஞானம் எனும் மூப்பெரும் பிரிவுகளில் அடங்குவதாகத் தெரிகின்றது. இரசவாதம் செய்து தங்கத்தை உருவாக்கி அதனால் வறுமையின்றி வாழவும், இரசவாதப் பொருள்களிலிருந்தும் மூலிகைகளிலிருந்தும் மருந்துகளைத் தயாரித்து நோய்களைப் போக்கி நலமாக வாழவும் சித்தர்கள் முயன்றதால் அதிகமான மருத்துவ நூல்கள் வாதம், வைத்தியம் தொடர்பாக ஏற்பட்டுள்ளன. வறுமையும் நோயும் இல்லாது போன நிலையில் யோகமும், ஞானமும் சித்தர்களின் கொள்கைகளாக இருந்ததால் அவைபற்றியும் பல நூல்கள் எழுதப்பெற்றன.

நூற்பெயரகராதி, பொதுச்சொல் அகராதி எனும் இணைப்புகள் அந்நூலக அட்டவணைகளில் இடம் பெற்றதைப் போன்றே இங்கும் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றுடன் சுவடி நூல்களின் தொடக்கப் பாட்டு முதல் தொடர் அகராதியும் இணைக்கப்பெற்றுள்ளது.

நன்றியுரை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச்சுவடிகள் விளக்க அட்டவணை தயாரிப்புத் திட்டப்பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கி, அப்பணிக்காக மத்திய அரசின் நல்கையைப் பெற்று, அத்திட்டப்பணி தொடங்குவதற்காக நிறுவனத் தலைவரின் அனுமதியையும் பெற்று எங்களை இப்பணியில் ஈடுபடுத்திய நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடப்பாடுடையோம். ஓலைச் சுவடிகளைப் பார்வையிடத் தந்தும், பல ஆக்க பூர்வமான கருத்துக்களை நல்கியும் எங்களுக்கு உதவிபுரிந்த அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் முனைவர் சு. சௌந்தர பாண்டியன் அவர்களுக்கும், அந்நூலக அனைத்து நண்பர்களுக்கும் எங்கள் நன்றி. இத் திட்டப்பணியின் போது எங்களுக்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

பதிப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

அணிந்துரை	iii-iv
பதிப்புரை	v-xii
சுருக்கக் குறியீட்டு விளக்கம்	xiv
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை	1-455
நூற்பெயரகராதி	456-463
பாட்டு முதல் தொடர் அகராதி	464-465
பொதுச் சொல் அகராதி	466-486

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அ.கீ.சு.நூ.	-	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
ஆ.நி.	-	ஆசியவியல் நிறுவனம்
உ.த.நி.	-	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ம.மை.ஆ.நி.	-	சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்
த.ச.ம.நூ.	-	தஞ்சை சரசுவதி மகால் நூலகம்
த.ப.க.	-	தமிழ்ப் பல்கலைக் கழகம்
தி.ஆ.	-	திருவாவடுதுறை ஆதீனம்
இ.R.No.	-	புத்தாக்கத் தாள் சுவடி எண் (Restored Manuscripts)
ஈ.R.No.	-	தாள் சுவடி எண் (Paper Manuscripts)
D.	-	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தி லுள்ள ('D' எண்கள் பெற்ற) தமிழ்ச் சுவடி (Manuscript No. (in the Descriptive Catalogues of the Tamil Manuscripts) in the Government Oriental Manuscripts Library, Chennai.)
R.	-	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தி லுள்ள (மூவருட விளக்க அட்டவணைகளில் 'R' எண்கள் பெற்ற) தமிழ்ச் சுவடி (Manuscript No. in the Triennial Catalogues of Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai.)
T.D.	-	தமிழ்ச் சுவடிகள் கட்டு எண்
T.R.	-	தமிழ்ச் சுவடிகள் கட்டு எண்
—.	-	இல்லை
(பதி.)	-	பதிப்பு

அகத்தியர் 5

I. 1. **256**. 2. அ. R. 9230. ஆ. T. R. 3041. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சித்தாந்தம். ஆ. Akattiyar cittāntam. இ. அகத்தியர் சித்தாந்த சூஸ்திரம் அஞ்சு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் இதழின் பின்பக்கத்தில் இருவரிகள் மட்டுமே உள்ளன. 13. பக்கத்திற்கு 6 வரிகள. 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டமாசித்திகள், யோகசித்திகள், இரசவாத மருந்து செய்முறைகள் பற்றிக் கூறும் நூல். 2. இரசவாதம், யோகம். 3. இந்நூலில், அட்டமாசித்திகளை யோகியோர்க்கு வரிசையாக உரைக்கப் போவதாக இந்நூலாசிரியர் கூறுகின்றார். கந்தத்தை அனலில் மூட்டும்போது ஐம்புலன் களையும் மூலத்துள்ளே வைத்து ஒருமை நிலையில் இருக்குமாறு கூறுகின்றார். பூரணசூத்திரத்தை 400 பாடல் களிலும், 50 பாடல்களிலும், 16 பாடல்களிலும் கூறி, குருமுறை, உட்கரு, மகாலிங்கப் போக்கு என்பவற்றையும் விளக்கி, மானிடர் நன்கு வாழ வழிமுறைகளும் கூறுவதாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 100 பாடல்களில், கரு சேராமல் கால்-தலையாய்ப் பாடியதாகவும் கூறப்படுகின்றது. இலிங்கப் போக்கு யேக மூலிகை முன் சேரும்போது நீர் சுத்தியாகிச் சுருங்கும் என்றும், சுத்திசெய்த பின் இலிங்கம் செய்து அதில் சேர்க்க வேண்டும் என்றும், பின் அந்த இலிங்கத்தை வங்கம் போல் செய்து உருக்கி, மணியாக்கி, அதில் ஏழுவகை வெள்ளியுடன் செம்பையும் கலந்து குருவும் சேர்த்து உருக்கி வைத்தால் அவை தங்கமாகும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறான செய்முறைகளை வெளியில்

கூறினால் ஏற்படும் தோசத்தை நீக்குவதற்கு அகாரத்துடன் உகாரம் சேர்த்தும், மகாரடமுடன் சிகாரமும், வகாரமுடன் பிரணவமும் சேர்த்தால் நிலையான தன்மை எய்தும் என்கிறார் இந்நூலாசிரியர். மேலே கூறப்பெற்ற செய்திகளை வெளியில் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அட்டமா சித்திகளை உச்சரித்து யோகம் செய்து, இரசவாதம் செய்ய வேண்டு மென்பதற்காக இவ்வளவும் கூறப்பெற்றன. யோகம் செய்யுமுன் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

4. அகத்தியர் சித்தாந்த.... சூஸ்திரம் அஞ்சு.

5. நாடியதோர் தந்திமுகன் தனைப்ப ணிந்து
நலமாக உரைத்திடுவார் நந்தி பின்னும்
தேடியதோர் மந்திரத்தால் அட்ட சித்தி
திறமாக உரைக்கின்றோம் யோகி யோர்க்கு
கூடியதோர் கெந்தமதைச் சிதம்ப ரத்தில்
குணமான காலதனைக் கூட்டி மூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத் துள்ளே
அரகரா மூலகண பதிகாப் பாமே. 1

6. தோஷமது தீர்வதற்கு யங்ஜங் கேளு
சொல்லுகிறேன் அகாரமொடு உகாரஞ் சேரு
வாசமுடன் மகாரமது சிகாரந் தானும்
வகாரமுடன் பிரணவந்தான் நிலையே ஆகும்
பாசமுடன் நீசேர்த்து மவுன மாகிப்
பாங்கான நாதஒலி சிதம்ப ரத்தின்
ஓசையுட னேஉறுதி யாகித் தேறு
ஒருத்தருக்கும் விள்ளாதே அஞ்சு முற்றே. 5

7. —.

8. மூலம். 9. 'தோசம்' என்பது 'தோஷம்' என வந்துள்ளது. பிரதிபேதங்கள் காணப்படுகின்றன. தன்மையிலும் முன்னிலையிலும் சில சொற்கள் கூறப்பட்டுள்ளன. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பெற்றுள்ளன. 10. நந்தியைப் பணிந்து கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. அகத்தியர் பெயரில் பாடப்பட்டதுடன், அகத்தியருக்கு முன்னோடியாக நந்தியைக் கூறுவதைக் காணலாம். 11. இல்லை.

IV. 1. T.D. 623, R. 238(e). 2. ஆ.நி.எண்கள் 524, 656(i), த.ச.ம.நூ. எண்கள் 236(h), 267(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அட்டமா சித்திகளாவன:

1. அணிமா – ஆன்மாவைப் போல் அணுவாதல்.
2. மகிமா – மகத்தாதல்.
3. கரிமா – தன் உடல் கண்டிப்பில்லாமல், கண்டிப்பு உள்ளவற்றை உருவ வல்லனாதல்.
4. இலகிமா – இலகுத்துவமாதல்.
5. பிராப்தி – வேண்டுவன அடைதல்.
6. பிராகாமியம் – நிறையுள்ளவாதல்
7. ஈசத்துவம் – ஆட்சியுள்ளதாதல்.
8. வசித்துவம் – வசியப்படுத்துதல்.

அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற 5 பாடல்கள் கொண்டதாகப் பல நூல்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஆசியவியல் நிறுவனச் சுவடிகளில் இலிங்க சுத்தி முறைகளும், நஞ்சை நீக்கும் முறைகளும் கூறப்பெற்றுள்ளன. சென்னை தாமரை நூலகம் வெளியிட்டுள்ள பல தொகுப்புகளில் அமையும் 5 பாடல்களாலான நூல்களில் ஞானம், நஞ்சுமுறிவு, எண்ணெய் வகைகள், தீட்சைகள், தைல வகைகள் போன்றவை கூறப்பட்டுள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலக மருத்துவச் சுவடிகள் விளக்க அட்டவணையில் (தொகுதி 5) மட்டுமே இந்நூலைப் போன்ற ஐந்து பாடல்களும் பெயர்த்தெழுதப் பட்டுள்ளன.

அகத்தியர் 8

I. 1. **257**. 2. அ. D. 2303. ஆ. T.D. 901. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ரசவாத சூத்திரம் 8. ஆ. Akattiyar racavāta cūttiram 8. இ. அகஸ்த்தியர் சுருக்கம் எட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு. நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 22 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. ஓரளவு சிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் ஏற்படும் நோய்களை நீக்குவதற்கான மருந்துகளை மந்திரங்களோடு தொடர்புபடுத்தி வாழ்நாளை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகள் கூறும் நூல். 2. மருத்துவம், மந்திரம். 3. இந்நூலில் முதலில் சிவத்திற்குரிய மந்திரச் சொற்களும், சித்தர்கள் தத்துவங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கினுடன், அம் மந்திரச் சொற்களையும் சேர்த்துக் கூறும் தத்துவ முறைகளும் கூறப்பெறுகின்றன. உப்பின் வகைகளாவன: முப்பு, பாறையுப்பு, துரியம் என்பன. காரீயம் எடுத்து, அதனுடன் பூநீறும் சேர்த்துச் சாடியுள் இட்டுப் பாதுகாக்க வேண்டும் என்றும், அதிலிருந்து நீண்டநாள் வாழ்வதற்கான பல மருந்துகள் செய்யலாம் என்றும் இந்நூல் கூறுகின்றது. இவ்வாறான மருந்துகளை உண்போர் 125 ஆண்டுகள் ஆயுளுடன் வாழ்வர் என்றும், யோகிகள் உயர் ஞானம் பெற, சுழிமுனையில் ஒளியைக் காண முயலவேண்டும் என்றும் இந்நூல் வலியுறுத்துகின்றது.

4. —.

5. (தெரிசிற்பாம்) சிவயசிங்வங் அங்உங் கென்று
திரும்பவே அறிகிலியு மங்கென் றோது
சரிதையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியுஞ் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாய்வு
பார்க்கையிலே ஓம்சிவய வசியென் றோது
துரியமடா துரியத்தி லப்பு உப்பு
சூட்டினேன் பாறையுப்பைச் சொல்லி னேனே.1

6. சுழியான அகாரமே உகார மாச்சு
சுருக்கமா யெழுத்தெல்லா மிதுக்குள் ளாச்சு
அழியாத பொருளடா யிதனா லாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்பு மிதனா லாச்சு
வழியாக யிதுகண்டு சே(ர்)ந்தார் சித்தர்
வழியறிய மாட்டேனென்றால் கழுதை மாடு
ஒளியான சோதிமணி யிவனே யாகும்
ஒயர்வைத்த நாகமணி சேருந் தானே.

7. —.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. மந்திரச் சொற்கள் பயின்று வந்துள்ளன. பாடபேதங்கள், பிரதிபேதங்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் இம் மருத்துவ நூல் பாடப் பெற்றிருந்தாலும், சித்தர்களின் தத்துவக் கொள்கைகளும், இரசவாதத்திற்கான மருந்துகள் தயாரிப்பும் கூறப்படுவதைக் காண முடிகிறது. 11. இல்லை.

IV. 1. T.D. 623, R. 238(d), R. 2485, R. 4859. 2. ஆ.நி.எண் 656(h), த.ப.க. எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i). சபாபதி பிள்ளை, தி. (பதி.), 'அகத்தியர் சோதிமணி சூத்திரம் 8', ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடம், சென்னை, 1880. (ii). எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.) 'அகத்தியர் சோதிமணி சூத்திரம் 8', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் தொகுதி), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. மருத்துவமும் மந்திரமும் இணைந்து மனித உடம்பில் ஏற்படும் நோய்களை நீக்கவல்லன. அதிக நாள் வாழச் செய்யும் மருந்துகளில் காயகல்பமும் ஒன்று. இந்நூலுடன் கீழ்க்காணும் நூல்களும் சேர்ந்து ஒரு சுவடிக்கட்டாக உள்ளன. அவை: 1. இராமானந்தர் சூத்திரம் 16, 2. மச்சமுனி சூத்திரம், 3. ஆபிசாரிகப் பிரயோக முறை (உரையுடன்) என்பன. இந்நூல் அகத்தியர் சோதிமணி சூத்திரம் 8, தட்சிணாமூர்த்தி சோதிமணி சூத்திரம் எனும் பெயர்களிலும் வழங்கப்படுகின்றது.

அகத்தியர் 14

I. 1. 258. 2. அ. R. 9232. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் யோக சாதனை. ஆ. Akattiyar yōka cāṭaṉai. இ. அகத்தியர் யோகசாதனை சூத்திரம் 14. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 5. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகமும், ஞானமும், இரசமணி செய்முறையும் கூறும் நூல். 2. யோகம், இரசவாதம், மருத்துவம். 3. இந்நூலில் அகத்தியர் உபதேசித்ததான பல யோக – ஞானச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. சிவன், பார்வதி, கணேசன், நந்தி எனும் வழிபடு தெய்வங்களை வணங்கி, சொல்லாலும் எட்டாத சூட்சமத்தை உரைப்பதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இரசமணியை உண்டு, முறையாகப் பயிற்சி செய்தால் சுடரொளியைக் காணலாம் என்கிறார். இந்நூலில் கூறப் பெற்றுள்ள செய்திகளை வெளிப்படுத்தலாகாது எனவும் நூலாசிரியர் கண்டிப்புடன் கூறுகின்றார்.

4. அகஸ்தியர் யோக சாதனை சூஸ்திரம் 14.

5. ஆதியந்த மில்லாச் சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்
சோதிநிற மாகிநின்ற கணேசன் பாதம்
சொல்லினுக்குள் ளெட்டாத சூட்சம் சூட்சம்
வீதியென்ற பராபரத்தின் நந்தி பாதம்
வேதாந்த சாஸ்திரத்தின் வெளியா மார்க்கம்
சோதியெனும் பராபரத்தில் நடனஞ் செய்த
சுடரொளியின் பாதமது காப்புத் தானே. 1

6. பார்க்கவே யிம்முறையைச் சொன்னா ராகில்
பாழான நரகமெய்தும் பாரு பாரு
கார்க்கவே சீஷனது மனதைக் கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடு ஞான மார்க்கம்
யோர்க்கவே ரசமணியின் மார்க்கத் தானும்
யென்மக்காள் சொல்லிவிட்டேன் யெழும்பும் மார்க்கம்
சேர்க்கவே இம்முறையை உனக்குச் சொன்னேன்
செழுங்கருணைச் சிவயோகம் பதினாறு முற்றே. 14

7. —.

8. மூலம். 9. ற/ர வேறுபாடில்லை. பாடபேதங்கள் உள. எளிய நடை; பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றாலும், அகத்தியர்க்குக் குருவான நந்தி முனிவர்க்கும் காப்புப் பாடல் சொல்வதிலிருந்து சிவன்–

பார்வதி–நந்தி என்போர் அகத்தியர்க்கு முன்பாகச் சித்த வைத்தியம் தெரிந்தவர்கள் என இந்நூலில் சுட்டிக் காட்டப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 175(g), R. 199(h). 2. த.ப.க. எண். 970, ஆ.நி.எண் 509(e), த.ச.ம.நூ.எண் 469(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i). கந்தசாமி பிள்ளை, தி.(பதி.), 'அகத்தியர் ஞானோபதேசம் 14', ஸ்ரீ மட்டுவார் குழளாம்பாள் அச்சுக் கூடம், சென்னை, 1880. (ii). எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் இரசமணி 14' என்ற பெயரிலும், 'தட்சிணாமூர்த்தி ரசமணி 14' என்ற பெயரிலும் உள்ளதை மாற்றுச் சுவடிகளிலிருந்து அறிய முடிகின்றது.

அகத்தியர் 14

I. 1. **259**. 2. அ. R. 199(h). ஆ. T.R. 183. இ. —. ஈ. —. 3. அ. அகத்திய நாயனார் இரசமணிச் சூத்திரம் 14. ஆ. Akattiya nāyaṉār iracamaṇic cūttiram 14. இ. அகஸ்திய நாயனார் அருளிச் செய்த ரசமணிச் சூத்திரம் 14. 4. —. 5. —. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிபு, திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி.1914–15.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14. பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசமணி செய்யும் முறையும் யோக – ஞான மார்க்கங்கள் கூறுதலும் இந்நூலில் உள்ளன. 2. யோகம், இரசவாதம். 3. வரிசை எண். 258 போன்றது.

5. ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்
சோதிநிற மாகின்ற கணேசன் பாதஞ்
சொற்தனக்கு எட்டாத சூட்சம் சூட்சம்
வீதியென்ற பராபரத்தில் நந்தி பாதம்
வேதாந்த சாத்திரத்தின் வெளியின் மார்க்கஞ்
சோதியெனும் பராபரத்தில் நடனஞ் செய்த
சுடரொளியின் பாதமது காப்புத் தானே. 1

6. பார்க்கவே யிம்முறையைச் சொன்னா யானால்
பாழான நரகமது வெய்தும் பாரு
கார்க்கவே சீஷருட மனத்தைக் கண்டு
கைம்முறையாய்ச் சொல்லிவிடு ஞான மார்க்கம்
மேற்கவே ரசமணியின் மார்க்கந் தானும்
மேன்மக்காள் சொல்லிவிட்டேன் யோக மார்க்கஞ்
சேர்க்கவே யிம்முறையை யுனக்குச் சொன்னேன்
செழுங்கருணைப் பதினாலுந் துதிக்க முற்றே. 14

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பெற்றுள்ளன. பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ள இந்நூல் அகத்தியர் யோகம் எனவும் பெயர் பெறும். 11. சார்வரி வருஷம் ஆவணி மாதம் 26 ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்திய நாயனார் அருளிச் செய்த ரசமணிச் சூத்திரம் பதினாலு மெழுதி நிறைவேறியது.

IV. 1. R. 175(g), R. 9232. 2. த.ப.க.எண் 970, ஆ.நி.எண் 509(e), த.சு.ம.நூ. எண் 469(i). 3.இல்லை.

V. 1. இல்லை. 2. (i). கந்தசாமி பிள்ளை, தி.(பதி.), 'அகத்தியர் ஞானோபதேசம் 14', ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடம், சென்னை, 1880. (ii). எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் வாசிக் குளிகை 14', 'அகத்தியர் ஞானஅமுதம்', தாமரை நூலகம், சென்னை, 1995. (iii). எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் ஞானோபதேசம் 14', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. தாமரை நூலகம் வெளியிட்டுள்ள 'அகத்தியர் ஞான அமுதம்' என்ற நூலில் 'அகத்தியர் வாசிக்குளிகை 14' என்ற பெயரிலும், அதே நூலகம் வெளியிட்டுள்ள 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' என்ற நூலில் 'அகத்தியர் ஞானோபதேசம் 14' என்ற பெயரிலும் பதிப்பாகியுள்ளதால் இந்நூல் ஞானமும், வாசியோகமும், குளிகையும் பேசுவதாகக் கொள்ளலாம். இந்நூல் இடம் பெறும் சுவடிக்கட்டில் 'அகத்தியர் ஆறாதாரம் 8', 'அகத்தியர் ஞான காவியம் 1000'எனும் நூல்களும் உள்ளன. இந்த நூல் மூவருடத்திய சுவடிகள் விளக்க அட்டவணையில் உள்ள 175(g) எண் இடப்பெற்ற பிரதி போன்றது. மேற்குறித்த எண்ணில் 'தட்சிணாமூர்த்தி ரஸமணி' என்ற பெயருடன் இது வெளிவந்துள்ளது. மேலும் R. 280(k) 'தட்சிணாமூர்த்தி ரசமணி 14' என்பதும் இது போன்றதே.

அகத்தியர் 16

I. 1. **260**. 2. அ. R. 9272. ஆ. T.R. 3432. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 16. ஆ. Akattiyar 16. இ. அகத்திய நாயனார் பதினாறு. 4. —. 5. —. 6.—. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 9; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வகை நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலின் முதற் பாடலில், பஞ்சபூதங்களுடன் முறையே அரிதாரம், சவ்வீரம், கெவுரி, வெள்ளை, இலிங்கம் எனும் ஐந்தும் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. அரிதாரம் இந்தப் பூமி (மண்) ஆகவும், சவ்வீரம்—நீராகவும், கெவுரி—தேயுவாகவும், வெள்ளை—வாயுவாகவும், இலிங்கம் ஆகாசமாகவும் நிற்றல் கூறப்படுகின்றது. அரிதாரம் ஈளை, காசம், எலி கடிகள், விசங்கள், பித்தப்பாண்டு, குளிர்காய்ச்சல், மகோதரம் போன்ற

நோய்களைப் போக்கக்கூடியது. சவ்வீரம், சுவாசகாசம், நீராமை, வீக்கம், எண்வகைக் குன்மங்கள், இளைப்பு, நெஞ்சடைப்பு போன்றவற்றை நீக்கக்கூடியது. மேலும் சூலை, வயிற்றில் கெண்டை, நீரிழிவு நோய்களைப் போக்க வல்லது. கெவுரியானது தோசம், சுரம், சொறிசிரங்கு, கிரந்தி, அரிகிரந்தி, மேகம், வயிற்றுவலி போன்றவற்றைத் தீர்க்க வல்லது. வெள்ளை எனும் பாசாணமானது சோகை போன்ற நோய்களைத் தீர்க்கும். இறுதியாக இலிங்கமானது சன்னி தோசம், நெஞ்சடைப்பு, வயிற்றெரிவு, வயிற்றிலூதல், பித்த காமாலை என்பவற்றைக் குணமாக்கவல்லது. மேலும் இந்நூலில் தாளக பற்பம், தாம்பிர பற்பம், கருவங்கப் பற்பம் முதலான பற்பங்கள் தயார் செய்யும் முறையும் பயனும் கூறப்பட்டுள்ளன. வீரச்சுண்ணம், காந்த செந்தூரம், இலிங்க செந்தூரம் எனும் மருந்துகள் தயாரிக்கும் முறைகளும் பயன்களும் பாடப்பெற்றுள்ளன. இவற்றுடன் யோக முறைகளும் கூறப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. அகத்திய நாயனார் பதினாறு.

5. அரிதாரம் பிரிதிவிய தாக நிற்கும்
ஆனதொரு சவ்வீர மப்பு வாகும்
பெரிதான கெவுரியது தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
மரிதான லிங்கமா காச மாகும்
... பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியனே யென்னு லப்பா
சித்தரய்யா சொன்னவித்தை சிகத்தில் பாரே. 1

6. யேத்திடில் சன்னி தோஷம்
யெழும்பிடுங் குட்ட ரோகம்
பாத்திடில் பரங்கி தீரும்
பலகடி முதலாத் தீரும்
ஏத்திடு மருந்திற் கெல்லா
மேழுநாள் பத்திய மாகும்
போத்திடத் தீரு மென்று
பொருப்புமே லிருந்து சொன்னார். 16

7. தெட்சிணாமூர்த்தி பதினாறு முற்றும். சிவமயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப் பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் கலந்துள்ளன. ற/ர வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. பிரதிபேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூலுக்கு 'அகத்தியர் வைத்திய சூத்திரம்' என்றும், 'அகத்தியர் பச்சைவெட்டுப் பதினாறு' என்றும் பெயர்கள் வழங்குகின்றன. 11. இல்லை.

IV. 1. D. 1902, D. 1903, R. 2541, R. 3713, R. 3692, R. 3723, R. 4731, R. 8984, R. 9052. 2. த.ப.க. எண் 734, த.ச.ம. எண் 185(b), உ.த.நி. எண் 487: 742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் பச்சைவெட்டு வைத்திய சூத்திரம் 16', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் பச்சை 16' என்றும் பெயர் பெறும். 'பச்சை என்றால் வேறு அதிக மருந்துக் கலப்பின்றி அப்படியே சில மருத்துவப் பொருள்களை உட்கொள்வதாகும்.

அகத்தியர் 16

I. 1. 261. 2. அ. R. 8984. ஆ. T.R. 3246. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 16. ஆ. Akattiyar 16. இ. அகஸ்தியர் சூஸ்திரம் பதினாறு. 4. —. 5. —. 6. ஆனந்த மாகாளியப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் தோன்றும் பலவகை நோய்களுக்கு மருந்துகளும் அவற்றின் செய்முறைகளும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 260 போன்றது.

4. அகஸ்தியர் சூஸ்திரம் பதினாறு.

5. அரிதாரம் பிருதிவியே ஆகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளையுந்தான் வாயு வாகும்
பரிவான லிங்கமுந்தான் ஆகாஷ மாகும்
வருத்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யென்னூ லப்பா
சித்தரய்யா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. ஏத்திடில் சன்னி தோஷம்
யெழும்பிடில் குட்ட ரோகம்
பாத்திடில் பரங்கி சூலை
பலகடி முதலா யுள்ள
கோத்திடில் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
போத்திடில் தீரு மென்று
பொருப்பின்மே லிருந்து சொன்னார். 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பாடபேதங்கள் உள. வடமொழி எழுத்துக்கள் பயின்று வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். ஆயினும் இந்நூல் 'வைத்தியம்', 'சூத்திரம்', 'பச்சை', 'பச்சைவெட்டு' எனப் பல பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளது. 11. ஆனந்தமாகாளியப்பன் னெட்டெழுத்து.

IV. 1. D. 1902, D. 1903, R. 145(e), R. 163(d), R. 945(e), R. 1079, R.2541, R. 3713, R. 3692, R. 3723, R. 4731, R. 9052, R. 9272. 2. த.ப.க.எண் 734, த.ச.ம. எண் 185(b), உ.த.நி. எண் 487 : 742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் பச்சைவெட்டு வைத்திய சூத்திரம் 16', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை (முதல்பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரிலும், வேறு பல சித்தர்கள் பெயரிலும் பாடப்பெற்ற 16 பாடல்கள் உள்ள நூல்கள் பல உள்ளன. அவற்றில் பெரும்பான்மையும் மருத்துவ நூல்களே.

அகத்தியர் 32

I. 1. **262**. 2. அ. R. 4511(a). ஆ. T.R. 1989. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பாடல் 32. ஆ. Akattiyar pāṭal 32. இ. அகஸ்தியர் பாடல் மதிவெண்பா. 4. —. 5. —. 6. கல்குறிச்சி முத்தயன் குமாரன் வெங்கிடசுப்பையனாகிய சோமசுந்தர தாசன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. 1953–54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 8; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. வெண்பா. 15. இல்லை. 16. முழுமை. 17. 32 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சில மருத்துவ முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் வழலை, முப்பு பற்றியும், சுண்ணங்கள் பற்றியும், சிற்றாமுட்டி, பேய்மிரட்டி, வெள்ளை விஷ்ணு கிரந்தி போன்றவை பற்றியும் கூறப்பெற்றுள்ளன. குழந்தைகளுக்கு ஏற்படும் தோசங்களும், அவற்றைப் போக்கும் முறைகளும் கூறப்பெற்றுள்ளன. இறுதியில் யோகிகளின் இயல்பும் கூறப்பெற்றுள்ளது.

4. ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

5. கதிருஞ் சசியுங் கலந்து பிரிந்தநிலை
விதிபுருவங் குருநூல்தான் விள்ளுமே – மதிவெண்பா
முழுதுமுரை தெரியா மூடர்களே யானாலும்
வழலையறி வார்களென்ற வாறு. 1

6. ஆழிதூள் களாகி மேரு அண்டம் வேறு கூறதாய்
வாழிகா லமான போதும் யோகி சாவ துண்டுமோ
பாழிலே யெழுந்த வன்னி பாரில் வந்து ணர்ந்ததால்
வாழிவா ழிசூத முண்ட மரனு பாவர் வாழியே. 32

7. தெட்சணாமூர்த்தி 32 முற்றும்.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. எளிய நடை. 10. அகத்தியர் பெயரில்

அமைந்தாலும் இந்நூல் 'தெட்சணாமூர்த்தி 32' என்றும் பெயர் பெறும். 11. கீலக வருஷம் சித்திரை மாதம் 19–ம் தேதி கல்(க்)குறிச்சி முத்தயன் குமாரன் வெங்கிட சுப்பய்யனாகிய சோமசுந்தரதாசன் தனதுக்கொண்டேன். சனிவாரங்களில் முகிந்தது. ராமலிங்கசாமி துணை. வேல்முருக சாமி துணை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்திய மகாமுனிவர் மதிவெண்பா 100', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. 'அகஸ்தியர் மதிவெண்பா நூறு' என்ற பெயரில் 8 செய்யுட்களேயுடைய ஒரு சுவடி நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் (சுவடி எண் 296(g)) உள்ளது. இதன் தொடக்கப் பாடல் 'ஆதிசிவமான பாதமதை நெஞ்சில் வைத்துச் சோதிமதி வெண்பாவைச் சொல்லுவேன்...' எனத் தொடங்குகின்றது. இரண்டாவது பாடலின் ஈற்றடி, 'நவமணியாம் மதிவெண்பா நத்து' எனவும், எட்டாம் பாடலின் ஈற்றடி 'வாலை சிறுபெண்ணாள் சொன்ன மதி' என்றும் உள்ளன. சென்னை தாமரை நூலகம் வெளியிட்டுள்ள 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' என்ற நூலில், 'அகஸ்திய மகாமுனிவர் மதிவெண்பா 100' என்ற பெயரில் ஒரு நூல் வெளியாகியுள்ளது. இதன் தொடக்கப் பாடலில் ''பரம சற்குருபரன் பதமலர்ப் பரவுதூஉம்'' எனும் தொடக்க அடி வருகின்றது. அரசினர் கீழ்த்திசை நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணையில் R. 4511 என்ற எண்ணில் வேறொரு சுவடி விளக்கம் பெறுவதால், இதற்கு R.4511(a) என எண்ணிடப் பட்டது. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற 'மதிவெண்பா 100'ன் சுருக்கமாக இருக்கலாம். இச்சுவடிக் கட்டில் 'அகத்தியர் 32' என்ற இந்நூலுடன், சுந்தரானந்தர் கேசரிவித்தை (R.4506), அழுகணிச்சித்தர் பாடல் (R.4507), அகத்தியர் குழம்பு (R.4508), தட்சிணாமூர்த்தி வாலை 30 (R.4509) முதலிய பல நூல்கள் உள்ளன.

அகத்தியர் 100

I. 1. **263**. 2. அ. R. 2489(a). ஆ. T.R. 1365. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 100. ஆ. Akattiyar cūttiram 100. இ. அகஸ்திய சுவாமியருளிச் செய்த ஞூறு. 4. —. 5. —.

6. இராமசாமி நயினார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. V. V. கிருஷ்ணமாச்சாரி, மதுரை. 10. 1951–52.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 42. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 84; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்குப் பற்பம், செந்தூரம் முதலான மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்த நூலில் மூலிகைமாலை, துரிசுச் சுண்ணம், கரியுப்பு, தோசத்துக்குப் பூசை பூரணநூல், தயிலம், இலிங்கத் தயிலம், வங்கனீறு, நாகபற்பம், நாக செந்தூரம், வங்கபற்பம், நவலோக மாரணம், கட்டுவகை செயநீர், செந்தூர செயநீர், மெழுகுசெயநீர், இலிங்கக்கட்டு, கரியுப்புக் கட்டு, செம்புசுத்தி, செந்தூரம், சாரம், சாரக்கட்டு, சூதக்கட்டு, பெரியோரைத் துதித்தல், செய்பாகம், அரிதார வெள்ளை, துரிசுநீரு, வெள்ளிவித்தை, இரசக்களங்கு, தாம்பிரசுத்தி, பாசாணக்கட்டு, நூல்தொகை, பொன்னுரைத்த சரக்கு, பூநீறு, சிப்பிநீர், சகல சரக்கும் கட்டத் தயிலம், வெண்காரை மெழுகு போன்ற தலைப்புகளில் மருத்துவச் செய்திகளும் நோயின் பெயர்களும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

4. அகஸ்தியர் சுவாமி திருவாய் மலர்ந்தருளிய வயித்தியம் னூறு.

5. பூரணமாஞ் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமா யெனையாண்ட பராபரனைப் போற்றிக்
கட்டாக வாதத்தில் லெட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்தி யிருனூறு சூஸ்த்திரம்
வாரணமாய் குறுக்கி வைத்த சாத்திர மின்னூல்
வகைதோண கருக்குருவாய் வகுத்தேன் பாரே.1

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மத்ததொன்று செய்யா தய்யா
மனம்வேறு கட்டுண்டா லெல்லாம் போச்சு
மாய்கையுத்து குறித்தலைவான் மாள்வா ரய்யா
மனம்வேறு சாதகமாய் சாஷ்திரத்தை யானும்
நம்பிள்ளை குருவினுடன் வணங்கிக் காத்து
மனம்வேறு மறவாதே சித்தி முத்தி
வாய்க்குமே சூத்திரந்தான் னூறு முத்தே. 100

7. முற்றும். யெழுதியது நம்மை பிராசீனமைதார் ராமசாமி நயினார் குருவே துணை.

8. மூலம். 9. ழ/ள, ற/ர வேறுபாடின்றி எழுதப்பட்டும், அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றும் உள்ளன. 'ற்ற' என்பது 'த்த' ஆக வந்துள்ளது. எ.டு.: மத்தொன்று, மாய்கையுத்து, முத்தே. ஒற்று எழுத்துக்கள் மிகுந்துள்ளன. பிழைகள் அதிகம். வடமொழி எழுத்துக்கள் பயின்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள நூல். 'அகத்தியர் சூத்திரம் 100', 'அகத்தியர் வைத்தியம் 100', 'அக்தியர் வாதசூத்திரம் 100' எனப் பலவாறு வழங்கப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 145(d), R. 203(b), R. 278(b), R. 3729, R. 4203, R. 4695, R.9510. 2. உ.த.நி. எண்கள் 494: 752, 575:931, த.ச.ம.நூ.எண்கள் 258(a), 264(a), 466(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வாதம் பற்றிய 1 இலட்சம் பாடல்களைக் குறுக்கி 1200 பாடல்களாகவும், பின்பு அந்த 1200 பாடல்களைக் குறுக்கி 100 பாடல்களாகவும் செய்ததாகக் குறிப்பிடப் பெற்றுள்ளமை யால், இந்நூல் ஒரு குறுநூல் எனலாம். இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் இந்திரசாலத்திரட்டு (R.2489) என்ற நூலும் உள்ளது.

அகத்தியர் 100

I. 1. **264**. 2. அ. R. 4695. ஆ. T.R. 2071. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 100. ஆ. Akattiyar cūttiram 100. இ. அகஸ்த்தியர் சூஷ்த்திரம் நூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 27. 5. 22 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 54; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் சில நோய்களுக்குச் செந்தூரம், பற்பம் போன்ற மருந்துகள் செய்யும் முறைகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 263 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. பூரணமாம் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமாய் யெனையாண்ட பராபரனே போற்றி
கட்டாக வாதத்தில் லட்சங் காப்பு
தாரணமாய் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்திரு னூறு சூஷ்த்திரம்
வாரணமாய்க் குறுக்கிவைத்த சூஷ்ஸ்த்திரம் நூறில்
வகைதோணக் கருக்குருவும் வகுத்தேன் பாரே.1

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மத்தொன்றும் செய்யா தேநீ
மனம்வேறு கட்டுண்டால் எல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திரிந்தலைவான் மாள்வா ரய்யோ
மனம்வேறு சாதகமாய் சாத்திரத்தைப் பார்த்து
மனம்பிலக்க குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு மாறாது சித்தி முத்தி
வாய்க்குமே சூஷ்த்திரந்தான் மகிழ்வார் முத்தே.
100

7. குருவுண்டு சிவமயம்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. பாடபேதங்கள், எழுத்து மாற்றங்கள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் புலத்தியருக்குக் கூறுவதுபோல் உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 145(d), R. 203(b), R. 278(b), R. 2489, R. 3729, R. 4203, R.9510. 2. உ.த.நி. எண்கள் 494 : 752, 575 : 931, த.ச.ம.நூ.எண் 466(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் இடம்பெறும் சுவடிக் கட்டில் அகத்தியர் சூத்திரம் 50, அகத்தியர் பொதிகை 50, அகத்தியர் சூத்திரம் 1200, அகத்தியர் பூசாவிதி 200 முதலான வேறுபல நூல்களும் உள்ளன.

அகத்தியர் 100

I. 1. **265**. 2. அ. R.9510. ஆ.T.R. 3559. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 100. ஆ. Akattiyar cūttiram. இ. அகஸ்தியர் சூஸ்திரம் நூறு. 4. —. 5. —. 6. வேதமுனி ஆழ்வார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 27 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 24; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் சில நோய்களுக்கான செந்தூரம், பற்பம் போன்ற மருந்துகள் செய்முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 263 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக அகஷ்த்தியர் சூத்திரம் நூறு.

5. பூரணமாஞ் சுழினைநடுக் கமல மீது
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமா யெனையாண்ட பராபரனே போற்றி
கட்டாக வாதத்தில் லட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
தயவாக ஆயிரத்திரு நூறு சூஸ்திரம்
வாரணமாய் குறுக்கிவைத்தேன் சூத்திரம் நூறில்
வகைதொகை கருக்குருவும் வகுத்தேன் பாரே. 1

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மத்தொன்றுஞ் செய்யா தேநீ
மனம்வெறுத்துத் தட்டுடனே யெல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திரிந்தலைவான் மாள்வா னய்யோ
மனம்வேறு சாதகமாய்ச் சாஸ்திரத்தைப் பார்த்து
மனதில்லாக் குருபாதம் வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சிற்றி முத்தி
வாய்க்குமே சூஷ்த்திரந்தான் மகிழ்வார் முற்றே. 100

7. அகஷ்தியர் சூஸ்திர நூல் நூறும் எழுதிவைத்தது வேதமுனி ஆழ்வார். தெட்சணாமூர்த்தி குருவுபதேசப் படிக்குப் பார்த்தெழுதினது முற்றும். குருபாதந் துணை.

8. மூலம். 9. ழ/ள, ற/ர வேறுபாடு இல்லை; த்த/ற்ற வேறுபாடும் இல்லை. பாடவேறுபாடுகள் மிகுதி. 10. அகத்தியர் புலத்தியருக்கு உபதேசிப்பதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 145(d), R. 203(b), R. 278(b), R. 2489, R. 3729, R. 4203, R.4695. 2. உ.த.நி. எண்கள் 494:752, 575:931, த.ச.ம.நூ.எண் 466(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்த நூல் 'அகத்தியர் 1200' என்ற நூலின் சுருக்கமாக இருக்கலாம்.

அகத்தியர் 100

I. 1. **266**. 2. அ. R. 2031(b). ஆ. T.R. 187. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாத சூத்திரம் 100. ஆ. Akattiyar vāta cūttiram 100. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி.1914–15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 30. 5. 38 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 60; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. முன்னும் பின்னும் ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. 25 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் சில நோய்களுக்கான செந்தூரம், பற்பம் போன்றவை தயாரிக்கும் முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இது மூவருடத்திய சுவடிகள் விளக்க அட்டவணையில் 145(d) எண் பிரதி போன்றது. இரசவாதத்தைப் பற்றிக் கூறுவது. இரசம் (mercury), செம்பு (copper) போன்றவற்றால் கருக்கள் செய்து தங்கம் உருவாக்கும் நோக்கமுள்ளது. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற 1200 பாடல்கள் கொண்ட வேறொரு நூலின் சுருக்கமாக இந்நூல் அமைந்துள்ளது.

4. —.

5. உப்பென்றா லுப்பல்லாச் சொல்லக் கேளு
உலர்க்கண்ணி லேவிளைந்த அடிதா னப்பா
உப்பென்று அதுகடுக்க வாழ்வா ரப்பா
ஓகோகோ அலைகடல்நீ ருஉப்ப தொன்று
முப்பூவுங் கூடியல்லோ உருவாய்ப் போச்சு
முழுக்காரத் துறைமேலே ஏற லாச்சு
உப்பான வழலையது பூரந் தான
உயர்ந்தவெடி யாகாச உப்புச் சாமே. 26

6. அப்பியே காட்டெருவிற் புடத்தைப் போடு
அண்டையிலே பா(ர்)த்திருநீ காய்வே காமல்
தப்பியே சாணமது வெந்து பத்தி
தான்காயில் வேகையிலே தள்ளிக் கொண்டு
ஒப்பியே சீலைமடுங் கவசம் நீக்கி
யுத்தமனே கல்வத்தி லரைக்கும் போது
செப்பினோங் கஞ்சாவின் சாத்தா லாட்டி
சிறுசுண்டக் காய்போலே வுருட்டி டாயே. 176

7. உருட்டியே நிழலுலத்தி வைத்துக் கொண்டு
வுண்டையொன்று வடிதயிரி லீந்தா யானால்
திரட்டிவிழு மிரத்தமுடன் கடுப்பு சீயந்
தீராத மூலரத்தந் தீருஞ் சொன்னேன்
மிரட்டியே தேனிலிட மதிசார் பேதி
மீளுமடா பத்தியமோ புளியு மாகும்
சுருட்டிமிக மிளகாயை கூ.... ....
....

8. மூலம். *9.* பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சு வழக்கு நடை. *10.* அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. *11.* இல்லை.

IV. *1.* இல்லை. *2.* —. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* —. *3.* இல்லை.

VI. இச்சுவடிக்குப் பின்னர் 'முருகர் பேரில் பதம்' எழுதப்பெற்ற ஏடொன்றும், 'ஞானவாசிட்டம் (சிகித்துவசன் கதை) எழுதிய ஏடுகள் இரண்டும் மருத்துவம் தொடர்பான 2 ஏடுகளும் உள்ளன. இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் 100' என்ற இந்நூலுடன், தைல முறைகள் (R.203(a)) என்னும் நூலும் உள்ளது.

அகத்தியர் அட்சர மகிமை

I. *1.* ***267.*** *2.* அ. R. 2498.ஆ. T.R. 1367. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் 300 இல் சொன்ன அட்சர மகிமை. ஆ. Akattiyar 300 il conna aṭcara makimai. இ. அகஸ்த்திய னாயன் முன்னூறில் சொன்ன அட்சர மகிமை. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவில்லை. *4. 7.* *5.* 29 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 13;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *6* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 21* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* தலைவலி, செவிநோய், பிடரி நோய் முதலான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* நம் உடம்பில் தோன்றும் பலவகை நோய்களான தலைவலி, நேத்திர வியாதி, செவிநோய், நாசிநோய், உச்சிப்பிளவை, விசக்கடி வீக்கம், கண் வியாதிகள், நரம்புக் கண்டத்தில் வலிப்பு நோய், ஆணிநோய், உந்தியில் நோய், மூலநோய், முகங் கும்பியிருப்பதற்கு, செயக்கட்டுக்கு, தோள் சிலந்திக்கு, முழங்கைக் கட்டுவீர சிலந்திக்கு, முதுகுவலிக்கு, பக்கபிடரி நோய்க்கு, கிழவர்கள் முதுகு

வியாதிக்கு, பிடரி நடுப்பிளவைக்கு, பவுத்திரத்துக்கு, அரையாப்புக்கு, அண்டத்தில் வரும் நோய்க்கு, இலிங்கப்புற்றுக்கு, சூலைக்கு, தொடைவாலை, விப்புறுதி நோய்க்கு, பாதசக்கர சகல நோய்களுக்கும், விநாயக பூசை, அனுமார் தியானம், கர்ம சாந்திவகை முதலான செய்திகள் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்த்தியர் நாயன் முன்னூத்தில் சொன்ன அட்சர மகிமை.

5. போட்டிடவே குன்மவகை யெட்டுந் தீர
பூட்டுகிறோம் கர்மம்தீர வினைகள் தீர
நாட்டவென்றே குன்மம்வ யிற்றி லெட்டு
நாற்பதுநாள் வயிற்றுநசி, சீநசிழம் யென்று
மூட்டிடவே முகமதனில் பிறையை ஓட்டு
முனைகளிலே அம்மெனவே மூட்டு மூட்டு
நாட்டிடவே நாற்பதுனாள் ஓதும் போது
அற்றுதடா குன்மவலி யனைத்தும் பாரே. 1

6. யிறைஞ்சிடவே வாதத்தினால் வந்த நோய்க்கி
... சாநம பொங்கல்வைத்துத் தியான மோது
உருஞ்சிடவே பித்தத்தால் வந்த னோய்க்கி
உடையவர்க்கு மிந்திரற்கு முற்ற பொங்கல்
விரைஞ்சிடவே சிலேற்பனத்தால் வந்த னோய்க்கி
மேதினியில் தெச்சணத்தை நோக்கிப் பொங்கல்
குறைஞ்சிடவே குளிர்ச்சிசெய்து மருந்தை யூட்டு
குணமாகுந் தீராத பிணிநோய் போமே. 21

7. அகத்திய நாயன் அட்சரமகிமை யெழுதி முகிந்தது முற்றும். தேவி சகாயம். சிவமயம். முற்றும். பதினெண் போர்கள் துணை.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. 'உ' ஒலி 'இ' ஒலியாகத் திரிந்துள்ளது. எ.டு.: நோய்க்கு/நோய்க்கி. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற இந்நூலுக்கு முன்னூல் 300 பாடல்கள் கொண்டதாக அறிய முடிகின்றது. 11. இல்லை.

IV. 1. D.1871. 2. —. 3. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் சுவடிக்கட்டில் (R.2496), 36 ஆம் இதழிலிருந்து 41 ஆம் இதழ்வரை உள்ளது. இதனுடன் உள்ள பிற நூல்கள் வருமாறு:

1. அகத்திய நாயனார் வாகட வெண்பா (R.2496) (1 முதல் 21 இதழ் வரை)

2. அகத்திய நாயனார் திரட்டெண்பது (R.2497), (22 முதல் 35 இதழ் வரை)

3. அகத்தியர் விஷபேதி வைத்தியம் (R.2499) (42 முதல் 46 இதழ் வரை).

அகத்தியர் அவிழ்த்த சாரம்

I. 1. **268**. 2. அ. D. 2320. ஆ. T.D. 905. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 60. ஆ. Akattiyar vaittiya cūttiram 60. இ. அகத்தியர் வயித்திய சூத்திரம் அறுபது – வாதத்துக்கு மருந்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 17. 5. 40 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 28; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 104 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் தோன்றும் பலவகை நோய்கள் தீர்வதற்குரிய மருந்துகளான சூரணம், தைலம் போன்றவை தயாரிக்கும் முறைகளும் பயன்களும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் வாதத்தின் வகைகள், பித்தத்தின் 40 வகைகள், சிலேட்டுமத்தின் வகைகள், மூலநோயின் 6 வகைகள், குன்ம நோயின் 8 வகைகள், மேகத்தின் 20 வகைகள், காமாலை, சொறிசிரங்கு, கண்டத்துக்கு மேற்பட்ட சகல நோய்கள், வாய்வு நோய்கள், இரத்தவாந்தி, காசம், எலும்புருக்கி நோய்கள், சன்னிகள், சுரங்கள், 96 வகை கண்ணோய்கள், இரத்தமேகம் போன்ற பல நோய்கள் குணமாவதற்குரிய சூரணம், தைலம்,

நெய், பொடி, கிருதம், சாம்பிராணித் தைலம், தலை முழுகுந் தைலம், கியாழம், நசியம், எண்ணெய், குடிநீர், தாளிச பத்திரிச் சூரணம் போன்ற மருந்துகளின் இயல்புகளும் பயனும் செய்முறையும் கூறப்பட்டுள்ளன. மேலும் செந்தூர வகைகள், சஞ்சீவி மாத்திரைகள், குளிகைகள், கசாயங்கள், திப்பிலி நெய், கண்டங்கத்திரி நெய், ஏலாதி நெய், குழந்தைகளுக்குப் பொன் முசுட்டை நெய், பஞ்சகவிய நெய், சுக்கில நெய் போன்ற நெய் வகைகளும் கூறப்பெற்றுள்ளன.

4. —.

5. ஆதியாங் கிணேசன் காப்பு
அறுநூற்றுக் கருவை யெல்லாம்
சோதியா மாயி பாதந்
துணையென வுட்கொண் டோதி
நீதியாந் திரட்டுச் சூத்திரம்
நிலைத்தவா கடமாய்ச் சொல்ல
வாதியாம் பிணிகள் தீர
மருந்துடன் குணத்தைக் கேளே. 1

6. கேளப்பா கஞ்சாவால்.....
.... 104

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப் பெற்றுள்ளன. எளியநடை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அவிழ்தம் என்றால் ஔடதம் (மருந்து) என்று பெயர். பல்வேறு மருந்துகளின்சாரமாகவிளங்குவதால் 'அவிழ்த சாரம்' எனப்பெயர் பெற்றது. 600 பாடல்களிலுள்ள கருக்களைத் திரட்டி, இத்திரட்டுச் சூத்திரத்தைச் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மருந்து வாகடமாகவும் இந்நூல் அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3411, R. 4488, தாள் சுவடி எண் R. 5429. 2. த.ச.ம.நூ. எண் 496(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற அவிழ்த சார நூல்கள் 60 பாடல்களைப் பெற்றிருப்பது இயல்பு. (பார்க்க: R.3411, R.4488). அவற்றுக்கும் மேலாக இந்நூலில் 104 பாடல்கள் திரட்டியிருப்பது சிறப்பாகக் கருதப்படுகிறது.

அகத்தியர் இரத்தினச் சுருக்கம் 360

I. *1.* **269.** *2.* அ. R. 8951. ஆ. T.R. 4244. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் இரத்தினச் சுருக்கம் 360. ஆ. Akattiyar rattiṉac curukkam 360. இ. (இ)ரத்னச் சுருக்கம். *4.* —. *5.*—. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* தனிக்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 67. *5.* 30 x 4 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிறு சிதைவு. *12.* 134; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம். *15.* முதலிலுள்ள 4 ஏடுகள் (33 பாடல்கள்) இல்லை. *16.* குறை. *17.* 327 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* பலவகை நோய்களுக்கான இலேகியம், தைலம், குளிகைகள் போன்றன செய்முறைகளும் பயனும் கூறும் நூல். நாடிகளின் இயல்பும் பேசப்பட்டுள்ளது. *2.* மருத்துவம். *3.* இந்நூலில், சில நோய்களுக்கான கபாட மாத்திரை, பூபதி உருண்டை, இரச சிந்தாமணி, கோரோசினை மாத்திரை, கரிசாலை இலேகியம், பஞ்சதீபாக்கினி இலேகியம், சிந்தாதி இலேகியம், மகாவில்வாதி, கபாட இலேகியம், திப்பிலி இரசாயனம், அக்கினிச் சூரணம், அசுவகெந்தி சூரணம், கண்டங்கத்திரி சூரணம், தாளிசபத்திரி சூரணம், பஞ்சதீ பாக்கினி சூரணம், நிலவாகை சூரணம், வல்லாரை சூரணம், அமுர்த சஞ்சீவி சூரணம், அசுவகெந்தித் தயிலம், வில்வாதித் தயிலம், குமரித் தயிலம், கொம்பராக்குத் தயிலம், சந்தனாதித் தயிலம், பொன்னாங்காணித் தயிலம், கீழாநெல்லித் தயிலம், நிலப்பனைக் கிருதம், பொன்னாங்காணிக் கிருதம், புளியாரை கிருதம், வல்லாரைக் கிருதம், தூதுவளைக் கிருதம், கண்டங்கத்திரி நெய், வெள்ளி பற்பம், நாக பற்பம், இரச செந்தூரம், காரீய செந்தூரம், தலை சூலைக்கு எண்ணெய், மேகத்துக்கு எண்ணெய், கொப்பநோய்க்கு வீழி யெண்ணெய், மேகத்துக்கு நல்லெண்ணெய், வாதத்துக்கு எண்ணெய், சுகசீதபேதிக்கு எண்ணெய் போன்ற மருந்துப் பொருள்களின் இயல்பும் பயனும் கூறப்பட்டுள்ளன.

5. யேட்டப்பா னாபியி.. றாறு மாகும்
யிதமான திப்பிலியும் பன்னி ரண்டு
தாட்டப்பா யிஞ்சிரசம் தன்னா லாட்டு
தனமாக னால்சாமம் அரைத்துக் கொண்டு
வீட்டப்பா மெழுகுபோல் நிழலு லர்த்தி
விருதான செப்பில்வைத்து சொல்லக் கேளு
ஆட்டப்பா அனுபான மறிந்து போடு
அப்பனே சன்னிவகை மூலம் போமே. 34

6. மூழ்கவே வியாதியெல்லாங் கடலே புக்கும்
முக்கியமாய் அகத்தியர்க்குச் செபந்தான் பண்ணு
நேரப்பா கணபதியைத் தியானம் பண்ணு
நேராகத் தேவியைநீ பூசை பண்ணு
தவறாமல் சிவனையே பூசை பண்ணு
தவறாதே வியாதியெல்லாந் தவறுண் டேபோ
மகிழவந்த வயித்தியத்தைச் செய்தா னாகில்
வையகத்தில் ஒப்பாரு யீசன் முற்றே. 360

7. ரத்னச் சுருக்கம்எழுதி முற்றுப் பெற்றது.
வெற்றிவே லுற்ற துணை.
அம்பலவாணனடியினைத் தொழுவார் .
இன்பமும் வீடு மெளிதினில் வருமே.
ஆறு முகவனை நாறு மலர்கொடு
கூறு மடியவர் பேறு பெறுவரே.

வேலுமயிலுந் துணை.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க
நித்தியானந்தப் பெருஞ்செல்வம் பெற்று நீடுழி வாழ்க.

8. மூலம். 9. அந்தாதியில் **பாடல்கள்** பாடப்பெற்றுள்ளன. முன்னிலை விளியில் **கூறப்பட்டு**ள்ளது. எளிய நடை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற ஓர் அரிய நூல். அகத்தியர் வைத்திய இரத்தினச்சுருக்கம்என்றும்பெயர்பெறும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i). ஆறுமுக சுவாமிகள் (பதி.), 'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவொற்றியூர், 1867. (ii).

இராதாகிருஷ்ணன், கே. (பதி.), 'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360', திருமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1955. (iii). கே.பி.தியாகராசன் (பதி.), 'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360', சண்முகானந்தா புக் டிப்போ, சென்னை. 3. இல்லை.

VI. இந்நூல் 365 பாடல்கள் கொண்டது என்றும் கூறுவர். நாடி பார்க்கும்போது மூன்று விரல்கள் பயன்படுகின்றன. முதல் நாடி வாயு (காற்று) நாடி. இரண்டாம் நாடி பித்த நாடி. மூன்றாம் நாடி சிலேத்தும நாடி. ஆண்களுக்கு அவர்களின் வலது கை நாடியையும், பெண்களுக்கு அவர்களின் இடது கை நாடியையும் பார்க்க வேண்டும்.

அகத்தியர் இலேகியம்

I. 1. 270. 2. அ. R. 169(d). ஆ. T.R. 153. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் லேகிய வகை. ஆ. Akattiyar lēkiya vakai இ. விந்தாதி லேகியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி.1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 29 x 4 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. பிளைவுட். 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 4; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 12 முதல் 13 வரிகள். 14. விருத்தம். 15. நடுவிலும் இறுதியிலும் ஓலைகள் இல்லை. 16. குறை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் சில பிணிகளைப் போக்கவல்ல விந்தாதி இலேகியம் முதலியவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. விந்தாதி இலேகியம் முதலியவற்றைச் செய்யும் முறைகளை அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. பரிபாசையில் விந்து, இரசமணி, சுக்கிலம், கேசரி இவற்றையும், ஆண்-பெண்களின் சேர்க்கையையும் கூறி, விந்தாதி இலேகியத்தின் சிறப்பை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது.

4. விந்தாதி இலேகியம்.

5. என்னவே விந்துவைத்தான் கடைந்து வாங்கி
யிருக்கிவிடும் ரசமணிபோல் மைந்தா மைந்தா
சொன்னதொரு மங்கையரே மேவி னாக்கால்
சுக்கிலந்தா னூறுகின்ற கேசரி யாகும்
அன்னனடை மின்னார்க் கழனமொன் றுக்கு
மாயிரம்பேர் சென்றாலு மடங்கா தப்பா
மன்னனைத்தான் வெறிகொண்ட கடாவைப் போல்
மங்குமடா விந்துவடை மாயந் தானே. 1

6. தானான மறப்பதனை யறிவ தாரு
தாயறிவாள் னானறிவேன் மத்தோர் காணார்
வீணான தொழில்கடனைக் கொடுத்தார் சித்தர்
வேசிமக னதில்மயங்கிக் கலக்க மானான்
கோனான மதியமுர்த மான நீரைக்
குடியாமற் நிற்பின்மைந்தா வழிதா னெங்கே
தானான தான்கண்ட பொருளை யென்று
சாஸ்திரத்தை ....

7. —.

8. மூலம். 9. முன்னிலை விளி இடம் பெற்றுள்ளது. 'ற்ற' என்பது 'த்த' ஆக வந்துள்ளது. (எ.டு.: மத்தோர்). 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இலேகியங்களுள் வில்வாதி இலேகியம், சிந்தாதி இலேகியம், மூதண்ட இலேகியம், குமட்டிக்காய் இலேகியம், கடுக்காய் இலேகியம், தான்றிக்காய் இலேகியம், சுக்கு இலேகியம், மிளகு இலேகியம், திப்பிலி இலேகியம், உள்ளி இலேகியம், கடுகு இலேகியம், வெந்தய இலேகியம், ஓம இலேகியம் போன்றவை உள. மேலும் கீழ்க்காணும் இலேகியங்கள் சில நோய்களைப் போக்கவல்லன. அவை வருமாறு: குண்டலாதி இலேகியம், வில்வாதி இலேகியம், அரீதகீ இலேகியம், இஞ்சி இலேகியம், சித்திரமூல இலேகியம், நெல்லிமுள்ளி இலேகியம், எருக்கம்வேர் இலேகியம், மகாவில்வாதி இலேகியம், கோஷ்டாதி இலேகியம், நெருஞ்சி

இலேகியம், கண்டங்கத்திரி இலேகியம், பூனைக்காலி இலேகியம் என்பன. இந்நூல் இச்சுவடிக்கட்டில் (R.169) 33வது இதழிலிருந்து 34 ஆம் இதழ் வரை உள்ளது. இச்சுவடிக்கட்டில் உள்ளபிற நூல்கள் வருமாறு:

1. அகத்தியர் வாலை வாகடம் (R.169(a)) *(1 முதல் 15 இதழ் வரை)*
2. சட்டைமுனி நாயனார் 50 (R.169(b)) *(16 முதல் 28 இதழ் வரை)*
3. சட்டைமுனி சூத்திரம் 16 (R.169(c)) *(29 முதல் 32 இதழ் வரை)*
4. தட்சிணாமூர்த்தி சாய தரிசனம் (R.169(e)) *(35 முதல் 36 வரை)*.

அகத்தியர் உலக நிதி 16

I. 1. 271. 2. அ. R. 280(q). ஆ. T.R. 263. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் லோக நிதி 16. ஆ. Akattiyar lōka niti 16. இ. அகஸ்தியர் லோகநிதி 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி.1915–16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 24 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 9; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்குரிய வழிமுறைகளும் யோக மார்க்கமும் கூறும் நூல். 2. இரசவாதம், யோகம். 3. இந்நூலின் சாராம்சம் வேதம் – ஐந்தெழுத்தின் விவரம் (ஆ ஈ ஊ ஏ ஓ) ஆகும். இதனுடன் யோகம் செய்யும் முறைகளும், இரசவாத முறைகளும் இந்நூலின் பின் பகுதியில் கூறப்படுகின்றன. இந்நூலில் முதலில் குருவுக்கும், சிவம், மால், அயனுக்கும், வணக்கம் கூறிய பின்னர் இரசவாதத்திற்கான சில பொருட்களின் இயல்புகளை நூலாசிரியர் கூறுகின்றார்.

4. அகஸ்தியர் லோகநிதி 16.

5. மூலவட்ட மானகுரு பாதங் காப்பு
முத்திக்கு வித்தான முதலே காப்பு
ஞாலவட்ட தங்கிமதி யமுர்தங் காப்பு
ஞானமென்னு மாலயனும் ருத்திரன் காப்பு
காலவட்டச் சுழிமுனையு யிடையுங் காப்பு
கதிர்முனையும் பின்கலையும் வாசி காப்பு
கோலவட்டக் குமரியுடப் பாதங் காப்பு
குருபாதஞ் சேருகின்ற குணமே காப்பு. 1

6. சாத்திரத்தில் குருபூசை வோதச் சொல்லிச்
சாற்றினார் நூல்தோறும் சட்ட மாகத்
தூரத்திற் விளையாத சாரந் தேடித்
துணிந்தன வுள்மலையின் சாரம் .....
வீரத்தைச் சித்தரெல்லாங் கொண்டு .....
விளம்பினார் னூல்தோறும் சட்ட மாகக்
காரத்தில் மனமுரைத்துச் சித்தர் பாதம்
கண்டுகொள்வீர் காசினியி லறிவுள் ளோரே. 16

7. —.

8. மூலம். 9. எளிய நடை. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்தச் சுவடிக்கட்டில் (R.280) உள்ள பிற நூல்கள் வருமாறு:

1. சிதம்பர சக்கரம் (R. 280(a)), (1-8) இதழ்கள்
2. அகத்தியர் சிதம்பர அஷ்டகர்மம் (R. 280(b)) (9-17a) இதழ்கள்
3. நவக்கிரகாம்சம் (R. 280(c)) (18-21) இதழ்கள்
4. அங்கநியாசகரநியாசம் (R. 280(d)) (22-28a) இதழ்கள்
5. ஆத்திசூடி வெண்பா (R. 280(e)) (30-33) இதழ்கள்
6. மூலகுரு சுருக்கம் (R. 280(f)) (34-50) இதழ்கள்
7. தட்சிணாமூர்த்தி சக்கரம் முதலியன (R. 280(f)) (52-62) இதழ்கள்

8. புவ்னேசுவரி யகவல் முதலியன (R. 280(h)) (63-76) இதழ்கள்
9. விக்னேசுவராஷ்டகம் (R. 280(i)) (78-94) இதழ்கள்
10. அகத்தியர் யோகம் *16* (R. 280(j)) (95-101a) இதழ்கள்
11. தட்சிணாமூர்த்தி ரசமணி *14* (R. 280(j)) (102-107a) இதழ்கள்
12. அகத்தியர் ஞானம் *12* (R. 280(l)) (108-112a) இதழ்கள்
13. அகத்தியர் கற்பமுறை சூத்திரம் *10* (R. 280(m)) (113-116a) இதழ்கள்
14. அகத்தியர் ஆறாதாரம் *8* (R. 280(n)) (117-120a) இதழ்கள்
15. ஞானதீட்சைச் சுருக்கம் *5* (R. 280(o)) (121-122) இதழ்கள்
16. போகர் சூத்திரம் *16* (R. 280(p)) (124-129a) இதழ்கள்
17. கமலமுனி ஞானச் சுருக்கம் *15* (R. 280(r)) (136-141a) இதழ்கள்
18. உரோமரிஷிசூத்திரம் *16* (R. 280(s)) (142-148) இதழ்கள்
19. உரோமரிஷி சுருக்கம் *16* (R. 280(t)) (149-155a) இதழ்கள்
20. அகத்தியர் பூரண சூத்திரம் *16* (R. 280(u) (156-160) இதழ்கள்
21. திருமூலர் ஞானச் சுருக்கம் (R. 280 (v)) (161-163) இதழ்கள்
22. ஊர்வசி இரத்தினச் சுருக்கம் (R. 280(w)) (164-168) இதழ்கள்
23. உரோமர் கற்பமுறை *20* (R. 280(x)) (169-176) இதழ்கள்
24. உரோமரிஷி சூத்திரம் *25* (R. 286(y) (177-187a) இதழ்கள்
25. அகத்தியர் வழலை *30* (R. 280(z)) (188-195) இதழ்கள்
26. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் *12* (R. 280(a-1)) (196-198) இதழ்கள்
27. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் *12* (R. 280(b-1) (199-202) இதழ்கள்
28. மச்சமுனி ஞானம் (மூன்று காண்டம்) (R. 280(c-1)) (203-211a) இதழ்கள்
29. அகத்தியர் சூத்திரம் *10* (R. 280(d-1)) (212-214) இதழ்கள்
30. அகத்தியர் சவுக்காரத் திறவுகோல் *16* (R. 280 (e-1)) (216-220a) இதழ்கள்
31. நந்திதேவர் வாத சூத்திரம் *30* (R. 280(f-1)) (221-225) இதழ்கள்
32. அகத்தியர் புனைசுருட்டு *18* (R. 280(g-1)) (226-231a) இதழ்கள்
33. மாணிக்கவாசகர் ஞானத் தாழிசை (R. 280(h-1)) (232-237) இதழ்கள்.

அகத்தியர் கர்ம காண்டம் 300

I. *1.* **272.** *2.* அ. R. 9434. ஆ. T.R. 3515. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் கர்ம காண்டம் 300. ஆ. Akattiyar cūttiram karma kāṇṭam 300. இ. அகஸ்த்தியர் சூஸ்த்திரம் கர்மகாண்டம் முன்னூறு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* *5.* *5.* 25 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12.* *10*; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* பின்பகுதி பெரும்பான்மை இல்லை. *16.* குறை. *17.* *23* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* நம் முற்பிறவி கரும வினையினால் ஏற்படும் நோய்களுக்கு மருந்தும் அவை செய்முறைகளும் பயனும் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* இந்நூலில் நம் உடம்பில் ஓடும் முக்கியமான வாத, பித்த, சிலேத்தும நாடிகளை அறியும் முறைகளை முதலிலும், நோய்களினால் ஏற்படும் விளைவுகள், அவற்றை நாடிபார்த்தலோடு வேறுவகையாக உமிழ்நீர், மலம், சிறுநீர் இவற்றாலும் அறிதல் போன்ற செய்திகளும், பலவகை நோய்களுக்கான மருந்துகளும் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் வயித்திய கர்ம காண்டம் முன்னூறு.

5. பூரணமாய் மூலமுத லாறா தாரம்
புரியட்ட தசவாய்வு னாடி மூன்று
காரணமாய் யிடைபின்னாய்ச் சுழினை யாகிக்
கலந்துநின்ற வாதபித்த சிலேற்பனமு மாகி
மாரணமாய்ச் சடத்துள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரஞ் சித்தத் தாலே
வாரணமாய் நடத்திவித்த கர்மத் தாலே
வந்துதடா நோய்களெல்லாம் மானிடர்க் காமே. 1

6. மூலமுடன் திரிகடுகு திரிப லாதி
முந்திரிகை பேரீத்து மிளகு தாளி
யேலமுடன் கற்கண்டு வங்காளச் சீனி
யிம்பூரல் வேருட னேகுந் திருளை
சூலமுடன் சாலவரும் செண்ப கப்பூக்
குழவிந்த மஞ்சள்சாத் திரப்பே தியுடன்
கோலங்குதிரி பாலையென்ற வரிசை கேளாய்
பச்சைப்பாங்கன் செவ்வள்ளி கமலா ரஞ்சி. 23

7. கடலான் பத்திரியுங்.....

8. மூலம். 9. பாடபேதங்கள் உள்ளன; பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். அகத்தியர் அனுபோக சூத்திரம் என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. R. 246(b), R. 3674, R. 2558, R. 4455, R. 5831, R. 6093. 2. தி.ஆ.எண் 359(a), த.ப.க. எண் 2409, சி.ம.மை.ஆ.நி. எண்கள் 147(h), 158, உ.த.நி.எண் 512:785. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் 300 பாடல்கள் பெற்றுள்ள கர்ம காண்டம் நூல்களில், "பூரணமாய்மும்(உள்)மூலம் பொறியில் சூடாம், புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாம்" எனும் தொடக்க அடி கொண்ட நூல்களும், "பூரணமா மூலமுதலாறாதாரம், புரியட்ட திசை வாய்வு நாடி மூன்றும்" எனும் தொடக்க அடி கொண்ட நூல்களுமாக இருவகை கர்மகாண்ட நூல்கள் உள்ளன. இச்சுவடிக் கட்டில் உள்ள பிற நூல்கள்:

1. மாணிக்க வாசகருக்குக் குரு உபதேசம் (R.9435).

2. அகத்தியர் வைத்திய சூத்திரம் கர்ம காண்டம் (R.9436)

3. நந்தீசுரர் கருக்கிடைச் சுருக்கம் 12 (R.9437).

அகத்தியர் கருப்பக் கோள்

I. 1. 273. 2. அ. R. 9082. ஆ. T.R. 4320. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருப்பக் கோள். ஆ. Akattiyar karuppakkōḷ. இ.

அகஷ்த்தியர் கெற்பக் கோள். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 9; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத்தன்மைகளின் இயல்புகளைக் கூறி, அவற்றைப் போக்கும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பெண்களின் கருப்பக்குழிக்குள் வாயு நிரம்பியிருந்தாலோ, தசை வளர்ந்திருந்தாலோ, கிருமிகள் இருந்தாலோ, சோறை கட்டியிருந்தாலோ, மதித்திருந்தாலோ, ஆண்களின் விந்துகள் அங்குச் சென்று முட்டையுடன் சேரா. இதனால் கருத்தரிக்கும் நிலை ஏற்படாது. இம் மலட்டுத் தன்மையைப் போக்க, கோழியின் பித்து வாங்கி அதனுடன் பருத்தி விரைப் பருப்புச் சேர்த்து ஆட்டி, அவளுடைய மாதவிடாய் நீங்கிய மூன்று நாள் கழித்து அம்மருந்தை அவள் யோனிக்குள் தேய்த்த பின்னர், கணவனைக் கூடினால் கருத்தரிக்கும் என இந்நூல் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. கெற்பக்கோள்.

5. பாரப்பா பெண்ணுக்குக் கெற்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
ஆரப்பா ஆண்மலடே யாகு மாகும்
அப்பனே பெண்மலடோ யில்லை யில்லை
நேரப்பா தவசிருந்து பிள்ளை யில்லா
நேர்மையென்ன ஆறுவகைச் சூலை யுண்டு
வேரப்பா தேவதையா மேழாங் கற்பம்
விவரமாய்ச் சொல்லுகிறோம் வித்தை யெல்லாம்
பேரப்பா ஆசாங்கம்தான் வகையாய்ச் சொல்ல
புலத்தியரே யுங்களுக்குப் புகல்த்து றேனே. 1

6. மதுவாகுங் குளிர்ந்தசிலம் கிட்டா காது
மைந்தனே கொதிதண்ணீர் வெண்ணீ ராகுஞ்
சதுவாகும் வேதத்தைக் கண்டு சொன்னேன்
சத்தியமா மிந்தனூல் சார்ந்து பாரு

அதுவாகு மிதுவாகு மென்று யெண்ணி
அலைந்தலைந்து திரியாம லருணை நோக்கில்
பொதுவாகு நினைவுகொண்டு யிருந்தா ராகில்
புத்திசித்தி முத்திமுதல் புனித மாமே. 16

7. கெற்பக்கோள் மூற்றும். தெட்சணாமூர்த்தி பாதமே கெதி.

8. மூலம். 9. எளியநடை. பாடபேதங்கள் உள்ளன. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. கர்ப்பம், கருப்பம், கற்பம், கெற்பம், கெர்ப்பம் எனப் பலவாறு எழுதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற நூல். புலத்தியர்க்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1.R. 1079(g), R.5812(b), D. 2400. 2. த.ச.ம.நூ.எண்கள் 131, 243(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.நாமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலுடன் 'அகத்தியர் பின்னூல் வைத்தியம் 600', 'சங்கராச்சாரியார் ஞானவுலா' எனும் நூல்களும் சேர்ந்து ஒரே கட்டாக உள்ளன.

அகத்தியர் கலைஞானம் 30

I. 1. **274.** 2. அ. R. 9223. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைக்கியானம் 30. ஆ. Akattiyar kalaikkiyāṉam 30. இ. அகத்தியர் கலைக்கியான சூத்திரம் பாடல் 30. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 20; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்கான முறையைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற

கலைஞானம் (கலைக்கியானம்) 30 என்ற இந்நூலில் முப்புவின் இயல்பு, முப்புவுக்குரிய கருக்குருக்கள் முடிக்குங் காலம், அண்ட பிண்டத்தின் தோற்றம், அண்டசக்தியின் இயல்பு, அம்பிகாயோகத்தின் சிறப்பு, சிவவுப்புவின் தன்மை, சிவதீட்சை, முப்புவின் நிறம், முப்புவின் முதல்–நடு–அடியுப்பின் பெயரும் இயல்பும், பஞ்சபூத உப்புக்களின் இயல்பு, முப்புச் சுண்ணங்களின் இயல்பு போன்ற செய்திகள் கூறப்படுகின்றன. இறுதியில் இரசவாதத்தில், தாழ்ந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றுவதற்கு இம் முப்பும், பிற பொருள்களும் பயன்படும் நிலைகள் கூறப்படுகின்றன.

4. அகத்தியர் கலைக்கியான சூத்திரம் பாடல் 30.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
ஆதியான் மணக்கோலம் நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன் காப்பு
நின்றசதா சிவத்தின் வடிவே காப்பு
பாதிமதி சடைஅணிந்த சிவன்தாள் காப்பு
பத்திமுத்தி சித்திவயி ரவனே காப்பு
ஓதியதோர் வாணிஅவள் பாதங் காப்பு
ஓங்கார மூலவட்ட தொனிகாப் பாமே. 1

6. ஆமப்பா யின்னீத்தில் துருசு வெள்ளை
அவ்வெள்ளைச் சுண்ணத்தால் அரைத்து நீத்தி
ஓமப்பா பரித்தகட்டில் பூசிப் பாரு
உத்தமனே சொர்ணமது சுண்ணாம் பாகும்
நாமப்பா சொல்லுவோம் செம்பதிற் கொடுக்க
நாட்டோர்க்குப் பிழைப்பதற்கு வழியு முண்டாம்
காமப்பா அதையெடுத்து வெள்ளிக் கீய
கனகமாங் கருமூன்று பத்து முற்றே. 30

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன; பாடபேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 'அகத்தியர் கலைக்கியானம்' என்றும் வழங்கப்படும். 'அகத்தியர் வகார மார்க்கம்' என்றும் இதன் பிரதியொன்று பெயர் பெறுகின்றது. 'அகத்தியர் முப்பு 30' என்றும் மற்றொரு பிரதிக்குப் பெயருண்டு. 11. இல்லை.

IV. 1. R. 9052(b), R. 9244. 2. சி.ம.மை.ஆ.நி. எண்1019(j), த.ப.க.எண் 1194, த.ச.ம.நூ.எண்கள் 121(g), 321(b), 469(f), 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் முப்பு 30', அகஸ்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் உள்ள பிற நூல்கள் வருமாறு: 1. நந்திதேவர் முப்பு சூத்திரம், 2. அகத்தியர் கலைக்கியானம், 3. அகத்தியர் முப்பு, 4. அகத்தியர் பிரம்மகற்ப சூத்திரம், 5. அகத்தியர் திறவுகோல் சவுக்காரம், 6. அகத்தியர் பூரண சூத்திரம், 7. புலத்தியர் கருவழலை சூத்திரம், 8. அகத்தியர் சித்தாந்தம், 9. முப்பூவின் கருக்கிடைச் சூத்திரம், 10. அகத்தியர் யோக சாதனை, 11. ரோம ரிஷி சூத்திரம், 12. கொங்கணர் முப்பு சுருக்கம் மூன்று, 13. கருவூரார் வெண்பா, 14. பிரணவத்தின் விவரம், 15. பதஞ்சலி மாமுனி மதிவெண்பா, 16. பதஞ்சலி மாமுனி சந்தப்பா, 17. இடமரானந்தர் முப்பு சூத்திரம், 18. சூரியானந்தர் வழலை சூத்திரம், 19. அம்பிகானந்தர் முப்பு சூத்திரம், 20. தன்வந்திரி முப்பு சூத்திரம், 21. திருமூல நாயனார் சூத்திரம், 22. அகத்தியர் சூத்திரம், 23. அகத்தியர் கற்ப சூத்திரம், 24. அகத்திய மாமுனி வைத்தியம் பாடல் அறுநூறு.

அகத்தியர் கலைஞானம் 30

I. 1. 275. 2. அ.R. 9244. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 30. ஆ. Akattiyar cūttiram 30. இ. அகஸ்தியர் சூத்திரம் முப்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 13; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. பின்பகுதி. 16. குறை. 17. 20 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்கான பொருள்கள் தயாரிப்பு முறை கூறும் நூல். 2. இரசவாதம். 3. வரிசை எண் 274 போன்றது.

4. அகஸ்தியர் சூத்திரம் முப்பது.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை போத்தி
அடிமுடியாம் அங்கோலம் நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன் காப்பு
நின்மல சதாசிவத்தின் வடிவே காப்பு
பாதிமதி யணிந்தசிவன் தாளே காப்பு
பத்திமுத்தி சித்திவயி ரவனே காப்பு
ஓதியதோர் வாணியுட பாதங் காப்பு
ஓங்கார மூலவட்டத் தொனியே காப்பே. 1

6. பேரான வாக்கடுத்த பளிங்கென் றும்பேர்
பெரிதான சிவரூப முடியென் றும்பேர்
ஊரான வெள்ளைக்கல் லென்றும் பேரு
உருவான ஆகாஷ மென்றும் பேரு
சீரான சரக்கென்றுஞ் சார மென்றுஞ்
சிவன்ருத் திரன்சன்மார்க் கத்தா ரென்றும்
பேரான வாசியென்றும் மூல மென்றும்
பெருமையுத்த மகாரமென்றும் பேரு மாச்சே. 20

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடவேறுபாடுகள், பிரதிபேதங்கள் உள்ளன. எளிய நடை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். வேறு பெயர்களிலும் இந்நூல் வழங்கப்படுகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 9052(b), R. 9223. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 1019(j), த.ப.க.எண் 1194, த.ச.ம.நூ. எண்கள் 121(g), 321(b), 469(f). 3. இல்லை.

V. 1.இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் முப்பு 30', அகஸ்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயருடன் 'முப்பு', 'வகாரம்', 'வாதம்', 'கைபாகம்' எனும் பெயர்களிலும் இந்நூற் செய்திகள் பாடப்பெற்றுள்ளன. அகத்தியர் பெயரில் மட்டுமல்லாது, வேறுபல சித்தர்கள் பெயர்களிலும் இந்நூற் செய்திகள் காணப்படுகின்றன. இச்சுவடிக் கட்டில் 'அகத்தியர் கலைஞானம் 30' என்ற இந்நூலுடன், சூரியானந்தர் வழலை

சூத்திரம் (R. 9240), அம்பிகானந்தர் முப்பு சூத்திரம் (R. 9241) முதலிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் கற்பம் 16

I. 1. **276**. 2. அ. R. 9225. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கற்பம் 16. ஆ. Akattiyar karpam 16. இ. அகத்தியர் பிரம்ம கற்ப சூத்திரம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் ஏற்படும் சில நோய்களுக்கான கற்ப மருந்துகள் செய்முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. சுண்ணத்தின் விவரம், சுத்திமுறைகள், வழலை, துரியநாத உப்பு விவரம், சுண்ணத்தின் அட்டவணை என்பன இந்நூலில் கூறப்பட்டுள்ளன. துரியம் என்பது பற்ப வகைகளில் ஒன்று.

4. அகத்தியர் பிரம்ம கற்ப சூத்திரம் பதினாறு.

5. ஆதியந்தம் நடுவான ஜோதி பாதம்
அனுதினமும் நெஞ்சில்வைத்து அருளைப் போற்றி
ஜோதிமயம் ஆனதொரு துரியம் பாத்து
துரியத்தில் ஆடுகிற சிவனைப் போற்றி
ஆதியாய் நின்றதொரு மாலைப் போற்றி
அருள்பெற்ற மயேசனது அடியைப் போற்றி
ஜோதியாய் விந்துவினில் துலங்கும் நாதம்
துரியவெளி அடியெனவே தொழுதிட் டேனே. 1

6. தானென்ற பூரநிற செயநீர் பண்ணி
தடையறவே சரக்கெல்லாம் கட்டிக் கொள்ளும்
ஊனென்ற உடலைவிட்டு வெளியை யடைந்து
ஒழுடிந்துப் போ...தே உலுத்தா சொன்னேன்
தானென்ற மனோன்மணியே பூரணம தாகும்
சிவனோடுங் கும்பன்பரமே குருவ தாகும்
நானென்று அகம்பிடித்தால் தலைதெ றிக்கும்
நல்லதொரு கல்சுண்ணத் துப்பு முற்றே. 16

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. எளிய நடை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 'பிரம்ம கற்ப சூத்திரம்' என்பதால் கற்பங்களிலேய உயர்ந்த தரம் வாய்ந்தது எனக் கொள்ளலாம். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), 'அகத்தியர் அண்டக்கல் முப்பு சுண்ணம் 16', அகஸ்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற 9 பாடல்கள் கொண்ட கற்ப நூல் ஒன்று (R.280(m)) அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளது. இந்நூலில் வெண்சாரைக் கற்பம் பற்றியும் துரியம் பற்றியும் அவை தயாரிக்கும் முறைகளும் கூறப்படுகின்றன. (பார்க்க: அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை, தொகுதி 1, பக்கங்கள் 186-189)

அகத்தியர் குருநாடி

I. 1. 277. 2. அ. R. 940(a). ஆ. T.R. 759. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநாடி. ஆ. Akattiyar kurunāṭi. இ. அகஸ்தியரருளிச் செய்த குருனாடி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஐம்புலிங்கம், மைலாப்பூர், சென்னை. 10. கி.பி.1927–28.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 85. 5. 29 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 170; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13 பக்கத்திற்கு 4 முதல் 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 309 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி முதலிய நாடிகள் உடம்பில் முக்கியமாக நின்று இயங்கக்கூடிய நிலைகளை இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. உடம்பில்

ஏற்படும் நோய்களுக்குக் காரணமான வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றுவகை தோசங்களின் அளவுகளைக் கண்டறிவதற்கான நாடி பார்க்கும் முறை, மற்றும் அந்நாடிகளில் மேலோங்கி நிற்கும் தோசத்தின் குணம், அதற்குரிய பரிகாரம் முதலியவற்றை இந்நூல் மிகவும் விரித்துக் கூறுகிறது. அன்னம், கோழி, மயில் போல நடப்பது வாதநாடி எனவும், ஆமை, அட்டை போல நடப்பது பித்தநாடி எனவும், தவளை, பாம்பு போல நடப்பது சிலேத்தும நாடி எனவும் கூறுகிறது. குருநாடி என்பது பித்தத்துக்கும் வாதத்துக்கும் இடைப்பட்டது. சிரசு சூலை குணம், நீரிழிவு குணம், பீனிச குணம், சயரோகக் குணம், குன்ம குணம், குருநாடி குணம், வாசிநிலை குணம், பித்த குணம், சூட்டு குணம், சோகை குணம் முதலான பல்வேறு நோய்களின் குணங்களும் காதடைப்பு, தசைநாடி, பூதநாடி, பற்றுக்குக் குணம், நாடி நிதானம், வாத பித்தச்சிலேத்துமநாடி, நோய் விவரம், கிராணிநிதானம், சன்னி நிதானம், சுரோணித வாத நிதானம், மூர்ச்சை நிதானம், கிருமி நிதானம் முதலிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

4. அகஸ்தியரருளிச்செய்த குருநாடி. குருவே துணை.

5. ஓங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செய்கை
யுடநிந்தச் சூஸ்திரமா யுரைத்த வாறும்
மாங்காரங் கொண்டதொரு மனத்தைத் தேர்ந்து
மருவுருவே சுரூபமென்ற மர்ந்த நேர்மை
பாங்கார னாடிநரம் பான வாறும்
பழைமறைதா னாராய்ந்து பாடி வைத்தேன்
நீங்கார கணபதியுங் கந்தன் தானும்
நிசமாக வந்துதவுங் காப்புத் தானே. 1

6. பண்புறு வாய்வு வெள்ளம்
போகினு மோர்வாய் வுத்தான்
நண்புசேர் நல்லோர் போல
நயம்பட நயந்து நின்று
தின்புறு வீக்கங் காட்டி
செறியுனாள் மூன்று தன்னிற்
றண்புற வெடித்து வத்தித்
தனஞ்செயன் றலையார்ப் போமே. 309

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ற/ர, த்த/ற்ற. ன்/ந் ஆகிய எழுத்துக்களுக்கிடையே வேறுபாடு இல்லை. பிழைகள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் இந்நூல் பாடப்பெற்றுள்ள தாயினும், 'அகத்தியர் குருநாடி 235' என்ற நூலின் பாடல்களை விட, அதிகப் பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 6067. 2. த.ச.ம.நூ. எண்கள் 175, 451, 3860, சி.ம.மை.ஆ.நி. எண்கள் 135(c), 831(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i). ஆறுமுக சுவாமிகள், (பதி.), 'அகத்தியர் குருநாடி சாத்திரம் 235', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. (ii). அகத்தியர் குருநாடி சூத்திரம் 245, பி. இரத்தினநாயகர் & சன்ஸ், சென்னை, 1972. 3. இல்லை.

VI. சித்த மருத்துவத்தில் நாடி பார்த்து, நோய் அறிந்து, மருந்து கொடுக்கும் முறையே இன்றும் உள்ளது. அகத்தியர் குருநாடி சூத்திரம் 245 ல் 4 பதிப்புகள் வந்துள்ளன. அகத்தியர் குருநாடி சூத்திரம் 100 என்னும் நூலும் வெளிவந்துள்ளது. பதினெண் சித்தர் நாடி சூத்திரம் எனும் நூல் பல பதிப்புகள் பெற்று வெளிவந்துள்ளது. நாடிகளில் அசாத்திய நாடி, சாத்திய நாடி, வாதநாடி, பித்தநாடி, சிலேத்தும நாடி, தசநாடி என்பன முக்கியமானவை. நாடிகள் பதினாறு வகை என வைத்திய மூலிகை அகராதி என்ற நூல் கூறுகின்றது. அவற்றுள் சுழிமுனை, இடகலை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகிவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி என்பனவற்றின் வகைகள் அறியப்பட்டுள்ளன. சுழிமுனை ஆதாரமாறினும் ஊடுருவி, பின்னி நிற்பது. காந்தாரியானது நாபியிற் தோன்றிச் சத்தம் ஏழுக்கும் ஏழு நாடியாய்க் கண்டத்து உறுவது. அத்தி, சிகிவை இரண்டும் பத்து நாடியுற்றுக் கண்ணில் நிற்பன. அலம்புடை, புருடன் இரண்டும் செவியின் உற்று இருபது நரம்புற்றிருப்பன. குருநாடி உறைந்து குய்யம் பற்றி நிற்பது. சங்கினி உபத்தத்தைப் பற்றி இருப்பது.

அகத்தியர் குருநூல் 600

I. 1. 278. 2. அ. R. 948. ஆ. T.R. 767. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல் வைத்தியம் 600. ஆ. Akattiyar kurunūl vaittiyam 600. இ. அகத்தியர் குருநூல் வயித்தியம் அறுநூறு.

வழலைப் பாகம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஜம்புலிங்கம் பிள்ளை, மைலாப்பூர், சென்னை. 10. கி.பி. 1927–28.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 104. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 208; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 609 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவத்திற்கும் இரசவாதத்திற்கும் பயனாகும் வழலை உப்புக்களைத் தயாரித்தல் பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. இந்நூல் அஞ்சனம், பற்பம், செயநீர், கற்பகம், தயிலம் போன்ற மருந்துகளின் செய்முறைகளை விரிவாகக் கூறுகின்றது. மேலும், வழலைப்புடம், அப்பிரகச் சுத்தி செந்தூரம், காந்த செந்தூரம், சிந்தாமணி மாத்திரை, ஆனந்த வயிரவன் மாத்திரை, சஞ்சீவி மாத்திரை, தங்க பற்பம், வெள்ளி பற்பம், முத்து பற்பம், பவள பற்பம், வங்க பற்பம் போன்ற மருந்துகளின் செய்முறைகள் கூறப்படுகின்றன. மேகராசாங்கத் தயிலம், மகா சந்தனாதித் தயிலம், பெருங்கமலாதித் தயிலம், வில்வாதித் தயிலம், வேப்பெண்ணெய்த் தயிலம் போன்ற தயில வகைகளும் கூறப்படுகின்றன. பஞ்சதீபாக்கினி இலேகியம், கண்டங்கத்திரி இலேகியம், பாண்டுக்குக் கரிசாலை இலேகியம், குண்டாக்கினி இலேகியம் முதலிய இலேகிய வகைகளின் செய்முறையும் பயனும் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. அகத்தியர் குருநூல் வைத்தியம் அறுநூறு. வழலைப் பாகம்.

5. கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்துயிந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாட
தருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாட
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்குங்
குபேரனென நிதிமருந்து கூடுங் கூடும்
பெருமைமிக்க கீர்த்தியுண்டாஞ் சித்தர்க் கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூறு தானே. 1

6. உண்டா மெழுகு வயித்தியத்தி
லொருநூ றொடுக்க மெண்பதுண்டு
பண்டாங் குருநூற் றன்பதுக்குப்
பாரும் வழலை யன்பதுண்டு
வேண்டாம் நூல்க ளிதுபோலும்
விடாதே நூல்க ளொருவருக்குங்
கண்டா லறுநூற் வெளியாகக்
காட்சி யெழுதி முகிந்ததுவே. 609

7. குரு கடாட்சம் உண்டாகவும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. சித்தார்த்தி வருசம் ஆடி மாதம் 29 ம் தேதி அகத்தியனார் அருளிச் செய்த குருநூல் அறுநூறும் எழுதி நிறைந்தது. முற்றும். குருவே துணை.

IV. 1. D. 2326, D. 2420. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் குருநூல் 600 என்னும் இந்நூலானது அகத்தியர் தண்டகம் அறுநூறு' என்ற பெயரிலும் வழங்கப்பெறுவதை இந்நூலகத்திலுள்ள D.2326 என்ற எண்ணிலமைந்த சுவடியின் மூலம் அறிய முடிகின்றது. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், அகத்தியர் அறுசுவை நிகண்டு (R.948(b)), பேஷஜ கற்பம் (R.948(c)), சிந்தாமணி தாதுநிதானம் (R.948(d)), அகத்தியர் குருநூல் 60 (R.948(e)), அகத்தியர் முன் 80 (R.948(f)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் குழம்பு

I. 1. **279.** 2. அ. R. 9275. ஆ. T.R. 3432. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு. ஆ. Akattiyar kulampu. இ. அகஸ்தியர் குழம்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 9; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 22 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* பலவகைச் சரக்குகளைக் கொண்டு குழம்பு தயாரித்தலும், அதன் பயனும் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* அகத்தியர் குழம்பு என்னும் இந்நூலில், குழம்பில் சேரும் சரக்குகள், குழம்பு செய்முறை, துணை மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியனவும், நோய் தீரும் முறைகளும் கூறப் படுகின்றன. அகத்தியர் குழம்பு ஒரு மருந்துப் பொருளாகும். இம்மருந்தானது பெருங்காயம், கடுகு, இந்துப்பு, இரசம், வெங்காயம், மனோசிலை, அரிதாரம், நேர்வாளம், ஓமம், கருஞ்சீரகம் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சூதகவாய்வு, நெஞ்சுவலி, மேகம், சுரம், குளிர்சுரம், இருமல், பாண்டு, மகோதரம், சோகை, சன்னி, சூலை, குட்டம், வாதம் முதலிய பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் மருந்தாக இக்குழம்பு பயன்படுகிறது. நாகப்பாம்பு கடிவிசத்துக்கு மூன்று பணவெடை அகத்தியர் குழம்புடன் நாவற் கொழுந்து, மிளகு, இரண்டு வராகனெடை வெற்றிலைச் சாறு ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுத்தால் விசம் தீரும். தேளின் விசத்துக்கு எருக்கந்துளிரிலையில் இக்குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுத்தால் விசம் தீரும். விசபாண்டு, வீக்கம் ஆகியவை தீர நொச்சிச் சாறு, சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டிக் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுத்தால் இந்நோய்கள் குணமாகும்.

4. அகஸ்தியர் குழம்பு.

5. பருபதந் தன்னில் வாழும்
பரமனா னருளி னாலே
பொருமையா லுலகி லுள்ள
புண்ணிய சனங்க ளுக்கு
உருபல வியாதி வந்தால்
உண்மையாய்த் தீர வென்று
பெருமலை முனிவர் கூடிப்
பேசிய மருந்து கேளே. 1

6. கேளா யிந்தவகைக் கெல்லாங்
கிளியே பேதி மிகவுண்டாம்
பாழாய் மயங்க வசம்புகூட்டிப்
பாங்காய்க் கசாயம் வைத்ததனில்

சூழா வெண்ணைப் பாக்களவு
சுருக்காய்ப் போட்டுக் குடிப்பீரேல்
மீளாப் பேதி யுள்ளதெல்லா
மின்னே தீரு மெய்யிதுவே. 22

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பாடபேதங்கள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் அகத்தியர் பெருங் குழம்பு என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. R. 4508, R. 3629, R. 4713, R. 5814, 2. த.ப.க. எண்கள் 566, 1037, உ.த.நி.எண்கள் 257:477, 509:770. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. சே. பிரேமா & ப.வெ. நாகராசன், (பதி.), 'அகத்தியர் குழம்பு', தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986; தி.மகாலட்சுமி, (பதி.), 'சித்த மருத்துவ மணிகள்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்பு என்ற தலைப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 10, 9, 7 பாடல்கள் கொண்ட மூன்று சுவடிகள் உள்ளன. திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவேங்கடவன் கீழ்த்திசை ஆய்வு நிறுவனம் ஆகிய இடங்களிலும் அகத்தியர் குழம்பு என்ற பெயரில் சுவடிகள் காணப்படுகின்றன. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு என்ற இந்நூலுடன் அகத்திய நாயனார் பதினாறு, குழந்தை மாந்தத்துக்கு மருந்து, சுந்தரானந்தர் மருத்துவம், அனுபவ மருத்துவம், மந்திரம் முதலிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் சஞ்சீவி

I. 1. 280. 2. அ. R. 5805. ஆ. T.R. 2492. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சஞ்சீவி. ஆ. Akattiyar cañcīvi. இ. கும்பமுனி பெருநூலில் அன்பதினாயிரத்தில் சஞ்சீவி மாரணம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 186. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 372;

இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 974 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மேகம், வாதம், சூலை முதலிய பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் மந்திரம். 3. தம்பனம், மோகனம், வசியம் முதலான அட்டகருமங்கள் பற்றிக் கூறப்படுகின்றன. சூதகிண்ணம், மோடிவித்தை, சொக்குப்பொடி, கெருட ஆகிருசனம், மதனகலை வசியம் ஆகியனவும் பேசப் படுகின்றன. மேகம், குட்டம், சூலை, ...ம், பவுத்திரம், எட்டு வகையான குன்மம், எண்பது வகையான வாதம், வாதகிராணி, கல்லடைப்பு, நீரடைப்பு, நெஞ்சடைப்பு முதலான பல்வேறு நோய்களுக்கான மருந்துகளான தயிலம், பற்பம், எண்ணெய் வகைகள், இலேகிய வகைகள் ஆகியவற்றின் தயாரிப்பினையும் அவற்றைப் பயன்படுத்தும் முறையும், பத்திய வகைகளும் விளக்கமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

4. —.

5. ஆதியென்ற குருநாதன் அருளிச் செய்த
....ணமெல்லா மடக்கிப் பாடி
சோதிவடி வானகெண பதியுங் கந்தன்
சொல்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
நீதிவடி வாய... ....
.... வள்ளி நேசம்
....
வேதியனார் பாதமிரு பாதம் போற்றி. 1

6. பாவத்தை நிவர்த்தி செய்து வயித்திய மறிந்து பாரு
சாபத்தின் நிவர்த்தி தன்னைச் சாற்றினேன் முன்னூற்றுள்ளே
யாவத்தின் கோப மில்லா அறிவுள்ள வயித்தி யோர்க்குச்
சீவத்தி னுறுதி யாகச் சிவபூசை நல்கை செய்யே. 974

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. பிழைகள் நிறைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்

பெற்றுள்ளது. 'கும்பமுனி பெருநூலில் அன்பதினாயிரத்தில் சஞ்சீவி மாரணம்' என்ற தலைப்பு இந்நூலின் முகப்பில் காணப்படுவதால் அகத்தியருக்குக் 'கும்பமுனி' என்ற பெயரும் உண்டு என்பதை இதனால் அறிய முடிகின்றது. இதுபோன்ற நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 'கும்பமுனி பெருநூலில் 50' என்ற பெயரில் காணப்படுவது மேற்கண்ட செய்தியை உறுதிப்படுத்துகின்றது. 11. இல்லை.

IV. 1.இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. பரசுராம முதலி, டி.இ. (பதி.), 'அகத்தியர் சஞ்சீவி எண்ணெய்கள்', பரப் பிரம்ம அச்சியந்திர சாலை, சென்னை, 1882. 3. இல்லை.

VI. சஞ்சீவி என்பது உயிர்தரும் மருந்து அல்லது மூலிகையைக் குறிக்கும் சொல் ஆகும். எனவே அகத்தியர் செய்த 'பெருநூல் 50,000–ல்' இப்பகுதி சஞ்சீவி மருந்தாக அமைந்து மக்களை நோயிலிருந்து காப்பாற்றி வாழவைக்கும் அருமருந்தாக அமைவதால் 'அகத்தியர் சஞ்சீவி' என்று இந்நூல் பெயர் பெற்றிருக்கலாம்.

அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. 1. **281**. 2. அ. R. 9226. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சவுக்காரத் திறவுகோல். ஆ. Akattiyar cavukkārat tiṟavukōl. இ. அகத்தியர் திறவுகோல் சவுக்காரம் சூஸ்த்திரம் பதினாலு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிப்பதற்கு அடிப்படையாக அமையும் சவுக்காரத்தின் பண்புகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பூநீறு 2 படி, கற்சுண்ணம் 2 படி எடுத்து இவற்றைப் பொடி

செய்து கொண்டு இவற்றுடன் சூடன், நவச்சார சுண்ணம், வெடியுப்பு இவற்றைச் சேர்த்து இடித்து அவற்றுடன் சிறிது நீரை விட்டுக் கலக்க வேண்டும். பிறகு அதனைச் சூரிய ஒளியில் காயவைத்து அதன் தெளிவை (மேலாக நிற்கும் நீர்) இறுத்து மீண்டும் ஒரு மாத காலம் அதனைச் சூரிய ஒளியில் வைத்தால் வெண்மையான வெள்ளைஉப்பு கிடைக்கும். இதைப் பீங்கானில் போட்டு இரண்டு மாதம் சூரிய ஒளியில் வைக்க சிவந்த வெண்மையில் அவ்வுப்பின் நிறம் மாறும். இதுவே சவுக்காரம் என்றழைக்கப்படும். இதைக்கொண்டு முப்பு தயாரித்தல் மிகவும் எளிதாகும். இம்முப்புவினால் தயாரிக்கப்படும் மருந்தை உண்போர் ஞானியாவர் என்றும் இந்த நூலின் ஆசிரியர் கூறுகிறார். மேலும் இந்நூலில், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட இடங்களில் மண்ணின் அடியிலிருந்து விளையும் பூநீறை எப்படிப் பெற வேண்டும் என்பது குறித்து ஆசிரியர் தெளிவுபடக் கூறுகின்றார். அதுபோலவே வெடியுப்பைப் பெறும் முறையினையும் கற்சுண்ணம் பெறும் முறை யினையும் இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்த்தியர் திறவுகோல் சவுக்காரம் சூஸ்திரம் பதினாலு.

5. ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
ஐங்கரனை அடிதொழுது அரனைப் போற்றி
சோதிமணி நடுவான தேவி சொல்ல
சூஸ்திரந்தான் பதினாலுஞ் சுருக்கிப் பாட
வேதியா யிரத்தி இருநூறு சூத்திரம்
விளங்கியதோர் சவுக்காரக் குருவாம் சூஷ்சம்
நீதியாய் முன்னூலுக் கின்னூல் சூத்திரம்
நிஷ்செயமாய் பதினாலுந் திறவு கோலே. 1

6. பகருவான் மூலிகையின் போக்கு ஞானம்
பண்பான சவுக்காரம் அஷ்ட்ட சித்தி
பகருவான் குளிகைமுதல் எல்லாஞ் சித்தி
பாராட்டால் சித்தியில்லை சொன்னேன் சொன்னேன்
பகருவான் விட்டகுறை தவத்தோர்க் கல்லால்
பதினெண்பேர் நூல்பார்த்து வகைதோணாது
பகருவான் நிலைநின்று வாசி யூதில்
பலிக்கும்சூத் திரம்பத்து நாலு முற்றே. 14

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. வடமொழி எழுத்துக்கள் பயின்று வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூலுக்குரிய முப்பு பற்றிய அடிப்படைக் கருத்துகள் அகத்தியர் 1200, அகத்தியர் சவுக்கார குரு 300 ஆகிய நூல்களிலிருந்து தொகுத்துச் செறிவுடன் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 11. இல்லை.

IV. 1. R.192(m), R.280(e-1), R.7880. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 302(h), 353(d), 1041(c), 1046(d), ஆ.நி.எண் 509(c), உ.த.நி.எண் 199:403. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் முப்பு சூத்திரம் 26', அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. திறவுகோல் என்றால் அடைத்திருப்பதைத் திறப்பது என்று பொருள்படும். இங்கு நோயைப் போக்குவது என்று பொருள் கொள்ளலாம். இது 14 பாடல்கள் பெற்றிருந்தாலும் இந்நூலகத்தில் காணப்படும் சுவடிகளில் இதே பெயரில் 16 பாடல்கள் பெற்று இந்நூல் வந்திருப்பது அறியத்தக்கது.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. 282. 2. அ. D. 1879. ஆ. T.D. 740. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத் திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகஸ்திய னாயனார் அருளிச் செய்த சாலத்திரட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு; மூன்றுவகையான கையெழுத்து உள்ளது. 4. 160. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 319; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 160ஆம் ஓலையின் முதல் பக்கத்துடன் நூல் முடிகிறது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம் & வெண்பா. 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. செப்படிவித்தை, இந்திர, தந்திர வினோத வித்தை ஆகிய இந்திரசால வித்தைகளைப் பற்றியும் அவற்றுடன்

தொடர்புள்ள கர்மங்களையும் இரசவாதத்தையும் கூறும் நூல். 2. மந்திரம் மற்றும் மருத்துவம். 3. இந்த நூல் செப்படி வித்தை அல்லது இந்திரசாலம் என்னும் மந்திர, தந்திர வித்தைகளின் கருக்களைக் கூறுவதோடு அட்டகர்மச் சூத்திரங்களையும் இரசவாத முறைகளையும் விரிவாக விளக்குகின்றது. இதனைக் கரு சாத்திரம் கூறும் நூல் என்றும் கூறலாம். அகத்தியர் சாலத்திரட்டு என்னும் இந்நூல், அகத்தியர் இந்திரசாலத் திரட்டு என்றும் வழங்கப்படுகிறது. இந்திரசாலத் திரட்டு எனும் பெயருக்கேற்ப இது ஏழு காண்டங்களில் சாலவித்தைகளைப் பற்றிக் கூறுகிறது. பணவித்தை, குருவின் வித்தை, சீனவித்தை, வினோதவித்தை, சீட்டு வித்தை, மிருக வித்தை, நொடிவித்தை, மூப்பு வித்தை, துள்ளு வித்தை முதலிய பல்வேறு சாலவித்தை முறைகளைக் கூறுகிறது. தியான முறைகள், அட்டசித்தி முறைகள், பூசை முறைகள் பற்றியும், கருக்கிடை, வேதை, கற்பமுறைகள், லோக சகமறைப்பு, அஞ்சனம், கரு மண்டை தொடர்பான கருக்கள், அக்கினி, அப்பு, வாயு, மண் ஆகியவற்றின்மேல் சஞ்சரித்தல் முதலான பலவகைச் செய்திகள் பற்றியும், களவு செய்யவும், வெட்டிய தலை மீண்டும் ஒன்றாகச் சேரவும் வழிமுறைகள் கூறப்படுகின்றன. மரணம் நேரிடவும், திருடனைக் கண்டுபிடிக்க மை தயாரிக்கும் முறையும், கணவன் மனைவியைப் பிரித்து வைக்கவும், பெண்களை அடையவும் வசிய முறைகளும், பாம்பு விசம் நீங்க மந்திர சாலங்களும் கூறப்படுகின்றன.

4. சீரொரு சால வித்தை
சிவன்குரு வருளிச் செய்த
ஓரொரு கருவைச் சும்மா
உலகமீ துரைக்க லுற்ற
பேரொரு வருக்கு மீசன்
பிழைவரு மென்ற தாக
ஆரொரு வரையா னாலும்
அகத்தினிங் கடக்கி வைப்பாம்.

5. பூரண வாலை ரூபம்
பிறந்தமுன் தீட்சை யெல்லாம்
காரண குருவே சொல்லுங்
காட்சியில் குருவே யாடும்

வாரண வாகை பூண்டு
மயின்மிசை நடனஞ் செய்யும்
பேரணி முருகன் காப்பு
பிண்டத்தை யாட லாமே. 1

6. பேரென்ன ஆதி ரைனாள்
பிறகருவிது நம்மைக் கெல்லாந்
தூரெனத் தலைப்பு மாகும்
சேரன மாத்திரத் துக்கெல்லாம்
வேரென்ன வுருவே வேறு
விடதலை யுருவே மூலம்
பாரென்ன ஏழாங் காண்டம்
படித்திரு மவுன முற்றே. 1200

7. குருவே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியர் சாலத்திரட்டு என்னும் இந்நூல், ஏழு காண்டங்கள் பெற்றுள்ளதால், 'சப்த காண்ட சாலத் திரட்டு' எனவும் அழைக்கப்படும். 11. இல்லை.

IV. 1. R. 6991. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 1383(c), 409(b), 178. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இத்திரட்டுநூல் ஏழு காண்டங்களாலாகியது. முதற் காண்டத்தில் 194 பாடல்களும், இரண்டாம் காண்டத்தில் 200 பாடல்களும், மூன்றாம் காண்டத்தில் 200 பாடல்களும், நான்காம் காண்டத்தில் 200 பாடல்களும், ஐந்தாங் காண்டத்தில் 200 பாடல்களும், ஆறாங் காண்டத்தில் 100 பாடல்களும், ஏழாங் காண்டத்தில் 100 பாடல்களும் ஆக 1194 பாடல் களாலானது. மொத்தம் 1200 பாடல்களிருக்க வேண்டியதில் 6 பாடல்கள் தவறியுள்ளதாகத் தெரிகிறது. முதல் ஐந்து காண்டங்களும் முறையே 200 பாடல்கள் வீதமிருக்க, இறுதி இரு காண்டங்களும் முறையே 100 பாடல்கள் கொண்டிருப் பதைப் பார்க்கும்போது அவை பிற்சேர்க்கையா அல்லது

மூலநூலிலிருந்து முறையே 100 பாடல்கள்தாம் திரட்டப் பெற்றனவா எனத் தெரியவில்லை. ஆனால் T.R. 2636 எண்ணுள்ள சுவடியில் நான்கு காண்டங்களே உள்ளன; அவை முறையே 300 பாடல்கள் வீதம் பெற்று 1200 பாடல்கள் கணக்குக்கு ஒத்துள்ளன. T.R. 234 சுவடியில் முதற்காண்டம் 300 பாடல்கள் கொண்டதாக இருப்பதால் இருவகையான திரட்டு மரபு இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. அதாவது 200 பாடல்கள் வீதம் 6 காண்டங்களும் 300 பாடல்கள் வீதம் 4 காண்டங்களும் திரட்டப் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இத்திரட்டு நூலில் உள்ள காண்டங்கள் தனித்தனித் தொடக்கமும் தனித்தனி முடிவும் பெற்றுத் தனியாகவே அமையுமாறு உள்ளன. ஆயின் தொடர்ச்சியான ஓலை எண்கள் தரப்பெற்றுள்ளதால் ஒரே நூலின் வெவ்வேறு காண்டங் களாலியன்றது எனக் கொள்ளலாம். அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள சாலநிகண்டு என்ற நூல் கருத்தும் இச்சுவடிநூல் கருத்தும் ஒன்றாக உள்ளதால் இவ்வகையான சுவடிகளுக்குச் சால நிகண்டு என்றும், சாலத்திரட்டு என்றும் பெயர்கள் வழங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

அகத்தியர் சாலத்திரட்டு

I. **1. 283.** 2. அ. R. 6227. ஆ. T.R. 2636. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகஷ்த்தியர் சாலத்திரட்டு முதற்காண்டம் 300. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 41. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 82; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சூலை, மூலம், மேகம் முதலிய பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல்.

2. மருத்துவம். 3. அகத்தியர் சாலத்திரட்டு 1200ல், இந்நூல் முதல் காண்டமாக அமைந்து விளங்குகிறது. இம்முதற் காண்டம் 300 பாடல்களைப் பெற்று 'வைத்திய காண்டம்' என அழைக்கப்படுகிறது. இந்நூலில் முப்புவின் விவரமும், இரச சுன்னம், அரிதாரச்சுன்னம், துருசுச்சுன்னம், கற்பூரச்சுன்னம், காந்தச் சுன்னம் முதலிய பல்வேறு சுன்ன வகைகளும், இரச பற்பம், தாமிர பற்பம், கந்தக பற்பம், வீர பற்பம் முதலான பல்வேறு பற்ப வகைகளும், அரிதாரம், கல்லுப்பு, பொரிகாரம் போன்றவையும், கரிசாலை எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் முதலிய எண்ணெய் வகைகளும், வெள்ளை ஆவாரைத் தயிலம், சிவன் வேம்புத் தயிலம், வேப்பம் பட்டைத் தயிலம் முதலான தயில வகைகளும் அவற்றின் செய்முறைகளும் கூறப்படுகின்றன. மேற்கூறிய இம்மருந்துப் பொருள்களோடு இன்னும் பலவகை மருந்துப் பொருள்கள் குணப்படுத்தும் நோய்களாகச் சூலைநோய், காமாலை நோய், கண்நோய், முலநோய், மேகவெட்டை, அரையாப்பு, புண்வகைகள், எண்வகைக் குன்மம், வாதநோய், காசநோய் முதலிய பல்வேறு நோய்கள் கூறப்படுகின்றன. இந்நூல் முழுவதும் மருந்து செய்முறைகளையும், அம்மருந்துப் பொருள்கள் குணப்படுத்தும் நோய்களையும் மட்டுமே கூறுவதால் 'வைத்திய காண்டம்' என்று இந்நூல் அழைக்கப்படுகிறது.

4. —.

5. காரணமாய் மூலவட்டந் தன்னில் நிற்குங்
கணபதியும் வல்லவையுந் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையுஞ் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாக் கணங்கள் காப்பு
வாரணமா மேறிவிளை யாடு மெந்தன்
மன்னுகுரு வருள்சிறந்து மான காப்பு
நாரணனும் நான்முகனும் அறியா நின்ற
நலமான வேதாந்தங் காப்புத் தானே. 1

6. காண்டமுடன் கர்மசூஷ்த்திர முன்னூறு
கண்டீரே கர்மகாண்டந் தான்முன் னூறு
தாண்டுவயித் தியசெந்தூ ரமுன் னூறு
துலங்குமிந்த முதற்காண்டம் முன்னூ றோடே

ஆண்டதுகை ஆயிரத்து யிருநூறு பாரு
அரனாணை ஆருக்கு மீய்ந்தி டாதே
தாண்டவங்க ளாடுமடா இதுமுன் னூறு
சத்தியமாம் முதல்காண்டந் தான்முத் தாமே. 300

7. சாலத்திரட்டு முதற்காண்டம் வயித்திய மூன்னூறு முற்றும். குருபாதமே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. பிழைகள் மிகுதி, பேச்சுவழக்குச்சொற்கள் கலந்தும் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் சாலத்திரட்டு 1200–ல் முதல் காண்டமாக இந்நூல் அமைகிறது. 11. இல்லை.

IV. 1. R. 4204, R. 4696, R. 4777, R. 4919, R. 9031. 2. சி.ம.மை.ஆ.தி. எண்கள் 261, 789, 1026, 1085, த.ச.ம.நூ.எண் 417(a), த.ப.க.எண்கள் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. அகத்தியர் சாலத்திரட்டு 1200 என்ற நூலானது நான்கு காண்டங்களைப் பெற்றுள்ளது. முதல் காண்டம் 'வைத்திய காண்டம்' எனவும், இரண்டாம் காண்டம் 'வாத காண்டம்' எனவும், மூன்றாம் காண்டம் 'சாலவித்தை காண்டம்' எனவும், நான்காம் காண்டம் 'மாந்திரீகக் காண்டம்' எனவும் காண்டங்கள் அழைக்கப்படுகின்றன. இந்நூலின் ஒவ்வொரு காண்டமும் 300 பாடல்களைப் பெற்று நான்கு காண்டங்களும் சேர்ந்து மொத்தம் 1200 பாடல்களைப் பெற்றிலங்குகின்றன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. **1. 284.** 2. அ. R. 9031. ஆ. T.R. 4281. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattiraṭṭu. இ. அகத்தீசுர நாயனார் இந்திரசாலம் ஆயிரத்திருநூறு வயித்திய காண்டம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 74. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை.

10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 148; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* முதல் *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 300* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* சூலை, மூலம், மேகம் முதலிய பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* வரிசை எண் *283* போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகத்தீசுர நாயனார் இந்திரசாலம் ஆயிரத்திருநூறு. வயித்திய காண்டம் முன்னூறு.

5. காரணமா மூலவட்டந் தன்னில் நிற்குங்
கணவதியும் வல்லவையுந் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையுஞ் சிவனு நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாக் கணங்கள் காப்பு
வாரணத்தி லேறிவிளை யாடு மெந்தன்
மன்னுகுரு வருள்சிறந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனு மறியா நின்ற
நலமான வேதாந்தங் காப்பு தானே. 1

6. சிவயோகிக் காகுமென்று யிந்திர சாலம்
செப்பினேன் சிவனாணை நூலீ யாதே
தவயோகங் கிடையாது சவிப்பார் சித்தர்
தலைவெடிக்குஞ் சத்தயமே தரணி மீது
நவகோடி சித்தர்களு மறிய மாட்டார்
நாதவிந்து வழலைவழி திறந்து சொன்னேன்
அவயோகி யாகாதே வெளியிற் போட்டு
அலையாதே வயித்திய காண்டம் முற்றே. 300

7. கணபதி துணை. தெட்சணாமூர்த்தி பாதமே கெதியாக வேணும். வயித்திய காண்டம் முற்றும்.

8. மூலம். *9.* அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் பாடவேறுபாடு மிகுந்துள்ளன; ழ/ள இவற்றிற் கிடையே வேறுபாடு இல்லை. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. *11.* இல்லை.

IV 1. R. 4204, R. 4696, R. 4777, R. 4919, R. 6227. 2. சி.ம.மை.ஆ.தி.எண்கள் 261, 789, 1026, 1085, த.ச.ம.நூ.எண் 417(a), த.ப.க. எண்கள் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார்& வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர்சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. அகத்தியர் சாலத்திரட்டு 1200–ல் இந்நூல் முதல் காண்டமாகிய வைத்திய காண்டமாகும். அகத்தியர் சாலத்திரட்டு 1200 என்னும் நூலானது 'அகத்தியர் இந்திரசாலம் 1200' என்றும் அழைக்கப்படுகிறது.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. **285.** 2. அ. R.4204. ஆ. T.R.1861. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகஷ்த்தியர் பலதிரட்டு சாலம் முதல் காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 45. 5. 27 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 90; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 218 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சூலை, மூலம், மேகம் முதலிய பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 283 போன்றது.

4. சீர்பெருகுங் கயிலைவளர் ஈசன் தானுஞ்
செப்பியதோர் பலதிரட்டுச் சாலந் தன்னை
வார்பெருகும் வடிவேல ரெனக்குச் சொன்னார்
வகைவிபர மாகவேநான் வழுத்தக் கேளு
நேர்பெருகு மின்னூலில் வைத்தியம் வாதம்
நிகரில்லா மாந்தரீகஞ் சித்து வித்தை
பேர்பெருகு மைய்கள் தம்ப னங்கள்
பேசுதற்கு ஆனைமுகன் காப்ப தாமே.

5. காரணமாய் மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையுஞ் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாக் கணங்கள் காப்பு

வாரணமேல் ஏறிவிளை யாடு மெந்தன்
மன்னுகுரு வருள்சிறந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனும் அறியா நின்ற
நலமான வேதாந்தங் காப்புத் தானே. 1

6. பாரப்பா மூவரையும் வெளியே தள்ளும்
பருமாத்தம் தயிராகும் வெண்ணீ ராகும்
கூரப்பா மிளகுநீர் கூட்ட லாகும்
கூரான வழுதலையின் பிஞ்சு மாகும்
மாரப்பா துவரையுட துவய லாகும்
மைந்தனே ராத்திரிக்கு மிந்த ரந்தம்
சேரப்பா ராத்திரிக்கி சாய முன்போல்
.... 218

7. —.

8. மூலம். 9.அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடவேறுபாடுகள் மிகுந்துள்ளன. 10. இந்நூற் கருத்துக்களை ஈசன் வடிவேலனுக்குக் கூற, அகத்தியர் அவரிடமிருந்து அறிந்து கொண்டதாகக்கூறப்பட்டுள்ளது. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள நூல். 11. இல்லை.

IV. 1. R. 4696, R. 4777, R. 4919, R. 6227, R. 9031. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 261, 789, 1026, 1085, த.ச.ம.நூ.எண் 417(a), த.ப.க. எண்கள் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.) 'அகத்தியர் சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு. 1873. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் நான்கு காண்டங்கள் கொண்டமைந்த நூலாக இந்நூல் மட்டுமன்றி, 'அகத்தியர் நாலுகாண்டம் சால வைத்திய காவியம் 1200' என்ற நூலும் காணப்படுகிறது.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. 286. 2. அ. R 9031(a). ஆ.T.R. 4281. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 71. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 142; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. கட்டு, மெழுகு, தயிலம், செந்தூரம் போன்ற மருந்து வகைகளின் தயாரிப்பு மற்றும் இரசவாதம் ஆகியவற்றைக் கூறும் நூல். 2. இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. அகத்தியர் சாலத்திரட்டு 1200–ல், (இந்திர சாலத்திரட்டு) வாத காண்டமாகிய இந்நூல் இரண்டாம் காண்டமாக அமைந்து விளங்குகிறது. இதில், வெண்கொளுஞ்சி, தில்லை, பேய்த்தும்பை, சோதிவிருட்சம், எவணமூலி, செந்தகரை, கருந்துளசி, ஆடையொட்டி போன்ற பல்வேறு மூலிகைகளின் வடிவம், அவை இருக்குமிடம் முதலியவற்றைக் கூறி, அவைகளைக் கொண்டு வாதம் செய்முறை, போக்கும் முறை முதலியவற்றைக் கூறுகின்றது. மேலும், மோகினி மந்திரம், பாசணக் கட்டுமுறை, பஞ்சமூலங்கள் கொண்டு இரசவாதம் செய்யும் முறை, வாதத்திற்கு நீற்றின செந்தூரம், அஞ்சன மை தயாரிப்பு, இலிங்கசுத்தி செய்யும் முறை ஆகியனவும் இந்நூலில் கூறப்படுகின்றன. ஆந்தை, கூகை, தேவாங்கு, கருங்குருவி, மயில், புழுவுண்ணி ஆகியவற்றின் குணங்கள், சிறுகன்னி, பொன்னாங்காணி ஆகியவற்றின் விவரங்கள் மற்றும் இவை இழுப்பு நோயைக் குணப்படுத்தும் முறைகள் ஆகியவற்றையும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. அகத்தீசுர நாயனாரிரண்டாங் காண்டம் வாதகாண்டம்.

5. தானமுத்தி வயித்தியமுதற் காண் டத் திலுள்ள
சகலமருந் தானதெல்லாம் தகுதி யாக
வானமுத்தி பெத்தபெரி யோர்க்கா மப்பா
மகத்தான வாதவித்தை யினிமேல் சொல்வோம்
மானமுத்தி குமரகுரு பரனார் பாதம்
வட்டித்து இனியுரைப்பே னாதி யந்தம்
ஞானமுத்தி அருந்தவத்தோர் துரியா தீதம்
நாதவிந்து ஒன்றான பூரணமே கேளே. 1

6. ஆவானே அதுவன்றிப் பரங்கிட் டாமல்
அலைவானே இன்னூலை வெளிவிட் டோர்கள்
மேவானோ யிருபத்து எட்டுக் கோடி
வீழ்வாகி வீழ்வானோ வேதாந் தத்தில்
போவானோ இருதையத்தில் பத்தி முத்தி
புகுவானோ புகமாட்டான் பொன்னா மின்னூல்
பாவான முன்னூறு ரெண்டாங் காண்டம்
பதனமடா ரசவாத மான முற்றே. 300

7. சாலத்திரட்டு ரெண்டாங் காண்டம் முற்றும். தெட்சணாமூர்த்தி பாதமே கெதியாக வேணும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பாட வேறுபாடு மிகுந்து காணப்படுகிறது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 6227(a). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 108(a), த.சு.ம.நூ. எண்கள் 669(a), 417(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே.ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், 'அகத்தியர் இந்திர சாலம் 1200–ல் வயித்திய காண்டம் 300' (R.9031), அகத்தியர் இந்திரசாலம் 1200–ல் சால காண்டம் 300 (R.3031(b)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. **287**. 2. அ. R. 6227(a). ஆ. T.R. 2636. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகஷ்த்தியர் சாலத்திரட்டு ரெண்டாங் காண்டம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ. சென்னை-5. 9. —. 10. —.

II அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 40. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 80; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. கட்டு, மெழுகு, தயிலம், செந்தூரம் போன்ற மருந்து வகைகளின் தயாரிப்பு மற்றும் இரசவாதம் ஆகியவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் இரசவாதம். 3. வரிசை எண் 286 போன்றது.

4. —.

5. தானமுத்தி வைத்தியமுதற் காண்டத் திலுள்ள
சகலமருந் தானதெல்லாம் தகுதி யாக
வானமுத்தி பெற்றபெரி யோர்க்கா மப்பா
மகத்தான வாதவித்தை யினிமேல் சொல்வேன்
ஆனமுத்தி குமரகுரு பரனார் பாதம்
அனுஷ்டித்து யினியுரைப்பே னாதி யந்தம்
ஞானமுத்தி யருந்தவத்தோர் துரியா தீதம்
நாதவிந்து ஒன்றான பூரணம் கேளே. 1

6. ஆவானே யதுவன்றிப் பரங்கிட் டாமல்
யலைவானே யின்னூலை வெளிவிட் டோர்கள்
மேவானோ யிருபத்து யெட்டுக் கோடி
வீழ்வாகி வீழ்வானோ வேதாந் தத்தில்
போவானோ யிருதயத்தில் பத்தி முத்தி
புகுவானோ புகமாட்டான் பொன்னாம் யின்னூல்
பாவான முன்னூறு ரெண்டாம் காண்டம்
பதனமடா ரசவாத மான முத்தே. 300

7. சாலத்திரட்டு ரெண்டாம் காண்டம் முகிந்தது. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. பாடவேறுபாடு நிறைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல் அகத்தியர் சாலத்திரட்டு 1200–ல் (இந்திரசாலத்திரட்டு) இந்நூல் இரண்டாவது காண்டமாக அமைந்து வாதவித்தை பற்றிப் பேசுகின்றது. 11. இல்லை.

IV. 1. R.9031(a). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 108(a), த.ச.ம.நூ. எண்கள் 669(a), 417(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், 'அகத்தியர் சாலத்திரட்டு முதற் காண்டம் 300 (R.6227), அகத்தியர் சாலத்திரட்டு மூன்றாங் காண்டம் 300 (R.6227(b)), அகத்தியர் சாலத்திரட்டு நான்காம் காண்டம் 300 (R.6227(c)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. *1. 288. 2.* அ. R. 6227(b). ஆ. T.R. 2636. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālatirattu. இ. அகஸ்த்தியர் சாலத் திரட்டு மூன்றாங் காண்டம் 300. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 44. 5.* 37 x 4 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12. 87*; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 9 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 300 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* சாலவித்தை, மோடிவித்தை, மந்திரம், வசியம் முதலான வித்தைகளைக் கூறும் நூல். *2.* மந்திரம் மற்றும் சாலவித்தை. *3.* அகத்தியர் சாலத்திரட்டு 1200–ல் இந்நூல் மூன்றாவது காண்டமாக அமைந்து, சாலவித்தை மற்றும் மந்திரங்களை முழுமையாக உரைக்கும் நூலாக விளங்குகின்றது. இந்திரசால வித்தை, மோடிவித்தை, வக்கணாத்தி வித்தை, கருக்கு வித்தை, ஈசுரமூலி வித்தை, வெள்ளெருக்கு வித்தை முதலான பல்வேறு சாலவித்தை முறைகளையும் அவற்றைக் கையாளும் முறைகளையும் இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. மேலும், வசியம், மோகனம், மாரணம், பேதனம், தம்பனம், உச்சாடனம், ஆகர்சணம், வித்து வேசனம் முதலான அட்டகர்மங்கள் பற்றியும், விளக்கமாக உரைக்கின்றது. மைக்கரு, அஞ்சனப்பொடி, களவு பிடிக்க, கண்கட்டு வித்தை, கூடுவிட்டுக் கூடுபாய்தல் ஆகியன பற்றியும், உடல்கட்டு மந்திரம், வாரிமோடி, பறவைமோடி, தெய்வ உச்சாடனம், மாடன் தியானம், சததாசிவ் தியானம், பிரம்ம தியானம் முதலிய பல்வேறு தியான முறைகளைப் பற்றியும் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க. சாலத்திரட்டில் மூன்றாங் காண்டம். பலவித்தை ஆரம்பம்.

5. மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
வாதமது வழியுரைத்தார் ஆதி யந்தம்
நானொருகை யிந்திரமாஞ் சால வித்தை
நவிலுகிறேன் நந்திகுருநா தாக்கள் காணத்
தானொருகை கருக்குருவாய் மூத்தி வோர்கள்
தப்பாமல் வழலையொடு தந்தி ரங்கள்
தானொருகை பூவொருகை வைத்த நந்தி
தந்திமா முகத்தோனை வழுத்திக் கேளே. 1

6. தரணியோர்க் காகுமடா சால வித்தை
தப்பாது தரவா னால்னூல் நிற்கும்
பரணிசொல்லி மரணபடுக் குழியில் வேண்டாம்
பூலோக தாசருக்குப் புண்ணிய மேவுந்
திரணமென்று தளையாதே சிவன் மேலாணை
சிகசாலம் ஆயிரத்தி யிருநூ றுந்தான்
மரணமது வொட்டாது பிணிதீ யில்லை
தடங்கதுக்கே மூன்றாங் காண்ட முற்றே. 300

7. மூன்றாங் காண்டம் முற்றும். சர்க்குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் சாலத்திரட்டு 1200 என்னும் நூலில் இந்நூல் மூன்றாவது காண்டமாக அமைந்து விளங்குகிறது. இந்நூல் சாலவித்தை களைப் பற்றிக் கூறுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 9031(b). 2. த.ச.ம.நூ.எண் 417(c), சி.ம.மை.ஆ.நி. எண் 261(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே.ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர்சாலசூத்திரத்திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. அகத்தியர் சாலத்திரட்டு 1200 என்ற நூலானது, 'அகத்தியர் இந்திரசாலம் 1200' என்ற பெயரிலும் அழைக்கப் படுகிறது. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சாலத்திரட்டு முதற்காண்டம் 300 (R.6227), அகத்தியர்

சாலத்திரட்டு இரண்டாங் காண்டம் 300 (R.6227(a)), அகத்தியர் சாலத் திரட்டு நான்காம் காண்டம் 300 (R.6227(c)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. 289. 2. அ. R. 9031(b). ஆ. T.R. 4281. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகத்தீசுவரர் மூன்றாவது சாலகாண்டம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 71. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 142; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சாலவித்தை, மோடிவித்தை, மந்திரம், வசியம் முதலான வித்தைகளைக் கூறும் நூல். 2. மந்திரம் மற்றும் சாலவித்தை. 3. வரிசை எண 288 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. மூன்றாவது சாலகாண்டம் முன்னூறு.

5. மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
வாதமது வழியுரைத்தார் ஆதி யந்தம்
நானொருகை யிந்திரமா சால வித்தை
நவிலுகிறேன் நந்திகுருநா தாக்கள் காணத்
தானொருகை கருக்குருவாய் மூத்தி வோர்கள்
தப்பாமல் வழலையொடு தந்தி ரங்கள்
வானொருகை பூவொருகை வைத்த நந்தி
மாமுகத்தோன் முன்காண வழுத்து றேனே. 1

6. ஓதெடா அகோரமா ரணத்தைச் சேவி
ஒருனொடியில் மாரணமா மொருவ ராலும்
வேதமடா திட்டிக்கும் பிரமா வாலும்
வினையான மாரணத்தை விளக்கப் போகா

வாதடா வந்தாக்கால் மூன்றாங் காண்டம்
வகையான மாரணஞ்செய் சிணத்தில் சாவான்
பாதகமே செய்யாதே ஆயிரத் திருநூறு
பாடியதின் வெவ்வேறே காண்ட முற்றே. 300

7. மூணாங் காண்டம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ழ/ள, ர/ற எழுத்துக்களுக்கிடையே வேறுபாடு பேணப்பெற வில்லை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 6227(b). 2. த.ச.ம.நூ.எண் 417(c), சி.ம.மை.ஆ.நி. எண் 261(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் சால சூத்திரத் திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் இந்திரசாலம் 1200–ல் வயித்திய காண்டம் 300 (R.9031), அகத்தியர் இந்திரசாலம் 1200 –ல் வாத காண்டம் 300 (R.9031a) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. **290.** 2. அ. R. 6227(c). ஆ. T.R. 2636. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattiraṭṭu. இ. சாலத்திரட்டு நாலாங் காண்டம் மாந்திரீயம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 30. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 60; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகர்மங்கள், மாந்திரீகம் முதலானவற்றை விரிவாகக் கூறும் நூல். 2. மந்திரம் – மாந்திரீகம். 3. அகத்தியர்

சாலத்திரட்டு 1200–ல் நான்காவது காண்டமாக இந்நூல் அமைகிறது. இக்காண்டம் மாந்திரீகம் பற்றி முழுமையாகக் கூறுவதால், மாந்திரீகக் காண்டம் என்று பெயர் பெறுகிறது. இந்நூல் அட்டகர்மங்களான வசியம், தம்பனம், மாரணம் முதலான மந்திரங்களைப் பேசுகின்றது. இதில் கண்கட்டு வித்தை, வக்கணாதி வித்தை, சூனிய வித்தை முதலான பல்வேறு வித்தைகள் பற்றியும், மூதேவி மாரணம், அய்ங்கோண சக்கரம், அனுமார் மந்திரம், நவக்கிரக விஞ்சை, குட்டிச்சாத்தான் பிடிக்க மந்திரம், பிரமதேவர் பூசாவிதி, பத்திரகாளியம்மாள் மந்திரம் ஆகியவைகளும் பேசப் படுகின்றன. கண்கட்டு வித்தையில் மிருகத்தின் கண்கட்டவும், நாவடக்கவும், சத்துருவின் நாவை அடக்கும் விதம் பற்றியும் இந்நூல் உரைக்கின்றது. அஞ்சனங்கள் செய்தல், சத்தியை வசியம் செய்தல், கருங்கல்லை உடைத்துக் காட்டுதல், காகங்களை மயக்குதல், ஏவல், சூனியங்களைக் காட்டும் வித்தை, ஆண்பெண் வசிய முறைகள், நில ஊமத்தை, வெள்ளெருக்கு, கருஞ் சம்பை போன்ற மாந்திரீக மூலிகைகளின் பயன் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் முறை முதலியனவும் கூறப்படுகின்றன. சண்டாளக் கரு அதாவது கழுதையின் கொழுப்பை அகலில் போட்டு விளக்கேற்றி வைத்தால் அவ்விடத்திலுள்ள பூதம், பிசாசு, முனி, தெய்வம் இவை எல்லாம் அலறி ஓடிவிடும்படியான ஒருவகை வித்தையும் கூறப்படுகிறது.

4. —.

5. வேறுதுறை அறியாத சித்தர்க் கெல்லாம்
மெய்யான இந்திரமாஞ் சால மாடக்
கூறுகிறேன் மாந்திரீக வரலா றெல்லாம்
குமரகுரு பரன்முருகன் சரணம் போற்றி.

....
....
....
.... 1

6. ....
....
....
....

முத்திபெறுந் தவயோகி யானா லிந்த
மொழிதப்பா துலகினிலே நடந்தா யானால்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாகும்
சத்தியந்தா னிந்தனூல் காண்ட முற்றே. 300

7. அகத்தியர் சாலத்திரட்டு நான்காங் காண்டம் மாந்திரீகம் முகிந்தது. முற்றும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் சாலத்திரட்டு 1200–ல் நான்காவது காண்டமாக அமைந்து மாந்திரீகச் செய்திகளைப் பேசுகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ.எண் 417(d), சி.ம.மை.ஆ.நி. எண் 261(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே.ஆறுமுக முதலியார் & வே.கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர்சால சூத்திரத்திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன் அகத்தியர் சாலத்திரட்டு முதற் காண்டம் 300 (R.6227), அகத்தியர் சாலத்திரட்டு ரெண்டாங் காண்டம் 300 (R.6227(a)), அகத்தியர் சாலத்திரட்டு மூன்றாங் காண்டம் 300 (R.6227(b)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன. அகத்தியர் சாலத்திரட்டு 1200 என்ற இந்நூலானது, 'அகத்தியர் பெருநூல் நாலுகாண்ட சால வைத்திய காவியம் 1200' என்ற நூலினின்று வேறானதாகத் தெரிகின்றது.

அகத்தியர் சாலத்திரட்டு

I. **1. 291.** 2. அ. R. 3681. ஆ. T.R. 1795. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகஷ்த்தியர் நாலு காண்டம் 1200–ல் வயித்தியம் முதல் காண்டம் 300. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 22. 5. 42 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 44; இரு

பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 முதல் 12 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 310 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் நாலு காண்டம் வயித்தியம் முதற் காண்டம் என்ற இந்நூலில் காப்புப் பாடல்களாகப் பத்துப் பாடல்கள் உள்ளன. இவற்றில் உமாதேவி, கணபதி, முருகன் முதலான தெய்வங்களுக்கும் வணக்கம் சொல்லப்படுகின்றது எல்லாநோய்க்கும் இதில் மருந்துள்ளது. இதைப் பின்பற்ற பவரை எமன் அணுக மாட்டான் என்று தொடங்கி சுக்கு மிளகு, திப்பிலி மூன்றுங் கலந்த பொடியே அடிப்படை மருந்து எனக் கூறுகிறது. பிளவை, துடைவாழை, குட்டம் போன்ற வியாதிகளுக்குத் துரிசி எண்ணெய், வழிநோய்க்கு முக்கூட்டு எண்ணெய், கெற்ப நோய்க்குச் சஞ்சீவி எண்ணெய் தயாரிக்கும் விதமும், மூலவியாதி, பில்லி, வஞ்சனை, சயம், குலைநோய், காமாலை, சோகை, பிசாசு, பாம்புவிசம் ஆகியவை நீங்க மருந்தும் கூறப்படுகிறது. சர்வாங்க மாத்திரை, ஆக்கிராணம், தாளக செந்தூரம், அரிதாரக் குளிகை, வீரபற்பம், சாதிலிங்க செந்தூரம், மேகத்தயிலம், கஸ்தூரி, சஞ்சீவி மாத்திரைகள், குன்மம் தீர கசாயம், வங்காரச் செந்தூரம், பேதி மருந்து, கை, கால் முறிவுக்கு எண்ணெய் ஆகிய செய்திகளும் சொல்லப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க. குமரன் துணை. சிவமயம். சிவமயம். காப்புப் பாயிரம்
ஆயிரத்திரு நூறுமுன் னூலாய்ந்து முதல்காண்டம் சூத்திரம் பாயிரத் தொகுதியொன்று பாடிய வயித்திய பாக
மாயிரக் கவி முன்னூறு உமைக்கி யானுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானுஞ் சாத்திய விதிநூல் தானே. 1

5. பூரணமே யேகநிர் மயமே ஞான
போதகமே பரப்பிரம வெளியே யாதி
காரணமே சித்தறிவாய் மூல வட்ட
கணபதியே உன்மனத்தின் கருவே சோதி

ஆரணமே ஆயிரத்திரு நூறு பாட்டும்
அகத்தியமா முனிக்குருவே அடியாய்த் தொட்ட
வாரணமே பிரணவமே எந்தாய் வள்ளி
மயில்தெய்வ மகள்சரணங் காப்ப தாமே. 1

6. உண்டுபார் குருவுண்டு மருந்து முண்டு
உலகமுண்டு நன்மையுண்டு யுதவி யுண்டு
கண்டுபார் சிவமுண்டு பூசை யுண்டு
கருத்துண்டு வளியுண்டு விளியு முண்டு
திண்டுமுண்டு செய்யாதே குலைசெய் யாதே
தீவினைக ளாகாதே செடம்போக் காதே
பண்டுசொன்ன முறையை விட்டி டாதே
பண்டிதனே வயித்தியநூல் காண்ட முற்றே. 300

7. முற்றிற்று. தெட்சணாமூர்த்தி துணை.

8. மூலம். 9. தன்மை, முன்னிலைச் சொற்கள் வந்துள்ளன; பாடல்கள் அந்தாதியிலும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் நாலுகாண்டம் 1200 பாடல்களையுடையது. ஒவ்வொரு காண்டமும் 300 பாடல்களையுடையது. முதற்காண்டம் வயித்தியம் பற்றியதாகவும், இரண்டாம் காண்டம் வகாரம் பற்றியதாகவும், மூன்றாம் காண்டம் சாலம் பற்றியதாகவும், நான்காம் காண்டம் மந்திரம், வித்தை பற்றியதாகவும் அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. R.250(a), R.4523. 2. த.ச.ம.நூ. எண்கள் 288(b), 390, 422(a), உ.த.நி.எண் 492:750. 3. இல்லை.

V. 1. இல்லை. 2.(i). வே.நா.அய்யாசாமி முதலியார் & வே.கந்தசாமி முதலியார் (பதி.), 'நாலுகாண்ட வயித்திய காவியம்', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1896. (ii). —. (பதி.), 'அகத்தியர் பெருநூல் காண்ட வைத்திய காவியம் 1200', இரத்தின முதலியார் சன்ஸ். —, —, (iii). கந்தசாமி முதலியார் & திருப்பதி இரத்தின முதலியார் (பதி.), 'அகத்தியர் பெருநூலாகிய நாலுகாண்ட சால வைத்திய காவியம் 1200', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, 1920. 3. இல்லை.

VI. அகத்தியர் சாலத்திரட்டு 1200 என்ற நூலினின்று இது வேறானது. 'அகத்தியர் பெருநூலாகிய நாலுகாண்ட சால வைத்திய காவியம் 1200' என்று இந்நூல் அழைக்கப்படுகிறது. இந்நூல் இதுவரை மூன்று பதிப்புகளைப் பெற்றுள்ளது. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் நாலுகாண்டம் 1200–ல் இரண்டாவது வாத சூத்திர காண்டம் 300 (R.3681(a)), அகத்தியர் நாலு காண்டம் 1200–ல் மூன்றாவது மந்திரசாலம் 300 (R.3682) ஆகிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. 292. 2. அ. R. 250(a). ஆ. T.R. 234. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattiraṭṭu. இ. அகஸ்த்தியர் சாலத்திரட்டு ஆயிரத்திருநூறு முதற் காண்டம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. அரங்கசாமி அய்யங்கார், மைசூர். 10. 1915-16.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 76. 5. 33 x 3 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 152; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 291 போன்றது.

4. **ஆயிரத் திருநூறு முன்னூலாய்ந்து முதற் காண்ட சூத்திரம்**
பாயிரத் தொகுதி யொன்று பாடிய வயித்திய மாக
மாயிரக் கவிமுன் னூறு முமைக்க ரனுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானுஞ் சாத்த யின்னூல் தானே. 1

தானென்ற பொருளே யெங்குந் தாங்கிய மரமே யீசன்
வானென்ற வெளியாய் னின்ற மயேசுர வாயு நாவோன்
மானென்ற பிரமன் வாணி வல்லபைக் கிடத்தே நின்ற
ஆனென்ற கிணேச னப்பா மென்றனை வட்டங்

காப்பே. 2

5. பூரணமே யேகநிரா மயமே ஞானப்
போதகமே பரம்பிரம வெளியே யாதி
காரணமே சித்தறிவாய் மூல வட்ட
கணபதியே யும்மனத்தின் கருவே சித்தி
ஆரணமே ஆயிரத்திரு னூறு பாட்டும்
அகத்தியமா முனிக்குருவே யடியாய்த்தொட்ட
வாரணமே பிரணவமே எந்தாய் வள்ளி
மயில்தெய்வ மகள் சரணங் காப்ப தாமே. 1

6. உண்டுபார் குருவுமுண்டு மருந்து முண்டு
உலகமுண்டு நன்மையுண்டு வுதவி யுண்டு
கண்டுபார் சிவமுண்டு பூசை யுண்டு
கருத்துண்டு வழியுண்டு விழியு முண்டு
திண்டுமுண்டு செய்யாதே குலையா காதே
தீவினைக ளாகாதே செடம் போக்காதே
பண்டுசொன்ன குருமுறையை நீவிட்டி டாதே
பண்டிதனே வயித்தியனூல் முதற்காண்ட முற்றே. 300

7. —.

8. மூலம். *9.* அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. ற/ர, த/ந, ண/ன இவற்றிற்கிடையே வேறுபாடுகள் இல்லை. பிழைகள் நிறைந்துள்ளன. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அரன்/ உமைக்குக் கூற, உமை அகத்தியர்க்குக் கூறியதாக உள்ளது. *11.* இல்லை.

IV. *1.* R. 3681, R. 4523. *2.* த.ச.ம.நூ. எண்கள் 288(b), 390, 422(a), உ.த.நி.எண் *492:750*. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* (i). வே.நா.அய்யாசாமி முதலியார் & கந்தசாமி முதலியார் (பதி.), 'நாலுகாண்ட வயித்திய காவியம்', 'கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை, *1896*. (ii). —. (பதி.), 'அகத்தியர் பெருநூல் காண்ட வைத்திய காவியம் *1200*', இரத்தின முதலியார் & சன்ஸ், —, —. *3.* இல்லை.

VI. இந்நூலானது அகத்தியர் பெருநூல் *1200*' என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது.

அகத்தியர் சாலத்திரட்டு

I. ***1. 293.*** *2.* அ. R. 4523. ஆ. T.R. 1993. . —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ.

அகஸ்தீஸ்பரர் பெருநூல் முதற் காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 80. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 159; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 310 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 291 போன்றது.

4. ஆயிரத் திருநூறு முன்னூ லாய்ந்து முதற்காண்ட சூத்திரம்
பாயிரத் தொகுதி யொன்று பாடிய வயத்திய பாக
மாயிரக் கவிமுன் னூறு உமைக்கர னுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானும் சாத்திய நூலு தானே. 1

5. பூரணமே யேகநிர் மயமே ஞானப்
போதகப் பொற்பிரம வெளியே ஆதி
காரணமே சித்தறிவால் மூல வட்ட
கணபதியே உன்மனத்தின் குருவே சோதி
ஆரணமே ஆயிரத்திரு நூறு பாட்டு
அகத்தியமு னிக்குருவே அடியாய்த் தொட்ட
வாரணமே பிரணவமே யெந்தாய் வள்ளி
மயில்தெய் வானைசரணங் காப்புத் தானே. 1

6. உண்டுபார் குருவுமுண்டு மருந்து முண்டு
உலகமுண்டு யுதவியுண்டு நன்மை யுண்டு
கண்டுபார் சிவனுண்டு பூசை யுண்டு
கருத்துண்டு வழியுமுண்டு விழியு முண்டு
திண்டுமுண்டு செய்யாதே குலைசெ யாதே
தீவினைக ளாகாதே செடம்போ காதே
பண்டுசொன்ன முறையேதான் கைவி டாதே
பண்டிதனே வயித்தியநூல் காண்ட முத்தே. 300

7. முதல் காண்டம் வயித்தியம் முகிந்தது முற்றும். சேது நாராயணப் பெருமாள் துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடவேறுபாடு நிறைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 250(a), R. 3681. 2. த.ச.ம.நூ.எண்கள் 288(b), 390, 422(a), உ.த.நி.எண் 492:750. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i) வே.நா. அய்யாசாமி முதலியார் & கந்தசாமி முதலியார் (பதி.), 'நாலுகாண்ட வைத்திய காவியம்', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை, 1896. (ii) —. (பதி.), 'அகத்தியர் பெருநூல் காண்ட வைத்திய காவியம் 1200', இரத்தின முதலியார் & சன்ஸ், —, —. 3. இல்லை.

VI. இந்நூலானது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக மூவருட அட்டவணையில் R.250 ல் வந்துள்ள பிரதியினைப் போன்றதாகும்.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. 294. 2. அ. R. 3681(a). ஆ. T.R. 1795. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālat tirattu. இ. அகஷ்த்தியர்நாலுகாண்டம் 1200–ல் இரண்டாவது வாத சூத்திர காண்டம் 300. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 40. 5. 42 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 40; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 11 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. கட்டு, மெழுகு, தயிலம், செம்பு, செந்தூரம் போன்ற மருந்து வகைகள் கூறும் நூல். 2. இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. அகத்தியர் நாலு காண்ட வயித்தியத்தில் இரண்டாவதான வாதகாண்டத்தில் வெள்ளி வித்தை

செய்முறையும், வெள்ளீயத்தை இலுப்பை நெய்விட்டுக் கரண்டியில் உருக்கிச் சில சாறுகள் சேர்த்துச் செய்யும் இரசவாதமும், நாகக்கட்டு, கவுரிக்கட்டு, இலிங்கக்கட்டு, சூதக்கட்டு, கரியுப்புக் கட்டு. சாரக்கட்டு, சீனக்கட்டு, அரிதாரக்கட்டு, இரசக்கட்டு, வெள்ளைப் பாசாணக்கட்டு ஆகிய கட்டுகளும். இரசசெந்தூரம், ஈயச் செந்தூரம், பாசாண செந்தூரம் போன்ற செந்தூர வகைகளும், அயத் தகடு, முப்பு, அண்டச் சுண்ணம், முட்டைத் தயிலம் போன்ற இரசவாதம் தொடர்பான செய்திகளும் சொல்லப்படுகின்றன. மேலும், இந்நூலில் நாக வேதை, வெங்காரக் கட்டின் வேதை, பச்சைக் கற்பூர வைப்பு, பெண்குறி இலட்சணம், நகை வர்ணம், தேவி பூசை விதி, முப்பு விவரம், மூலிகைக் குகை, பித்தளை செந்தூரம், கரியுப்பு இரசம், நாதவிந்து பிரித்து ஆடுகிற விதம் முதலான செய்திகளும் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக குருவாழ்க. குருவே துணை.

5. காண்டமென்ன நாகரசஞ் சொல்லக் கேளு
கடியகோட கசாலைகொ டுப்பை வீசி
ஆண்டகொடு வேலிசார ணையின் சாறும்
அப்பனே செருப்படிச் சாறுங் கூட்டி
மீண்டசட்டியில் வார்த்து நாகம் வாங்கி
விளம்பிய சாறுடன் கலந்து எரிப்பாய்
மாண்டுவிடும் வலியுமடா கெட்டுப் போச்சு
வாதமென்ன யிம்மருந்தை மாட்டு மாறே. 1

6. விரைந்திருந்த மூன்றெழுத் தீட்சை பாரு
விளம்புவோம் வயித்தியகாண் டத்தில் சொன்னோம்
நிறைந்திருந்த சத்தியமடா லண்ட மண்ட
நேர்ந்திரு சிவகலையே **வெளியு மாச்சு**
அறைந்திருந்த வாதமுறைக் **கருவை** யெல்லாம்
ஆனந்த மூலகுரு வருளால் வாய்க்கும்
பறைந்திருந்த சோடசமே மூலா தாரம்
பரவெளியாக் கடதலைக்குக் காப்பு முத்தே. 298

7. காப்பேது வாதங்கடந்த முறைபாட
தாப்பேது சாலவித்தை சாத்தவே
மாப்பேது வாதநூல் முன்னூறும்
வகாரத்துறை சரிதான் வேதமே சொல்லிவிளம்பு. 299

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ.எண்கள் 422(b), 484. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i) வே.நா. அய்யாசாமி முதலியார் & கந்தசாமி முதலியார் (பதி.), 'நாலுகாண்ட வைத்திய காவியம்', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை, 1896. (ii) —. (பதி.), 'அகத்தியர் பெருநூல் காண்ட வைத்திய காவியம் 1200', இரத்தின முதலியார் & சன்ஸ், —, —. 3. இல்லை.

VI. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் 'தட்சிணாமூர்த்தி வகாரம் 2–ம் காண்டம்' என்ற பெயரிலும் 'அகத்தியர் வாதகாண்டம் 300' என்ற பெயரிலும் பிரதிகள் காணப்படுகின்றன. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், 'அகத்தியர் நாலு காண்டம் 1200–ல் 'வயித்தியம் முதற் காண்டம் 300' (R.3681), 'அகத்தியர் நாலுகாண்டம் 1200–ல் மூன்றாங் காண்டம் மந்திரசாலம் 300' (R.3682) ஆகிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. **295**. 2. அ. R. 3682. ஆ. T.R. 1795. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattirattu. இ. அகஷ்த்தியர் நாலுகாண்டம் 1200–ல் மூன்றாங் காண்டம் மந்திரசாலம் 300 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 23. 5. 42 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 46; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 முதல் 12 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மை போடுதல், கூடு விட்டுக் கூடு பாய்தல் போன்ற மந்திர வித்தைகள் பற்றிக் கூறும் நூல். 2. சால வித்தை.

3. அகத்தியர் நாலு காண்டம் 1200–ல் மூன்றாங் காண்டமாகிய மந்திர ஜாலம் 300–ல் காப்புப் பாடலை அடுத்துத் தண்ணீரில் நீண்ட நேரம் மூச்சை அடக்கியிருத்தல், உருவத்தை மாற்றிக்கொள்ளுதல், மாரணம், இலாடசிங்கி, ஆகிருசணம், தெரிசிங்கி, உருமாற்றம், மோடிவித்தை, பாதாளமை, யோகம், சொக்குப்பொடி, நாதம், எரிமோடி, பூட்டுத் தெளிக்க, வயிரவன், இரசக்கட்டு, கூடுவிட்டுக் கூடுபாய, ஆகாசமோடி, சிவபூசை, நாமகள், பூமகள், கணேசன் பூசை, வசியமை தயாரித்தல், கண்கட்டு வித்தை, ஏவலை நீக்க இலாடசிங்கி போன்ற செய்திகள் கூறப்படுகின்றன. இச்செய்திகள் யாவும் வெளிப்படையாகச் சொன்னால் சமூகத்திற்குத் தீங்கு வரும் என்பதால் பரிபாசையில் சொல்லப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக குருவாழ்க குமரன் துணை.

5. காரணமே ஞானவெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே கருணை மேவும்
பூரணமே பஞ்சகர்த்த ரூபி யான
புண்ணியமே நிர்ணயமே பொருளே வேத
வாரணமே நிறைந்தபிர ணவமே செல்வ
மயில்குகனே குமரகுரு பரனே ஆதி
நாரணனே நான்முகமே முக்மைந் தான
நாதபர விந்துமவு னங்காப் பாமே. 1

6. காண்டவளி முன்பின்னே யல்லால் வேறே
கருதவில்லை வேறொருத்தர் நூல்பார்த்த தேது
தூண்டவிளக் கெரியுமென்று முன்னோர் சொன்ன
சொற்படியே வித்தைவயித் தியபொன் வாதம்
வேண்டியபூ மாந்திரீயம் நால்வே தத்தால்
விளம்புவேன் வேதாந்த மேவு மேவு
ஆண்டவனே விட்டகுறை உரைத்தார் சொன்னேன்
ஆனந்தத் திரிகாண்டமுன் னூறு முற்றே. 300

7. மூன்றாங் காண்டம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையாரை விளித்துக் கூறும்பாங்கில் அமைந்துள்ளன. ற/ர, ள/ழ வேறுபாடில்லாது எழுதப்பெற்றுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 108(a), 178(j), 261(a), 437, 1026(a), 1085(a), 117(i), 1128(a), த.ச.ம.நூ. எண் 419(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i). வே.நா. அய்யாசாமி முதலியார் & கந்தசாமி முதலியார் (பதி.), 'நாலுகாண்ட வைத்திய காவியம்', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை, 1896. (ii). —. 'அகத்தியர் பெருநூல் காண்ட வைத்திய காவியம் 1200', இரத்தின முதலியார் & சன்ஸ், —, —. (iii). கந்தசாமிமுதலியார், திருப்பதி. இரத்தின முதலியார் (பதி.), 'அகத்தியர் பெருநூலாகிய நாலுகாண்ட சால வைத்திய காவியம் 1200', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, —, 1920. 3. இல்லை.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. **296**. 2. அ. R. 3682(a). ஆ. T.R. 1795. இ. —. ஈ.—. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு. ஆ. Akattiyar cālattiraṭṭu. இ. அகஷ்த்தியர் நாலுகாண்டம் 1200–ல் நாலாங் காண்டம் சாலத்திரட்டு 300. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 17. 5. 42 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 34; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 10 முதல் 12 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பூசைவிதிகள், வித்தைகள் கூறும் நூல். 2. மாந்திரீகம், 3. அகத்தியர் நாலுகாண்டம் 1200 மாந்திரீகக் காண்டமான இந்நூலில் முதலாவதாக, கணபதி மந்திரம் கூறப்பட்டு அடுத்து, சிதம்பரச் சக்கரம், இலட்சுமி பூசை, சரசுவதி பூசை, விட்டுணு சக்கரம், வயிரவர் தியானம் ஆகியவையும், குட்டிச்சாத்தான் வித்தை, வல்லூறு வித்தை, குறளி வித்தை, இரசமணி, சின்னுமந்திரம் உடும்பு மூலி, கிங்கிலியன், இயமன், மறைவாங்க, தம்பனம், வசியம், உச்சாடணம், வித்துவேசனம், ஆகர்சணம், மோகனம், பேதனம், மாரணம்

ஆகிய அட்டகர்ம மாந்திரீகங்களும் மிக விரிவாக சொல்லப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக.

5. முன்னுரைத்த காண்டவழி முத்த மிழ்க்கும்
மாந்திரீக மின்னு.... ....
....
....
....
....
....
..னார் கஞ்சமலர்ச் சேவடியே காப்பு. 1

6. ஆளுவாய் ஆயிரத்திரு நூற்றையு மப்பா
மீளுவா ராணை விடாதே வெளியில்
சூழுவார் சாபந் துடருமே வுன்னை
கேளுநீ பூரணங் கேட்பது முற்றே. 300

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பிலும், ஏவல் சொற்கள் கொண்டும் பாடப்பெற்றுள்ளன. பரிபாசைச் சொற்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. 1048 ம் வருஷம் ஆங்கிரச வருஷம் மாசி மாதம் 23–ஆம் தேதி தெட்சணாமூர்த்தியருளிய நூலாயிரத்திருநூறு நாலுகாண்டமாய்ப் பாடின சாலத்திரட்டு சிகசால விதி முற்றுப் பெற்றது. கடவுள் துணை - நாயன் துணை. ஆண்டவன் துணை. அகஷ்த்திய மாமுனிவர் துணைசெய்ய வேண்டியது.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ.எண் 419(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i). வே.நா. அய்யாச்சாமி முதலியார் & கந்தசாமி முதலியார் (பதி.), 'நாலுகாண்ட வைத்திய காவியம்', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை, 1896. (ii). கந்தசாமி முதலியார் & திருப்பதி இரத்தின முதலியார் (பதி.), 'அகத்தியர் பெருநூலாகிய நாலுகாண்ட சால வைத்திய காவியம் 1200', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, —, 1920. (iii). —. (பதி.), 'அகத்தியர் பெருநூல் காண்ட வைத்திய காவியம் 1200'. இரத்தின முதலியார் & சன்ஸ் —, —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் நாலுகாண்டம் 1200–ல் வயித்தியம் முதற்காண்டம் 300 (R.3681), அகத்தியர் நாலுகாண்டம் 1200–ல் இரண்டாவது வாத சூத்திர காண்டம் 300 (R.3681(a)), அகத்தியர் நாலுகாண்டம் 1200–ல் மூன்றாங் காண்டம் மந்திர சாலம் 300 (R.3682) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன. ஏழு காண்டங்களைப் பெற்றுள்ள 'அகத்தியர் சாலத்திரட்டு 1200' (சப்த காண்ட சாலத்திரட்டு) என்ற நூலும், வைத்தியம், வாதம், சாலம், மாந்திரீகம் ஆகிய நான்கு பொருண்மைகளில் அமைந்து நான்கு காண்டங்களைப் பெற்றுள்ள 'அகத்தியர் சாலத்திரட்டு 1200' (அகத்தியர் இந்திரசாலத் திரட்டு) என்ற நூலும், வைத்தியம், வகாரம் (வாதம்), சாலவித்தை, மாந்திரீக வித்தை ஆகிய நான்கு பொருண்மைகளில் அமைந்து நான்கு காண்டங்களைப் பெற்றுள்ள 'அகத்தியர் சாலத்திரட்டு 1200' (அகத்தியர் பெருநூல் நாலுகாண்ட சால வைத்திய காவியம் 1200) என்ற நூலும் ஆகிய மூன்று நூல்களும் வெவ்வேறு நூல்களாக அமைந்துள்ளமை அறியத்தக்கதாகும்.

அகத்தியர் சூத்திரம் 6

I. **1. 297. 2.** அ. R. 6214(f). ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. **3.** அ. அகத்தியர் சூத்திரம் **6.** ஆ. Akattiyar cūttiram 6. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் **6. 4.** —. **5.** —. **6.** —. **7.** —. **8.** அ.கீ.சு.நூ., சென்னை-5. **9.** —. **10.** —.

II. அ. **1.** உட்கட்டு. **2.** தமிழ். **3.** தெளிவு. **4.** 3. **5.** 31 x 3 செ.மீ. **6.** இரு துளைகள். **7.** கயிறு. **8.** மரக்கட்டை. **9.** பனை ஓலை. **10.** நரம்பில்லாதது. **11.** நன்று. **12.** 4; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. **13.** பக்கத்திற்கு 5 முதல் 6 வரிகள். **14.** விருத்தம். **15.** இல்லை. **16.** முழுமை. **17.** 6 பாடல்கள்.

ஆ. —.

III. **1.** அரிதாரக் கட்டு, நாகக் கட்டு, வழலை முதலிய பல்வேறு இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் முறையும், வாதமுறை பற்றியும் கூறும் நூல். **2.** இரசவாதம். **3.** அரிதாரக்கட்டு, நாகக்கட்டு, கந்தகக்கட்டு, காரீயக்கட்டு முதலானவை பற்றியும், காட்டுள்ளித்தயிலம், வழலை, உப்பு,

பாசாணம், வெடியுப்பு, சீனாக்காரம், நாகம், குமரிக் கள்ளிச்சாறு, ஆகியவைப்பற்றியும் இந்நூல் ஆறு பாடல்களில் கூறுகின்றது. முதலில் இரசவாதம் பற்றிப் பேசுகின்றது. வெடியுப்பு என்னும் மருந்து அட்டகுன்மம், சூதக வாய்வு, நீர்க்கட்டு, மலக்கட்டு, வாதம் முதலான நோய்களைக் குணப்படுத்தும் முறையையும் கூறுகிறது. பாசாணம் என்பது பிறவிப் பாசாணம், வைப்புப் பாசாணம் என இரண்டு வகைப்படும். பிறவிப் பாசாணம், அஞ்சனப் பாசாணம், அப்பிரகப் பாசாணம், இலிங்க பாசாணம், கந்த பாசாணம், கற்கட பாசாணம், வெள்ளைப் பாசாணம் முதலிய பலவகைப் பாசாணங்களின் குணங்கள் பற்றியும், அவை இரசவாத முறைக்குப் பயன்படும் முறையையும் இந்நூல் கூறுகின்றது. அவ்வாறே கெந்தகம், உப்பு, வழலை, சீனாக்காரம், வெடியுப்பு முதலான இரசாயனப் பொருள்களின் குணங்கள் பற்றியும், அவை இரசவாதத்திற்கு எவ்வகையில் பயன்படுகின்றன என்பது பற்றியும் இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. ஆமப்பா வாதமுறை சொல்லக் கேளு
அரனெனக்கு உபதேசம் அகாரத் தாலே
தாமப்பா அரிதாரக் கட்டு கேளு
தனித்திருந்த மஞ்சனக் கருவால் நீதான்
வேமப்பா கொடிக்கள்ளிச் சாறுவிட்டு
விரவியொன்றாய் மத்தித்துத் தாரம் போட்டு
நாமப்பா சொல்லிவிட்டோம் அரிதாரக் கட்டி
நாலுமிட முழுப்புடத்தில் நாரால் போமே. 1

6. சாய்க்கவே நாகமது வெள்ளி போலாந்
தானரைத்த மருந்துதனை நாகத் தப்பி
மேய்க்கவே புடம்போடு நாகங் கட்டும்
மேவியதோர் கெந்தியுடன் வீரஞ் சே(ர்)த்து
மாய்க்கவே மனோசிலையும் லிங்கங் கூட்டி
மாளஅரை யிலுமிச்சம் பழச்சார் விட்டு
சேய்க்கவே செம்பிலிட வேதை யாகுஞ்
சிலவுஞ் செய்ய முடியாது ஆறு முத்தே. 6

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 6 என்னும் இந்நூலுடன், அகத்தியர் சூத்திரம் 7 (R.6214(g)), அகத்தியர் சூத்திரம் 8 (R.6214(h)), அகத்தியர் சூத்திரம் 9 (R.6214(i)), அகத்தியர் சூத்திரம் 10 (R.6214(j)) ஆகிய நூல்களும் உள்ளன. சீனாக்காரம் என்னும் படிகாரமானது பல்லரணை, கண்நோய், துன்மாங்கிசம், வாதப்பிணி, உட்சூடு, குன்மம் முதலான நோய்களைக் குணப்படுத்துகிறது. நாகம் என்பது ஒரு பஞ்சலோகக் காரீயமாகும்; அதாவது துத்தநாகம் ஆகும்.

அகத்தியர் சூத்திரம் 8

I. 1. **298**. 2. அ. R. 6214(h). ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 8. ஆ. Akattiyar cūttiram 8. இ. அகத்தியர் சூஷ்த்திரம் 8. 4. —. 5. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 5; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறையும், பற்பம் செய்யும் முறையும் கூறும் நூல். 2. இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. சுன்னம் என்பது உலோகங்களுடன் உயர்தரமான மூலிகை இரசம், செயநீர், திராவகம் இவைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துப் பொருளாகும். இம்மருந்துப் பொருள் வெண்மையாக இருக்கும். இது வாதவைத்திய முறைகளில் மிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படும். இச்சுன்னத்தை அமுரியுடன் கலந்து காய்ச்சி சுத்தி செய்து, இவற்றுடன் படிகம், உப்பு, காரம், சாரம் (இரசம்) இவற்றையும்

கூட்டி, வெள்ளை, வீரம் ஆகிய இரண்டு மருந்துப் பொருள்களையும் சரியெடையாய்க் கலந்து கல்வத்திலிட்டு வெள்ளெருக்கம்பாலை வார்த்து அரைத்து மைபோலாக்கி வில்லை செய்து காயவைத்துப் புடமிட்டு சீலைமண் செய்தால் பற்பமாகக் கிடைக்கிறது என்றும் இந்நூல் கூறுகிறது. மேலும் முப்புதயாரிக்கும் முறையும் கூறப்படுகின்றது.

4. —.

5. பாரப்பா அங்கங்கே சொன்ன தெல்லாம்
பரிவாகக் கண்டறிந்து முடிக்க வேணும்
தீரப்பா கருக்கிடையும் குருக்கிடையுங் கண்டு
திட்டமாகச் செய்தாக்கால் முப்பு வாகும்
ஆரப்பா வெனைப்போலே சொல்வா ரில்லை
ஆச்சரியம் மனுசருக்கு நோய்கள் தீர
மேரப்பா அண்டோட்டைச் சுத்தி செய்ய
மேதினியிற் கல்கன்ன மூவகுங் கூட்டே. 1

6. போமடா கரிஓட்டி லூதும் போது
போக்கான கண்விட்டு ஆடும் ஆடும்
நாமடா கல்லுப்பைக் கூட்டி உரைக்க
நல்லதொரு வயிரம்போல் ஆடும் பாரு
நாமடா ஆணுவத்தால் வெளியிற் போட்டேன்
நாட்டிலே மானிடர்க்கு நவில வேண்டா
தாமடா யிதுவெல்லாம் அறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அகார முற்றே. 5

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 8 என்ற இந்நூலுடன், அகத்தியர் சூத்திரம் 1 (R.6214(a)), அகத்தியர் சூத்திரம் 2 (R.6214(b)), அகத்தியர் சூத்திரம் 3 (R.6214(c)), அகத்தியர் சூத்திரம் 4 (R.6214(d)) முதலான பல்வேறு நூல்களும் உள்ளன.

அகத்தியர் சூத்திரம் 12

I. 1. 299. 2. அ. R. 9245. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 12. ஆ. Akattiyar cūttiram 12. இ. அகஸ்தியர் கற்ப சூத்திரம் 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 7; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வகாரத்தின் இயல்புகளையும் யோக மார்க்கத்தையும் இந்நூல் கூறுகின்றது. 2. இரசவாதம், யோகம். 3. அகத்தியர் சூத்திரம் 12 என்ற இந்நூலில், முதலாவதாக வகார மார்க்கம், திசவாய்வு, வாசியோக முறைகள் கூறப்படுகின்றன. வகார மார்க்கம் சொல்வேன் என்றும், ஓங்காரத்திலிருந்து வெளிப்பட்ட உகாரமே நாதமெனும் சக்தி, அகாரமே சிவம், வாலை என்பதே சிகாரம், மகாரமென்பதே அகார உகாரம் சேர்ந்ததாம் எனவும் கூறுகிறார். வகாரமென்பது தீட்சையின் முடிவாம். இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குவது ஓங்காரமாம். ஓங்காரமே ஆதியாம் என்றும் இந்நூல் கூறுகின்றது. அடுத்து, தன்னை அறிதலே தலைவனை அறிதலாம். தனக்குள் சந்தேகமற சிவயோகமென்ற வாசிமூலத்தை அறிந்து, அதன்படி செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. மற்றும் தீராவகங்கள், காயசித்தி பெறக்கூடிய முப்புவின் இயல்புகள் போன்றவையும் கூறப்படுகின்றன.

4. அகஸ்தியர் கற்பசூத்திரம் 12.

5. நேசிப்பாய் பத்தான அகாரத் தாலே
நிர்மலமாய் திசைவாய்வு உண்டாச் சப்பா
வாசிப்பா யானாக்கால் யோகசுக மெய்தும்
மகத்தான அகாரமென்ற வழியே சொல்வேன்

ஆசிப்பா அகாரமதில் உகாரங் கூட்டி
அப்பனே மகாரமென்ற வாறே தொக்கும்
வீசிப்பாய் மகாரமென்ற மவுனப் போக்கு
வித்தையடா ஓங்கார மூல மாச்சே. 1

6. சொல்லுமிந்தக் கல்லுசுண்ணம் முப்பாங் காலந்
துடியான வடுகனங்கே நிற்குங் காலம்
மாட்டினேன் கஷ்டம்விட்டுச் சொன்னேன் பாரும்
மக்களே யிதைவிட்டால் வாத மில்லை
காட்டினேன் கருக்கிடையுங் குருக்கிடையுங் காணும்
கைமுறையுந் தவறாமல் காணச் சொன்னேன்
ஆட்டினேன் சுண்ணத்தால் மெழுகு மாகும்
அப்பனே பன்னிரெண்டில் அடக்கி னேனே. 12

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் கலந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.175(b). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இரசவாதத்தில் வகாரமும் ஒன்றாகும். வகாரம் என்ற சொல்லிற்கு விந்து, வாதம், இரசவாதவித்தை முதலான சொற் பொருள்களைத் தருகின்றது சாம்பசிவம் பிள்ளை மருத்துவ அகராதி. எனவே வகாரம் என்ற சொல்லிற்கு 'வாதம்' அதாவது இரசவாதவித்தை என்று பொருள் கொள்ளலாம்.

அகத்தியர் சூத்திரம் 15.

I. 1. **300**. 2. அ. R. 2266. ஆ. T.R. 1285. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 15. ஆ. Akattiyar cūttiram 15. இ. அகஷ்த்தியர் சூத்திரம் பதினைந்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 12; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13.

பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 15 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடல் நோயைப் போக்குவதற்கான பச்சிலை களையும் பறக்கும் சக்தியைக் கொடுக்கும் குளிகை செய்யும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் பதினைந்து என்ற இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடல் இல்லாமல் நேரடியாக மருத்துவ முறிகை பற்றித் தொடங்குகிறது. பரிபாசையில் சொல்லப்பட்ட இலையைத் தின்றால் இனிக்கும். வேறு இலை என்றால் துவர்க்கும். இரண்டு திங்கள் இனிக்கும் இலையைத் தின்ன வேண்டும். இரண்டு திங்கள் இலையின் கொழுந்தைத் தின்ன வேண்டும். பூவை இரண்டு திங்கள் தின்ன வேண்டும். மற்றவற்றை இரண்டு திங்கள் தின்ன வேண்டும் என்றும் கூறுகிறது. மேலும் உடம்பைப் பொன் போன்று நீண்டநாள் நிலைத்திருக்கச் செய்யும் காயசித்திக் குளிகை செய்யும் முறைகளையும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் சூஸ்திரம் பதினைஞ்சு.

5. உழன்றநந்த யிலைதின்னா லினிக்கு மந்த
உள்ளபடை வேறென்றால் துவக்கும் பாரு
கழன்றுமற்று யிரண்டுதிங்கள் யிலையைத் திண்ணு
கைமுறையாய் யிரண்டுதிங்கள் கொழுந்தைத் திண்ணு
வழங்குமந்த பூவிரெண்டு திங்கள் திண்ணு
மக்களே வேறிரண்டு திங்கள் கொள்ளே. 1

6. உண்டபின்பு குளிகைசெய்து சாரணைக ளெல்லாம்
உறுதியா யென்மகளே யெல்லாந் தீர்ந்து
விண்டபின்பு ஆயிரத்தெட் டண்ட மாத்து
விளையாடி பேரின்பந் தெரிசித் தேத்தி
கண்டபின்பு பொதிகையென் னிடத்தில் வந்து
காயாசம் யென்னி டத்தில் வாங்கி
தொண்டருடன் கூடியே சுகத்தில் வாழ்வாய்
சுகமான காயசித்தி சுருக்க முற்றே. 15

7. முடிந்தது முஷ்த்தும் தேவிசகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. சொற்கள் பரிபாசையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர்

பெயரில் பாடப்பட்ட நூல். பச்சிலைகள் பற்றிக் கூறும் மிக அரிதான நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் 'சுகமான காயசித்தி சுருக்கமுற்றே' என்று முற்றுப் பெறுகின்றது. பலவித மூலிகைகள், மருந்துகள் கூறப்பட்டாலும் உடம்பைப் பொன்போன்று நீண்டநாள் நிலைத்திருக்கச் செய்யும் மருந்தான 'காயசித்தியை' முக்கியமாகக் கூறுவது இந்நூலின் சிறப்பு ஆகும்.

அகத்தியர் சூத்திரம் 16

I. 1. 301. 2. அ.R. 254(g). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 16. ஆ. Akattiyar cūttiram 16. இ. அகத்திய மகாமுனி அருளிச்செய்த சூஷ்த்திரம் 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் மருத்துவம், யோகம் முதலான செய்திகளைக் கூறுகிறது. 2. மருத்துவம் - யோகம். 3. அகத்தியர் சூத்திரம் பதினாறு என்ற இந்நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றில் யோகம் தொடர்பான செய்திகளை விளக்குகிறது. யோகப் பயிற்சிக்கு முன் ஒருவர் உடம்பை எவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்குப் பலவித மருத்துவ முறைகளைக் கூறுகிறது. அதன்படி ஒருவர் தம் உடம்பைத் தூய்மை செய்துகொண்டு யோகப் பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் இவ்யோகமானது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சாமதி என எட்டு நிலைகளை உடையது என்றும் கூறுகிறது. மேலும் சித்த நிலை அடைந்தவர்களுக்கு ஆகாய வழியில் பறப்பதற்காக உபயோகிக்கும் சாரணை தீர்த்த

இரசக்குளிகை ஆறுவிதங்களாகச் சொல்லப்படுகிறது. இப்பயிற்சிகளை எல்லாம் நன்றாகத் தெரிந்த யோகிகளை அணுகி அவரது மனம் நோகாதவாறு நடந்து முறையாகப் பயிற்சி பெற வேண்டும். அப்போதுதான் அது கைகூடும் என்றும் கூறுகிறது.

4. —.

5. ஆடு மணியம் பலநெஞ் சிறப்பின்
னாடுங் கலைரெண் டுமே நாசிநடுந்
தோடுந் திசவாய் வுகளெண் பதிலும்
பாடுஞ் சிவரா சர்பதம் பணிவோம். 1

6. தேறவே சிவராச யோகங் கேளு
திரட்டியே சொல்லுகிறேன் வெளிதா னப்பா
தேறவே வெளியிலுரு சமைத்துக் கொள்ளு
சின்மயத்தின் ரசந்திரட்டிக் குளிகை சேர்த்து
யேறவே சாரணைகள் குருவால் கேளு
எவ்வளவு தனங்கேட்டால் ஈந்து நில்லு
கூறவே தாருமென்று கேளா தேநீ
குருமனது நோகாமல் கொள்வாய் முத்தே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பெற்றுள்ளன. ர/ற வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. யோகாப்பியாசம் ஒன்றினால்தான் பிறப்பிறப்பை வெகுவிரைவாகவும், சுருக்கமாகவும் செய்து கொள்ள முடியும். இத்தகைய யோகத்தை ஒரு குருதான் தொட்டுக் காட்ட வேண்டும். அப்படியில்லாவிட்டால் உடம்பிற்குக் கெடுதி ஏற்பட்டு நன்மை உண்டாகாது என்கிறது சாம்பசிவம் பிள்ளை அகராதி.

அகத்தியர் சூத்திரம் 18

I. 1. **302**. 2. அ. R. 6215. ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 18. ஆ. Akattiyar cūttiram 18. இ. அகத்தியர்

சூஷ்த்திரம் 18. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 11; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 18 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறையினைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் பதினெட்டு என்ற இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடல் இல்லாமல் முப்பு பற்றிக் கூறுகிறது. முதலாவதாக வாதி இந்த முப்பு முறையை அறிந்திருக்க வேண்டும்; அப்போதுதான் வாதமும் வைத்தியமும் சித்தியாகும். ஆதி வித்தையான வைத்தியம்தான் பிரம்ம வித்தையாகும். ஆத்மாவை யார் இரட்சிக்கின்றார்களோ அவனே சித்தன். வாதி செய்பவன் நீற்றும் முறையை அறிந்து உலோகங்களை மடியச் செய்யும் முப்புவை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு உலோகங்களைச் சுத்தி செய்யும் வகையையும், குரு மருந்து செய்யும் முறையையும் அறிய வேண்டும். எல்லாவகையான முறைகளிலும் குருமருந்தைச் சேர்த்தால், பற்பம், சுண்ணம், செந்தூரம் மற்றும் வாதம் ஆகியவை சித்தியாகும். அடுத்து, பூநீறு எடுக்கும் முறை, பூமிநாதம், ஆதியுப்பு, சுண்ணம், அமுரி, சூடன், பூரம், வீரம் போன்ற பல மருந்துப் பொருள்களின் இயல்புகளும் கூறப்பெறுகின்றன.

4. —.

5. பூரணமாய்த் திரண்டகன்னி ஆளே றாமல்
புதுமையாய்ச் சொல்லுகிறேன் முப்பூ வப்பா
காரணமா யவள்விலக்கு மூன்று நாளுங்
கனமான பீங்கானிற் சேர்த்து வாங்கி
வாரணமா யதையெடுத்து வைத்துக் கொண்டு
வளமாக அவனவளும் அமுரி வாங்கிக்
காரணமாய் மூன்றுநாள் ஆன பின்புக்
கனமான சட்டியிலே விட்டுக் காச்சே. 1

6. பாரப்பா யிப்படியே செய்தா யானால்
பதிவா நீயுமொரு சித்த னாவாய்
யேரப்பா முப்பூவின் விபரஞ் சொன்னேன்
எளிதாக வாதத்தின் சுருக்கஞ் சொன்னேன்
சாரப்பா செய்பாகம் கைப்பா கத்தைத்
தவறவிட்டு நூல்தனையே பொய்யென் பார்கள்
காரப்பா யேழைகளுக் கன்ன மிட்டு
கண்டுகொள்வாய் முப்பூவின் கருத்தான் முற்றே. 18

7. முற்றிற்று. தேவிசகாயம்.

8. மூலம். *9.* பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. சொற்கள் பரிபாசையில் அமைந்துள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் மலிந்துள்ளன. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். *11.* இல்லை.

IV. *1.* இல்லை. *2.* —. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* —. *3.* இல்லை.

VI. முப்பு தொடர்பாக அகத்தியர் பெயரில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவை: *1.* அகத்திய முனிவர் அருளிய கற்ப முப்பு குருநூல் *100*, *2.* அகஸ்திய மாமுனிவர் அருளிய குருநூல் முப்பு *50*, *3.* அகத்தியர் முப்பு *30*, *4.* அகத்தியர் அண்டக்கல் முப்பு சுண்ணம் *16*, *5.* அகத்தியர் முப்பூ தீட்சை சூத்திரம் *16*; இவை அனைத்தும் ஒரே நூலாக S.P. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், சென்னை. (முதல் பதிப்பு) *1992*–ல் வெளிவந்துள்ளன. இன்னும் சுவடி நிலையில் பல நூல்கள் அச்சாகாமல் உள்ளன.

அகத்தியர் சூத்திரம் 25

I. ***1. 303.*** *2.*அ. R. *4749*. ஆ. T.R. 2097. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் 25. ஆ. Akattiyar cūttiram 25. இ. அகஷ்த்தியர் குரு இருபத்தைந்து. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* *5.* *5.* 31 x 2 செ.மீ. *6.* ஒருதுளை. *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12.* *10*; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 5 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* *25* பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டசித்தி, அட்டகருமம் பற்றிக் கூறும் நூல். 2. தத்துவம் - மாந்திரீகம். 3. அகத்தியர் சூத்திரம் இருபத்தைந்து என்ற இந்நூல் அட்டசித்தி என்று கூறப்படும் அணிமா (ஆன்மாவைப் போல் அணுவாதல்), மகிமா (மகத்தாதல்), கரிமா (தன்னுடல் கண்டிப் பின்றாய்க் கண்டிப்பு உள்ளவற்றை உருவ வல்லனாதல்), இலகிமா (இலக்குத்துவமாதல்), பிராப்தி (வேண்டுவன அடைதல்), பிரகாமியம் (நிறையுள்ளானாதல்), ஈசத்துவம் (ஆட்சியுள்ளான் ஆதல்), வசித்துவம் (தன்வச மாக்க வல்லன் ஆதல்) என்ற எட்டு நிலைகளின் விளக்கங் களையும் மிகத் தெளிவாகக் கூறுகின்றது. மேலும் அட்ட கருமங்களான வசியம், மோகனம், தம்பனம், உச்சாடணம், ஆகர்சணம், வித்துவேசணம், பேதனம், மாரணம் என்னும் எட்டுக் கருமங்களைப் பற்றியும், இக்கருமங்களுக்குரிய மூலிகைகள், மந்திரங்கள், உருவேற்றும் முறைகள் பற்றியும் கூறுகின்றது.

4. —.

5. பூமி னாத மேகமே புனல் சொரிந்த பூவதாம்
ஆம டாரவி முகத்தி லாயி ருந்த யிந்தடா
சோம நாத மேகமே சொரூபம் வைத்த சித்திகள்
ஏம வித்தை பூரணை யிருக்கு மட்ட சித்தியே. 1

6. வேதை கட்ட கைமுறை வேணு மல்லா தோர்தனக்
காதர வென் னூலடா அறிந்து பாரு உண்மையாய்
ஓதி பம்போல் நந்திவந்து உபதேச மேசெப் பினார்
சாதி யான பூரணம் அறிந்து பாரு சோதியே. 25

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் சிறுசிறு சொற்களால் ஆன அறுசீர் விருத்தங்களால் பாடப் பெற்றுள்ளன. ர/ற வேறுபாடில்லாது அமைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அட்டசித்தி, அட்டகருமங்களைப் பற்றிப் பேசும் ஒரு சிறந்த நூலாகும்.

அகத்தியர் சூத்திரம் 36

I. 1. 304. 2. அ. R. 166. ஆ. T.R. 150. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 36. ஆ. Akattiyar cuttiram 36. இ. அகஸ்த்திய முனி அருளிச்செய்த 36. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914–15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 21 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. பிளைவுட். 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 32; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 36 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பிலுள்ள தோல் தொடர்பான நோய்களுக்கு மருந்துகளும், இரசவாத முறைகள் சிலவற்றையும் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. அகத்தியர் இரசவாதம் 36 என்ற இந்நூல் முதலாவதாகப் பரம்பொருளை வணங்கிப் பின்பு முந்நூறு பாடல்களில் வைதியம், வாதம் சொன்னதாகவும், அவற்றைச் சுருக்கி முப்பத்தாறு பாடல்களில் வைத்தியம், வாதம் சொன்னதாகவும், ஒருமனதாய் நின்று வாதிகள் இதனைச் செய்தால் உலகத்தோர் நோய்கள் எல்லாம் இல்லாமல் வாழ்வார்கள் என்றும் கூறுகிறது. மேலும் தாம்பிர பற்பம், நாகபற்பம், உலோகபற்பம், காந்தபற்பம் போன்ற பற்பங்களும், உலோக செந்தூரம், காந்தசெந்தூரம், தங்க செந்தூரம் போன்ற செந்தூரங்களும், செம்புவெள்ளை, காந்தவெள்ளை, தங்கவெள்ளை செயநீர் போன்ற மருந்துகள் செய்முறைகளும் அவற்றால் தீரும் நோய்களும் கூறப்படுகின்றன. ஒவ்வொரு மருந்தும் செய்யும்போது முதலில் சுத்தி செய்யவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. செம்புவெள்ளை செய்முறை: தாமிரம் 4 பலம், இந்துப்பு இவற்றைக் குகையில் போட்டு உருக்கும்போது அண்டம் 2 பலம், நவச்சாரம் 2 பலம், காரம் 1/2 பலம் இவற்றைப் பொடி செய்து அதில் போடவேண்டும். இதை வங்கக்குத்தி ஓட்டில்

ஊத கழங்கு போலாகும். இதனைக் குகையில் வைத்துப் புடம்போட உருகும். அப்போது தாளகம் போட்டு 15 முறை நீற்ற வேண்டும். மேலும் காரம் 1/4 பலம் போட்டு எலுமிச்சைச் சாற்றால் அரைத்துப் பயறளவு உருண்டை செய்து புடம்போட வெண்கலம்போல் வரும். இதனைத் தூளாக்கி எடைக்கு எடை வீரம் போட்டு அரைக்க மெழுகு போலாகும். சூதம் 1/2 பலமும், வெள்ளை அரைக்கால் பலமும் பூரமும் போட்டு வில்லை தட்டி கெசப்புடம் போட வெள்ளையாகும். இதை உட்கொண்டால் 11 வகைக் குட்டமும், மேகமும் தீரும். இதற்கு அனுபானம் பசும்பாலில் கருப்பட்டி சேர்த்துச் சாதம் சாப்பிட வேண்டும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஷ்த்தீஜர் முனி அருளிச் செய்த 35.

5. பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவான தாம்பிரத்தைக் குகையில் வைத்து
சேரப்பா யிந்துப்பூ பலமே போட்டு
சேர்ந்துருகும் போதினிலே மருந்து கேளு
கூரப்பா அண்டமது பலமே ரெண்டு
கட்டுநவ சாரமதில் ரெண்டு போடு
சீரப்பா கல்வத்தில் தூள தாக்கிச்
சிறந்ததொரு பொடிமேலே காரம் போடே. 1

6. ஆமப்பா யிந்தவகை வயித்தியம் பாரு
அஷ்டதிசை மெச்சவுன்னை வாழ்த்து முலோகம்
னாமப்பா வயித்தியத்தில் யிம்மருந்தை யெல்லாம்
நலமாகக் குறுக்கிவைத்தேன் முப்பத் தைந்தில்
வாமப்பா யிந்தவகை மருந்தையெல்லாம் வைத்தால்
வயித்தியன்பே ருரைக்கையிலே நோய்க ளோடும்
தாமப்பா வோரிரண் டிருபத் தைந்தும்
தடையறவே யுருவேற்ற சித்தி யாமே. 36

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. மேலும் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள பெரும்பான்மையான நூல்கள் சுருக்க நூல்களாக விளங்குகின்றன. 11. இல்லை.

IV. 1. D. 1904, R. 563, R. 3402, R. 4681, R. 6140, R. 6145. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 162(a) ஆ.நி.எண் 527(f) உ.த.நி.எண் 487; 743. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை', தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலானது 'அகத்தியர் சூத்திரம் 36', 'அகத்தியர் பற்பம் 36', 'அகத்தியர் வயித்தியம் 36' ஆகிய பெயர்களில் வழங்கப்படுகிறது. மேலும் 'செந்தூரம் 300–க்குச் சூத்திரம் 36' என்னும் தலைப்பில் தாமரை நூலகம் வெளியிட்டுள்ள 'அகத்தியர் ஞான அமுதம்' என்னும் நூலிலும், 'கருக்கிடைச் சூத்திரம் 36' என்ற தலைப்பில் அந்நூலகம் வெளியிட்டுள்ள 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை' என்னும் நூலிலும் வெளிவந்துள்ளது. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இந்நூலின் பிரதி காணப்படுகிறது. இச்சுவடிக் கட்டில் அகத்தியர் சூத்திரம் 36 என்ற இந்நூலுடன் அகத்தியர் வயித்திய வாகடம், அகத்தியர் குழம்பு வாகடம் போன்ற பல்வேறு நூல்களும் உள்ளன.

அகத்தியர் சூத்திரம் 36

I. 1. **305**. 2. அ. D. 1904. ஆ. T.D. 749. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் சூத்திரம் 36. ஆ. Akattiyar cūttiram 36. இ. அகஸ்த்தியமுனி அருளிச் செய்த 36. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 22 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 32; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 36 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பிலுள்ள தோல் தொடர்பான நோய்களுக்கு மருந்துகளும், இரசவாத முறைகள் சிலவற்றையும் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. வரிசை எண் 304 போன்றது.

4. அகஸ்த்திய சுவாமிகள் அருளிச் செய்த சூஸ்த்திரம் முப்பத்தாறு.

5. பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவான தாம்பிரத்தைக் குகையி லிட்டு
சேரப்பா யதில்னாலு யிந்துப்புப் பலமே போடு
சேர்ந்துருகும் போதிலே மருந்து கேளு
காரப்பா அண்டமது பலமே ரெண்டு
கட்டுநவச் சாரமதில் ரெண்டு போடு
சீரப்பா கல்வத்தில் தூள தாக்கி
சிறந்ததொரு பொடிமேலே காரம் போடே. 1

6. ஆமப்பா யிந்தவகை வயித்தியம் பாரு
அஷ்டதிசை மெய்க்கவுன்னை வாழ்த்தும் லோகம்
னாமப்பா வயித்தியத்தில் மருந்தை யெல்லாம்
நலமாகச் சுருக்கிவைத்தேன் முப்பத் தாறில்
வாமப்பா யிந்தவகை மருந்தையெல்லாம் வைத்தால்
வயித்தியன்பே ருரைக்கையிலே நோய்க ளோடும்
தாமப்பா எட்டுரெண்டு மிருபத் தைஞ்சும்
தடையறவே யுருவேறச் சித்தி யாமே. 36

7. தேவி சகாயமுண்டாகவும் திருச்சிற்றம்பலம் அகஸ்த்தியனார் முப்பத்தாறு சூத்திரம் யெழுதி நிறைவேறியது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்களும் ஆங்காங்கே வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 166, R. 563, R. 3402, R. 4681, R. 6140, R. 6145. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 162(a), ஆ.நி. எண் 527(f), உ.த.நி. எண் 487: 743. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை', தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

V. இந்நூல் தாமிரம், செம்பு, வெள்ளை போன்ற உலோகங்களைச் சுத்தி செய்து மருந்துகளில் பயன்படுத்தும்

முறைகளைத் தெளிவாகக் கூறுகிறது. இம்மருத்துவ முறைகளைப் பயன்படுத்தும் சித்தர்கள் 'வாதிகள்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

அகத்தியர் சூத்திரம் 36

I. 1. **306**. 2.அ. R. 563(a). ஆ.T.R. —. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 36. ஆ. Akattiyar 36. இ. அகத்.... 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பவானி, கச்சேரி ரோடு, இலக்ஷ்மண அய்யங்காரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. 1923-34.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 9. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 17; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 37 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பிலுள்ள தோல் தொடர்பான நோய்களுக்கு மருந்துகளும், இரசவாத முறைகள் சிலவற்றையும் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. வரிசை எண் 304 போன்றது.

4. —.

5. பாரப்பா செம்பினுட ..... கேளு
பரிவாகத் தாம்பிரத்தைக் ..... வைத்து
சேரப்பா பதினாலு பலமே .....
சேர்ந்துருகும் போதினிலே மருந்து கேளு
காரப்பா அண்டமது பலமே ரெண்டு
கட்டுநவ சாரமதில் ரெண்டு போடு
சீரப்பா கல்வத்தில் தூள தாக்கிச்
சிறந்ததொரு பொடிமேலே காரம் போடே. 1

6. ஆமப்பா யிந்திடவே வயித்தியம் பாரு
அட்டதிசை மெய்க்கவுன்னை வாழ்த்தும் லோகம்
நாமப்பா வயித்தியத்தில் மருந்த .....
....

....
..... ருரைக்கயிலே நோய்க ளோடும்
தாமப்பா எட்டுரெண்டு இருபத் தஞ்சுந்
தடையறவே வாசிக்கச் சித்தி யாமே. 36

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள், பிரதிபேதங்கள் நிறைந்துள்ளன. பிழைகள் மிகுதி. ஒற்றுப்பிழைகள், சந்திப்பிழைகள் காணப் படுகின்றன. அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றுள்ளது. ழ>ழி ஆகவும், கொ>கு ஆகவும், று>ரு ஆகவும், இன்னும் பிறவாகவும் வருதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல் 'அகத்தியர் 36' என்றும், 'அகத்தியர் சூத்திரம் 36' என்றும், 'அகத்தியர் பற்பம் 36' என்றும், 'அகத்தியர் வைத்தியம் 36' என்றும், 'அகத்தியர் செந்தூரச் சுருக்கம் 36' என்றும், 'அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 36' என்றும் இன்னும் தொடர்பான பெயர்களிலும் வழங்கப் படுவதைக் காணலாம். 11. அகத்தீசுரர் அருளிச் செய்த முப்பத்தாறும் எழுதி முகிந்து முற்றும் யெப்போதும் சிவனே துணை.

IV. 1. R. 3402, R. 3608, R. 4681, R. 6140, R. 6145. 2.சி.ம.மை. ஆ.நி. எண் 162(a), ஆ.நி. எண் 527(b), உ.த.நி. எண் 487:743. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக்கோவை', தாமரை நூலகம், சென்னை, 1996; 'அகத்தியர் ஞான அமுதம்', தாமரை நூலகம், சென்னை, 1997.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூல் முதல் ஓலையிலிருந்து 9-ஆம் ஓலையின் முதல் பக்கம் வரையில் எழுதப்பட்டுள்ளது. 10-ஆம் ஓலை முதல் 25-ஆம் ஓலைவரை திருமந்திரம் எனும் நூலும் (R.563(b)), 26 முதல் 43-ஆம் ஓலைவரை கொங்கணர் கடைக்காண்டம் எனும் நூலும் (R.563(c)), 44 முதல் 80-ஆம் ஓலைவரை காயகற்பம் எனும் நூலும் (R.563(d)), 81 முதல் 236-ஆம் ஓலையின் முதல் பக்கம் வரை சட்டைமுனி நிகண்டு எனும் நூலும் (R.563(e)), 237 முதல் 291-ஆம் ஓலைவரை அகத்தியர் வைத்தியம் கர்மகாண்டம் எனும் நூலும் (R.563(f)),

292 முதல் 294 ஓலைவரை சம்போக நாதர் வாதசித்தி எனும் நூலும் (R.563(g)) உள்ளன. இறுதியில் 5 உதிரி ஓலைகளில் சில வைத்திய முறைகள் எழுதப்பட்டுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 46

I. 1. **307**. 2. அ. R. 4747. ஆ. T.R. 2097. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 46. ஆ. Akattiyar cūttiram 46. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் 46. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 31 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 20; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 46 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பில்லி சூனியம் போன்ற மாந்திரீக முறைகளையும், பற்பம், சுன்னம் போன்ற மருந்துப் பொருள்களையும் கூறும் நூல். 2. மாந்திரீகம், மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 46 என்ற இந்நூல் அட்ட கருமம், பஞ்சபூதம், பஞ்சவாசல், வாதமுத்தி, பச்சைக்கெந்தி, தங்கம், செம்பு, இரும்பு, கரியுப்பு, சுன்னம் போன்றவற்றை விளக்குகின்றது. அட்டகருமம் என்பது வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகர்சணம், வித்துவேசணம், மாரணம் என்பனவாகும். இக்கருமங்களுக்குரிய மூலிகைகள், மந்திரங்கள், உருவேற்றும் முறைகள் போன்றவையும் கூறப்படுகின்றன. மேலும் ஒருவரைப் பில்லி சூனியம் செய்து அவரை முழுமையாகச் செயல்படாதவாறு செய்வதற்கான வழிமுறைகளையும் இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. அருளிருந்த தெவ்விடம் அரனிருந்த தெவ்விடம்
திருவிருந்த தெவ்விடம் சியலுறைந்த தெவ்விடம்
பொருளிருந்த தெவ்விடம் பொறையிருந்த தெவ்விடம்
பரமிருந்த தெவ்விடம் பரமசிவ மஞ்சியே. 1

6. பாரப்பா வாதமெல்லா மடக்கிப் போட்டேன்
பண்புபெறு நாற்பத்தாறு பாடல் குள்ளே
ஆரப்பா எனைப்போலே சொல்லப் போறார்
ஆய்ந்ததொரு கருக்களெல்லாந் தப்பா மல்தான்
சீரப்பா விடம்போ..ள் தான்வே ணுந்தான்
திரவியிலே போனாலும ..... வேணும்
ஏரப்பா யிதையறிந்து வாதம் பாரு
இந்திரன்போல் வாழ்வதற்கு மிறையவ னாமே. 46

7. மூற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பிலும், முன்னிலை யாரை விளித்துக் கூறும் பாங்கில் பாரப்பா, கேளப்பா எனவும் அமைந்துள்ளன. ர/ற வேறுபாடில்லாது வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. இந்நூல் அட்ட கருமத்தைப் பற்றிக் கூறுகின்றது. இதேபோல் அட்டகருமம் நூல்கள் அகத்தியர் பெயரில் R.6136, R.942(f), R.942(g) என்ற எண்களில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அட்ட கருமங்களுள், வசியம்–பலவித மூலிகைகள், கருக்கள் சேர்ந்த மையினால் வசமாக்கல். அது லோகவசியம். இராசவசியம், ஸ்திரீவசியம், புருச வசியம், மிருக வசியம், பூத, பிரேத, வேதாள வசியம் என்பன. இவை மந்திர தந்திரங்களால் வேறுபடும். இம்முறைகள் இன்றும் மக்களிடையே செயல்பாட்டில் இருந்து வருவது அறியத்தக்கதாகும்.

அகத்தியர் சூத்திரம் 48

I. 1. **308**. 2. அ. R. 6072. ஆ. T.R. 2546. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 48. ஆ. Akattiyar cūttiram 48. இ. அகஷ்த்தியர் வயித்தியம் நாற்பத்தெட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 27 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை.

10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 20; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் நாற்பத்தெட்டு என்ற இந்நூல் நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களைத் தீர்க்கக்கூடிய மருந்துகள் செய்யும் முறையையும் அதைப் பயன்படுத்தும் முறையையும் கூறுகிறது. பூநீறு மூலம் தயாரிக்கப்படும் செந்தூரம் போன்றனவும் சொல்லப்படுகின்றன. மேகநோய் தீருவதற்கு வெள்ளீய பற்பம், வல்லாரை, வீரம், குமரிச்சாறு இவற்றைச் சேர்த்து அரைத்து வில்லையாகச் செய்து புடம் போட்டு எடுக்கும் பற்பத்தைப் பற்றியும் கூறுகிறது. சூலை நோய், வாதநோய், கண்டமாலை, சொறிசிரங்கு, அரையாப்பு, மூலம், குன்மம், காமாலை, கபாலசூலை, கவுசைரோகம், எலும்புருக்கி, சன்னி போன்ற நோய்களுக்கு மருந்து செய்யும் முறைகளையும் கூறுகிறது. நாடி பார்க்கும் நிலைகளையும் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக.

5. நான்மறை சூஷ்த்திரத்தைச் சுருக்கி யேதான்
நானிலத்தில் மானிடர்கள் பிழைக்க வென்று
தோணவே வயித்தியத்தை யாய்ந்து பார்த்து
சுருக்கியே சூச்சமாய் எடுத்துச் சொல்வோம்
பானுமறை யறியாத உமையாள் தானும்
பண்பாக எந்தனுக்கு உரைத்த வேதம்
நூலின்முறை தப்பாமல் நாற்பத் தெட்டாய்
உண்மையாய் சொல்லிவைத்தோம் வாதத்தாலே. 1

6. உரைத்திடு முத்து வெள்ளி உயர்குரம் பூரம் சங்கு
கரைத்திடு துருசு துத்தம் கலைகுலை யோடு போன்றும்
திரைத்திடு பாகுரோணி சோர்வுங் ....
.... கண்டுபோமே. 48

7. —.

8. மூலம். பாடல்கள் அந்தாதியிலும் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கிலும் (எ.டு.: உரைத்திடு, கரைத்திடு) அமைந்துள்ளன. ர/ற வேறுபாடில்லாது அமைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல்.உமை அகத்தியருக்கு உரைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சித்தர்களின் கொள்கைப்படி மனிதனுக்கு நோய்கள் ஏற்படுவதெல்லாம் துட்ட தேவதை அல்லது கிரகக் கோளாறுகளாலே ஒழிய வேறல்ல. ஆகவே இத்தகைய கெட்ட கோளாறுகளைத் தடுக்க வேண்டிய அநேக நூதனமான விதிகளையும் அனுட்டானங்களையும், மாந்திரீக மனோவசியக் கிரியைகளையும் சித்தர்கள் தங்கள் நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள்.

அகத்தியர் சூத்திரம் 200

I. 1. **309**. 2. அ. R. 262. ஆ. T.R. 1285. 3. அ. அகத்தியர் சூத்திரம் 200. ஆ. Akattiyar cūttiram 200. இ. அகஸ்தியர் சுவாமிகள் வகார திரவியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 80. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 160. இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களுக்குப் பல்வேறு மருத்துவ முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்திய சுவாமிகளின் வகார திரவியம் எனும் இந்நூலில் அடங்கியுள்ள செய்திகள் வருமாறு: அண்டச் சுண்ணம், பிண்டச் சுண்ணம், திராவகம், கட்டுவகைச் செயநீர், மெழுகு, செந்தூரம். கல்லானை, குருவை வணங்கி அருள் பெறுவதற்கான

முறைகள், வழலைப் பெருமை, முழுவாதி, பூரங்கட்ட, தீனன்பேர், யேகநதி, சரக்குச் சுன்னம், ஞாபகம், நவலோக ஈயம், நவரத்தின ஈயம், உபரசம், அறுவகைச்சுண்ணம், குகை, நாகக்கட்டு, கார செந்தூரம், சீனாக்காரக்கட்டு, மெழுகுத் தயிலம், கெந்திமெழுகு, பாசாண மெழுகு, பாசாணத்துக்குத் தோந்தம், ஞாபகப்படப்புத்தி, கன்னி வித்தை செய்தல், காமப்பால், கானப்பால், பூரச் சுண்ணம், தாம்பூரவேதை, புகைக்கிற வேதை, உற்பத்தி விபரம், எண்ணெய் வாங்க, சரக்கு தோந்தம், தங்கச் சுண்ணம், துரிசிச் சுண்ணம், சிவத்தின் பேர், வாதத்துக்கு, தேசியுற்பத்தி, கொசபீசம், அட்டமார்க்கம், வேதைக்கு ரகசியம், வெள்ளைமுறை, கர்ப்பத்துக்கு மாய்கை தள்ளவும், கர்ப்பத்துக்குக் குறி, மாய்கை தள்ள, குகை பார்க்க, உபதேசஞ் சொல்ல, தீவினை அகற்ற வழி, பெரியோர் நட்த்தை, கோள்விப் புளுவான்திறம், சதுரகிரி, சோதிவிருட்சம், கெந்தியுப்பு, சூடனுப்பு, பெண்ணைமுறி, இரசங்கட்ட துரிசுச்சுண்ணம், கல்லுப்புக்கட்டிச்சுண்ணம், நாயுருவிதின்று சமாதியாயிருக்க, உந்தியிலே வைக்க, பசியாமலிருக்க, உப்புக்கள் சுத்திசெய்யும் வகை, வழலையறிய, சீனாக்காரம், பழையபடித் தங்கம் செய்ய, பெண்ணை வைத்துப் பூசை செய்த வகை, சிவபூமி ஆகியன சொல்லப்படுகின்றன.

4. அகஸ்திய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வகார தெரவியம் 200.

5. ஆதியாய் மணக்கோலஞ் செய்யு நாளி
லாதிமுதல் தேவரிஷி கூட்ட மாச்சு
வேதியனு மாயோனுந் தாய நின்று
விமலனார் விஷ்வனுக்கு வார்த்தை யீந்தார்
நீதிபெற சாரதியாம் தெஷ்ச னாயன்
நிலையான சார்பொதிகைக் கிரியில்சொன்றோர்
ஆதியொடு காரணத்தால் பாறை தாண்டி
ஆடகந்தான் மம்பரமா மருளைப் பாரே. 1

6. பிந்தாலே யிரவிதன்னைக் கட்ட வேணும்
யெடுத்ததொரு அண்டத்தி லேற வேணும்
மந்தாலே கருரெண்டு மறிய வேணும்
மகத்தான கருக்கிடத்தை யறிய வேணும்

சந்திரனால் ரவியொன்றாய் முடிக்க வேணும்
சார்வாகத் தீனீரைக் காண வேணும்
கொந்தான பூரணமே சார மாகும்
கூடுகின்ற ரவிகோடா கோடி முற்றே. 201

7. முடிந்தது. முற்றும் குருவே துணை. அகத்திய சுவாமியார் பாதார விந்தமே கெதி.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பல பேச்சுவழக்குச் சொற்கள் பயின்று வருகின்றன. வட சொற்களும் கலந்து வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. தீவினைகளை அகற்றுவதற்கான வழிமுறைகள், பெரியோர்களின் நடத்தை முறைகள் போன்ற பொதுவான செய்திகளும் இந்நூலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் வகார திரவியம் என்பது போல் அகத்தியர் வகாரதீட்சை, அகத்தியர் வகார மார்க்கம் என்ற பெயர்களிலும் நூல்கள் காணப்படுகின்றன.

அகத்தியர் சூத்திரம் 205

I. 1. **310**. 2. அ. R. 4676. ஆ. T.R. 2064. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 205. ஆ. Akattiyar cūttiram 205. இ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 205. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை - 5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 40. 5. 30 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது. 12. 80; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 4 வரிகள். 14. விருத்தம். 15. முன்னும் பின்னும் ஏடுகள் இல்லை. 16. குறை. 17. அறிய இயலவில்லை.

ஆ. —.

III 1. மருத்துவம் தொடர்பான செய்திகளும் நோய் தீர்க்கும் முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர்

சூத்திரம் 205 என்ற இந்நூலில் மும்மூலம், மேகம், கண்ரோகம், சூலைரோகம், வாத ரோகம், பித்தம், கிராணி, வாயு குன்மம், சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு மருந்துகள் கூறுவதோடு பலவகை மருந்துகளைச் சுத்தி செய்யும் முறைகளும் கூறப்படுகின்றன. அவை இலிங்க சுத்தி, பாசாண சுத்தி, அரிதார சுத்தி, கருடபச்சை சுத்தி, படிகார சுத்தி முதலியன. மேலும் உலோக செந்தூரம், காந்த செந்தூரம், காரிய செந்தூரம், தாமிர செந்தூரம், வெள்ளி செந்தூரம், தங்க செந்தூரம் போன்ற செந்தூர வகைகளும், கடுக்காய் இலேகியம், வெந்தய இலேகியம், தான்றிக்காய் இலேகியம், சுக்கு இலேகியம், மிளகு இலேகியம், திப்பிலி இலேகியம், உள்ளி இலேகியம், கடுகு இலேகியம், வெந்தய இலேகியம் போன்ற இலேகிய வகைகளும், சிவன் வேம்புத் தயிலம், செங்கொட்டைத் தயிலம், சந்தனத்தயிலம், வேங்கைப்பட்டைத் தயிலம், வெட்டிவேர்த் தயிலம், வேப்பம் பட்டைத் தயிலம், குருந்தொடித் தயிலம், கொடுவேலி வேர்த் தயிலம், சீரகத்தயிலம், மேக வெட்டைக்குத் தயிலம், மேகநோய்க்குத் தயிலம், வாதத்துக்கு வேங்கைத் தயிலம், குன்மத்திற்கு நற்சீரகத் தயிலம், கிரந்திக்குத் தயிலம், சொறி கரப்பானுக்குத் தயிலம் போன்ற தயிலவகைகளும் கூறப்படுகின்றன. மேலும் இரும்புப் பற்பம், காந்த பற்பம் போன்ற பற்ப வகைகளும் கூறப்படுகின்றன.

4. அகத்தியர் வைத்திய சூத்திரம் இருநூற்றஞ்சு.

5. பூரணமாம் மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்த வாயுவதால் சூலை ரோகம்
ஆரணமாம் வேதத்தா லெழுந்த மேகம்
அதியதொரு பித்தமதால் கிராணி யாச்சு
தாரணமாம் வாயுவினால் குன்ம மாச்சு
சாந்தசிலேற் பனங்கூடில் சயம தாமே. 1

6. ஈவதிந்த நூல்துகைதா னிருநூற் றைந்து
இகத்திலுள்ளோர் பிழைக்கவென்று யிரங்கிச்
சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்குத் தவக்க மில்லை
தன்மையைப்போ லிந்நூலைச் சாற்றி னேன்யான்

நோய்புகுந்து சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கையெல்லாம் நீற்றிக் கொண்டு
வாய்மையுடன் எண்ணையொடு கிருதஞ் செய்து
வைத்திடுவா யனுபானம் வைத்திய முற்றே. 205

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1897, R. 4197, T.R. 8, R. 75, R. 275(c), R. 3609, R. 3663, R. 3727, R. 6100, R. 6138, R. 7881, R. 2337, R. 6098. 2. த.ப.க.எண்கள் 989, 1053, 2171, 2213, 2234, 2392, 2414, த.ச.ம.நூ. எண்கள் 124(d), 205, உ. த.நி.எண்கள் 221:431, 493:751, 563:911. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் சூத்திரம் 205 என்ற இந்நூல் அகத்தியர் பாடியதாக அறியப்பெறும் வைத்திய நூல்களில் மிகவும் சிறப்புடையதாக அமைகிறது. காரணம் இந்நூலில் நோய்களைக் குணப்படுத்தும் பலவகையான பற்பம், தைலம், செந்தூர வகைகள் மிக எளிய முறையில் கூறப்படுகின்றன. பற்பமும், கற்பமும் சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அரிய மருந்துகளாம். காயகற்பம் என்னும் கற்பத்தை உண்டுதான் சித்தர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றதாகச் சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன.

அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 50

I. **1. 311.** 2. அ. D. 2386. ஆ. T.D. 932. இ. R.No. 1770. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 50. ஆ. Akattiyar caumiya cākarac curukkam 50. இ. அகத்தியர் சவுமிய சாகர சூத்திரம் 50. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 9. 5. 42 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை.

10. நரம்பில்லாதது. *11.* நொறுங்கியது. *12. 18;* இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 52 பாடல்கள்.

ஆ. (i). *1.* 30 x 24 செ.மீ. *2. 19. 3.* பக்கத்திற்கு 25 வரிகள். *4.* நல்ல கையெழுத்து. *5. 28.9.1948. 6.* கே.ஏ.மணவாளன். *7. 3.10.1948. 8.* கி.பி. *1948*-இல் புத்தாக்கம் செய்யப்பெற்றது.

ஆ. (ii). *2.* 30 x 25 செ.மீ. *2. 19. 3.* பக்கத்திற்கு 25 வரிகள். *4.* தெளிவு. *5. 8.8.1956. 6.* ஜே. சந்திரமௌலீசுவரன். *7.* எம்.ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை, ஜே. சந்திரமௌலீசுவரன். *8.* கி.பி. *1958*-இல் புத்தாக்கம் செய்யப்பெற்றது.

iii. *1.* நம் உடம்பில் தோன்றும் நோய்களுக்குப் பலவித மருத்துவம் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* இந்நூலில் செந்தூரம், மை, வாலை பூசை, வசியம், பிறவித்தைகள், தம்பனம், பல்வேறு தயிலங்கள், சரக்குகள், இரசவாதம், சுத்தி, பல்வேறு தீட்சைகள், கற்பம், மாந்திரீகம் போன்ற செய்திகள் பாடல்களில் விளக்கம் பெறுகின்றன. செந்தூர வகைகளாகத் தங்கச் செந்தூரம், அயச் செந்தூரம் போன்றனவும், மைவகைகளில் சிலவும், பல பூசை முறைகளும், பல தியானங்களும், வாயுத் தம்பன வகைகளும், வைத்திய சரக்குகளின் இயல்புகளும், இரசவாத உப்பு வகைகளும், சவுக்கார வகைகளும், பல பாசாணங்களும் கூறப்பட்டுள்ளன.

4. பூரண மான சோதி பூமலரு கமலம் பீடம்
நேர்சுழி கலையா நித்தம் நிருமயத் தருளே போற்றி
காரண மான தந்தைக் கரிகெச முகவன் பாதம்
கூரண மான வாமக் குண்டலி கமலம் போற்றி.

5. வாரண மான கந்தன் மலரடி குருவின் பாதம்
சேர்விழி வள்ளி பங்கன் சேவடி விளக்கம் போத்தி
தோரணக் கவிவே தாந்தத் தட்சணப் புலவோர் சொல்லும்
சீரரு ளமுர்த மான செந்தமிழ்க் காப்பு தாமே. 1

6. சார்வான சுகசன்னி வந்து தானால்
சத்த.... கிவைதிமாகில்
அறவான இரண்டு மத்தித்து கண்ணில் போட்டால்
அலறிவிடும் சுகசன்னி தோழம் போகும்

நார்வான வேதாளமுதல் பூதம் போகும்
....ளெல்லாம் அலறி யோடும்
பார்வான இந்தநூ லன்ப துக்குள்
பாடிவிட்டோம் காண்போர்க்குப் பகலா முற்றே. 52

7. தேவிசகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பட்ட நூல். புலத்தியரை விளித்துப் பாடியதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்த நூல் 36–ஆம் ஏட்டில் தொடங்குகிறது. இதனுடன் இராமதேவர் பூஜாவிதி, சிவயோகம் இருநூறு (D.2385), அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 150 (D.2387) எனும் நூல் கட்டுகளும் 1 ஆவது முதல் 35 ஆம் ஏடு வரையும் 45 ஆம் ஏடு முதல் இறுதிவரையும் உள்ளன. அகத்தியர் சௌமிய சாகரம் என்ற பெயரில் 1200 பாடல்களும், அவற்றிலிருந்து சுருக்கிய 50 பாடல்களும், மேலும் 150 பாடல்கள், 300 பாடல்கள் கொண்ட நூல்களும் பிறவும் உள்ளதாக அறிய முடிகின்றது. 'அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம்' என்றோ 'அகத்தியர் சௌமிய சாகரச் சூத்திரம்' என்றோ இவ்வகை நூல்கள் பெயர் பெற்றுள்ளன.

அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 150

I. 1. **312**. 2. அ. D. 2387. ஆ. T.D. 932. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 150. ஆ. Akattiyar caumiya cākara curukkam 150. இ. அகத்திய சுவாமியார் சவுமிய சாகரத்து சூஸ்த்திரம் நூத்து அன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 42 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனைஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 14 பாக்கள்.

ஆ. —.

III. 1. பலவகை மருந்துகளான செந்தூரம், மை, பற்பம், தயிலம் பற்றிக் கூறுவது, 2. மருத்துவம். 3. வரிசை எண் 311 போன்றது.

4. —.

5. அண்டமெனுங் குண்டலித்தாய் பாதம் போற்றி
அருள்பெருகும் கெசமுகவன் றாளே போற்றி
குண்டமெனு மாதியந்தம் குருவே போற்றி
கும்பமெனுஞ் செந்தமிழின் ....
கண்டமெனுங் கருக்குருவின் கமலம் போத்திக்
கமலவித ழாயிரத்தெண் பீடம் போற்றி
மண்டலங்கள் நிறைஞ்சுநின்ற வாலை மாது
சவுந்தரிய னுடை 1

6. வைத்திடவே புளிபோலா மதனைக் கொண்டு
வகையான பனங்கற்கண்டு இரண்டுபலம் வாங்கி
அத்துடனே அதைப் பொடித்துப் பொடியையதிற் சேர்த்து
அருள்பெறவே கிளறிநீ நாதவிந்து தானும்
முத்திடவே மூன்று ....
....
....
....

7. —.

8. மூலம். 9. பிழைகள் மலிந்தது. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த நூல்; புலத்தியருக்குக் கூறியதுபோல் அமைந்துள்ளது. சுருக்கம் என்பதற்குப் பதிலாகச் சூத்திரம் எனப் பெயர் பெறுகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பற்பம் - இரசாதி பாசாணம், சொர்ணாதி உலோகம் அல்லது உபரசத்தை உலோகம், களங்கு இவைகளுடன் மூலிகைச்சாறு, காரசாரம், செயநீர் அல்லது திராவகம் முதலானவைகளைக் கொண்டு அரைத்துச் சீலை செய்து புடத்திலிட்டாவது அல்லது வேறு வகையிலாவது வெண்மை யாக எடுக்கும் நீறு பற்பமாகும்(சாம்பசிவம் பிள்ளை).

அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 300

I 1. **313**. 2. அ. R. 199(a). ஆ. T.R. 183. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 300. ஆ. Akattiyar caumiya cākarac curukkam 300. இ. அகத்திய நாயனார் அருளிச் செய்த சவுமிய சாகரச் சுருக்கம் 300. 4. —. 5. —. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 50. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 100; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. பக்க எண்கள் 41, 42, 43 என்பன விடுபட்டுள்ளன. 16. முழுமை. 17. 301 பாடல்கள்.

ஆ. 1. 25 x 32 செ.மீ. 2. 113. 3. பக்கத்திற்கு 19 வரிகள். 4. சுமாராக உள்ளது. 5. 28.12.1953. 6. எஸ். விசுவனாத சாஸ்திரி. 7. —. 8. கி.பி. 1953-இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III 1. நம் உடம்பில் தோன்றும் நோய் குணமாகப் பலவகையான மருந்துகள், மந்திரங்கள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. நாகரசவங்க பற்பம், தாம்பூர பற்பம், செந்தூரம், வாலை பூசை, வசியம், வித்தைகள். புவனை பூசை, மந்திரத் தியானம், அமுர்த ரசங்கொள்ள மாங்கனி, மணிகெவுன குளிகை, கெந்தகத்தயிலம், கரியுப்புக்கட்டு, இலிங்கக்கட்டு, கல்லுப்புக் கட்டு, தங்கபற்பம், பாசாணக்கட்டு, சூதமணி செந்தூரம், நவலோகவேதை, அயக்காந்த உபரசச் செந்தூரம், வல்லாரைக் கற்பம், கடுக்காய்க் கற்பம், பவழவைப்பு, முத்துவைப்பு, பச்சைவைப்பு, வைரவைப்பு, சிவப்புவைப்பு, கஸ்தூரி வைப்பு மவுனமார்க்கம் போன்ற செய்திகளை இந்நூல் கூறுகிறது.

4. —.

5. ஒகரமொவ் வுலகே யாதி உவ்வுட நவ்வு மந்தம்
அகரமா முகார வட்ட மவ்வதே சிகார பீடம்
பகரவவ் வதுவே பீசம் பரஞ்சவ்வால் கிலியுண் டாகி
மகாரமாய் காரத் துள்ளே மஞ்செழுத் ததுவி தாகும்.

6. நைந்துநீசித் தர்கட்கும் மவுனி கட்கும்
நலமான சிவயோகி ஞானி கட்கும்
வித்தான வேதாந்தி அஞ்சு பேரும்
விவேகத்தால் இன்னூலைப் பணிவீர் முற்றே. 301

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பட்டுள்ளன. பிழைகள் மலிந்த நடை. ர/ற வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. துன்மதி வருடம் வைகாசி மாதம் 20–ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகத்திய நாயனார் அருளிச் செய்த சவுமிய சாகரத்து சூத்திரம் 300 எழுதி நிறைவேறியது.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் சவுமிய சாகரச் சுருக்கம். 300 என்ற இந்நூல் அகத்தியர் சவுமிய சாகரம் 1200 என்ற நூலிலிருந்து சில பகுதிகளை எடுத்துச் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அகத்தியர் சவுமிய சாகரச் சுருக்கம் 50, அகத்தியர் சவுமிய சாகரச் சுருக்கம் 150 என்ற நூல்களும் இதன் முன் பகுதியில் அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சுவடிக்கட்டில் உள்ள பிற நூல்கள்: b. திருமூறை நாயனார் வாதசூத்திரம் 300, c. கணக்கதிகாரம் உரையுடன், d. திருமூல நாயனார் நிகண்டு, e. புலிப்பாணி பலதிரட்டு 100, f. கொங்கண நாயனார் கடைக்காண்ட சூத்திரம், g. சுப்பிரமணியர் ஞான சூத்திரம் 100, h. அகத்தியர் ரசமணி சூத்திரம் 14, I. அகத்தியர் ஆறாதாரம் 8, j. நிதிநிட்சேப விபரம், k. சிவாக்கியார் நாடி பரீட்சை 33, l. அகத்தியர் ஆறாதாரம் 8, m நீலகண்டவாலை சூத்திரம் 50, n. அகத்தியர் ஞானகாவியம் 1000 ஆகியன.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200

I. 1. **314**. 2. அ. R. 5816. ஆ. T.R 2497. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200. ஆ. Akattiyar caumiya cākaram 1200. இ. அகத்தீசர் அருளிச்செய்த சவுமிய சாகரம்

1200. 4. —. 5. —. 6. சி. லிங்கக்கவுண்டன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 151. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 302; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

III. 1. மனிதன் பல்லாண்டு காலம் நோயின்றி வாழ்வதற்கான யோகம், ஞானம், மருத்துவம் போன்ற பல்வேறு செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. அகத்தியர் சௌமிய சாகரம் 1200 என்ற இந்நூல் முதலாவதாக மனோன்மணித்தாயை வணங்கி, சுகமான சௌமிய சாகரத்தைப் பாடுவதாகக் கூறுகிறது. மேலும் சீவாத்மா, பரமாத்மாவின் தத்துவங்கள், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, இரவிதியானம், குரு தியானம், சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆதியந்த விளக்கம். உலகம் படைத்த வரலாறு, யுகம் பதினெட்டும் அறிய, பிரணவ மகிமை, அகார, உகார, மகார, சிகார, வகார தீட்சைகள், பஞ்சகணதீட்சை, முப்புச்சுன்னம், அட்டகர்ம விபரம், அட்டகருமம், அட்டகணபதியின் மூலமந்திரம், அட்டாங்க யோகம், அறுவகை முத்திரை விபரம், மோகினி முத்திரை, திறாவினி முத்திரை, அறுவகைச் சரக்குகளைக் கட்டும் முறை, சத்தியுப்புத்தயிலம், நவகும்பபூசை, அம்மாவாசி விபரம், தாமிர பற்பம், கெந்தகத் தயிலம், செயநீர், வெள்ளி பற்பம், தங்க பற்பம், நாகம், வீரம், சாரம் கட்டும் முறைகள், சூதமணி செந்தூரம், நாகரச மெழுகு, செந்தூரம், யோகப் பெருமை, சின்மயத்தின் பெருமை, வல்லாரை, கடுக்காய் கற்பங்கள், நவகோணபூசை, பிராண வாயுவின் நிலை, சுவாசநிலை, பரியங்க, மவுனாதி, மந்திராதி, இராசாங்க யோக முறைகள், பூரண தெரிசனம் சித்திமூலம், கரிசாலை நெய், இலிங்க மெழுகு போன்ற பல்வேறு வகையான செய்திகளைக் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக.

5. சோதியெனு மனோன்மணியைத் தியானஞ் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியென்ற கணபதியும் வல்லபையுங் காப்பு
அயனான பிரமனொடு சரஸ்வதியுங் காப்பு
நீதியெனு மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்றிலங்கும் ருத்திரனும் ருத்திரியுங் காப்பு
ஓதியதோர் மயேஷ்பரனு மயேஷ்பரியுங் காப்பு
உறுதியுள்ள சதாசிவனு மனோன்மணியுங்
காப்பே. 1

6. முத்தான சாகரந்தான் மைந்தா மைந்தா
....
....
....
சுத்தான சுத்துதற்குச் சோதி யாகி
சோதிமய மானசிவ சூட்சந் தன்னைப்
பத்தான தசதீட்சை முத்தி பெற்றுப்
பரமபதத் தேசையிலே பதிப்பாய் முத்தே. 1201

7. சவுமிய சாகரம் முற்றும். குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. வடமொழி எழுத்துக்கள் கலந்து வருகின்றன. ர/ற, ழ/ள வேறுபாடில்லாது வருகின்றன. 10. அகத்தியர் பெயரால் பாடப்பட்டுள்ளது. இந்நூல் ஞானநெறிகளைப் பற்றி மிக விரிவாகப் பேசுகிறது. மோட்சம் அடைவதற்குச் சித்தர்கள் இயற்றிய நூல்களைக் கற்றுணர்ந்து தகுதிவாய்ந்த குருபிரானின் துணை பெற்று, அவர்கள் காட்டியருளும் ஞான நெறியை அடைய வேண்டும் என்று கூறுகிறது. 11. இராட்சத வருடம் ஆவணி மாதம் 14–ம் தேதி செவ்வாய்க் கிழமை 25 நாழிகைக்கு கோயமுத்தூரிலே யிருக்கும் ஒக்கிலியார் வீதியிலிருக்கும் சி. லிங்ககவுண்டன் எடு யெழுதி முடிந்தது முற்றும். சற்குரு பாதமே துணை. சிவமயம்.

IV. 1. R. 1249, R. 4387 2. சி.ம.மைஆ.நி. எண்கள் 418, 750(c), 919(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. கந்தசாமி முதலியார் (பதி.), அகத்தியர் சௌமிய சாகரம் 1200, சென்னை, 1935; எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் வாத சௌமியம் என்னும்

சௌமிய சாகரம் 1200, தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. அகத்தியர் சௌமிய சாகரம் என்பதில் சௌமியம் என்பதற்குச் சாந்தம், அமைதி, அழகு எனும் பொருளும், சாகரம் என்பதற்குக் கடல் என்ற பொருளும் கொள்ளலாம். எனவே மனிதன் கடல் போன்ற அமைதியுடன் சாந்தமாக அழகுடன் திகழ இந்நூல் உதவும் என்ற பொருளில் இந்நூற் பெயர் அமைந்திருக்கலாம். இந்நூலுடன் அகத்தியர் வாசி சூத்திரம் 10, அகத்தியர் கர்ம காண்டம் 36 முதலிய பல நூல்களும் உள்ளன.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200

I. 1. 315. 2. அ. R. 1249. ஆ. T.R. 948. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200. ஆ. Akattiyar caumiya cākaram 1200. இ. அகத்திய சுவாமியா ரருளிச் செய்த சௌமிய சாகரம் ஆயிரத்து இருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 219. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 438; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் சில பாடல்கள் இல்லை. 16. குறை. 17. 994 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனிதன் பல்லாண்டுகாலம் நோயின்றி வாழ்வதற்கான யோகம், ஞானம், மருத்துவம் போன்ற பலவகையான செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. வரிசை எண் 314 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்திய சுவாமியார் அருளிச் செய்த சௌமிய சாகரம் ஆயிரத்திருநூறு.

5. சோதியெனும் மனோன்மணியைத் தியானம் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியெனுங் கணபதியும் வல்லபையுங் காப்பு
அரசான பிரம்மனொடு சரஸ்வதியுங் காப்பு

நீதியெனும் மாலயனும் லட்சுமியுங் காப்பு
நின்றிலங்கும் ருத்திரனும் உருத்திரியுங் காப்பு
ஓதியதோர் மயேஸ்பரனும் மயேஸ்பரியுங் காப்பு
உறுதியுள்ள சதாசிவனும் மனோன்மணியுங்
காப்பே. 1

6. நலமான காயாதி கற்பந்தான் னாதவிந்து
சிவவித்து நன்றா கத்தான் சொன்னோம்
வளமான அயங்கோலத் தயிலம் சொன்னோம்
மகத்தான பதினெண்பேர் வைப்பைச் சொன்னோம்
சலமான அப்புனிட பனிநீர் சொன்னோம்
சமத்தான தேசமதில் சிரிகள் சொன்னோம்
குலமான பூநீறு பூரமுற் தேசம்
கூறான வன்மை யெல்லாம் கூறினோமே. 994.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. வட மொழி எழுத்துக்கள் கலந்து வருகின்றன. ர/ற வேறுபாடில்லாது வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் கொள்கைகள் பேசப்படுவதன் மூலம் அக்கால மக்களின் ஞான மார்க்கம் தொடர்பான நிலைகளை அறிய முடிகிறது. 11. இல்லை.

IV. *1.* R.4837, R.5816. *2. சி.ம.மை.ஆ.நி. எண்கள்* 418, 750(c), 919(b). *3. இல்லை.*

V. *1. இல்லை. 2. வே. கந்தசாமி முதலியார் (பதி.), அகத்தியர் சௌமிய சாகரம் 1200, சென்னை, 1935; எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் வாத சவுமியம் என்னும் சவுமிய சாகரம் 1200, தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.*

VI. *1200 பாடல்களில் அமைந்த மருத்துவ நூல்கள் பல உள்ளன. அவை: 1. அகத்தியர் அமுதகலைஞானம் 1200, 2. அகத்தியர் ஆயுள் வேதம் 1200, 3. அகத்தியர் சாலத்திரட்டு 1200, 4. அகத்தியர் பரிபூரணம் 1200, 5. அகத்தியர் நாலு காண்ட வயித்திய காவியம் 1200 என்பன.*

அகத்தியர் சௌமிய சாகரம் 1200

I. *1.* ***316.*** *2.* அ. R. 4387. ஆ. T.R. 1947. இ. —. ஈ. —. *2. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200. ஆ.* Akattiyar caumiya cākaram

1200. இ. அகஸ்தியர் அருளிச்செய்த சவுமிய சாகரம் பாடல் 1200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 88. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 176; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதிப் பகுதி இல்லை. 16. குறை. 17. 470 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனிதன் பல்லாண்டு காலம் நோயின்றி வாழ்வதற்கான யோகம், ஞானம், மருத்துவம் போன்ற பலவகைச் செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. வரிசை எண் 314 போன்றது.

4. —.

5. சோதியெனு மனோன்மணியைத் தியானஞ் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
யாதியென்ற கணபதியு வல்லபையுங் காப்பு
அயனான பிரமனோடு சரஸ்பதியுங் காப்பு
நீதியெனு மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்றிலங்கும் ருத்திரனும் ருத்திரியுங் காப்பு
ஓதியதோர் மயேஸ்பரனும் மயேஸ்பரியுங் காப்பு
உறுதியுள்ள சதாசிவனும் மனோன்மணியுங்
காப்பே. 1

6. அடுத்துமிக வாழ்வதற்கு மைந்தா கேளு
ஆதியென்ற பூரணமாம் அண்டத் தேகி
விடுத்துமிக யதினாசத்தை வாங்கிக் கொண்டு
வேதாந்தச் சத்திசிவ பான மூட்டிக்
கடுத்துமிகப் போகாமல் கற்பூரஞ் சாத்திக்
களமில்லா ரவிதனிலே காய வைத்து
எடுத்துமிகப் பூரணமாய்க் கொண்டா யானால்
ஏகாந்த மானசிவ யோகி யாச்சே. 470

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பெற்றுள்ளன. வடசொற்கள் கலந்து வருகின்றன. ழ/ள வேறுபாடில்லை. பாரப்பா, கேளப்பா போன்ற முன்னிலை விளிகளும் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். அகாரதீட்சை, உகாரதீட்சை, மகாரதீட்சை, சிகாரதீட்சை, வகாரதீட்சை, போன்ற தீட்சை தத்துவங்களையும், மூலமந்திரம், அட்டாங்க யோகம் முதலியவற்றின் நிலைகளையும் கூறுவதிலிருந்து மருத்துவ நூல்களில் தத்துவங்களும் ஞானம் பெறுவதற்கான நிலைகளும் இடம் பெறுவதை அறிய முடிகிறது. 11. இல்லை.

IV. 1. R.1294, R.5816. 2. சி.மா.மை.ஆ.நி. எண்கள் 418, 750(c), 919(b) 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. கந்தசாமி முதலியார் (பதி.), அகத்தியர் சௌமிய சாகரம் 1200, சென்னை, 1935; எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), அகத்தியர் வாத சவுமியம் என்னும் சவுமிய சாகரம் 1200, தாமரை நூலகம், சென்னை, 1993.

VI. இந்நூல் ஆறாதாரங்களைப் பற்றியும் கூறுகின்றது. மூலாதாரம் – இது பிறப்புறுப்புக்கும் மலவாய்க்கும் இடையில் உள்ள நான்கிலைத் தாமரை போலிருக்கும் சக்கரமாகும். சுவாதிட்டானம் – மூலாதாரத்துக்கும் கொப்பூழ்க்கும் இடையில் உள்ள தூரம். மணிப்பூரகம் – நாபித்தானத்தைக் குறிக்கும். அநாகதம் – இதயக்கமலம், இது 12 இதழ்க் கமலம் என்றும், முக்கோண வடிவம் கொண்டது என்றும் கூறப்படுகிறது. விசுத்தி – அடிநாவிடம் ஆகும். ஆஞ்ஞை. இது மூன்றிதழ்க் கமலம் போன்றது. வட்டவடிவமான படிக நிறம் கொண்டது என்றும் சாம்பசிவம்பிள்ளை அகராதி கூறுகிறது.

அகத்தியர் ஞானம் 2

I. 1. **317.** 2. அ. R. 254(b). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 2. ஆ. Akattiyar ñāṉam 2. இ. அகத்திய னாயனாரருளிச் செய்த ஞானம் ரெண்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9.—. 10. —.

II. அ. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இருபக்கங்களிலும்

எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 2 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் ஞானம் இரண்டு என்ற இந்நூல் சூட்சுமத்தின் மகிமைகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. சூட்சுமம் என்பது நுட்பமான அறிவு ஆகும். அந்த அறிவு சுருதிவெளிக்கெட்டாத பராபரனின் இடத்தில் உள்ளது. அப்பராபரன் மேரு மலையின் உச்சியில் உள்ள பரவெளியில் சுடரொளியாய் இருக்கின்றான். அவனிடம் செல்ல வேண்டும். அப்போதுதான் அந்த அகாரமான சிவன் நமக்குக் கிடைப்பான் என்று இந்நூல் கூறுகிறது.

4. —.

5. சொல்லுகிறேன் சூட்சுமத்தின் மகிமை கேளு
சுருதிவெளிக் கெட்டாத சூட்ச மப்பா
வெல்லுலையோ சொல்லுதற்குப் பிள்ளாய் பிள்ளாய்
வேதாந்தப் பரையுமறைக் குள்ளே நின்றாய்
அல்லுபக லத்தமக மேருநுனி யடியில்
ஆதித்தன் சுடரொளியி லுதித்த பரவெளியில்
நில்லுமயிர்ப் பாலம்நெருப் பாற்றுக் குள்ளே
நேராக அகாரநடுக் கொம்பு தானே. 1

6. கொம்பூனி சுழிமுனைமேல் வாழைத் தார்போல்
குவிந்தமுனை முக்கோணம் யிருப்பார் தன்னில்
சம்புஅரன் பதந்தூக்கி நின்றபர வெளியில்
சாற்றினேன் அறிந்திடுவாய் முன்னே தானே
இன்பமெனுஞ் சுடரிற்கு யிறையளவு காதம்
இருத்தியுயி ரூனியிடவு மெங்கன்பெரு மானும்
அம்பெனவும் சுடரொளியாய் நின்ற போது
அரகரா வெனமுழங்கும் நடனந் தானே. 2

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளது. பேச்சுமொழிச் சொற்களும் கலந்து வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. ஞானம் என்பதற்குச் சிவனைச் சகளமும் நிட்களமுங் கடந்த திருமேனியுடையராகக் கேட்டல் முதலிய ஞான முறைப்படி அறிவால் வழிபடுகை என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி கூறுகிறது.

அகத்தியர் ஞானம் 3

I. **1. 318.** 2. அ.R. 280(p)ஆ. T.R. 263. 3. அ. அகத்தியர் ஞானம் 3. ஆ. Akattiyar ñāṟam 3. இ. அகஷ்தியார் ஞானம் மூன்று. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 24 x செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் ஞானம் மூன்று என்ற இந்நூல் நம் உடம்பின் ஆறாதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறின் செயல்பாடுகளையும், ஞானம் பெற விரும்புவோர் மூலாதாரத்திலிருந்து எழுப்பப்படும் உயிர்க்காற்றை மூலாதாரத்திற்கும் கொப்பூழ்க்கும் இடையில் கொண்டுவந்து நிறுத்திப் பின்பு முறையான பயிற்சியின் மூலம் சுழிமுனைக்குக் கொண்டுவந்து, பிங்கலை இடகலை நாசித்துவாரத்தின் மூலம் காற்றை உள்ளிழுத்து வெளிவிட வேண்டும் என்றும் அப்போதுதான் பூரணமான ஞானம் பெற வழி கிடைக்கும் என்று இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் ஞானம் மூன்று.

5. அண்ணாகு உண்ணாக்குணம் பத்த வேதான்
அகாரமுடன் பதினாறு ..ரிதிறுக்குள் ளாகும்
விண்ணாடிப் பாயுமங்கே கால மேலோர்
விழிரெண்டு நடுனிறுத்தி மேவிப் பாரு
கண்ணாடி நீங்குமப்போ தமாண... மேல்
கால்மாறி யங்குமங்கே கும்பி நேசி
பண்ணாரும் ஆறுவரைக் கேறும் வாசி
பளிச்சென்று கோடிரவி காந்தி யாமே. 1

6. ராசியிடை பின்கலையாய்ச் சுழினை யாகி
நடுவீதி போக்குவாத தாகி நிற்கும்
வாசிதனை மேலெழும்பி சுழினை மீதில்
மனங்குளிர நிறுத்திமகிழ் வாசி யூத
பாசிமல திரோதாயி மயக்கம் னீங்கிப்
பரிசுத்த மெய்ஞான பரம னாகி
காசிவெளி தனிலணங் கண்ணில் கண்டு
களித்திடுவாய் தன்மனமே கருதிப்பாரே. 3

7. கடவுள் துணையாகவும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3 இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நமது உடம்பில் உயிர் இருக்கவும், நினை பெறவும் காரணமாக உள்ள ஆத்மாவிற்கு இது தொடர்பான அனேக ஆதரவுகளுண்டு. அவைகளாவன: பஞ்சபூதங்கள், ஆறாதார நிலைகள், மூன்று நாடிகள், முக்குணங்கள் இவைகளாலான 96 தத்துவங்கள் என்று சாம்பசிவ பிள்ளை அகராதியில் கூறப்படுகிறது.

அகத்தியர் ஞானம் 4

I. 1.319. 2. அ. R. 254(c). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 4. ஆ. Akattiyar ñāṉam 4. இ. அகத்தியனாய னாரருளிச் செய்த ஞானம் னாலு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூர., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. 8. 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 4 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் ஞானம் நான்கு என்ற இந்நூலில் ஒரெழுத்து மந்திரம், எட்டெழுத்து மந்திரம், குளிகை, வாதம், மன்னார் கோடி, இந்திரர் கோடி, அண்டங் கோடி, பரகெதி குணங்கோடி போன்ற செய்திகள் கூறப்படுகின்றன. ஓம் என்பது பிரணவ மந்திரம் என்றும் அது நங், மங், சிங், வங், யங் (நமசிவய) என்று விரிவடையும் என்றும் இந்நூல் கூறுகிறது. அண்டத்தில் குளிகை செய்வது என்பது சித்தர்கள் ஆகாய வீதியில் பறப்பதற்காக உபயோகிக்கும் சாரணை தீர்த்த இரசக்குளிகை ஆகும். இதைச் செய்வதற்கு உபரசம் காரசாரம், பாசாணம், நவலோகம், நவரத்தினம் ஒவ்வொன்றைக் கொண்டும் அதன் சக்திக்குத் தக்கபடி அனேக ஆயிரமைல்கள் வரை உலா வரலாம் என்றும் கூறுகிறது.

4.

5. தேவியெனும் பூரணியே மனதில் தோன்றி
செனமித்தார் மனுஷரெல்லாம் சீவாத் மாவாய்
காவியமாய் அஞ்சுபஞ்ச கர்த்தா னாமம்
கருத்தறியா மூடர்க்கு அறிவிப் பேன்னான்
தாவித்தா ரெனக்குருவுஞ் சொல்லா ரப்பா
தாட்சியில்லை சொல்லுகிறேன் சிவத்தின் கூறு
மேவிப்பார் ஓம்நங்மங்சிங் வங்யங் கென்று
மெய்யா சிவயநம அங்கென்று பாரே. 1

6. கண்டறி ஞானந் தன்னைக் கருவுடன் கண்டா யானால்
அண்டத்தில் குளிகை தேறு அதில்வாதம் காண லாகும்
எண்டிசை யுலகந் தன்னை எளிதினில் காண லாகும்
சண்டருக் குரைக்க வேண்டாம் சாயுச்சிய ஞான முற்றே. 4

7. —.

8. மூலம். 9. பேச்சுமொழிச் சொற்கள் கலந்துள்ளன. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மனிதனுக்கு இயல்பாகவே இருக்கும் பூரண சக்தி மாயையினால் மறைக்கப்பட்டு, சரியான பாதையில் செல்ல வொட்டாமல் தடுக்கும். அப்படித் தடுக்காதபடி செய்து விட்டால், இயற்கை சக்தியானது தனது பூரண வலிவைக் காட்டும் என்று சாம்பசிவம் பிள்ளை அகராதி 'ஞானம்' என்ற பகுதியில் கூறுகிறது.

அகத்தியர் ஞானம் 16

I. 1. **320**. 2. அ. R. 8985. ஆ. T.R. 3246. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 16. ஆ. Akattiyar ñāṇam 16. இ. அகஸ்தியர் தீஷ்சை பதினாறு. 4. —. 5. —. 6. ஆனந்த மாகாளியப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 7; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான மார்க்கத்தைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. அகத்தியர் தீட்சை பதினாறு என்ற இந்நூல் முதலாவதாகக் கணபதியைத் தொழுது ஞான யோக முறைகளைக் கூறுவதாக அமைகிறது. யோகத்துள் மவுன யோகமே சிறப்புடையது. மூக்கின் வழியாக முறையற்று மூச்சினை இழுத்து அவதியுற்று இதனால் கண் தெறித்துப் போனவரும், கபாலம் வெடித்து மாண்டோரும் உண்டேயொழிய யோக நெறியில் ஞானம் அடையவில்லை என்கிறார் ஆசிரியர். இந்நூலில் பத்துவகைத் தீட்சைகள், கண்

மூடித் தியானித்தல், இரசவாத முறைகள் செய்தல், மூப்பு என்கிற நிலைகளில் அலைந்த பலர் அவற்றை யோகம் எனக் கொண்டு ஞானம் அடைய முயற்சி செய்து தோல்வி அடைந்தது என்பவை கூறப்பெறுகின்றன. உண்மையில் இராசயோகத்தில் நின்றவரே இறைவனை அடைய தகுதியுடையவர் ஆவார் என்றும் கூறுகின்றது. மேலும் 'ஆயிரத்தில் ஞானமதை யடக்கிச் சொன்னேன்' என்ற பாடல் அடியின் மூலம் 'அகத்தியர் ஞானம் 1000' என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் அமைந்திருக்கலாம்.

4. அகஸ்தியர் தீஷ்சை பதினாறு.

5. ஆதிமறை சாஸ்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியும் நடுவாகிப் பொருள்மூன் றாகி
வேதியனும் மால்சிவனும் நின்ற வாறும்
வேதமுட னாகமங்கள் பிறந்த வாறும்
சாதிபல தொழில்முறைக ளான வாறும்
தன்னுள்ளே அஷ்டாங்கஞ் செய்யு மாறும்
ஓதியனூல் அவரவர்கள் செய்யு மாறும்
ஓம்மகா ராசிகண பதிகாப் பாமே. 1

6. காணப்பா காவியத்துக் காக யிந்தக்
கருப்பொருளைப் பதினாறைக் கருதிச் சொன்னேன்
வீணப்பா யென்றுசொல்லி யிந்த னூலை
வெளிவிட்டா லுங்களுக்கு யென்மே லாணை
ஆணையப்பா முக்காலு மாணை யாணை
அறிந்துணர்ந்த ஞானிகளை அழைத்துச் சேரு
பாரப்பா உண்டிருந்தால் பதத்தைப் போத்திப்
பதினாறுஞ் சிவசூஸ்திர பொருள்தான் முற்றே. 16

7. ஹரிஓம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ர/ற வேறுபாடில்லாது வருகின்றது. பாடபேதங்கள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட இந்நூலுக்கு அகத்தியர் ஞானம் பதினாறு, அகத்தியர் தீட்சை பதினாறு, தெட்சணா மூர்த்தி ஞானம் என்ற பெயர்களும் உள்ளன. 11. ஆனந்த மாகாளியப்பன் னெட்டெழுத்து.

IV. 1. R. 3633(b). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 408(a), 1008, 357(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகஸ்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. மனித உடலமைப்பில் எந்ததெந்தப் பகுதிகளில் காற்று தங்கும் என்பதையும், அபான வாயுவின் தன்மைகளையும் இந்நூல் சிறப்பாகக் கூறுகிறது. ஞானம் பெறுவதற்கான பலவகை யோகங்களுள் இராசயோகம் சிறப்பாகப் பேசப்படுகின்றது. இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள்: நெஞ்சறி விளக்கம் (R. 8974), கருவூரார் மறைப்பு விதி (R. 8975), தண்டகம் (R. 8976), அமிர்த தரிசனம் (R.8977), இராமதேவர் பட்சிணி (R. 8978), அஷ்டாங்க பாலை (R. 8979), நாதாந்த விளக்கம் (R. 8980), அகத்தியர் தண்டகம் (R. 8981), அகத்தியர் தண்டகம் (R. 8982), வாதத் திறவுகோல் (R. 8983), அகத்தியர் சூத்திரம் (R. 8984), திருமூலர் சுவாமி சுருக்கம் (R. 8986), ஊர்வசி ரத்தினச்சுருக்கம்(R. 8987), சுந்தரானந்தர்ஞானம்(R. 8988), கயிலாசச் சட்டைமுனி கற்பவிதி (R. 8990), உரோமரிஷி சூத்திரம் (R. 8991) ஆகியன.

அகத்தியர் தண்டகம் 100

I. 1. **321**. 2. அ.R. 8981. ஆ. T.R. 3246. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தண்டகம் **100**. ஆ. Akattiyar tantakam 100. இ. அகஸ்திய மாமுனி அருளிச்செய்த சூஸ்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. **17**. 5. 19 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. **34**; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. **100** பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகரும மாந்திரீகங்களைப் பற்றியும் இரசவாத வித்தைகளைப் பற்றியும் கூறும் நூல். 2. மாந்திரீகம் மற்றும் இரசவாதம். 3. அட்டகரும மாந்திரீக முறைகளான வசியம்,

மோகனம், தம்பனம், உச்சாடணம், ஆகர்சணம், வித்து வேசணம், பேதனம், மாரணம் பற்றியும், திலதம் எனப்படும் பொட்டு பற்றியும், அஞ்சன மை செய்யும் முறை பற்றியும் இந்நூல் கூறுகிறது. மேலும் யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் பற்றியும், துரிசி வாங்கும் முறை, திலதம் போடும் முறை, பெண்வசியம், ஆண்வசியம் போன்ற முறைகள், உருமாற்றம் செய்யும் முறை ஆகியனவும் கூறப்படுகின்றன. குட்ட நோய்க்கு மருந்து, செத்தவனைப் பிழைக்கவைக்க வித்தை, வெள்ளெருக்கு மூலம் தண்டக்கரு எடுக்கும் முறை போன்ற செய்திகளும் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. —.

5. வானைத் தாவிய பொதிகை
மகத்தான ரிஷியுடைய வாக்கின் நேர்மை
பானைத் தாவிய பூசை பரிவான
சிவயோகப் பண்போர் கேளீர்
மீனைத் தாவியராசி விளங்கிநின்ற
கன்னிமுதல் வில்லு மேழம்
சேனைத் தாவிய துலாத்தின்
சென்மராசிக் கருவி செப்பு றேனே. 1

6. ஆனோஞ் சிவனை அடிதொழு தேத்தி
மானே பார்பதி மக்களு மானோம்
வீணா யிருந்து விஞ்சுவர் கண்டாய்
நானோ தண்டகம் னாடுமுறை முத்தே. 100

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் பயின்றுவருகின்றன. (கேள் – கேளு. பூஜை – பூசை). பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். பலவகை விருத்தங்களாலான நூல். 11. ஆனந்த மாகாளியப்பன் நெட்டெழுத்து.

IV. 1. R. 164(a), R. 255(c), R. 278(a), R. 4206, D. 1882, D. 1883, D. 2310. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420(i), 460(c), 751(v), 178(f), 1351(o), 1088(a), 1112(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் தண்டகம் 100 என்ற இந்நூல்போல் அகத்தியர் தண்டக சூத்திரம் 25, அகத்தியர் தண்டக பட்சணி 123, கொங்கணர் தண்டக பட்சணி 100, திருமூலர் திருத்தண்டகம் 100, இராமதேவர் தண்டகம் 110 போன்ற நூல்கள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சுவடிகளாக உள்ளன.

அகத்தியர் தருக்க சாத்திரம்

I. 1. **322**. 2. அ. R.168(k). ஆ. T.R. 152. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தருக்க சாத்திரம். ஆ. Akattiyar tarukka cāttiram. இ. அகஸ்தியர் சூஸ்திரம் இருபது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 30 x 4 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 20 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பதினாறு வகைப்பிணிகளுக்கான மருந்துகளைக் கடவுளர், பஞ்சபூதங்கள் மேல் தருக்க முறையில் கூறும் நூல். 2. தத்துவம். 3. அகத்தியர் தருக்க சாத்திரம் என்ற இந்நூல் முதலாவதாக ஏடு எழுதும் முறைக்குப் பயன்படும் கருவிகளைக் கூறுகிறது. மேலும் குரு மனம் நோகாது வித்தைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது. இந்நூல் பதினாறு வகையான பிணிகளை நீக்க எழுதப்பட்டதாகவும் கூறுகிறது. அடுத்து வரும் பாடல்கள் எல்லாம் தருக்க முறையில் முதல் பாடலுக்குப் பதில் அடுத்த பாடலாக எழுதப்பட்டுள்ளன. ஓலை எழுதத் தொடங்கும் முன் ஞானமூர்த்தி, சக்தி, இவர்களைத் தொழுது எழுத வேண்டும் என்று கூறுகிறது. குளிர்ந்திருக்கும் அம்மிக்குப் பேர்தான் ஏது என்ற முன்பாடலுக்கு விளக்கமாகப் பின்வரும் பாடலில் குளிர்ந்திருக்கும் அம்மியது சத்தியாகும் என்கிறது.

'குணமான குளவியதின் பேர்தான் ஏது'
'குணமான குளவியது லிங்க மாச்சு'

'தெளிர்ந்த பிடி விறற்றனக்குப் பேர்தானேது'
'தெளிர்ந்தரைக்கும் விரலைந்தும் பஞ்சபூதந்'
'தேகமுரு மருந்துபத்துந் தெளிந்து சொல்லு'
'தேகமுரு மருந்தெல்லாம் சிவமே யாகும்.'

இப்படி முதல் பாடலுக்கு அடுத்த பாடல் பதில்களாகவே பாடல்கள் முழுவதும் வருகின்றன. இவை அனைத்தும் மருந்துகளின் பெயர்களுக்குக் கடவுளர்களும், பஞ்ச பூதங்களும் பதிலாக வருகின்றன. இந்நூல் வட நூலான தருக்க சங்கிரகம் என்ற நூலின் தழுவலாக இருக்கலாம்.

4. அகஸ்தியர் சாஸ்திரம் இருபது.

5. சீர்பொருந்துஞ் சாஸ்திரமு மருந்து வைப்பும்
தெய்வீக மானதொரு பொருளுஞ் சொல்லி
யோர்பொருந்து மெழுத்தாணி யம்மி யோலை
யியல்பான கருவிமுதல் உடல்சாஸ் திரமும்
கூர்பொருந்தும் மருந்துப்பும் சிமிழ்சாஸ் திரங்கள்
குருவாகு மவருடனே யெதிர்க்க வேண்டாந்
தார்பொருந்துஞ் சாஸ்திரங்கள் சொல்லி விட்டால்
சண்டாளர் பையுடனே வாங்கு வாங்கே. 1

6. மரத்தினால் கடைந்தெடுத்த பொறிகள் மூலம்
வயிரமூங்கில் னானென்றால் மாவி னேர்மை
திரத்துனால் கடைந்தசிமி ளறவின் கொம்பு
திறமான மேதிகுல கமல பீடம்
பரத்தினா லெழுந்தபசு நந்தி நந்தி
பாங்கான திறமென்றால் வான மாகுங்
கரத்தினால் கரியினிட கொம்பின் செப்பு
செய்கரிய முகவனிட மூலந் தானே. 20

7. முற்றும்.

8. இந்நூல் தர்க்க சங்கிரகம் என்ற வடமொழி நூலைத் தழுவியதாக இருக்கலாம். 9. பாடல்கள் கேள்வி, பதில் நிலையில் அமைந்துள்ளன. ர/ற வேறுபாடில்லாது வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். ஏடு, எழுத்தாணி, ஓலை போன்ற சொல்லாட்சிகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. தத்துவங்கள் பேசப்படும் ஒரு சிறந்த

நூலாகும். 11. சனி 18-ம் தேதி சுபயோக.... ராசிதன்னில் 303 ரிஜிமின்ட் செமட்டின் பட்டாளம் 3 கம்பனி சிப்பாயி வீரப்பனுடைய குமாரன் சந்தரு...

IV. 1. R. 1085, R. 2269, R. 9000. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல்பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. தருக்க சாஸ்திரம் என்பதில் தருக்கம் என்பதற்கு நியாயவாதம் என்பது பொருளாகும். சாஸ்திரம் என்பது நூலாகும். எனவே நியாயவாதம் பேசக்கூடிய நூல் என்பது பொருளாகிறது.

அகத்தியர் தருக்க சாத்திரம்

I. 1. 323. 2. அ. R. 1805. ஆ. T.R.1039. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தருக்க சாத்திரம். ஆ. Akattiyar tarukka cāttiram. இ. அகஷ்த்தியர் தர்க்க சாஷ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 34 x 5 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6. இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 17 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 33 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் ஓடும் வாதம், பித்தம், சிலேத்துமம் எனும் நாடிகளின் இயல்பும் செயலும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. மனித உடம்பில் ஓடும் வாதம், பித்தம், சிலேத்துமம் எனும் நாடிகளை, மணிக்கட்டின் பகுதியில், மூன்று விரல்களால் ஒரே மாதிரி அழுத்தி நாடிகளில் விரல்களைச் செலுத்திய பின்னர், தளர்த்தியும், மீண்டும் அழுத்தியும் பார்த்தால் நாடிகளின் நிதானம் தெரியவரும். ஆள்காட்டி விரல் வாதநாடி மேலும், நடுவிரல் பித்தநாடி மேலும், மோதிரவிரல் சிலேத்தும நாடி மேலும் படுமாறு வைத்துக் கொள்ள வேண்டும். சுண்டு விரலும், பெருவிரலும் பூதநாடிகளை ஆராய்வன. ஆண்களின் வாதநாடிகள் மயில், அன்னம், கோழி இவற்றின் நடையை ஒத்தும், பித்தநாடிகள் ஆமை, அட்டைகளின் நகரலை ஒத்தும், சிலேத்துமநாடி பாம்பு, தவளைகள் ஆகியவற்றின் தாவலை ஒத்தும் அமையும். பெண்களின் வாதநாடிகள் பாம்பு போன்றும், பித்தநாடிகள் தவளை போன்றும், சிலேத்தும நாடிகள் அன்னம் போன்றும் நடையையுடையன. இந்த நாடிகளின் வேறுபட்ட இயல்புகளால் நோய்களின் இயல்புகளை அறியலாம். வாதநாடிகளின் வேறுபட்ட இயல்பால் வயிற்று நோய்களின் இயல்பும், பித்த நாடிகளின் இயல்பால் இருதய ஒட்டத்தையும், சிலேத்தும நாடிகளின் இயல்பால் தலை நோவுகளையும் தெரிந்து கொள்ளலாம். வாதநாடிகளுக்குச் சிவப்பு, கறுப்பு நிறங்களும், பித்த நாடிகளுக்கு மஞ்சள், பச்சை நிறங்களும், சிலேத்தும நாடிகளுக்கு வெள்ளை நிறமும் உள்ளதாகத் தெரிகிறது. பத்து நாடிகளில் வாதத்தில் ஒடுங்குவன: இடகலை, பிங்கலை, சுழினை; பித்தத்தில் ஒடுங்குவன: காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன் என்பன சிலேத்துமத்தில் ஒடுங்குவன: குகுதன், சங்கினி, வயிரவன் என்பன. இடகலை நாடி இடது நாசி வழியாகவும், பிங்கலை வலது நாசி வழியாகவும் ஓடும் மூச்சுக் காற்றால் அமைவன. இவ்விரண்டும் சுழினையில் ஒருங்கிணையும்

இயல்புடையன. வாதநாடியிலுள்ள வாயுதான் உடம்பின் அசைவுக்குக் காரணமானது. வெப்பம் உடம்பில் இருப்பதற்கும் அதுவே காரணமாகின்றது. உணவு செமித்தல், மலக்கட்டு போன்றவற்றையும் வாயுவே கட்டுப்படுத்துகிறது. பித்த நாடிகள் ஏற்ற, இறக்க, தாக, மோகத்தை உண்டாக்குவன. சிலேத்தும நாடிகள் கபம், காய்ச்சல், தளர்ச்சி இவற்றுடன் தொடர்புடையன.

4. ஹரிஓம். அகஸ்திய னாயன் வயித்திய குணம் நாடி நிதானம்.

5. கரிமுக னடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்தில்
பிடித்து னடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாதம்
முத்திரு விரலோடில் பித்தம்
திருவிரல் மூன்றி லோடில்
சேத்தும நாடி யாமே. 1

6. விரைந்திடும் குளிர்ந்து மேனி
வெதும்புடல் நடுக்க முற்றே
விரைந்திடும் சரீரம் வத்தி
கதுமுரி வாயூறு மீறும்
யிரைந்திடும் வனகு லாதி
யெதமா யுணவு செல்லா
அரைந்திடும் சருவ பித்தம்
செய்குண மறையுங் காலே. 530

7. பித்தம் நாற்பது வகை குணம் முற்றும். பதினெண் பேர்கள் துணை. ஸ்ரீஸ்ரீ மச்சகந்திரனே தெய்வம்.

8. மூலம். 9. பாடபேதங்கள் காணப்படுகின்றன. எளிய நடை. 'ற்றி' என்பது 'த்தி' என வருகிறது (எ.டு. வற்றி - வத்தி). 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. ஆயினும் பிற சித்தர்கள் பெயரிலும் இதைப் போன்ற நாடி நூல்களும் பாடப் பெற்றுள்ளன. 11. ராமசாமி யேடு.

IV. 1. R. 149(I), 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 319, 319(a), 376(a), 469, 600(a), 903, 1040, 1040(n), 1382. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நாடிகள் உடம்பில் பல பாகங்களிலும் பின்னிப் பிணைந்துள்ளன. இவை மொத்தம் 72,000 எனக் கூறப் படுகின்றன. இவற்றுள் பத்து முக்கியமான நாடிகளுள் இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்பன முறையே வாத, பித்த, சிலேத்தும நாடிகளாக அமைந்து இரத்த ஓட்டத்தின் இயல்புகளையும் சுவாச நிலையையும் தெரிவிக்கும். வாதநாடி என்பது சுவாசத்துடன் தொடர்புடையது. இரத்தம் இருதயத்திலிருந்து செலுத்தப் பெறும்போது, நாடிகள் சுருங்கியும் விரிந்தும் கொடுக்கும். இதையே நாடி நிதானம் என்கின்றனர்.

அகத்தியர் நாடி நிதானம்

I. 1. **343**. 2. அ. R. 149(e). ஆ. T.R. 133. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நாடி நிதானம். ஆ. Akattiyar nāṭi nitāṉam. இ. அகஸ்தியர் நாடி நிதானம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 24; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. 66 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் ஓடும் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய நாடிகளின் ஓட்டத்தையும், செயலையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 342 போன்றது.

4. —.

5. கரிமுக னடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிரல் அங்கு லத்தில்
பிடித்துடன் நடுவே தொட்டால்

ஒருவிரல் ஓடில் வாதம்
உயர்நடு விரலில் பித்தந்
தருமணி விரலி லயிந்து
தானென வறிந்து சொல்லே. 1

6. ஓது நோயினால் மலசல விந்து வோடுமிநீர்
பேத மாயிவை நீரின் விட்ட மிழ்ந்திடப் பெறுங்
கீத வாயி கழு நீரது பலநிற மூறினும்
மாத மொன்றினில் மரணமென் றுரைத்தனர் வல்லோர்.
66

7. —.

8. மூலம். 9. பேச்சுமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பாட பேதங்கள் மிகுதி. ற/ர வேறுபாடு இல்லை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். நாடி நிதானம், நாடி சாத்திரம், நாடித்திரட்டு, நாடிநூல், நாதப் பரிட்சை, நாடி விபரம் எனப் பல பெயர்களில் இந்நூல் அழைக்கப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R.2533. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 319, 319(a), 376(a), 469, 600(a), 1040, 1040(n), 1382(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தசநாடிகளின் பெயர்கள் வருமாறு: 1. இடைகலை, 2. பிங்கலை, 3. சுழிமுனை, 4. காந்தாரி, 5. அத்தி, 6. சிகுவை, 7. அலம்புடை, 8. புருடன், 9. குகு, 10. சங்கினி. இவற்றுள் சுழிமுனை ஆறு ஆதாரங்களிலும் நிற்பது. இடைகலையும் பிங்கலையும் கத்திரியின் கால்வளைவுகள் போல் உடல் முழுவதும் சுற்றுவது. காந்தாரியும் குகுநாடியும் நாபியிலும், அத்தி நாடியும் சிகுவையும், கண்களிலும், அலம்புடை, புருடன் நாடிகள் காதுகளிலும், சங்கினி உபத்தத்திலும் நிற்பன.

அகத்தியர் நிகண்டு 116

I. 1. **344**. 2. அ. R. 167. ஆ. TR. 151. இ. R.No. 1042. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு 116. ஆ. Akattiyar nikaṇṭu 116. இ. அகஸ்த்தியர் நிகண்டு நூத்திப் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. நன்று. 4. 36. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. பிளைவுட். 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 62; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இறுதி இதழ் ஓரம் முறிந்துள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இரண்டாம் மூன்றாம் இதழ்களும் இறுதி இதழ்களும் இல்லை. 16. குறை. 17. 103 பாடல்கள்.

ஆ. 1. 26 x 23 செ.மீ. 2. 16 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 20 வரிகள். 4. நல்ல கையெழுத்து. 5. —. 6. —. 7. —. 8. —.

III. 1. இந்நூல் இரசவாதம் செய்வதற்குரிய மருந்துகளைச் செய்தல் பற்றிக் கூறுவது. 2. இரசவாதம். 3. இந்நூலில் முதலாவதாகப் பல்வேறு பற்பங்கள் செய்யும் முறைகள் கூறப்படுகின்றன. அவை அயபற்பம், செம்புப் பற்பம், வங்கபற்பம், கெந்தகப் பற்பம், அரிதார பற்பம், இரசமணிப் பற்பம் போன்றவையாகும். இவற்றைப் பலவிதப் பக்குவங்களில் நீற்றின பின் எடுக்கும் நிலைகள் இங்குக் கூறப்படுகின்றன. மேலும் வெடியுப்பு நீர், பூநீறு, பாசனக்கட்டு, நாகநீர்கட்டு போன்ற பல மருந்துகளைச் சுத்தி செய்யும் முறைகளும் கூறப்படுகின்றன. விசம் தீண்டினால் அதனைப் போக்குவதற்கான குளிகை முறைகளையும், முப்பு தயாரிப்பதற்கான இரவடியுப்பூநீர், செயநீர், பூநீறு முதலானவை எடுக்கும் முறைகளையும், கரு நெல்லிச்சாற்றின் குணங்கள், சவுக்காரத்தை நீற்றும் முறைகள் போன்ற வற்றையும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் நிகண்டு நூற்றுப் பதினாறு.

5. ஆதியாம் பராபரமே குருவே அய்யா
அகண்டசரா சரமான நிர்க்குணமே அய்யா
பேதியா நின்மலமே சூட்ஷா சூஷ்சம்
பெரிதான கணபதியும் வல்லபை காப்பு
நீதியாநிகண் டொருநூத்திபத் தாறுக் குள்ளே
நிகழ்த்தினேன் கருக்கிடையும் குறுக்கிடையும்
நன்றாய்
வாதியார்தா னின்னூலை வகுத்திட் டேனே
..... நிகண்டுனூல் நன்றாய்ப் பாரே. 1

6. நான்சொன்ன ....
..க்குள்ளே நாதாக்கள் பாடி வைய்த்த
.... மறைப்பை யெல்லாம்
..... க்காள்பிலத்துப் போக யிளகாமல்
வான்சொன்ன வீடதுதான் ஆதி வீடு
வட்டமென்றி சித்தியல்லோ கொலுவிருந்த வீடு
சோன்னன்ன முக்கோணஞ் சுழினை வீர
மும்மென்று இருந்ததுதா னதீத வீடே. 103

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாரப்பா, கேளப்பா போன்ற முன்னிலையாரை அழைக்கும் சொற்கள் அமைந்துள்ளன. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். 10. பதினெண் சித்தர்கள் கூறிய மருந்துகளின் இயல்புகளைத்தான் இந்நூலில் தொகுத்துக் கூறினேன் என இந்நூலின் பெருமைகளை இதனைப் பாடியவர் கூறுகின்றார். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 305(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நிகண்டு என்பது ஒரு பொருளுக்குரிய பல சொற்களையும் ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களையும் பல்வேறு தலைப்புகளின் கீழ் செய்யுளில் தரும் அகராதி நூலாகும். ஆனால் இங்கே பல்வேறு பற்ப வகைகளையும் முப்பு முதலான இரசவாத முறைகளையும் தொகைப்படுத்திக் கூறுவது இந்நூலின் தனிச் சிறப்பாகும். பலவித பற்பங்கள் தயாரிக்கும் முறைகளைக் கூறுவதால் இந்நூல் அகத்தியர் நீற்றின பற்பவகைகள் என்ற பெயரிலும் அழைக்கப் பெறுகின்றது. இந்நூலின் தொடக்கப் பாடல் D.1877 என்ற எண்ணில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள 'அகத்தியர் சூத்திர நிகண்டு 16' என்ற நூலிலும் வருகிறது.

அகத்தியர் நிகண்டு

I. 1. **345**. 2. அ. R.2302(a). ஆ.T.R.1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 1. ஆ. Akattiyar nikaṇṭu kāṇṭam 1. இ. அகத்தீசுவரர் நிகண்டெண்ணூறில் முதற் காண்டம்.

4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28, போக் சாலை,மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 20. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 39; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 133 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் தொடர்பான மூலிகைகளும் அவற்றால் உருவாகும் மருந்துகளும் இந்நூலில் கூறப்பெறுகின்றன. 2. இரசவாதம். 3. இந்நூல் இரசவாதம் தொடர்பான மூலிகைகளின் பெயர்களையும், அவற்றால் செய்யப்பெறும் மருந்துகளின் இயல்புகளையும் ஆறு காண்டங்களில் கூறி, ஏழாவதாக இலட்சணகாண்டம் என்ற ஒரு நூலைத் தொடுகுறிபோல் கொண்டுள்ளது. 1 முதல் 148 இதழ்களில் இந்நூல்கள் உள்ளன. இங்கு அமைந்துள்ள முதற் காண்டம் செயநீர், மெழுகுவகைகள், முப்பு வகைகள் என்பனவற்றைக் கூறுகிறது. முதலில் உள்ள காப்புப் பாடலில் சிவன், உமை, அமரர், கணேசன், முருகன், வீர பயிரவர், நந்தி, மறையவர் போன்றோரைத் தொழுது நூல் தொடங்கப் பெறுகிறது. மூலிகைகளின் பரிபாசைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் மருத்துவம் செய்வோருக்கும், மருந்து முறைகளைத் தெரிந்து கொள்வோருக்கும் மிகவும் பயன்படுவதாகும்.

4. அகத்தீஸ்பரசுவாமி அருளிச் செய்த
காவியநிகண்டெண்ணூறில் முதற் காண்ட மறியவும்.

5. சீரான சிவனுமையாள் பாதம் போத்தி
செங்கையில் மழுவேந்துந் தேவர் போத்தி
காரான கணபதியும் கந்தன் போத்தி
கனவீர பயிரவத்தின் கமலம் போத்தி
வாரான நந்திமாமறை யோர்கள் போத்தி
மறைநாலு காண்டத்தின் வேதம் போத்தி
ஆரான தருமந்திரிய அசுவினியே போத்தி
அகண்டசரா சரஞ்சூழ்ந்த அம்பாள் காப்பே. 1

6. பாரும்பல கலையறிவுயின் னூலில் பாரும்
பரிபாசை மெய்ஞானம் பரகெதியைப் பாரு
ஆருமது வறிந்திடினும் மூலமது யேது
ஆரணியி லொருவர்பர ஞானி யாவார்
தேருமன புத்தியறிவா லேதெளி வாகும்
திருபுவன னாதவொளி வாழ்பதையைக் காண்பாய்
கோருமுதல் காண்டமிது குறைவற் றாய்ந்து
குருஞான பரகெதியில் தெளிந்துவாழ் முத்தே. 133

7. காவிய நிகண்டில் முதல் காண்டம் எழுதி முகிந்தது முற்றும்.

8. மூலம். *9.* பேச்சுவழக்குச் சொற்கள் பயின்றுள்ளன; அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. *10.* அகத்தியர் பெயரில் அமைந்த நூல். எல்லாக் காண்டங்களும் சேர்த்து ஒரே நூலாகவே கொள்ளப்பட்டுள்ளன. அகத்தியர் ஏமதத்துவம் என்றும் இந்நூல் பெயர் பெறும். *11.* இல்லை.

IV. *1.* R. 4118. *2.* சி.ம.மை.ஆ.நி.எண்கள் 302(v), 417(d). *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* நாராயண முதலியார் (பதி.), 'ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு *800*', —, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, *1894*. *3.* இல்லை.

VI. இந்நூல் அமைந்துள்ள சுவடிக்கட்டில்,

1. கொங்கணர் முதற்காண்டம் (R.2303) *(149* முதல் *154* இதழ்கள்*)*
2. கொங்கணர் நடுக்காண்டம் (R.2304) *(155* முதல் *162* இதழ்கள்*)*
3. கொங்கணர் முக்காண்டம் (R.2305) *(163* முதல் *165* இதழ்கள்*)*
4. கொங்கணர் கற்பம் (R.2306) *(166* முதல் *169* இதழ்கள்*)*
5. கொங்கணர் *43* முக்கோண பூஜாவிதி (R.2307) *(170* முதல் *183* இதழ்கள்*)*

என்ற நூல்களும் உள்ளன. R.4118 அகத்தியர் நிகண்டு *800* என்ற மாற்றுச் சுவடியில், முதற் காண்டம் *133*, *2*வது காண்டம்

134, 3வது காண்டம் *127*, 4வது காண்டம் *131*, 5வது காண்டம் *102*, 6வது காண்டம் *162*, 7வது காண்டம் *133*, 8வது காண்டம் *133* என்ற அமைப்பில் பாடல்கள் உள்ளன. இந்நூல் தட்சிணாமூர்த்தி நிகண்டு 800 என்றும் பெயர் பெறும்.

அகத்தியர் நிகண்டு

I. *1.* **346.** 2. அ. R. 2302(b). ஆ. T.R. 1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 2. ஆ. Akattiyar nikaṇṭu kāṇṭam 2. இ. காவிய நிகண்டில் இரண்டாங் காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28, போக் சாலை, மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லை. 4. 22. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறுசிதைவு. 12. 43; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 134 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்கான மூலிகைகளின் பெயர்களைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. இந்நூலில் இரசவாதத்திற்குரிய மூலிகைகளின் பெயர்கள் பரிபாசையில் கூறப்பட்டுள்ளன. வாதகாண்டம் எனப் பெயர் பெறுவதால், இரசவாதத்திற்கான செய்திகளும் இந்நூலில் பேசப்படுகின்றன.

4. காவியனிகண்டி லிரண்டாவது வாதகாண்டம்.

5. பரமகுரு பூரணத்தி னடி பாதம்
பணிந்துஅவர் கமலபாதம் பண்பாய்ப் போத்தி
பரமகுரு பசுபதியின் பாதம் கண்டு
பரப்பிரமம் சுடரொளியின் ரவியே போத்தி
பரமகுரு மர்மசர சுபதியின் பாதம்
பகலிரவா யவர்கமல பாதமே போத்தி
பரமகுரு ஆதியந்த மெங்கு மேலாம்
பாதாள குண்டலிதாய் பாதங் காப்பே. 134

6. பூரணமா முன்னோர்கள் சொன்னமொழிக் கெல்லாம்
பூமலரின் வாசம்போல் புகட்டினோம் னாமும்
வாரணமா பதினாறு லட்சங் கவிப்பாடல்
வசனித்தோ மதில்மறைச் சூட்சமெல்லாம்
விண்டோம்
காரணமா யிந்தயெண்ணூற் காஷ்சி முதலாய்ந்தால்
கருவாழி புலவனென்றுங் காய்வானாவார்
ஆரணமா மிந்தயெண்ணூறில் யிரண்டாவது காண்டம்
ஆதிமுத லந்தத் தோடருளினோ முத்தே. 267

7. காவியநிகண்டின் இரண்டாவது காண்டம் முழுதும் ஆக காண்டம் 2க்கு விருத்தம் 267 முகிந்தது முற்றும் தேவிசகாயம்.

8. மூலம். 9. மூலிகைகளின் பரிபாசைச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. தட்சிணாமூர்த்தி நிகண்டு எனவும் பெயருண்டு. 11. இல்லை.

IV. 1. R. 4118. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 302(v), 417(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. நாராயண முதலியார்(பதி.), 'ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு 800', —, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, 1894. 3. இல்லை.

VI. இந்நூல் தனி நூலாக இருப்பதால் இதன் தொடக்கத்தில் ஒரு காப்புப் பாடல் உள்ளது.

அகத்தியர் நிகண்டு

I. 1. **347**. 2. அ. R. 2302(c). ஆ. T.R. 1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 3. ஆ. Akattiyar nikaṇṭu kāṇṭam 3. இ. காவிய நிகண்டில் மூன்றாவது காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28, போக் சாலை, மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 18. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை.

9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஓரளவு சிதைவு. 12. 35; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 126 பாடல்கள்.

ஆ. —.

III. இரசவாதத்திற்கான மூலிகைகள், நீர் வகைகள், உப்பு வகைகள் கூறப்பெற்றுள்ளன. 2. இரசவாதம். 3. இந்நூலில் இரசவாதம் தொடர்பான செய்திகளே இடம் பெறுகின்றன. இரசவாதம் செய்வதற்கான மூலிகைகள் விவரம், இரசவாதத்திற்கான கருக்குருக்கள், இரசவாத மருந்துகள் தீர்க்கும் நோய்கள், பல்வேறு சாய வகைகள் என்பன கூறப் பெறுகின்றன.

4. காவிய நிகண்டில் மூன்றாவது காண்டம்.

5. ஆதியாம் முதல்வன்றன் அந்தம் போற்றி
அம்பிகா சத்தியுட கமலம் போற்றி
சோதிநிறஞ் சனமான குண்டலியே போற்றி
சுழிமுனையிற் கருவறிந்தோன் பிரம்மன் போற்றி
சாதிபல வகைக்குறித்தோன் பாதம் போற்றி
சரவாணி உமையான சரஸ்பதியே போற்றி
வாதியா மாமுனிவ நோதுமறை போற்றி
மகத்தான வாதகசாயங் காப்பாமே. 1

6. பேரென்ற பேரெல்லாம் பொறுக்கி மணிபோல்(ப்)
பேசினோம் மூன்றாங் காண்டம் பெருமை மெத்த
நூறென்ற பாடல் னூத்தி முப்பதுக்குள்
னுண்மையதாய்ச் சொல்லி விட்டோம் தீதப்பேர்கள்
ஆரென்ற மாமுனிவ னோதுமொழி யெண்ணூறு
அனைவருமின் மொழிகண்டு அருழ்குன்வாழி
தேரென்ற மூன்றுகாண்டம் புலத்தியனே அய்யா
செப்பினோம் முழுதுமுத்தும் பூரணமா முத்தே.
126

7. காவிய நிகண்டு மூன்றாங் காண்டம் எழுதி முகிந்தது முற்றும்.

முதல்காண்டம் 2-ஆவது காண்டம்

ஆக விருத்தம்	-	267
மூன்றாவது	-	126
(ஆக மொத்தம்)	-	393.

8. மூலம் 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பரிபாசைச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4118. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 302(v), 417(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. நாராயண முதலியார்(பதி.), 'ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு 800', —, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, 1894. 3. இல்லை.

VI. இந்நூலுக்கும் தனிக்காப்புப் பாடல் அமைந்துள்ளது.

அகத்தியர் நிகண்டு

I. 1. **348**. 2. அ. R. 2302(d). ஆ. T.R. 1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 4. ஆ. Akattiyar nikaṇṭu kāṇṭam 4. இ. காவிய நிகண்டில் நாலாவது வயித்திய காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28, போக் சாலை, மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 20. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 39; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 131 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய மூலிகைகளைக் கொண்டு மருந்துகள் தயாரித்து நோய்களைக் குணமாக்குதல் இந்நூலில் கூறப்படுகிறது. 2. மருத்துவம். 3. வைத்திய காண்டம் எனும் பெயர் பெறும் இந்நூல் இரசவாத மூலிகைகள் கொண்டு சில நோய்களைத் தீர்க்கும் மருந்துப்பொருள்கள் தயாரித்தலைக்

கூறுகிறது. இம் மருந்துப் பொருள்களில் பல வகைக் கசாயங்களும் அடங்கும்.

4. காவிய நிகண்டில் நாலாவது வயித்திய காண்டம்.

5. பூரணமாங் காவியநூல் நிகண்டே சொல்வோம்
புலத்தியனே மனமொத்துப் புகலக் கேளும்
வாரணமாம் பூமாது வாலை தேவி
வசனித்தாள கத்தியனுக்கு வசனஞ் சொன்னாள்
காரணமாம் கருக்க ளெல்லாங் கண்டுதேறிக்
கருக்குருவா யிந்தயென்னூற் காவியம் பாடி
சீரணமாய்ப் போகாமல் சித்தருக்குச்
செப்பினோம் நாலாங் காண்டம் சிரமதாமே. 1

6. பதனமதாய் வைத்துசிவ பூசையது செய்து.
பண்புடைய வேதாந்த பரிபூரண யென்னூற்
பதனமாய் வைத்தெரி சிப்பாய் புலத்தியனே
பரிவான பஞ்சகாவியம் சவுமியம் பதனம்
பதனமதாய் வைத்துயென்னூற் பணிந்திடுவீராகில்
பராபரன்போ யென்னாளும் பாவித்து வாழ்வாய்
பதனமதாய் னூலாவு திந்தகாண்டமதைச் சொன்னோம்
பாடினோ மவன்மூலிப் பரிபூரண முத்தே. 131

7. நாலாவது காண்டம் வன்மூலி யெழுதிமுகிந்தது முற்றும்.

8. மூலம். 9. யமக அடிப்படையில் சில பாடல்கள் உள்ளன. பாடல்களில் பேச்சு வழக்குச் சொற்கள் பயின்றுள்ளன; 'ற்ற' என்பது 'த்த' ஆக வந்துள்ளது. (எ.டு.: முற்றே > முத்தே). 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றது; புலத்தியருக்குக் கூறியதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R.4118. 2. சி.ம.மை. ஆ.நி. 302, 417(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. நாராயண முதலியார் (பதி.), 'ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு 800', —, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, 1894. 3. இல்லை.

VI. இந்நூல் தனிக் காப்புப் பாடலைப் பெற்றுள்ளது. காப்புப் பாடலிலும், இறுதிப்பாடலிலும் புலத்தியனிடம் கூறுவதாக உள்ளது.

அகத்தியர் நிகண்டு

I. *1.* **349**. 2. அ. R. 2302(e). ஆ. T.R. 1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 5. ஆ. Akattiyar nikaṇṭu kāṇṭam 5. இ. காவிய நிகண்டில் அஞ்சாவது காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28, போக் சாலை, மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 14. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 28; இருபக்கங் களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 102 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய மூலிகைகளால் மருந்துகள் செய்து நோய்களைப் போக்கும் மருத்துவ முறைகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இவ்வைந்தாங் காண்டத்தில் இரசவாதத்திற்கான மூலிகைகளில் இறுதியாக வருவன பற்றிப் பரிபாசையில் கூறப்பட்டுள்ளது. மேலும் இரசவாதத்திற்கான சரக்குகளின் இயல்பும் கூறப் பெற்றுள்ளது.

4. காவிய நிகண்டில் அஞ்சாவது காண்டம்.

5. பூரணமா சதுர்முகன்றன் பாதம் போத்தி
பொன்னடிவாழ் மாதுசரஸ் பதியே போத்தி
வாரணமா கெசமுகவன் வல்லபையே போத்தி
வசனித்த வாதகாவியம் போற்றி நாயகி
காரணமாய்ப் பொதிகை தெஷ்சண னூராகி
கவிபதி னூறுலட்சம் பாடல் போத்தி
பூரணமாய் ஆதியந்தம் விளங்கும் சோதி
அம்பரத்தின் சூஷ்சம்பார் பாதங் காப்பே. 1

6. தெரிசிப்பாய் புலத்தியனே அஞ்சாங் காண்டம்
தெளிவாகச் சொல்லிவிட்டோம் தேருதேரு
பரிசிப்பாய் சுந்தரமே நிகண்டெண்ணூறும்
பார்த்தாக்கால் பரிபாஷை ஓரைந் தோதும்

கரிசிப்பாய் கடைச்சரக்கின் தீதங் கூறு
காட்டினோங் கவியாக .... கூர்ந்து
யரிசிப்பாய் தினந்தோறும் அஞ்சாங் காண்டம்
அருளினோம் பூரணம்போல் தீத முத்தே. 103

7. அஞ்சாங் காண்டம் முற்றும்.

8. மூலம். 9. புலத்தியரை விளித்துக் கூறுவதால் முன்னிலை ஒருமைச் சொற்களான பாரப்பா, கேளப்பா என்பன வந்துள்ளன. வடமொழி எழுத்துக்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். இரசவாத நூல்கள். 1 இலட்சம் பாடல்களால் ஆனதாகக் கருதப்படுகின்றன. 11. இல்லை.

IV. 1. R. 4118. 2. சி.ம.மை. ஆ.நி.எண்கள் 302(v), 417(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் தனிக் காப்புப் பாடலைப் பெற்றுள்ளது. இப்பாடல்கள் மிக அரியவை எனக் கூறுவதிலிருந்து இந்நிகண்டு நூல் இரசவாதத்திற்குப் பயன்படும் முக்கியத்துவம் தெரிகிறது.

அகத்தியர் நிகண்டு

I. **1. 350**. 2. அ. R. 2302(f). ஆ. T.R. 1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 6. ஆ. Akattiyar nikaṇṭu kāṇṭam 6. இ. காவிய நிகண்டில் ஆறாவது காண்டம் அறியவும். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28, போக் சாலை, மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 26. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 51; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 160 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய மூலிகைகளைப் பயன்படுத்தி மருந்துகள் செய்யும் முறைகளும், அம்மருந்துகளின் பயன்களும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் இரசயோகியின் இயல்பு கூறப்பெறுகின்றது. மேலும் மாந்திரீகக் கருக்களின் நிலைகளும் கூறப்பெறுகின்றன.

4. காவிய நிகண்டு ஆறாவது காண்டமறியவும்.

5. பூரணமாம் பராபரத்தின் பாதம் போற்றி
புகலுகிறேன் சுழிமுனை யாதியந்தம் போற்றி
வாரணமா மண்டரண்டம் நிறைந்த சோதி
மகத்தான குண்டலித்தாய் பாதம் போற்றி
ஆரணமா கணேசனருள் பாதம் போற்றி
அனுக்கிரக மென்றசிவ அம்மாள் போற்றி
காரணமா யெந்தன்குரு கந்தன் போற்றி
கணபயிரவன் போற்றிக் காப்புத் தானே. 1

6. காணப்பா புலத்திய னேராச யோகி
கருவான நிகண்டிது தானவருங் காண்பார்
நாணப்பா பூரணமா யெண்ணூற் பாடம்
நாதாக்கள் தேறும்க ளத்தி சிந்தம்
தோணப்பா காண்டமெட்டு ஆயிரமுஞ் சொச்சம்
சொல்லிவிட்டோம் மாந்திரீகக் கருவை விண்டோம்
ஊணப்பா ஆறாவது காண்டம் நிறைஞ்சன் நாண
ஒருநூத்தி மூணுபத்து படலமொழி முத்தே.

7. ஆக காண்டம் 6 இதில் விருத்தம்.

8. மூலம். 9. 'ற்ற' என்பது 'த்த' ஆக வந்துள்ளது. (எ.டு.) போத்தி, முத்தே; பேச்சுமொழிச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள நூல். புலத்தியரிடம் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4118. 2. சி.ம.மை. ஆ.நி. எண்கள் 302(v), 417(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்குத் தனிக் காப்புப் பாடல் உள்ளது. இச்சுவடியில் தான் நிகண்டு 8 காண்டங்களடங்கியது எனக் கூறப்பெற்றுள்ளது. அவை 1000 பாடல்களுக்குமேல்

உள்ளன எனத் தெரிகிறது. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள R.4118 எனும் எண்ணுள்ள மாற்றுச் சுவடியில் 8 காண்டங்களுக்கு 1075 பாடல்கள் உள்ளன.

அகத்தியர் நிகண்டு

I. 1. **351**. 2. அ. R. 2302(g). ஆ. T.R. 1295. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிகண்டு காண்டம் 8. ஆ. Akattiyar nikantu kāṇṭam 8. இ. தெட்சிணாமூர்த்தி காவிய நிகண்டில் யெட்டாம் லெட்சண காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஏ.எம். கோபாலய்யர், எண் 28 போக் சாலை,மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 26. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 51; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 136 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாத மூலிகைகளாலான மருந்துகளின் இயல்பும் இந்நூலின் பயன்பாடும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் நிகண்டு 800 என்பதின் எட்டாங் காண்டமான இந்நூலில் சித்தர்க்கு இது சொரூபநிலையாக அமைந்துள்ள நிலையும், ஏனைய காண்டங்களில் பேசப்பட்ட இரசவாத, மருத்துவச் செய்திகள் இக் காண்டத்தில் தொகுத்தும் கூறப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் தெட்சணாமூர்த்தி அருளிச்செய்த காவிய நிகண்டில் யெட்டாவது லெட்சணகாண்டம் அறியவும் நன்றாக குருவாழ்க குருவே துணை.

5. ஆதிபரி பூரணத்தின் சோதி பாதம்
அகண்டபரி சிவனுமையால் அயனும் போற்றி
சோதியெனும் பூரணமாம் வாதம் சொரூபீ
சுருதிமுடிவானசர வாணி போத்தி
வேதியனும் விசுவனிடக் கமலம் போற்றி
விதியான நான்மறையோர் வேதம் போற்றி
பாதிபூரண வாமிசிவ காமிப் பாதம்
பண்புடைய முன்னோர்கள் பாதம் காப்பே. 1

6. சொன்னமொழி வாக்கியத்தோர் சித்தர்க் கெல்லாம்
சுருபநிலை யானயின்னூல் வெளிவி டாதே
அன்னமொழி பஞ்சகா வியமு மின்னூல்
அருளினதோர் சவுமியத்தோர் யேழு னூலின்
பின்னமில்லா சூஷ்த்திரங்க ளனந்தஞ் சொன்னோம்
பேசினோம் புகழுடயேன் கருவே சொன்னோம்
கன்னல் மொழி சிதம்பரம் வாலை பாடம்
கமலபதஞ் சரணமெண் ணூறு முத்தே. 36

7. ஆக காண்டம் ஆகத்திரு விருத்தம் தெட்சணாமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த காவியநிகண்டு யெண்ணூற்று யெழுதி முகிந்தது முற்றும்.

8. மூலம். 9. ர/ற, த்த/ற்ற வேறுபாடுகள் இல்லை. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ள நூல். அகத்தியர் நிகண்டுக்குத் தொடுகுறிபோல் இந்த எட்டாம் காண்டம் உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4118. 2. சி.ம.மை. ஆ.நி. எண்கள் 302(v), 417(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலின் மாற்றுவடிவான R.4118ல் ஏழாங் காண்டம் உள்ளது. அதன் பிறகே எட்டாம் காண்டம் இடம்பெறுகிறது. ஆனால் இந்த நூலில் ஏழாம் காண்டம் இடம் பெறவில்லை. இதுவரை உள்ள 6 காண்டங்களிலும், 786 பாடல்கள் உள்ளன.

1 ஆம் காண்டம்	-	133
2 ஆம் காண்டம்	-	133
3 ஆம் காண்டம்	-	126
4 ஆம் காண்டம்	-	131
5 ஆம் காண்டம்	-	103
6 ஆம் காண்டம்	-	160
		786
8 ஆம் காண்டம்		136

எட்டாம் காண்டத்திலுள்ள 136 பாடல்களுடன் சேர்த்து 822 பாடல்கள் உள்ளன. ஆனால் R. 4118 இல் 1075 பாடல்கள் உள்ளன. இதிலிருந்து இந்நிகண்டு நூல் 800 பாடல்கள் எனக் குறிப்பிட்டிருந்தாலும் 800க்கு அதிகமான பாடல்கள் பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது.

அகத்தியர் நேத்திர வாகடம்

I. 1. **352**. 2. அ. R. 2542. ஆ. T.R. 1392. இ. R.No. 7389. ஈ. —. 3. அ. அகத்தியர் நேத்திர வாகடம். ஆ. Akattiyar nettira vakatam. இ. அகஸ்தியர் சூஸ்திரம் நேத்திர வாகடம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 82. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 164; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம் மற்றும் உரைநடை. 15. இறுதி. 16. குறை. 17. 245 பாடல்கள் மற்றும் உரைநடை.

ஆ. 1. 30 x 24 செ.மீ. 2. 90. 3. பக்கத்திற்கு 20 வரிகள். 4. தெளிவு. 5. 29.12.1958. 6. வே. சண்முகம். 7. மு. நாராயண சாமி, M.R. சிவப்பிகாசம் பிள்ளை. 8. 29.12.1958.

III. 1. நம் உடம்பில் ஏற்படும் பலவிதமான நோய்களுக்கு, குறிப்பாகக் கண்ணில் வரும் நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. கண் மருத்துவம். 3. இந்நூலில் கண்ணில் நோய் வரும் விபரம், பீளைகள் ஏற்படக் காரணம், கண்ணுக்குப் பிற வாகடம், பிற எண்ணெய், இமையில் போட மருந்து, கண்ணிலேதும் பட்டால் அதற்கு மருந்து, கண் புரைக்கு மருந்து, நசியம் கண்ணுக்குக் கடை மருந்து, விரண தாம்பூலத்துக்குக் குளிகை, யுதபமத்தி யுண்டை, பதும ரோகத்து உண்டை, அஞ்சனப் பொடி, பதும ரோக மஞ்சணப் பொடி, கண் பூவுக்கு உருண்டை, கண்ணில் வரும் 96 நோய்களுக்கும் உருண்டை, குந்த கண்ணுக்குக் கற்பூர உருண்டை, சகல வியாதிக்கும் பச்சை உருண்டை, சங்கரனார் உருண்டை, அஞ்சனாதிக் குளிகை, திருமணிக் குளிகை, கண்ணில் மூடத்திற்கு மருந்து, கண்ணில் புண்ணுக்குப்

பாசுண்டை, கண்ணெரிவுக்கு மருந்து, காசமந்த ரோகம், புகைச்சலுக்கு, மந்தகாசம், பந்தரோகம் புகைச்சலுக்குப் பட்சை உருண்டை, சங்கரா உருண்டை, கண்ணில் சகல வியாதிக்கும் சங்கரனார் உருண்டை, பூப்படலம் காசத்துக்கு உருண்டை, கீணகண், மாலைக்கண், இருள்கண்ட கண்ணுக்கு உருண்டை, கண்ணில் சதை வளர்ந்தால் உருண்டை, கண்ணில் இரத்தம் போல் இருக்கிறதுக்கும் பூவுக்கும் உருண்டை, வேறு கண் பூவுக்கு உருண்டை, கண் பூவுக்கு மருந்து, பஞ்சாட்சர உருண்டை, பற்பரோகப் பொடி இவை போன்ற கண் நோய்கள் தொடர்பான அனைத்துக்கும் மருந்துகள் செய்து பயன் படுத்தும் முறை கூறப்படுகிறது.

4. அகஸ்தியர் சூஸ்திரம் நேத்திர வாகடம்.

5. மாதுமை பாகன் சொன்ன
மாமறை முதலை யாய்ந்து
தீதுகள் வாரா வண்ணம்
திருவுளத் திருந்த போது
ஆதிமா முனிவன் சொன்ன
ஆயிரு வேதத் துள்ளே
நாதனர் தெரிந்து ரைத்த
நயனமாம் விழியீ தென்றே. 1

6. பச்சிலையேது துரோணபத்திரியாவது, கண்ணுப் பூளைப் பூண்டு இலை பச்சையாகக் கசக்கிக் கண்ணுக்குள் யிரண்டு துளியாக விடவும். 2 நாள் விட்டு, பிறகு நெய் குத்தவும். இரணம் சுக்கிரனுக்கு மாத்திரம் அல்லாமல் மத்த மிகுநோவுக்கும் ஊத்தவும், பத்தியம் பசுவின்பால், நெய், துவரை, பாசிப்பயிறு, சிறுகீரை, முருங்கை யிலை, காய், வாழை....

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ற/ர, ள/ழ ஆகிய எழுத்துக்களிடையே வேறுபாடு இல்லை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. கண்ணில் உண்டாகும் நோய்களைக் குணப்படுத்தும் மருந்து வகைகளைக் கூறுவதால் இந்நூல், 'நேத்திர வாகடம்' என்று பெயர் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் வாகட நூல்களாக அமைந்த வேறு நூல்கள்: 1. அகத்தியர் பால (குழந்தை) வாகடம், 2. அகத்தியர் பள்ளு வாகடம், 3. அகத்தியர் குணவாகடம் என்பன.

அகத்தியர் நோயின் சாரம்

I. 1. **353**. 2. அ. R. 3409. ஆ. T.R. 1732. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நோயின் சாரம். ஆ. Akattiyar nōyiṉ cāram. இ. அகஸ்திய முனிவர் அருளிச்செய்த நோயின் சாரம் – நாடிப் பரீட்சை. 4. —. 5. —. 6. சுப்புராய வாத்தியார். 7. —. 8. அ. கீ.சு. நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 15. 5. 32 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 28; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 66 பாடல்கள்.

ஆ.—.

III. 1. நோயின் தன்மைகளை நாடி பார்த்துக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. உடம்பிலுள்ள நாடிகள், அவை செயல்படும் விவரம் ஆகியவற்றினை விரிவாக இந்நூல் கூறுகிறது. நாடியானது கைப்பெருவிரலின் முதலிலிருந்து தொடங்கி அது வெளிப்படையாகக் காணப்படும் இடங்களாகிய மூன்றிலும் வெளிப்பட்டு உடலின் எல்லா இடங்களிலும் பரவி இருப்பதை அறிவது நாடிப் பரிட்சையாகும். கையின் மணிக்கட்டு அடியிலும், கணுக்காலின் அடியிலும் நாடி துடிப்பதை அறியலாம். பெண்களுக்கு இடது கையிலும் ஆண்களுக்கு வலதுகையிலும் நாடி பார்க்க வேண்டும் என்றும், நாடியானது வாதநாடி, பித்தநாடி, சிலேத்தும நாடி என மூன்று வகைப்படும் என்றும் இந்நூல் கூறுகிறது. வாதநாடி கையில் ஆள்காட்டி விரலால் உணரக்கூடியது. மணிக்கட்டின் அடியில் ஆள்காட்டி விரலை வைத்து அழுத்திப் பார்த்தால் நாடித்துடிப்பு தெரியும். பித்தநாடி இது நடுவிரலால்

உணரக்கூடியது. இரண்டாவது நாடியின் நடை மயில், மாடப்புறா இவற்றின் நடையினைப் போன்றது. சிலேத்தும நாடி நடுவிரலால் உணரக்கூடியது. விரலுக்குத் தோன்றியும் தோன்றாமலும் இருக்கக்கூடியது; கோழியின் நடையைப் போன்றது. இவ்வாறு நாடியின் தன்மைகளைப் பற்றி இந்நூல் பேசுகின்றது.

4. அகஸ்திய முனிவர் அருளிச் செய்த நோயின் சாரம் நாடிபரிட்சை.

5. கரிமுகக் கடவுளைக் கௌரி மைந்தனை
விரிசடை வாயனை வேதவே தாந்தனை
அரிதிரு மருகனை யாதி சோதியைப்
பரிவோடு தொழுதுவரப் பாதம் போத்துவோம். 1

6. **பிராணன் விடும் போது நாடி குறி அறிதல்:**
நிறைபுரு வட்டம் பூண்டு நின்றிடு மரனை .வால்போல்
குறைபடாப் .... மொன்றுங் குறைந்துமே நிற்கு மாகிப்
உயிர்விடும் பிராண னென்று உண்மைசொல் வாக டத்திற்
பறையது கூடச் சாற்றும் படித்தவர்க் கெல்லாம் பாரே. 66

7. நோயின் சாரம் முற்றிற்று. சிவ சிதம்பரம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. பிலவங்க வருடம் மார்கழிமாதம் 21 விழுப்புரம்துக்கடியே சேர்ந்த சின்ன கன்னிப் பாட்டு வி.போ. சுப்பராய வாத்தியார் சொந்தமாகிய அகத்தியர்குணவாகடம், சுப்புராய வாத்தியார் நெட்டெழுத்து. சின்ன சுவாமி, தெய்வனாயகம், ஆறுமுகம், நடேசன் வாசிக்கின்ற வாகடத்திரட்டு. இதை யெடுத்தவர் வாசித்து யிதில் தப்புப்பிழையிருந்தால் ஒப்பதா பொறுத்துக் கொள்ள வேண்டியது. ஆதியே துணை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வாத, பித்த, சிலேத்தும நாடிகளைத்தவிர, ஆச்சரிய நாடி, தொந்தநாடி, வாத பித்த நாடி, வாத சிலேத்தும நாடி, அஜீரண நாடி, அக்னிதீப நாடி, ஸ்திரீ சங்கம் நாடி, மலபந்த

நாடி, சந்திபாத நாடி என ஒன்பது வகையாகவும் அறியலாம். பிராணாயாமம் நன்கு நடைபெறுவதற்கு முதலில் நாடிகள் சுத்தி அடைய வேண்டும். இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் நோயின் சாரம்' என்ற இந்நூலுடன், அகத்தியர் வைத்திய சாரம் (R. 3410), திருமூலர் அருளிய பிண்ட வுற் பத்தி (R. 3411), அகத்தியர் அவிழ்த்த சாரம் (R. 3412), தேரையர் நோயின் சாரம் (R. 3413) முதலிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் பஞ்சபட்சி 5

I. *1.* **354.** *2.* அ.எ. R.8901-2 . ஆ. T.R. 4201 இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் பஞ்சபட்சி 5. ஆ. Akattiyar pañca paṭci ; இ. அகஸ்திய சுவாமிகள் அருளிச்செய்த பஞ்சபட்சி சாஸ்திரம் பாடல் 5. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 3. 5.* 24 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12. 6;* இரு பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 8 வரிகள். *14.* வெண்பா. *15.* நடு, இறுதிப் பகுதிகள் இல்லை. *16.* குறை. *17.* 5 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகிய ஐந்து பறவைகளைக் கொண்டு மனிதனின் நிகழ்கால, எதிர்கால பலன்களைக் கூறும் நூல். *2.* சோதிடம். *3.* அகத்தியர் பஞ்சபட்சி சாத்திரம் என்ற இந்நூல் காகம், மயில், வல்லூறு, ஆந்தை, கோழி ஆகிய ஐந்து பறவைகளின் குணங்கள், அவை தொடர்பான முலிகைகள் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றது. மனிதர்கள் அவர்கள் பிறந்த காலம், நேரம், இடம், ஆகியவற்றின் தன்மைக்கேற்ப நட்சத்திரம், இராசி, இலக்கனம் ஆகியவை அமைவன போன்று, இவ்வைந்து பறவைகளின் குணங்கள், மனிதர்களின் நட்சத்திரங்களோடும் செயல் முறைகளோடும் ஒப்பிடப்படுகின்றன. பஞ்சபட்சிகள் என்றாலே இவ்வைந்து பறவைகளைத்தான் குறிக்கும்.

4. அகஸ்தியர் சுவாமிகள் அருளிச் செய்த பஞ்சபட்சி சாஸ்திரம் பாடல் 50.

5. வாங்குசிலை நுதலாள் மையல் வலையில்சிக்கி
யேங்கிமன மேயிளை யாதே – மாங்கனிக்குத்
தம்பியொக்கச் சண்டைப்பண்ணித் தந்தை சுத்திவந்த
வொத்தைக் கொம்பனைச் சத்தன்பு வைத்துக் கூறு.

6. திங்கள் சனிமயிலாஞ் சேயருக்கன் கோழியதாந்
தங்கு புதன் காகஞ் சாத்துங்கள் – மங்கையே கேள்
அந்தணர்க் காந்தை யாந்ஷபுகா வல்லூறு
யிந்த யிடப்பக் கத்து.

இதற்கு வாக்கியம் ஓம் தேவதி...

7. —.

8. மூலம். 9. பாடல்கள் எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியர் பெயரில் மருத்துவ நூல்கள் மட்டுமின்றி, சோதிட நூல்களும் உள்ளன என்பதற்கு இந்நூல் சான்று தருகிறது. இயற்கைத் தாவரங்களின் குணங்களையும் அவற்றின் பயன்களையும் குறிப்பிடுவது போன்று பஞ்சபட்சிகளின் குணங்களையும், அவற்றின் தன்மைகளையும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் பஞ்சபட்சி 5' என்ற இந்நூலுடன், அகத்தியர் நவக்கிரகக் கக்கிசம் என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் பஞ்சபட்சி 30

I. 1. **355**. 2. அ. R. 189(c). ஆ. T.R. 173. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பஞ்ச பட்சி 30. ஆ. Akattiyar pañca paṭci 30. இ. அகஷ்தீச னாயனாரருளிச் செய்த பஞ்ச பஷ்ஷி சூஸ்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 29 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. பிளைவுட். 9. பனை ஓலை.

10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 18; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இறுதி ஏட்டின் முதல் பக்கம் மூன்று பத்திகளாகவும் மறுபக்கம் ஒருபத்தியாகவும் எழுதி முடிக்கப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம் மற்றும் உரைநடை. 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள் மற்றும் உரைநடை.

ஆ.—.

III. 1. வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகிய ஐந்து பட்சிகள் இருக்கும் நிலைகளையறிந்து அதற்குத்தக்க பலன் இன்னவெனக் கூறும் நூல். 2. சோதிடம். 3. அகத்தியர் பஞ்சபட்சி சூத்திரம் என்ற இந்நூல் பஞ்ச பட்சிகளான காகம், வல்லூறு, மயில், ஆந்தை, கோழி ஆகிய ஐந்து பறவைகளின் குணங்கள், அவற்றின் நட்சத்திரங்கள், அவற்றின் மூலிகைகள் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றது. மேலும் மக்களின் உடம்பை ஐந்தாகப் பிரித்து அதைப் பஞ்சபட்சிகளின் குணங்களோடும், செயல் முறைகளோடும் ஒப்பிடுகிறது. பஞ்சபட்சிகளின் மூலிகைகளாகக் குறிப்பிடப்படுவன; காகம்-நாய்க்கடுகு, வல்லூறு-அரைக்கீரை, ஆந்தை-சிறுகீரை, மயில்-தைவேளையிலை, கோழி-முக்கரைச் சாரணை என்பனவாம்.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவேதுணை. அகஷ்தீச னாயனாரருளிச்செய்த பஞ்ச பஷ்ஷி சூஸ்திரம்.

5. உன்னியொருத்த னுரைத்த முதலெழுத்தைப்
பன்னிப் பறவைபோல் பார்த்தறிந்து - வன்னி
உதையத்திற் பட்சியதா யொன்றாகவே யுரைக்கிற்
கதைகா வியங்களிரே காப்பு. 1

பஞ்ச பட்சி அட்சரம்
சொன்ன அகாரம் வல்லூ றதாய் .

6. பூர்வ பஷ்ஷம் பகல் காலம் பதினஞ்சுக்கு !
ஆதியூரே போ
போகாநீ யூரே
போறோவலிது
ஊரே போகாநீ
நீயூரே போவா
றாக்காலம் பதினைஞ்சுக்கு

தூராதே நீபோ
தீபோ சுடாதே
தானே நீ போது
கோழாவே நீ தா
தேடிக் கொடுவா
அமர ... பகல் காலம் 15

கோவே சுரிவா
கெடுகி லாமோ
குளிமா றோடே
இன்றே செறு
காவோடே குளி

7. —.

8. மூலம். 9. பாடல்கள் முன்னிலையாரை அழைத்துக் கூறும் பாங்கில் எளிய பேச்சு நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் மருத்துவ நூல்கள் மட்டுமின்றி, சோதிட நூல்களும் உள்ளன என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டாகும். இயற்கைத் தாவரங்களின் குணங்களையும் அவற்றின் பயனையும் குறிப்பிடுவது போன்று பஞ்ச பட்சிகளின் குணங்களையும், அவற்றின் தன்மைகளையும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. இப்பஞ்சபட்சிகளுக்கான மூலிகைகளும் பயன்களும் இதில் கூறப்படுகின்றன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் 'அகத்தியர் பஞ்சபட்சி 30' என்ற இந்நூலுடன், கொக்கோகம் (R. 189 (a)), அகத்தியர் மாந்திரீக நிகண்டு (R. 189 (b)), அகத்தியர் 125 (R. 189 (d)) ஆகிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் பஞ்ச பட்சி

I 1. **356**. 2. R. 927. ஆ. T.R. 747. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பஞ்ச பட்சி. ஆ. Akattiyar pañca patci. இ. அகஸ்தியர் செய்த பஞ்ச பட்சிப்படலம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 39. 5. 26 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 68; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 125 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பஞ்ச பட்சிகளானகாகம், வல்லூறு, ஆந்தை, மயில், கோழி இவற்றைக் கொண்டு மனிதனின் நிகழ்கால, எதிர்கால பலாபலன்களைக் கூறும்நூல். 2. சோதிடம். 3. அகத்தியர் பஞ்ச பட்சி என்ற இந்நூலில், உச்சாடன முறைகள், பஞ்சபட்சி விவரம், பட்சிகளின் சாபம், அட்சரத்தின் மாறல், வடுகன் தியானம், வல்லூறுக்கு மூலிகை, ஆந்தைக்கு மூலிகை, அமரபட்சவிதிமுறைகள், தியானம், பலவகை எண்ணெய்கள், அனுபானங்கள், மூலை எழும்ப, மூலை மறைய வசியம், புருச வசியம், ஆமணக்கு வசியம், காட்டேரி மந்திரம், சாமுண்டி மந்திரம் முதலான பல்வேறு செய்திகள் கூறப்படுகின்றன. பலாப் பலகை மீது பத்மாசனம் விரித்து தென்மேற்கு முகமாயிருந்து சூரியகலை, சந்திரகலை முதலான நாடிகளைச் சேர்த்துச்சுழிமுனைக்கு ஏற்றினால்அங்கே சோதி பிரகாசிக்கும். அந்தச் சோதியை மனக்கண்ணால் பார்த்து ஓம்—யங்—வய நமசி யென்று பவளமணியால் உருவேற்ற உச்சாடனம் சித்தியாகும்; வல்பிணிகள் விலகும்; நினைத்தது நினைத்தபடி நடக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்திய நாயனார் அருளிச் செய்த ககூஷிப் படலம் பஞ்சபட்சி வாலை மாந்திரம் சாக்ஷி சூஸ்திரம்.

5. திருமகள் கயிலை வாழும் சிவனாதர் தேவிக் கீந்த
கருவளர் மாந்தி ரீகங் ககூஷியின் பீடம் பாட
மருமக ளான சோதி மலர்த்திரு பாதம் போற்றி
உருவினில் உருவு மில்லான் உமைமகன் காப்புத்
தானே. 1

6. தோஷமடா பெருநூலில் சொன்ன வித்தை
துடிக்கட்சி பீடமது பணிந்து சொன்னேன்
தோஷமடா சாலகைவித்தை ஓம்பட்சி நேசா
சுருசுரு ஆங்காரி உருளு உருளு

தோஷமடா கொண்டுவா சுவாமி யானை
சொல்லக ருத்தடவ சுறுக்கு மெத்த
தோஷமடா யிம்முறையே வெளிவி டாதே
சூஸ்திரந்தான் னூத்திருபத் தஞ்சு முற்றே. 125

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. ர/ற, ழ/ள போன்ற எழுத்துக்கள் வேறுபாடு இல்லாது பாடல்களில் பயன் படுத்தப் பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 'அகத்தியர் பஞ்சபட்சி காட்சிப் பாடம் 205' என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் திகழ்கிறது. பாடல்கள் அறுசீர் மற்றும் எண்சீர் விருத்தங்களில் அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 189(d). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 575(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2.—. 3. இல்லை.

VI. அகத்தியர் பஞ்சபட்சி சாத்திரம் என்ற நூலில் ஐந்து பறவைகளின் பெயர்கள் வந்துள்ளன. அவை: மயில், காகம், ஆந்தை, வல்லூறு, கோழி ஆகியனவாம். இப்பட்சிகளின் விவரம், மூலிகை, இவற்றின் அமரபட்சி விதிமுறைகள் ஆகியவற்றையும் இந்நூல் விரித்துக் கூறுகின்றது. இச்சுவடிக் கட்டில் 'அகத்தியர் பஞ்சபட்சி' என்ற இந்நூலுடன், புலிப்பாணி மாணாக்கர் வைத்தியம் 500 (R. 927 (a)), ஒட்டியம் பாடலும் உரையும் (R. 927 (c)) ஆகிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் பட்சணி

I. 1. **357**. 2. அ. D. 2309. ஆ. T.D. 901. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பட்சணி. ஆ. Akattiyar paṭcaṇi இ. அகத்தீசர் அருளிய பஷ்சணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 21 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 31; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 132 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாசி நிலை அறிதல், பட்சணி (உணவு உண்பது) முதலான செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் இரசவாதம். 3. அகத்தியர் பச்சணி என்னும் இந்நூல் 'அகத்தியர் தண்டகப் பட்சணி' என்ற பெயரிலும் அழைக்கப் படுகிறது. இந்நூலானது துரிசு வாங்கும் முறை, வித்தைகள் செய்வதற் குரியதிலதம், அஞ்சனம், கரு, வெண்கரு முதலானவற்றையும், ஆறு மற்றும் கடல்களில் வாழும் நண்டுகளின் மூலத்தை கொண்டு வந்து நெய்யில் வறுத்து மை செய்யும் முறை, மதித்த செம்புனல், ஆதிபரம், வாசி மதி, பச்சணியைக் கண்டு கொள்ளும் முறை, பூரணம், நாதாந்த குரு, நச்சுவிடம் இலை, தண்டகத்தில் அறிவாஞ் சூட்சம், திருநீறு, வாசிதனில் ஏறுதல், நேத்திரத்தின் ஒளி, கொங்கணர் பட்சணி முதலான பல்வேறு செய்திகளைக் கூறுகிறது.

4. —

5. பூவது வாச மாகும் பொருந்திய தண்ட கத்தை
னாவது ஓதுந் தானே நடுவனை யிருந்து கேளு
போவது வருவ தாகும் பூரணங் காப்புத் தானே
ஆவது கோடி வித்தை ஆனந்தர் காப்புத் தானே. 1

6. முற்றிலு நூறுங் கூட்டி முப்பத் திரண்டும் பாரு
வுத்தரு மதுவாய்க் காணும் உற்பனத் துறுதி தோணும்
கற்றவ ரென்னூல் தன்னைக் கைவிட்டா ராரிதானப்பா
செத்தபே ரில்லை யின்னூல் சேர்ப்பது முத்தி யாமே. 132

7. முற்றும் சிவம். அகஸ்த்தியரருளிச் செய்த பஷ்சணி முற்றும். குருவே துணை. ஓம் கணபதியே நமா. தேவிசகாயம். திருவிலாச் செயலுண்டான படி முடியும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. பட்சணி என்பதற்கு 'உண்பது', 'உண்போன்' எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 9509. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் பட்சணி' என்ற இந்நூலுடன், அகத்தியர் இரசவாதம் சூத்திரம் 8 (R. 2303), அகத்தியர் சூத்திரம் 13 (R. 2304), அகத்தியர் முப்பு 16 (R. 2305), இடமரானந்தர் சூத்திரம் 16 (R. 2306), அகத்தியர் சூத்திரம் 18 (R. 2307), மச்சமுனி சூத்திரம் (R. 2308) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன. கொங்கணர் பெயரில் 'கொங்கணர் பட்சணி' என்ற நூலும் இராமதேவர் பெயரில் 'இராமதேவர் தண்டகப் பட்சணி' என்று நூலும் காணப்பெறுகின்றன.

அகத்தியர் பட்சணி

I. 1. **358**. 2. R. 9509. ஆ. T.R. 3559. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பட்சணி. ஆ. Akattiyar paṭcaṇi இ. அகஸ்தியர் பட்சணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 8. 5. 27 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 15; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 132 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாசி நிலை அறிதல், பட்சணி (உணவு உண்பது) முதலான செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் இரசவாதம். 3. வரிசை எண் 357 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் பச்சணி.

வேகமா நெறிசேரும் வினைகளு மிடர்களுந்
தாக போக விடாயின் றளர்ச்சியும்
சோகவா ரியினால் வரும் துன்பமும்
போகவா னைமுகற் றனைப்போற் றுவாம்.

5. பூவது வாச மாகும் பொருந்திய தண்ட கத்தை
நாவது ஓதுந் தானே நடுவது யிருந்து கேளும்
போவது வருவ தாகும் பூரணங் காப்ப தாக
ஆவது கோடி வித்தை யானந்தங் காப்புத் தானே. 1

6. முற்றிலும் நூறுங் கூட்டி முப்பத்தி ரெண்டு பாரு
உற்றிட மதுவாய்க் காணு முற்பனத் துருத்தி தோணும்
கற்றவ ரென்னூல் தன்னைக் கைவிடாக் குருவைக் காண்பார்
செற்றபே ரில்லை யின்னூல் சேர்ப்பது முற்றி யாமே. 132

7. குருமுன்னிற்க. பட்சணி முகிந்தது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன; பாடவேறுபாடு மிகுந்து காணப்படுகிறது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 2309. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் பட்சணி' என்ற இந்நூலுடன், கும்பமுனி முக்காண்டம் 300 (R. 9506), மெய்ச்சுருக்கம் (R. 9507), கொங்கணர் சூத்திரம் (R. 9508), அகத்தியர் சூத்திரம் (R. 9510) ஆகிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் பரிபாசை

I. 1. **359**. 2. D. 2240. ஆ. T.D. 867. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபாஷை. ஆ. Akattiyar paripāṣai 500. இ. அகத்தியனாரருளிச் செய்த பரிபாஷை ஐந்நூறு முதல் காண்டம். 4. —. 5. —. 6. தாவீது வாத்தியார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 215. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நொறுங்கியது. 12. 430; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 503 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு, மந்திரம், வாதம், தீட்சை, மணி பஞ்சீகரண மார்க்கம், வகார யோகம், வழலை போன்றவற்றை மிக நுணுக்கமாக, மறைப்பாக, இரகசியமாகக் கூறும் நூல். 2. இரசவாதம், மருத்துவம், யோகம், ஞானம். 3. இந்நூலின் முதற்காண்டம் காப்புப் பாயிரம் 3 அறுசீர் விருத்தங்களிலும்,

நூல் 7 எண்சீர் விருத்தங்களிலும் அமைந்துள்ளது. நூலின் பெருமையுடன் தொடங்கிப் படிகம், பூதவங்கி சவ்வீரம், பிரம உப்பு, 96 மருந்துகளின் பெயர், 125 சரக்குகளின் பெயர், தீட்சை நீரின் பெயர், சுத்த கங்கை, மோட்ச மடைய, யோகம், வாதம், கிரியை, சரியை, ஞானம், பஞ்ச சுன்ன விவரம், சத்தி தீட்சை விவரம், பஞ்சாட்சரம் எனும் வழலையின் பொருண்மைகள் முதற்காண்டத்தில் கூறப்படுகின்றன. ஐந்து அறுசீர் விருத்தங்களும் 95 எண் சீர் விருத்தங்களும் கொண்டுள்ள இரண்டாம் காண்டத்துள் இரசவாதத்துக்கு ஆதியான முப்புக்களின் விவரமும், வேறுபல உப்புக்களின் வகைகளும் கூறப்படுகின்றன. வெடியுப்பு, நில உப்பு, இரவி உப்பு, பாறையுப்பு, கல்லுப்பு, சவுக்காரம், பூநீர்த் தீட்சை, வெடியுப்புத் தீட்சை, சிப்பிச் சுன்னம், அண்டச் சுன்னம், வழலைச் சுன்னம், வெடியுப்புத் திராவகம், சிவ சுன்னம், குருக்களின் வகை என்பவற்றின் இயல்பு, குணங்கள் போன்றன கூறப்படுகின்றன. மூன்றாம் காண்டத்துள் பஞ்சீகரண தீட்சை, நாத விந்து, அண்டபிண்டம், கணபதி பூசை, பிரமன் பூசை, விட்டுணு பூசை, உருத்திர பூசை, மயேச்சுர பூசை, சதாசிவ பூசை, வயிரவ பூசை, சுப்பிரமணியர் தியானம், மவுன பூசை எனும் பூசை மற்றும் தீட்சை மார்க்கங்களும், சாபம், சாப நிவர்த்தி, இந்நூல் கூறும் சித்தி, வல்லாரைக் கற்பம், வெண்சாரைக் கற்பம், மேன்மூல கீழ் மூல சுத்திகள் என்பன பாடப் பெற்றுள்ளன. நான்காம் காண்டத்துள் நாதவிந்து, அண்ட பிண்டம், ஐம்மூலம், ஐங்காயம், சுத்த சலம், தேசி நீர் - ஊசிநீர், திகைப் பூண்டு, இரசக்கட்டு என்பனவும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனும் ஆறு ஆதாரங்களும், மேலும் சல்லிவேரின் இயல்பு, விடக் கல்லு, நவசித்தர், பதினெண்சித்தர்களின் தீட்சை, சூரிய, சந்திர மண்டலங்கள், பிற மும்மண்டலங்கள், அகார, உகாரம் போன்ற அட்சரங்கள், அட்சர பலிதம் என்பனவும் பேசப் படுகின்றன. ஐந்தாம் காண்டத்தில், யோகத்தின் சிறப்பு, பூரண வழலை, பூமி நாத பிண்டம், கைப்பாக செய் பாகங்கள், சக்தி உப்பு - சிவ உப்பு இயல்புகள், பிரமகற்பம், கேசரிக் குளிகை, கற்பக் கருக்கள், இராசிகளுள் துலாராசியின் இயல்பு, மச்ச ரேகையின் நிலை, பராபர தீட்சை, நிராதார தீட்சை, நிர்க்குண தீட்சை, நின்மல தீட்சை, பூரண தீட்சை, ஆதார தீட்சை, பரபூசை என்பனவும் விளக்கப் படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. முதல் காண்டம்.

பரமெனும் ஞானோ தயத்திற்
பரஞ்சுட ருலகுக் கெல்லாம்
சிரமென உதித்த ஞானத்
தெய்வரே யகன்றாள் காப்பு
வரமென வகார யோகம்
மறைப்புனூல் பாஷை யெல்லாங்
குறுமுனித் தமிழாற் செய்யக்
குமரனைங் கரன்றாள் காப்பே.

பாயிரம்

காப்பென உரைத்த வாதக்
கணக்கொரு லட்சம் தன்னைச்
சேர்த்தது பாதி யாகத்
திரட்டியே நூலை யெல்லாம்
நாற்பத்து மூன்று மொன்றாய்
நடத்திய காண்டந் தன்னைப்
பார்த்திடின் ஐந்நூ றாகப்
பாடைநூல் படித்திட் டேனே.

5. செப்பியதோர் வகைஎன்ன நூலின் மேலாந்
தீட்சையொடு கைபாகஞ் சேர்மா னங்கள்
தப்பிலாக் குருமுடிக்குங் கருமா னங்கள்
தத்துவ பஞ்சீகரணந் தர்க்க நோக்கும்
ஒப்புவமை யில்லாத மவுனக் கூறோடு
உறுதியுள்ள அட்டாங்க யோகக் கூறு
மெய்ப்புடைய காயகற்ப சமாதிக் கூறு
வெறியேறி யோடுமணி வேதைக் கூறே. 1

6. இதுவென்றா லண்டபகி ரண்ட மென்றும்
மகத்தான அண்டமது பேரண்ட மென்றும்
மதுவென்ற பரமண்ட மைந்தாங் காண்டம்
பகருமொழி பேரண்டம் பதியு மென்று
மதுவென்று மவுனஅண்ட மிதுவே யென்று
மகத்தான யென்குருவும் உபதே சித்தார்
சதுவென்ற சதாகுருவு மிதுவே யென்று
சமரசத்தின் பிரமமென்றும் சார்வாய் முத்தே.

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி; அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 'பரி பாடை' என்ற சொல் வந்துள்ளது. 'பரிபாடைத்திரட்டு 500' என்றும் பெயர் பெறும். பரிபாடை என்பதைப் 'பரிபாஷை' என அச்சுநூலும் குறிப்பிடுகிறது. இந்நூலுக்குச் சாட்சியாக உரோம முனி 500, நந்தி நூலும் உள்ளன எனக் கூறப்படுகின்றது. 1 இலட்சம் பாடல்களில் பாதியாகத் திரட்டி அவற்றை 43 காண்டங்களில் அமைத்து இறுதியில் 500 பாடல்களாக, ஐந்து காண்டங்களில் பாடியதாக இதன் பாயிரம் கூறுகிறது. 11. 1851 ஆம் வருசம் ஆகஸ்ட்டு மாதம் 13 ஆம் தேதி தமிழ் விகுரோதி கிருது வருசம் ஆவணி மாதம் முதல் திகதி போதம் வாரம் 2 மணிக்கு அகஸ்த்தியர் அருளிச் செய்த பரிபாஷை அன்நூறு காண்டம் மீர்சாயபுபேட்டை யிலிருக்கும் அயிதர்சாயபுக்கு மேல்படி ஆனைக்குளத்திலிருக்கும் தாவீது வாத்தியார் யெழுதிக் குடுத்தது முற்றிற்று முற்றும்.

IV. 1. R. 265 (b), R.8888(a). 2. சி.ம.மை. ஆ.நி. எண் 745 (g), த.ச.ம.நூ.எண்கள் 270 (a), 270 (b), 445 (a), 469 (a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் பரிபாஷை திரட்டு 500', தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் 5 காண்டங்களாலாயது. முதற்காண்டம் 101 பாடல்கள் முதல் 43 ஓலை வரையிலும், இரண்டாம் காண்டம் 100 பாடல்கள் 44 முதல் 85 ஓலை வரையிலும், மூன்றாங் காண்டம் 100 பாடல்கள் 86 முதல் 126 ஓலை வரையிலும், நான்காம் காண்டம் 101 பாடல்கள் 127 முதல் 172 ஓலை வரையிலும், ஐந்தாங் காண்டம் 100 பாடல்கள் 172 முதல் 215 ஓலை வரையிலும் அமைந்துள்ளன. தாமரை நூலகம் வெளியிட்டுள்ள அச்சுநூலில் முதலிருகாண்டங்கள் முறையே 100 பாடல்கள் பெற்றும், மூன்றாம், நான்காம் காண்டங்கள் முறையே 101 பாடல்கள் பெற்றும், இறுதிக் காண்டம் 100 பாடல்கள் பெற்றுமுள்ளன. இந்த நூல் பராபரத்துக்கு ஒப்பானது என்றும், சித்தர்களின் வாத நூல்கள் இதற்கு ஒப்பாகா என்றும் மற்றொரு பாயிரப் பாடல் கூறுகிறது.

அகத்தியர் பரிபாசை

I. **1. 360.** 2. R. 265 (b-1). ஆ. T.R. 249. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபாஷை. ஆ. Akattiyar paripāṣai. இ. அகஸ்திய சாமியருளிச் செய்த பரிபாஷை முதற்காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 23. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 46; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 101 பாடல்கள்.

ஆ. —

III. 1. 25 சித்திகள், 600 கற்பங்கள், 96 மருந்தின் பெயர்கள், 125 சரக்குகளின் பெயர்கள் இன்ன பிறவற்றை இந்நூல் மறைபொருளாகக் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. அகத்தியர் பரிபாசைத் திரட்டு முதற் காண்டம் என்ற இந்நூலில் முதலாவதாகத் திவாகரமுனிவருக்கு வணக்கம் சொல்லப்பட்டு, அதன்பிறகு முருகன், விநாயகன் ஆகியோருக்கு வணக்கம் சொல்லப்படுகிறது. தீட்சை விதிகள், குரு முடிக்கும் கருமானங்கள், தத்துவப் பஞ்சீகரணங்கள், யோகக் கூறு, இருபத்தைந்து சித்திகள், நூல் மறைவுச்சந்தேகங்கள், அறுநூறு கற்பங்கள், பூதவங்கிச விவரம், பிரமவுப்பின் பெயர், தொண்ணூற்றாறு மருந்தின் பெயர், நூற்று இருபத்தைந்து சரக்குகளின் பெயர், தீட்சை நீரின் பெயர், சுத்த கங்கை, மோட்ச மடைய, வாதம், சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய செய்திகள், பஞ்ச சுண்ணம் விபரம், சக்தி தீட்சை விவரம், பஞ்சாட்சரம் போன்ற செய்திகளை இந்நூல் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகத்தியசாமியா ரருளிச் செய்த பரிபாஷை முதற் காண்டம்.

பரமஞா னோதயத்தின் பரஞ்சுட ருலகுக் கெல்லாஞ்
சிரமென வுதித்தஞான தெய்வனா யகன்றாள் போற்றி
வரமென வாதயோகம் மறைப்புனூல் பாஷை யெல்லாங்
குருமுனி தமிழாற் செய்ய குமரனைங் கரன்றாள் காப்பே.1

காப்பென உரைத்த வாதம் கணக்கொடு லெஷ்சந் தன்னை
சேர்ப்பது பாதி யாகத் திரட்டிய நூலை யெல்லாம்
நாற்பதும் மூன்றும் மொன்றாய் நாட்டிய கற்பந் தன்னைப்
பார்ப்பது ஐந்நூ றாகப் பாஷைநூல் படித்திட் டோமே. 2

5. செப்பியதோர் வகையென்ன நூலின் மேலாம்
தீட்சையொடு கைபாகம் சேர்மா னங்கள்
தப்பிலாக் குருமுடிக்குங் கருமா னங்கள்
தத்துவபஞ் சீகரணந் தர்க்க நோக்கும்
ஒப்புவமை யில்லாத மவுனக் கூறு
உறுதியுள்ள அட்டாங்க யோகக் கூறு
மெய்ப்புடைய காயகற்ப சமாதிக் கூறு
வெறியேறி யோடுமணி வேதைக் கூறே. 1

6. தாக்கிப்பா ரிந்தனூ லைஞ்சு காண்டந்
தமைப்பார்க்கில் சமுசயங்க ளகன்று போகும்
நோக்கிப்பா ரிந்தனூல் தனக்குச் சாட்சி
உரோமரிஷி யைந்நூறும் நந்தி நூலும்
தேக்கிப்பா ரிதனாலே தெளியா துண்டோ
சிவசிவா குருதேடித் திரிய வேண்டாம்
பாக்கியமா நூலதனி லிரண்டாங் காண்டம்
பாடுகிறேன் முதற்காண்டம் பரமா முற்றே. 100

7. தெஷ்சணா மூர்த்தி துணையுண்டாக வேணும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. சிவனும்மாச்சு, அப்புவாச்சு, கிரகங்கொள்ளி போன்ற பரிபாசைச் சொற்கள் நூல் முழுதும் பயின்று வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 2240, R. 8888 (a). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 745 (g), த.ச.ம.நூ.எண்கள் 270 (a), 445 (c), 469 (a), 321 (a), 430 (b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் பரிபாஷை திரட்டு 500', தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் பரிபாஷை முதற் காண்டம்' என்ற இந்நூலுடன், அகத்தியர் வைத்திய சூத்திரம்

VI. சித்தர்கள் நோயின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக நாடிகளைக் கண்டுபிடித்து அவற்றை வெகுநுட்பமாக அறிந்து கொண்டதுடன் தவிர, குருமூலமாகச் சீடர்களுக்கும், தகப்பன் மூலமாகப் பிள்ளைகளுக்கும் தெரியும்படி வழங்கி வந்தார்கள். வைத்தியம் பார்ப்பதற்குத் தொடங்கும் முன்பே இதை முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

அகத்தியர் பின்னூல் 80

I. 1. **383**. 2. அ. R 6075. ஆ. T.R. 2546. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பின்னூல் 80. ஆ. Akattiyar piṉṉūl 80. இ. அகத்தியர் எண்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 23. 5. 27 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 45; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 83 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் செந்தூரம், பற்பம், சுண்ணம் போன்ற பலவகையான மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 377 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

5. முன்னூலெண் பதுஞ்சொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியே போற்றி
பின்னூலெண் பதுசொல்ல ஆயி காப்பு
பேரான யென்குருமா முருகன் காப்பு
அன்னூலில் ஈசனுப தேசத் தாலே
அகஷ்த்தியரு மென்றனுக்குப் பேரு மாச்சு
பொன்னான வாதத்தில் லெட்சங் காப்பு
பூட்டினது பூரணசூஷ்த் திரத்தைக் கேளே. 1

6. ஞானமென்ற யோகம்விட்டாலதுவுஞ் ஞானம்
நாளைவிட்டால் யோகமென்ன மரண யோகம்
பானமென்ற ரசத்தைவிட்டால் சுரபா னந்தான்
பரிகார நூலைவிட்டால் பலகா ரந்தான்
கோனமென்ன வழலைவிட்டால் ரசவா தந்தான்
குடல்வாதம் வேதமல்லால் குணமா காது
கானமென்ன யிந்தநூலெண் பதையுந் தொட்டால்
காசினியி லவன்யோகி கடைதான் முற்றே. 83

7. தேவிசகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. அதிகமான பாடல்கள் எதுகைத் தொடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 192(l), R. 265(a), R. 2487, R. 2529, R. 3705, R. 4744, R.6085. 2. த.ச.ம.நூ.எண்கள் 168, 262(b), 582, 586, சி.ம.மை. ஆ.நி. எண்கள் 235(n), 407(p), 458(a), 472(a), 546, 751(d), 786(f), 1347(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. சித்த மருத்துவத்தில் நாடி சோதனையும், நோய்க்குச் சிகிச்சையும் மிகப் புகழத்தக்கதாயுள்ளன. மருத்துவர்களோ சிகிச்சை காலத்தில் மருந்தின் குணத்தைக் கவனிக்காமல் மருந்து கொண்டபின் நோயாளியின் உணவு செரிமானம், சுவாசப்போக்கு, தாதுநிலைமை ஆகிய பிற குணங்களைக் கவனிப்பார்கள் என்று சாம்பசிவம் பிள்ளை அகராதி கூறுகிறது.

அகத்தியர் பின்னூல் 80

I. *1.* ***384.*** *2.* அ. R. 6085. ஆ. T.R. 2554. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் பின்னூல் *80.* ஆ. Akattiyar piṉṉūl 80. இ. அகத்தியர் சூத்திரம் எண்பது. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-*5. 9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 21. 5.* 26 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12. 42;* இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 80* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இந்நூல் செந்தூரம், பற்பம், சுண்ணம் போன்ற பலவகையான மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* வரிசை எண் *377* போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

5. முன்னூலெண் பதுஞ்சொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியே போற்றி
பின்னூலெண் பதுசொல்ல ஆயி காப்பு
பேரான யென்குருமா முருகன் காப்பு
அன்னூலில் ஈசனுப தேசத் தாலே
அகஷ்த்தியரு மென்றனுக்குப் பேரு மாச்சு
பொன்னான வாதத்தில் லெட்சங் காப்பு
பூட்டினது பூரணசூஷ்த் திரத்தைக் கேளே. 1

6. ஞானமென்ற யோகம்விட்டா லதுவுஞ் ஞானம்
நாளைவிட்டால் யோகமென்ன மரண யோகம்
பானமென்ற ரசத்தைவிட்டால் சுரபா னந்தான்
பரிகார நூலைவிட்டால் பலகா ரந்தான்

கோனமென்ன வழலைவிட்டால் ரசவா தந்தான்
குடல்வாதம் வேதமல்லால் குணமா காது
கானமென்ன யிந்தநூலெண் பதையும் விட்டால்
காசினியில் யிவன்யோகி கடைதான் முற்றே. 80

7. தேவிசகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. வடசொற்கள் பயின்று வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 80 பாடல்களைக் கொண்டு முற்றுப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 192(l), R. 265(a), R. 2487, R. 2529, R. 3705, R. 4744, R.6075, 2. த.ச.ம.நூ.எண்கள் 168, 262(b), 582, 586, சி.ம.மை. ஆ.நி.எண்கள் 235(n), 407(p), 458(a), 472(a), 546, 751(d), 786(f), 1347(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. சித்த மருத்துவன் முதலில் ஒரு நோயின் கூறுபாடுகளைக் கவனியாது, அதனால் ஏற்பட்ட பல கோளாறுகளையும், அவற்றின் மூல காரணங்களையும் மாத்திரம் தெரிந்து கொள்ள முயலுவான். ஆகையால் நோயின் வரலாற்றிலும் அதன் சிகிச்சை விசயத்திலும் மேல்நாட்டு மருத்துவத்தை விட, சித்த மருத்துவம் விசாலமான போக்கை உடையது.

அகத்தியர் பின்னூல் 600

I. 1. 385. 2. அ. R. 9079. ஆ.T.R. 4320. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் பின்னூல் 600. ஆ. Akattiyar piṉṉūl 600. இ. அகஸ்தியர் சுவாமி யருளிச் செய்த பின்னூல் அறுநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 104. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 208; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13.

பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 500 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சுவாமியருளிச் செய்த பின்னூல் அறுநூறு என்ற இந்நூலில் நம் உடம்பில் தோன்றும் நோய்களான கண்டமாலை, பிளவை, மேகம், கிராணி, புத்து இவைகளுக்கு மருந்துகளும், பத்திய முறைகளும், நோய் தீரும் முறைகளும் கூறப்படுகின்றன. மேலும் திமிர் வாதம், மண்டைச்சூலை, வெடிசூலை, குக்கிலபுத்து, குட்டம், கரப்பான், மூலம், பவுத்திரம், தண்டுசூலை, கபால சூலை, கிரந்தி, நீரடைப்பு, உதிரச்சூலை, சலமடைப்பு, குன்மம், வாய்வு, அண்டவாய்வு இவைகளுக்கு வல்லாதி சூரணம் செய்யும் முறை கூறப்படுகிறது. தசநாடி அறிய, தசவாய்வு அறிய, மரணகுறி அறிய, நாடி தொந்திப்பு அறிய, அவத்தைக் குணம் விபரம் அறிய, கர்ப்ப உற்பத்தி விபரம் அறிய, பிறந்த பிள்ளைக்குப் பருவகாலம் உணர்த்தல் முறை போன்ற செய்திகளும், விந்துகட்ட பூரண வல்லாதி செய்யும் முறையும், வாய்வு இருபத்தாறு, குன்மம், பாரிச வாய்வு, பக்கவாய்வு, இவைகளுக்குத் திரிலோக வாகடம் செய்யும் முறையும், மகோதரம், பாண்டு, கவுசி, காமாலை, குன்மம் இவைகளுக்குச் சந்தன வல்லாதித் தயிலம் செய்யும் முறையும், நேத்திர வியாதி 9க்கும் மகா நயன சஞ்சீவித் தயிலம் தயாரிக்கும் முறையும், கண்புத்து, நீர்ச்சூலை, மண்டைக்குத்து, பீனிசம், நாவில்சூலை, செவிநோய், வாய்வு, வாதம் இவைகளுக்கு மகாதிரிபலாதித் தயிலம் தயாரிக்கும் முறையும், தலையில் வரும் நோய்களுக்கெல்லாம் மகாஏலாதித் தயிலம் தயாரிக்கும் முறையும், விடாத சுரங்களுக்கு அதிகரணத் தயிலம் தயாரிக்கும் முறையும், கபால குட்டம், மண்டைக்குத்து, மண்டையிடி, பீனிசம், கிரந்தி, நீர்ப்பாய்ச்சல் இவைகளுக்குச் செம்பிராய்த் தயிலம் தயாரிக்கும் முறையும், சீபமூலம், இரத்த மூலம், வெட்டை, நீர்க்கட்டு இவைகளுக்குப் பெரும் பூசணிக்காய் எண்ணெய் தயாரித்தலும், மூலநோய்கள், மலக்கட்டு, மேகம், எலும்புருக்கி, ஈரக்குலைவலி, கிராணி, மூலம், தாகசுரம்

இவைகளுக்குக் குளிர்ச்சி எண்ணெய் தயாரித்தலும் பெரும்பாடு, கரப்பான், கண்டமாலை, சூலை இவைகளுக்கு நன்னாரி எண்ணெய் தயாரித்தலும் இந்நூலுள் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க. அகஸ்தியர் சுவாமி அருளிச்செய்த பின்னூல் அறுநூறு. இது சிவனூலென்றும் பெயர் வயித்தியம்.

5. ஆதியா மகண்டபரிபூ ரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருந்த ஐங்கரனே காப்பு
சோதியா மறுமுகவன் பாதங் காப்பு
துரியவெளி தன்னில்நின்ற சுந்தரியே காப்பு
வாதியா மென்குருவின் பாதங் காப்பு
மகத்தான பெரியோர்கள் பாதங் காப்பு
பேதியாம் வயித்தியந்தான் அறுனூ றாகப்
பேசுறேன் வாணிபாதம் பேராங் காப்பே. 1

6. தானான கலைக்கிஞானம் தன்னைப் பாரு
சாற்றினார் ராமதேவர் தன்னூல் பாரு
வானான போகருட யெழுனூத்தி லப்பா
வைத்தசவுக் காரமது சுன்னச் செய்து
கோனான சட்டைமுனி னூலுக் குள்ளே
கூட்டினதோர் சவுக்காரந் தன்னைப் பாரு
நானான துகையெல்லாம் பாத்துத் தேறி
நான்சொன்ன கல்சுன்னஞ் செய்து போடே. 500

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. ர/ற வேறுபாடில்லை. பாடல்கள் எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 'அகத்தியர் பின்னூல் 80' என்ற நூலிலிருந்து இந்நூல் மாறுபட்டுள்ளது. இந்நூலில் பெரும்பாலான நோய்களுக்கு எளிய முறையில் மருத்துவம் கூறப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் அமைந்த மருத்துவ நூல்களிலிருந்து அறுநூறு பாடல்களைத் திரட்டி இந்நூல் பாடப் பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும் அகத்தியர் பெருநூல் ஒன்றிலிருந்து அகத்தியர் பின்னூல் 80, அகத்தியர் முன்னூல் 80 என்று செய்திருப்பது போல் இந்நூலுக்கும் அகத்தியர் பின்னூல் 600 என்று பெயரிடப்பட்டிருக்கிறது. எனவே இந்நூல் ஒரு வைத்தியத் திரட்டு நூலாகும். மேலும் 600 பாடல்களைக் கொண்ட 'அகத்தியர் குருநூல் வைத்தியம் 600' என்ற நூல் இந்நூலகத்தில் D.2326, D.2420 என்ற எண்களில் இடம்பெற்றுள்ளது.

அகத்தியர் புட்ப மாலிகை 50

I. **1. 386.** 2. அ. R. 267(q). ஆ. T.R. 251. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் புட்ப மாலிகை 50. ஆ. Akattiyar putpamālikai 50. இ. அகஸ்தியர் அருளிச்செய்த புஷ்ப மாலிகை 50. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர்பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914–15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 11. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 21; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 51 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைச் சரக்குகளை நீற்றும் முறையும் முப்பு தயாரிக்கும் முறையும் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. அகத்தியர் புட்ப மாலிகை ஐம்பது என்ற இந்நூலில் முப்புவுக்குத் தொடர்பான செயநீர், பூரச் சுண்ணம், இரவி பீசவுப்பு என்னும் உப்பினைச் சேகரிக்கும் முறைகள் விளக்கப் படுகின்றன. மேலும் இந்நூல் பச்சைக் கற்பூரம் என்னும் பொருள் எவ்விதம் குரு முடிக்க உதவுகிறது என்பதைத் தெளிவாகக் கூறுகிறது. சகலவிதமான உலோகங்கள் மற்றும் கடினப் பொருட்களை எவ்விதமெல்லாம் புடமிட்டு நீற்ற வேண்டும் என்பது பற்றிய குறிப்புகள், புடமிடும் முறைகள்,

புடத்தில் வைக்கப்படும் எரிபொருள்களின் நுட்பங்கள் ஆகியன கூறப்படுகின்றன. குண்டலினி யோக முறையும் நூலின் இறுதியில் குறிப்பிடப்படுகிறது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியரருளிய புஷ்ப மாலிகை.

5. ஆதியென்ற அண்டமெல்லாம் படைத்த தாயி
ஆனந்த போதமதாய் நின்ற ரூபி
சோதியென்ற நாதவிந்து மௌன மாகிச்
சொல்லடங்காப் பொருளாகிச் சூட்சம மான
வேதிபரா சக்திமனோன் மணியின் பாதம்
விளங்கியறி வாற்பூசி மௌன முற்று
மேதினியிற் கும்பமுனி யென்ற பேரு
மெய்ஞானச் சரவணனைப் போற்றி னேனே. 1

6. சஞ்சீவியின் மார்க்கம்பார் சொல்லி விட்டேன்
சற்குருவின் கிருபையினால் சாற்றி னேன்யான்
சிரஞ்சீவி யாயிருப்பாய் புட்ப மாலை
சீக்கிரத்தில் சித்தியுண்டாஞ் செய்கை மெத்த
தருஞ்சீவ னாயுசுமா யுகாந்த மட்டுந்
தற்பரனா னந்தியரு ளாலே லெய்தும்
பெருஞ்சீவி வழலையுட மார்க்கஞ் சொன்னேன்
ஏகாந்த மவுனிவிந்து விளக்க முற்றே. 51

7. —.

8. மூலம். 9. முன்னிலையாரை அழைத்துக் கூறும் பாங்கில் அமைந்தனவாய் இந்நூலின் பாடல்கள் காணப்படுன்றன. அந்தாதியாகவும் பாடல்கள் அமைந்துள்ளன. 10. பச்சைக் கற்பூரத்தைக் கொண்டு முப்புவுக்கு அடிப்படையான குரு வித்தை செய்யும் முறை, மற்றும் பல்வேறு சரக்குகளை நீற்றுகிற முறை பற்றிய விளக்கங்கள் மிகத் தெளிவாக இந்நூலுள் கூறப்படுகின்றன. 11. தனவருடம் வைகாசி 14 ஆம் தேதி சோமவாரம் ரோகிணி நட்சத்திரத்தில் சம்பூரணம். புட்பமாலிகை முற்றிற்று. நீடூழி வாழ்க.

IV 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டின் முதல் இதழில் சுப்பிரமணியர் அருளிச் செய்ததாகக் குறிப்பு உள்ளது. இதில் உள்ள பிற நூல்கள்: a. கொங்கணர் முதற் காண்டம் நாற்பத்தொன்று, b. அகத்தியர் வழலை பதினாறு, c. தட்சணாமூர்த்தி வழலை முப்பது, d. கொங்கணர் முதற் காண்டம் நாற்பத்தொன்று, e. அகத்தியர் முப்பு ஐம்பது, f. அகத்தியர் சூத்திரம் நாற்பத்தெட்டு, g. உரோமரிஷி சூத்திரம் இருபத்தைந்து, h. அகத்தியர் வழலை முப்பது, i. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் பன்னிரெண்டு, j. இடமரானந்தர் சூத்திரம் பதினாறு, k. உரோமரிஷி நாயனார் சூத்திரம் ஐம்பது, l உரோமரிஷி சூத்திரம் பதினாறு, m. உரோமரிஷி சுருக்கம் பதினாறு, n. அகத்தியர் கருக்கிடை 12, o. கூர்மானந்தர் சூத்திரம் 50, p. அகத்தியர் முப்பு பதினாறு ஆகியன.

அகத்தியர் புனைசுருட்டு 18

I. *1.* ***387.*** *2.* அ. R. 280(g-1). ஆ. T.R. 263. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் புனைசுருட்டு 18. ஆ. Akattiyar puṉaicuruṭṭu 18. இ. அகஸ்தியரருளிய புனைசுருட்டு மந்திரம் பதினெட்டு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை–5. *9.* காதிர்பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. *10. 1914–15.*

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 6. 5.* 30 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12. 11;* இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 18* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* காளி, இருளன், கருப்பன், மதுரை வீரன், மாடன், வடுகன், அனுமான் முதலிய தெய்வங்களின் அருளால் விரோதிகளுக்குத் துன்பம் உண்டு பண்ணுவதற்குரிய வழிகளை இந்நூல் கூறுகின்றது. *2.* மந்திரம். *3.* அகத்தியர் புனைசுருட்டு மந்திரம் பதினெட்டு என்ற இந்நூல் அட்டகருமங்களான ஆகர்சணம், உச்சாடனம், தம்பனம் பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்துவேசணம் ஆகியவற்றின் செயல்பாடுகளை விளக்கிக் கூறுகின்றது.

மேலும் சிறு தெய்வங்களான சின்னு, கருப்பன், மாடன், சங்கிலி, வடுகன், காளி போன்ற தெய்வங்கள் இருக்கும் திசைகளும். அத்தெய்வங்களுக்குரிய மந்திரங்களும் சக்கரங்களும் கூறப்படுகின்றன. சின்னு – கிழக்கு, கருப்பன் – மேற்கு, மாடன் – கன்னிமூலை, வடுகன் – ஈசானியம், காளி – வடக்கு, அரசன் – தெற்கு என்று இத்தெய்வங்கள் வீற்றிருக்கின்ற திசைகளும் பேசப்படுகின்றன.

4. அகஸ்திய சுவாமிகளருளிய புனைசுருட்டு 18.

5. சீருலவு மஷ்டகர்ம மெட்டுவகைத் தொழிலுந்
தெரிந்தெடுத்துப் புனைசுருட்டில் தெளிவு
தன்னைக்கூறக்
காருலவு மைங்கரனுஞ் சற்குருவுங் காப்பு
கமலமலர் பதத்துடையான் சிவனயன்மால் காப்பு
வாருலவும் வனசமலர் மாதுதிரு மாதை
வாழ்த்திமனம் தேத்தியுளஞ் சாற்றிடுவோர் கேளீர்
பேருலவுந் தானநவ மானசிவ யோகி
பெரியவருக் காகுமிதிற் பேசுங்கருத்துத் தானே. 1

6. வைத்தவகத் திருநீறு மாரணசக் கரத்தைக் கீறி
மந்திரமுஞ் சொல்லியவன் பேருங் கூட்டி
சுத்துமடா நிமிசந்தான் மாரணமே யாகுந்
சுருக்கிதுபோ லொன்றுமில்லை தொல்லுலகில் தானு
கத்தியெண்ணா முன்னென்று செபித்தா லென்னக்
காசினியிற் கருவோடே செய்தாலல்லோ பலிக்கு
மெத்தொழிலு மாகுமிந்தப் புனைசுருட்டிற் கருத்தா
லின்னூலை மெய்யானால் சத்தியமா முற்றே.18

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையிடத்தாரிடம் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட இந்நூல் மாந்திரீகம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூலாக விளங்குகின்றது. 'புனைசுருட்டு' என்பதற்குச் சதியோசனை, சூது என்று பொருள். இங்கு அட்ட கருமங்களினால் செய்யப்படும் மாந்திரீக மந்திரங்கள் இப்பொருளில் குறிக்கப்படுகின்றன. 11. இல்லை.

iv. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

v. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

vi. இந்நூலில் கூறப்படும் சின்னு, கருப்பன், மாடன், சங்கிலி, வடுகன் போன்ற தெய்வங்களுக்குச் சாராயத்துடன் சுருட்டு வைத்து, அத்தெய்வங்களை வரவழைக்கும் மந்திரங்கள் கூறுதல் பெருவழக்காகக் கிராமங்களில் காணப்படுகின்றது.

அகத்தியர் பூசாவிதி 200

i. **1. 388.** 2. அ. D. 1819. ஆ. T.D. 716. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்தியர் பூஜா விதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை–5. 9. —. 10. —.

ii. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 62. 5. 25 x 3 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. வர்ணக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 124; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 199 பாடல்கள்.

ஆ. —.

iii. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன் பூசை, சந்திர பூசை போன்ற பலவகைப் பூசை முறைகளையும் அட்டகரும முறைகளையும், யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. அகத்தியர் பூசாவிதி இருநூறு என்ற இந்நூலில் சிவயோக சித்தர்களுக்கெல்லாம் பூசை விதிகள் சொல்வதாகவும், இதை மவுனமாகக் கேட்டால் மேலான ஞானம் கிடைக்கும் என்றும், இது சித்தர்களுக்காகவே சொல்லப்பட்ட நூல் என்றும் கூறப்படுகிறது. முதல் பூசை வினாயக பெருமானுக்கும் பிற பூசை எல்லாம் பின்பு செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. மேலும் குகைவாசல் திறக்க, சிதம்பரச் சக்கரம், அட்டகர்ம சிதம்பர பூசை, சமித்துவிவரம், கொங்கணருக்குக் கசாய மீய்ந்தது, இரசகற்பங் கொள்ளல், யோகம், தம்பனம், மோகனம், மாரணம், உச்சாடனம்,

வசியம், ஆகர்சணம், பேதனம், வித்துவேசணம், பிரம்மன் பூசை, நவசாபம் தீர்க்க, விட்டுணுபூசை, மயேசுவரன் பூசை, கொங்கணர் பெருமை, சித்தர்கள் குளிகை கொடுத்தது, இடகலை சந்திரபூசை, குருபூசை, நற்சீடன், சூரிய யோகம், சந்திர யோகம், மேல்வாசல், வான்பொருள், கைலாச தேகம், மவுனம், யோகாதனம், ஈசன் குருவாய் வருவது, தசநாதம், சித்தர் பூசை, இரசலிங்க பூசை, சீடனுக்கு உபதேசிக்கும் முறை, மூடர்கள், நவநியாசம், நவமுத்திரை, தீட்சைவிதி, தேவி பூசைமார்க்கம், மடையர் பூசை, அங்கநியாசம், சுரநியாசம், காமகளா நியாசம் 3, சத்திநியாசம் 4, சிவநியாசம், சோடசநியாசம், சடாதார நியாசம் 7, நிராதார நியாசம், மாதுகரநியாசம் 9, நவமுத்திரை, சங்கமாண்டி, ஞானி, கன்மதன்மம், மூடர்கள் அமாவாசை, புத்தி, நூலில் சொன்ன விவரம் ஆகிய செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

4. —.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களக்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழாக யட்டாங்கம் நடன மாடுஞ்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க் கையா
வாரணமா முகத்தானே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒன்றான மனதுருமை சீஷ னுக்கு
உரைசொல்லில் பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டாங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பும் மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டு
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போத்திக்
கருணைபெரும் பூசைவிதிக் கருவாம் முத்தே. 199

7. அகத்தியர் பூரண சூத்திரம் முகிந்தது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பற்றச் சொல்லு என்பது பத்தச்சொல்லு என்றும், முற்றே என்பது

முத்தே என்றும் பேச்சுவழக்குச் சொற்கள் பயின்று வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். இதன் காப்புப் பாடலில் சித்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் சொல்லப்படுகின்றன. எனவே இந்நூல் சித்தர்களுக்காக எழுதப்பட்ட நூல் என்பது தெரிய வருகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1887, R.9(b), R. 1454(b), R. 3382, R. 4697, R. 4761, R.9081. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சாவிதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. பூசாவிதி என்பதற்குப் பூசைக்கு உரிய நியமங்கள் என்று விளக்கம் கூறுகிறது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி. இங்குப் பூசைக்குரிய நியமங்கள் கூறப்பட்டாலும் அட்டகருமங்களைப் பற்றியும் சூரிய யோகம், சந்திர யோகம் போன்ற யோக முறைகளைப் பற்றியும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. 389. 2. அ. D. 1887. ஆ. T.D. 716. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்திய பூசைவிதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை–5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 62. 5. 26 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 124; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. 199 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன் பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகருமப் பூசை

முறைகளையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 388 போன்றது.

4. —.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழாக யட்டாங்கம் நடன மாடுஞ்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்து சித்தர் கையால்
வாரணமா முகத்தோனே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒன்றான மனதுருமை சீஷ னுக்கு
உரைசொல்லிப் பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பு மஞ்சளும்போல குறிகள் நாட்டி
சுழியினாலே நாட்டமுறத் தொட்டுக் காட்டு
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போத்திக்
கருணைபெரும் பூசைவிதி கருதுவர் முத்தே. 199

7. அகத்தியர் பூரணசூத்திரம் முடிந்தது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. சுழினை என்பது சுளினை என்றும், சீடன் என்பது சீஷன் என்றும், பற்றச் சொல்லு என்பது பத்தச் சொல்லு என்றும் வந்துள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. பாடபேதங்கள் நிறைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். இந்நூல் யோகம் செய்வதற்கான நிலைகளைக் கூறுகிறது. இதிலிருந்து யோகம் செய்வதற்கு முன்னால் உடம்பைத் தூய்மை செய்து கொள்ள வேண்டும் என்பது அறியப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1819, R. 9(b), R. 1454(b), R. 3382, R. 4697, R. 4761, R.9081. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலின் 149 பாடல் பூசைக்குரிய நவ முத்திரை களைப் பற்றிக் கூறுகிறது. அவை, தேனுமுத்திரை, யோனி முத்திரை, சின்மயமுத்திரை, சிவலிங்க முத்திரை, கும்ப முத்திரை, பிறை முத்திரை, இரவியின் முத்திரை, நாத முத்திரை, விந்து முத்திரை என்பன.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. **390**. 2. அ. R.9(b). ஆ. T.R. 2. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்திய பூசை விதி. 4.—. 5. —. 6. சங்கர நாராயணப் பிள்ளை. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை–5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 37. 5. 34 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 74; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன்பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகருமப் பூசைமுறை களையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 388 போன்றது.

4. ஹரிஓம் பூரண சூத்திரம். அகஸ்தியர் பூஜாவிதி.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளும்
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான அஷ்டாங்கம் நடன மாடுஞ்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க் கப்பா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒண்ணான மனதுரிமை சீச னுக்கு
உரைசொல்லிப் பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் காட்டியே மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டி
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப். போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாய் முற்றே. 201

7. தெட்சிணாமூர்த்தி பூசை விதி முற்றும். வாலாயியீசுபரி பாதார விந்தமே கெதி, நாலுகுடி யோக வாலையானந்த குரு பாதார விந்தமே கெதி.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப் பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள், மந்திரச் சொற்கள் முதலியன பயின்று வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. பூசை விதி 200 என்ற நூல் இருப்பதுபோல் தீட்சை விதி 200 என்றும் அகத்தியர் பெயரில் நூல்கள் உள்ளன. 11. மன்மத வருசம் ஆவணி மாதம் 7 ஆம் தேதி குந்தம்பாக்கம் திருவேங்கிட முதலியார் அவர்கள் குமாரர் ராமசுவாமி முதலியார் அவர்களுக்கு வீரராகபுரம் சங்கர நாராயணப் பிள்ளை எழுதிக் கொடுத்தது. நன்றாக தேவிசகாயம்.

IV. 1. D. 1819, D. 1887, R. 1454(b), R. 3382, R, 4697, R.4761, R.9081. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036.3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலின் 138 ஆம் பாடல் சித்தர் பூசை பற்றிக் கூறுகிறது. விந்துவால் போகர் பூசையும், சுழிமுனையிற் காலாங்கிப் பூசையும், இலாடத்தில் அகத்தியர் பூசையும், மூவரையிற் நவசித்தாள் பூசையும், நால்வரையிற் சின்மயத்தின் பூசையும், ஐவரையிற் கொங்கணர் பூசையும், செப்து சித்தர்கள் பூசித்தனர் என்று கூறுகிறது.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. 391. 2. அ. R. 1454(b). ஆ.T.R.1014. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்தியர் பூசை விதி. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 45. 5. 25 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 89; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1.சிதம்பர பூசை, மயேச்சுரன்பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகரும பூசைமுறை களையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம்,மருத்துவம். 3. வரிசை எண் 388 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை. அகஸ்தியர் பூஜாவிதி 200 நன்றாக.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான அஷ்டாங்கம் நடன மாடுஞ்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்து சித்தர்க் கையா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒண்ணான மனதுரிமை சீஷ னுக்கு
உரையொழுகி யறிவுள்ளே வுணரச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டி
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாய் முற்றே. 201

7. குருபாதந் துணை.

5. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. கிழமை என்பது கிளமை என்றும், கார்த்திகை என்பது காற்த்திகை என்றும், ழ/ள, ர/ற வேறுபாடில்லாதும் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. செயவருஷம் கார்த்திகை மாதம் 21 ந்தேதி வியாழக்கிழமை உதையாதியில் தெட்சணாமூர்த்தி பூசைவிதியெழுதி முகிந்தது முற்றும். மீனாட்சி அம்மன் பாதார விந்தமே துணை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 4697, R. 3382, R. 4761, R.9081. 2.சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலின் 110 ஆம் பாடல் சூரிய யோகம் செய்வதைப் பற்றிக் கூறுகிறது. பங்குனி, சித்திரை மாதங்களில் இதமான சூரிய உதய காலத்தில் கண்கூசாத இளம் வெயிலில் சூரியனைப் பார்த்துத் தீர்க்கமாய்ப் பின்கலைழிற் கண்மூடிப் பார்க்க வேண்டும். அப்போது நூறு மடங்காய் அருணன் காந்தி வீசும். நுனியான சுழினையிலே உற்றுப் பார்த்தால் கண் கெடாது. அதுவே சூரிய யோகமாம்.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. **392**. 2. அ. R. 3382. ஆ. T.R. 1715. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்தியர் பூசைவிதி. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.ஆ.நூ., சென்னை–5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 51. 5. 16 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 101; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1.சிதம்பர பூசை, மயேச்சுரன்பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகரும பூசைமுறை களையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 388 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் சூஸ்த்திரம்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களக்கமாய்ச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான அட்டாங்க நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்புகிறேன் மனந்தெளிந்து சித்தர்க் கையா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒண்ணான மனதுரிமை சீஷ னுக்கு
உரைசொல்லிப் பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டி
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாய் முற்றே. 200

7. தேவி சகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ர/ற, ழ/ள வேறுபாடில்லாமல் அமைந்துள்ளன. சீஷன், அகஸ்தியர் போன்ற சொற்களில் வட எழுத்துக்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 'சிக்காமல் சொல்லுகிறேன் புலத்தியா கேளு' என்று அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவது போலவும் பல பாடல்கள் அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 4697, R. 4761, R.9081. 2.சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036.3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. சிவநியாசம் (பாடல் 164): பகைவனையும் தானெண்ணிய பொருள்களையும் இருந்த நிலை பெயராது தம்பிக்கச் செய்யும் தம்பன மந்திரத்தால் மவுனமாக வலப்புறத்தே யொருபக்கஞ் சார்ந்து உச்சி தொட்டு, வலக்கண்ணும், வலச்செவியும் தொட்டு ஓத வேண்டும். மேலும் வலது புயம், வலது மார்பு, வலது விரல், வலது மூட்டு, வலது பாதம் இவற்றைத் தொட்டு ஓத வேண்டும். இவ்வாறு செய்வது சிவநியாசம் என்பதாம். சக்திக்கு இடதுபுறத்தே ஓத வேண்டும் என்றும் கூறுகிறது.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. **393**. 2. அ. R. 4697. ஆ. T.R. 2071. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்தியர் பூசை விதி. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 45. 5. 22 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 89; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1.சிதம்பர பூசை, மயேச்சுரன்பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகரும பூசைமுறை களையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 388 போன்றது.

4. ஆதார மாறும் அகண்ட குரு பாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கந் – நாதமுறும்
விந்துவே மூலம்விளங்கும் பூசா விதியால்
தந்திமுகத்தோன் கருணை தான்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களக்கமாய்ச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மமைவதல்லோ ஞான வாழ்க்கை
புகழான அட்டாங்க நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்து சித்தர்க் கய்யா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒண்ணான மனதுரிமை சீஷ னுக்கு
உரைசொல்லிப் பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மௌனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டி
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாய் முற்றே. 201

7. குருவுண்டு. அகத்தீசர் பாதமே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ஆமப்பா, தாமப்பா, ஓமப்பா, சோமப்பா (பாடல் 123) போன்று முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கிலும் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 3382, R. 4761, R.9081. 2.சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. அகத்தியர் பூசாவிதி 200 என்ற நூலில் சந்திரயோகம் என்ற ஒரு பகுதி அமைந்துள்ளது. இதில் பூரணச் சந்திரனை நோக்கி நவமி முதல் 60 நாள்கள் இடகலையில் இலயம் பண்ண வேண்டும் என்றும், பின், பின்கலையில் 60 நாட்கள் காற்றை இலயம் பண்ண வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்படிச் செய்தால் பூரணமான யோகம் கிட்டும் என்று அப்பகுதி கூறுகிறது.

அகத்தியர் பூசாவிதி 200

I. *1.* 394. *2.* அ. R. 4761. ஆ. T.R. 2099. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்தியர் பூசை விதி. *4.* —. *5.* —. *6.* மெஞ்ஞானம். *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-*5. 9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 44. *5.* 22 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிறுசிதைவு. *12.* 88; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 8 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *17.* 201 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* சிதம்பர பூசை, மயேச்சுரன்பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகருமப் பூசைமுறை களையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். *2.* மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். *3.* வரிசை எண் 388 போன்றது.

4. ஆதார மாறு மகண்டகுரு பாதம்
வேதாகமத்தின் விதிமார்க்கந் – நாதமுறும்
விந்துவே மூலம் விளங்கும் பூசாவிதியால்
தந்திமுகத்தோன் கருணை தான்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களக்கமாய்ச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான அட்டாங்கம் நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கம்
செப்பினேன் மனந்தெளிந்து சித்தர்க் கய்யா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒண்ணான மனதுரிமை சீஷ னுக்கு
உரைசொல்லிப் பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு

சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டி
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாய் முற்றே. 201

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ர/ற வேறுபாடில்லாது பாடலில் பயின்று வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ள நூல். 11. இது மெஞ்ஞானம் எழுதினது.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 3382, R.4697, R.9081. 2.சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. யோகம்: ஒரு யோகியானவன் பரகாயப் பிரவேசம் அதாவது பிறருடைய உடம்பிற்குள்தான் புகுந்துவிடக் கூடும். இறந்த பிரேதத்தில் கூடப் பிரவேசிக்கலாம். பிறகு இவ்வுடம்போடு எழுந்து இங்குமங்கும் கூடத் திரியச் செய்யலாம். அன்றியும் புதிதாக மனிதரைச் சிருட்டிக்கச் செய்யலாம். மனதையும் உண்டாக்கலாம். இவை சிருட்டித்த உடம்பு, 'உண்டாக்கின மனது' என்று கூறப்படும். (சாம்பசிவம் பிள்ளை அகராதி)

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. 395. 2. அ. R. 9081. ஆ. T.R. 4268. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pucāviti 200. இ. அகத்தியர் பூசைவிதி. 4.—. 5.—. 6.—. 7.—. 8.அ.கீ.சு.நூர., சென்னை-5. 9.—. 10.—.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 18; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு, இறுதி ஓலைகள் இல்லை. 17. 47 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன்பூசை போன்ற பலவகைப் பூசைமுறைகளையும் அட்டகரும பூசைமுறை களையும் யோகம், மருத்துவம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 388 போன்றது.

4. ஆதார மாறு மகண்டகுரு பாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கந் – நாதமுறும்
விந்துவே மூலம் விளங்கும் பூசாவிதியால்
தந்திமுகத்தோன் கருணை தான்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
கலக்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான அட்டாங்கம் நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கம்
செப்பினேன் மனந்தெளிந்து சித்தர்க் கையா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. செப்பினார் கொங்கணர் மொன்று போல
....னார் ஆறுவரை நேரே கீறி
திடமாக ஆறுவரை குறுக்கே கீறி
செயமாக நமசிவய மென்று மாறி
செப்பிறேன் யவசிமநவென்று மாறி
சித்தியிட க..... ....
.... தடுப்பில்லை புரியட்டமாயி கோபம்
தம்பனமாம் செ.... 47

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ர/ற, ழ/ள வேறுபாடு இல்லாது பாடல்களில் வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 3382, R. 4697, R.4761. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. அகத்தியர் சூத்திரம் 9 (R.6214) என்ற நூலும் பூசை முறைகளைச் சுருக்கமாகக் கூறுகின்றது. இச்சுவடிக்கட்டில், அகத்தியர் தீட்சை விதி 200(R.9018), நந்தீசுவரர் தண்டகம் 100 (R.9018(a)) ஆகிய இரு நூல்கள் உள்ளன.

அகத்தியர் பூரண சந்திரோதய வாலை 200

I. 1. **396**. 2. அ. R. 6087. ஆ. T.R. 2555. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சந்திரோதய வாலை 200. ஆ. Akattiyar pūraṇa cantirōtaya vālai 200. இ. அகஸ்த்தியர் பூரண சந்திரோதய வாலை. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை–5. 9. —. 10. —.

II. அ.1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 29. 5. 26 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 58; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பெண்களைக் கொண்டு முப்பு செய்தல், அஞ்சனமை தயாரித்தல், செப்பிடு வித்தை செய்தல், பஞ்சபட்சி சாத்திரம் ஆகியவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. அகத்தியர் பூரண சந்திரோதய வாலை என்ற இந்நூல் பெண்களை நான்கு வகையாகப் பிரித்து, முதல் மூவகைப் பெண்களின் மூலம் முப்பு செய்வதைக் குறிக்கிறது. ஒவ்வொருவகைப் பெண்ணுக்கும் உரிய இலக்கணம் கூறப்படுகிறது. நான்காம் வகைப் பெண் எதற்கும் ஏற்றவளல்ல என்றும் கூறுகிறது. முதல்வகைப் பெண் சர்வ இலட்சணமும் பொருந்தியவளாக வருணிக்கப்படுகிறாள். அவளை வெயில் படாமல், நல்ல உணவு ஊட்டி வளர்த்து வாரம் மூன்றுமுறை எண்ணெய் முழுக்காட்டி, பசுநெய், வாழைப்பழம் உண்ணக் கொடுத்து அவள் பருவம் அடையும் நேரம் பார்த்து வரவேண்டும். பூரண சந்திரன் வரும்

பௌர்ணமியில் வாழைச்சாறும் சாதிக்காயும் கலந்து அவள் குறியில் சேர்க்க வேண்டும். பருவம் அடைந்தபின் ஏழாம் நாள் அவள் காமப்பாலை வாழையிலையில் எடுத்துத் துருசு சேர்த்து வெயிலில் காயவைத்து இலிங்கத்தில் பூச மெழுகாகும். இதுவே முப்புவாகும். இதேபோல் இரண்டாம் சாதிப் பெண்ணுக்குச் சீரகம் கூவிளைவிதை தின்னக் கொடுத்துப் பருவம் அடைந்த முதல் மூன்று நாளும் தூங்கி எழுந்தவுடன் ஊறிவரும் சுரோணிதப்பாலை முதல்நாள் பீங்கானில் வாங்கி இரவு பனியில் வைத்தும் மறுநாள் வெயிலில் வைத்தும் ஈருள்ளிச்சாறு சேர்த்து மனோசிலை, துரிசு, கந்தகம் சேர்த்தரைத்து ஏழு விராட்டியில் புடம் போடவேண்டும். இது இரண்டாம் வகை முப்பு என்று விளக்கப்படுகிறது. இவை இரசவாதம், காயகற்பம் ஆகியவற்றுக்குப் பயன்படுவன. இவைதவிர வசிய மை தயாரித்தல், சொக்குப்பொடி தயாரித்தல், செப்பிடு வித்தை செய்தல், கருங்கோழியின் மஞ்சள் முட்டையால் வித்தை செய்தல், பஞ்சபஞ்சி சாஸ்திரம், வசியம் செய்தல் ஆகியனவும் கூறப்படுகின்றன.

4. —.

5. மூச்சுவிடும் போதிலந்த ரசவா தப்பெண்
மோகனபூ ரணசந்திரோ தயத்தைப் பாட
ஆச்சரிய மாயிரத்தி னிருநூ றாய்ந்து
அரன்சொன்னா ரறிந்துமிந்த யிருனூ றுந்தான்
நீச்சமில்லை நிலைப்புமில்லை கரையுங் காணோம்
நெடுந்தூர வரைக்கோடும் நெளித மில்லை
பேச்சரிய ஆயியுட பதத்தைப் போற்றிப்
பிதற்றுகிறேன் குமரகுரு பரன்காப் பாமே. 1

6. வாருறை சந்திரர்வாய்க் கியமெய் நூலைப்
பேருரை செய்யும் பெரியோரை நாடிடு
சீருரை செய்தொழில் தேவரெவர் சித்தி
ஏருவ ரீதிரு நூறுரை முற்றே. 200

7. பூரண சந்திரோதய வாலை யிருநூறும் எழுதி முகிந்தது. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், முன்னிலையில், ஏவலில் அமைந்துள்ளன. பொருள் விளங்காத பாடல்களும் மந்திர

சொற்களும் மிகுந்துள்ளன. கடின நடையுடன் பாடல்கள் அமைந்திருப்பதால் பல இடங்களில் பொருள் தெளிவாக விளங்கவில்லை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். வாலை என்பது 12 அல்லது 13 வயதுள்ள அப்பொழுதுதான் பருவம் அடைந்த பெண்ணைக் குறிக்கும் சொல். அவளுடைய காமப்பால் கொண்டு முப்பு செய்வதைக் கூறுவதால் இந்நூல் பூரண சந்திரோதய வாலை எனப் பெயர் பெற்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 10(c), 748, 308(c). த.ச்.ம.நூ. எண் 311(d) 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. தாமரை நூலக வெளியீட்டுக்கும் இந்நூலுக்கும் இடையே பாடவேறுபாடுகள் உள்ளன. இதேநூல் 'தட்சிணாமூர்த்தி பூரண சந்திரோதய வாலை' என்னும் பெயரில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் எண் 311(d) இல் இடம் பெற்றுள்ளது. அதுவும் பாடவேறுபாடுடன் உள்ளது

அகத்தியர் பூரண சூத்திரம் 16

I. **1. 397.** 2. அ. R. 193(c). ஆ. T.R. 177. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 16. ஆ. Akattiyar pūraṇa cūttiram 16. இ. அகஸ்தியநாயனார் அருளிச்செய்த பூரண சூத்திரம் 216க்கு சூத்திரம் 16. 4.—. 5.—. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை–5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 9; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்கான மூலிகைகளும், இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் முறைகளும்

இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. 2. இரசவாதம். 3. அகத்தியர் பூரண சூத்திரம் பதினாறு என்ற இந்நூலில் இரசவாதம் செய்வதற்கான மூலிகைகள் பற்றியும் அவை மூலம் இரசவாதம் செய்து தகுந்த நிலைக்குப் பதப்படுத்துதல் பற்றியும், இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன. தாம்பிரத்தைச் சிவக்கக் காய்ச்சி, பொற் சீந்தில் சாற்றில் தோய்த்து, ஆறவிட்டுப் பிறகு மூசையில் வைத்து உருக்க ஈயம் போல் விரைவில் உருகிவிடும். கொடுக்காப்புளி இலை இரண்டு படி எடுத்து அரைத்து அதைத் தேங்காய்ப் பாலில் கரைத்துச் சூரியப் புடத்தில் இரண்டு நாள் வைத்து அதில் தாம்பிரத்தை உருக்கிப் பத்துமுறை சாய்க்க வெள்ளையாக ஆகும். துரிசுக்கு உத்தாமணிப்பால் தளும்ப ஊற்றி வெயிலில் நன்றாகக் காயவைத்து உலர்த்தி, பின்பு உத்தாமணி இலைச் சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி நன்றாய்க் காயவைத்து அதே இலையை அரைத்துக் கவசம் கட்டி அகலில் வைத்துச் சீலைமண் செய்து குக்குடப்புடம் போட செந்தூரமாகும்.

4. ஹரிஓம் நன்றாகவும். அகஸ்திய சுவாமியார் அருளிச்செய்த பூரண சூத்திரம் 216 க்கு சூத்திரம் 16.

5. ஆடிநின்ற மூலகண பதியின் பாதம்
ஆடினதோர் சூத்திரந்தான் பதினா றப்பா
தேடிநின்ற அண்டபிண்ட மெல்லாஞ் சேர்த்து
சீராகப் பாடினதோர் என்னூ லப்பா
பாடியென்ற பூரணசூத் திரத்துக் காகப்
பதிவாகப் பாடிவிட்டேன் சூத்திர னூலை
நாடியென்ற நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றான மூலகண பதியின் காப்பு. 1

6. காணேனீ தானூத்திலே தான்மெய்ய தாகுங்
கருவதுதான் அன்பதிலே மெய்யாய்க் காணும்
பூணேதா னிந்தநூல் துறைகாண் பிக்கும்
புகட்டியதோர் பூட்டெல்லாம் மஞ்சில் காணுந்
தோணவே கருக்குருவும் வழித்துறையும் நன்றாய்ச்
சுகமாக வேதைவழி யோடே யேறும்
பேணவே பதினாறு மிதுவே யாகும்
பிலமாகு மகத்தீசர் வாக்கிய முத்தே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். இந்நூலுக்கு அகத்தியர் வாக்கியம் என்ற பெயரும் உண்டு என்பது நூலின் இறுதிப்பாடலிலிருந்து தெரிய வருகிறது. 11. சார்வரி வருடம் புரட்டாசி மாதம் 15 ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்திய நாயனார் அருளிச் செய்த பூரண சூத்திரம் 216 க்குச் சூத்திரம் 16 எழுதி நிறை வேறியது.

IV. 1. R. 280 (u), R. 9227. 2. சி.ம.மை. ஆ. நி.எண் 920 (a). த.ச.ம. நூ.எண் 432 (o). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 1. சட்டை முனி, மச்சமுனி, நந்தீசர், திருமூலர் போன்ற சித்தர்கள் மூலிகைகளைக் கொண்டு இழிந்த உலோகங்களை இரசவாத முறையில் பொன்னாக்கும் முறைகளையும், உடற்பிணியைப் போக்க தங்கபற்பம், வெள்ளி பற்பம் போன்ற பற்பங்களைச் செய்வதற்கான வழி முறைகளையும் அவரவர்களின் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர் என்பது அறியத்தக்கது. இந்நூல் முடிவுற்ற பின் அடுத்த இதழ் ஒன்றில் நல்ல பாம்பு கடித்தால் விசம் நீக்குவதற்கான மருந்து இன்ன தென்றும், பாம்பைப் பிடிப்பதற்குரிய வழிவகைகளையும் கூறுகின்றது.

அகத்தியர் பூரண சூத்திரம் 16

I. 1. 398. 2. அ. R. 280(u) ஆ. T.R. 263. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்தரம் 16. ஆ. Akattiyar pūraṇa cūttiram 16. இ. அகத்தீச நாயனார் சூத்திரம் 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 32 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 10; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

III. 1. இரசவாதம் செய்வதற்கான மூலிகைகள், இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் முறைகளைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. வரிசை எண் 397 போன்றது.

4. அகஸ்தியர் பூரண சூஸ்திரம் நூறுக்குச் சுருக்கம் சூஸ்திரம் பதினாறு.

5. ஆடியதோர் மூலகண பதியின் பாதம்
ஆடினதோர் சூஸ்திரமாம் பதினா றப்பா
தேடியே அண்டபிண்ட மெல்லாஞ் சேர்த்து
சீராகப் பாடியதோர் இந்நூ லப்பா
பாடியே பூரணசூத் திரம்நூற் றுக்கும்
பதிவாகப் பாடிவிட்டார் சூத்திர நூல்தான்
நாடியே நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றான மூலகண பதிகாப் பாமே. 1

6. காணேனீ தானூத்திலே தான்மெய்ய தாகும்
கருவதுதான் அன்பதிலே மெய்யாய்க் காணும்
பூணேதா னிந்தனூல் துறைகாண் பிக்கும்
புகட்டியதோர் பூட்டெல்லாம் ஐந்தில் காணும்
தோணவே குருவுமது உறையும் நன்றாய்ச்
சுகமாக வேதைவழி யோடே யேறும்
பேணவே பதினாறு மிதுவே யாகும்
பிலமாகு மகத்தியன்சொல் வாக்கிய முற்றே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பட்ட நூல். அகஸ்தியர் பூரண சூஸ்திரம் நூறுக்குச் சுருக்கம் 16 என்ற சுவடித் தலைப்பிலிருந்து இதுவும் ஒரு சுருக்க நூல் எனத் தெரிகிறது. 11. இல்லை.

IV. 1. R. 193(e), R. 9227. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 920(a), த.ச.ம.நூ.எண் 432(0). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பூரண சூத்திரம் நூறுக்குச் சுருக்கம் பதினாறு என்ற இந்நூலும், முன்னூலாகிய அகத்திய நாயனார் அருளிச்செய்த பூரண சூத்திரம் 216 க்குச் சூத்திரம் 16 என்ற

நூலும் ஒரே அமைப்பும் பொருளும் சுட்டும் நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சுவடிக்கட்டில் சிதம்பரச் சக்கரம் என்ற நூலைத் தொடக்கமாகக் கொண்டு மாணிக்கவாசகர் ஞானத் தாழிசை என்ற நூல் வரை 36 நூல்கள் அடங்கி உள்ளன.

அகத்தியர் பூரண சூத்திரம் 16

I. 1. **399**. 2. அ. R. 9227. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 16. ஆ. Akattiyar pūraṇa cūttiram 16. இ. அகஸ்தியர் பூரண சூஷ்த்திரம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 10; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்கான மூலிகைகள், இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் முறைகளைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. வரிசை எண் 397 போன்றது.

4. அகஸ்தீச னாயனார் சூஸ்த்திரம் 16.

5. ஆதியென்ற மூலகண பதியின் பாதம்
ஆடினதோர் சூஸ்திரந்தான் பதினா றப்பா
தேடிநின்ற அண்டபிண்ட மெல்லாஞ் சேர்த்து
சீராகப் பாடினதோர் ரென்னூ லப்பா
பாடியென்ற பூரணத்தின் சூத்திரத் துக்காகப்
பதிவாகப் பாடிவிட்டேன் சூத்திர நூலை
நாடியென்ற நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றான மூலகண பதியின் காப்பே. 1

6. காணேனீ தாணூத்திலே மெய்ய தாகுங்
கருவதுதான் அன்பதிலே மெய்யாய்க் காணும்
பூணேதா னிந்தனூல் துறைகாண் பிக்கும்
புகட்டியதோர் பூட்டெல்லாம் அஞ்சில் காணுந்

தோணவே கருக்குருவும் வழித்துறையும் நன்றாய்ச்
சுகமாக வேதைவழி யோடே யேறும்
பேணவே பதினாறு மிதுவே யாகும்
பிலமாகு மகத்தியன்சொல் வாக்கிய முத்தே. 16

7. குருகடாச்சம் உண்டாகவும். அகஸ்தீஸ்பர சுவாமி துணை.

8 . மூலம் 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். இரசவாத முறைகளைக் கூறும் ஒரு சிறந்த நூலாக இந்நூல் காணப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 193 (e), R. 280(u). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 920(a), த.சு.ம.நூ.எண் 432 (o). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் பதினாறு பாடல்களில் அமைந்த நூல்கள் பல. அவை: அகத்திய சுவாமியார் வயித்தியம் பதினாறு (R. 145 (e)), அகத்தியர் பதினாறு (R. 3723), அகத்தியர் பச்சைவெட்டு பதினாறு (R. 3613), அகத்தியர் சூத்திரம் பதினாறு (R. 3692), அகத்தியர் பச்சை பதினாறு (R. 162 (a)), அகத்தியர் சூத்திரம் பதினாறு (R. 280 (a)), அகத்தியர் சூத்திரம் பதினாறு (R. 7878) என்பன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருண்மைகளைச் சுட்டுவன என்பது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் பூரண சூத்திரம் 16

I. 1. **400.** 2. அ. R. 9228. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 16. ஆ. Akattiyar pūraṇa cūttiram 16. இ. அகஸ்தியர் பூரண சூஸ்த்திரம் சுருக்கம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 11; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சூடச் சுண்ணம், முப்புச் சுண்ணம் போன்ற மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. இரசவாதம், மருத்துவம். 3. அகத்தியர் பூரண சூத்திரம் 16 என்ற இந்நூல் சூடச் சுண்ணம், முப்பு போன்ற மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கூறுகின்றது. கெட்டியான வழலை உப்பை எடுத்துச் சிப்பிச் சாம்பல் நீரில் கரைக்க வேண்டும். பின்பு வடிகட்டி மீண்டும் உப்பாக்க வேண்டும். மீண்டும் சுண்ண நீரில் கரைத்து வடிகட்ட வேண்டும். மறுபடியும் உப்பாக்க வேண்டும். பின்பு கல் சுண்ணத் தெளிவு நீரில் கரைக்க வேண்டும். வடிகட்டி மீண்டும் உப்பாக்க வேண்டும். அதை இரவியில் காயவைத்தால் அந்த உப்பு தீட்சை பெறற உப்பாகும். இதற்குச் சத்தியுப்பு, வாலையுப்பு எனும் பெயர்களும் உண்டு. இதுவே முப்புச் சுண்ணமாகும்.

4. அகஸ்தியர் பூரண சூஸ்திரம் சுருக்கம்.

5. ஆதியாம் கணேசனது பாதம் போற்றி
ஆதாரம் அடுக்குநிலை சண்முகத்தைப் போற்றி
சோதியாம் சிவகாமி தாயைப் போற்றி
சூஸ்திரந்தான் பதினாறு சுருக்கிப் பாட
நீதியாம் முன்னுரைநூல் தெளிந்த சித்தர்
நிலையான நூலுரைக்கும் வழலைக் கும்தான்
பேதியாம் திராவகம் முப்பூவும் ஞானம்
பேரான இவைக்கெல்லாம் அயந்தான் பொன்னே. 1

6. விட்டதோர் யெழுத்தினால் ரேசகஞ் செய்ய
விடாதெழுத்தால் பூரத்து மைய மாக
கட்டதோர் யெட்டெழுத்தால் கும்பத் தோங்கும்
கருணையாலே அமிர்தமது கனிந்து பாயும்
தொட்டதொரு பானமதைத் தேவிக்கென்று
சுழிமுனையி லேதீபச் சுடரை யேற்றி
இட்டதோர் பூரணத்தை நோக்கி நோக்கி
இருப்பவர்க்கு வாதசித்தி பதினா றாச்சே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. எளிய நடையில் பேச்சு வழக்குச் சொற்கள் கலந்து அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பட்டநூல்.

சுண்ண வகைகளை விளக்கமாகக் கூறி, முப்பு தயாரிக்கும் முறையைக் கூறுகின்ற ஒரு சிறந்த நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. முப்பு என்ற அரிய மருந்து வேறு எந்த மருந்துடன் சேர்க்கப்பட்டாலும் அதன் வீரியத்தைப் பல மடங்கு அதிகரிக்கச் செய்யும். அது சாகாத் தன்மையைக் கொடுக்கும். தவிர மேல் தோல் வழியாகவே உடலில் கலந்து நோயைக் குணப்படுத்தும் ஆற்றல்மிக்கது என்று முப்பு என்னும் கற்ப மருந்து நூலின் முன்னுரையில் கூறப் பெற்றுள்ளது.

அகத்தியர் பூரண சூத்திரம் 51

I. 1. **401.** 2. அ. R. 254(k). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 51. ஆ. Akattiyar pūraṇa cūttiram 51. இ. அகஸ்திய நாயனார் அருளிச்செய்த பரிபூரண சூத்திரம் இருநூற்றுக்குச் சூத்திரம் ஐம்பத்தொன்று. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 24; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 51 பாடல்கள்.

ஆ. —.

III. 1. குருமுடிக்கும் மார்க்கம், வாசி யோகம் போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. இரசவாதம், யோகம். 3. அகத்தியர் பூரண சூத்திரம் 51 என்ற இந்நூலில் முதலாவதாகத் தேவி வணக்கம் கூறப்படுகிறது. முனிவர்களும், சித்தர்களும் முப்பு என்னும் அரிய மருந்தைக் கூறினார்கள். முப்பு என்பது கல்லுப்பு, அண்டக்கல், பூநீர் ஆகிய மூன்றும் சேர்ந்தது என்று, முறையாகச் சுத்தி செய்தால் அதுவே குரு முடித்தலாகும் என்றும் கூறப்படுகிறது. அடுத்தது வாசியோகம் செய்வதைப் பற்றியது. மனித உடம்பை அறுவகையாகப் பிரித்துச் சிவபெருமானைத் துதிக்கும் முறையைக் கூறுகின்றது. இந்தப்

பூமியில் அதிக காலம் நோயின்றி வாழ வேண்டுமானால் வாசியோகம் செய்ய வேண்டும. வாசி என்பதை மாற்றிச் சொன்னால் சிவாயோகம். சிவ யோகம் தான் வாசி யோகமாம். இடகலை, பிங்கலையின் நடனத்தை உன்னிப் பார்ப்பதே சிவ் யோகம். இதைச் செய்பவனே சிவயோகி என்றும் இந்நூல் கூறுகிறது.

4. --.

5. ஆதியென்ற பரிபூரணநூல் இருநூற்றில் சொச்சம்
அடக்கிவிட வேணுமென்று மாயி பாதம்
போதியென்ற மனந்தேற்றி யறிவில் நின்று
பூசித்தே னவள்வந்து யறிக்கை விட்டாள்
சோதியென்ற மதியாள் உமக்கு மப்பா
சொன்னானா மதியாளும் யானுங் காணேன்
வாதியென்ற புலத்தியனே கருவைப் பார்த்து
வாயடக்கி நாலெழுத்தும் அறியல் நானே. 1

6. ஒன்றான குருமுடித்த மார்க்க மெல்லாம்
ஓலையிலே எழுதிவைத்தேன் கருவைப் பார்த்தால்
அன்றான குருமுடித்த வார்த்தை யெல்லாம்
அடையோலை கட்டியது சொச்சம் பார்த்து
வண்டான நும்பியது ரசனை யுண்டு
வாங்குமப்பா ஓலையிலே ஈயே யானால்
சென்றான ஓலையிடு நாலெழுத்து வாசி
சிறப்பான ஈரெழுத்து அஞ்சு முற்றே. 51

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் வடசொற் கலப்புடன் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இடம் பெறும் வேறு நூல்கள் வருமாறு: a. சுந்தரானந்தர் சூத்திரம், b. சுந்தரானந்தர் பூஜாவிதி, c. சுந்தரானந்தர் தீட்சா விதி, d. அகத்திய சூத்திரம், e. அகத்தியர்

சூத்திரம் முதலியன, f. அகத்தியர் யோகம் பதினாறு, g அகத்தியர் சூத்திரம் பதினாறு, h. அகத்தியர் உபதேச ஞானம் ஐம்பத்தொன்று, i. அகத்தியர் ஞானம் நூறு, j. அகத்தியர் பூரணசூத்திரம் இருநூறு, k. அகத்தியர் பரிபூரணம் ஐம்பத் தொன்று, l. கயிலாச சட்டைமுனி வாதநூல், m. சடாச்சரக் கோவை நூற்றெட்டு, n. கொங்கணர் துருசு குரு முப்பத் தொன்று, o. சொக்க நாதர் சூத்திரம் ஆகியன.

அகத்தியர் பூரண சூத்திரம் 200

IV. 1. R. 177, R. 193(d), R. 268 (i), R. 1454 (a), T.R. 1380, R.4493, R. 4754, R. 4910, R. 6205, R. 7875, D. 1888, D. 2314, D. 4192, R.6141. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 537, 751(z), 775, 1383 (e),. 370, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a), 870. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சாவிதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலின் 49 ஆம் பாடல் வல்லாரை விவரம் பற்றிக் கூறுகிறது. நன்றாகச் செழித்து வளர்ந்த வல்லாரைச் செடியை கொண்டு வந்து காடி நீரில் சுத்தமாகக் கழுவி எடுத்துப் பின்பு நிழலில் உலர்த்தி எடுத்து இடித்துத்தூளாக்கிப் புது மண் கலயத்தில் வைத்துக் கொண்டு தினமும் காலையில் வெருகடி பிரமாணம் சாப்பிட்டால் உடம்பில் உள்ள நோய்கள் போய் விடும் என்று இந்நூல் கூறுகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 216

I. 1. 421. 2. அ. R. 4192. ஆ. T.R. 1852. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216. இ. அகத்தீசர் பூரண சூஸ்த்திரம் இருநூற்றுப் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 40. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 80; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. முன், நடு, இறுதி இதழ்கள் இல்லை. 16. குறை. 17. 150 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், தீட்சை விளக்கம், யோகம், தத்துவம், மருத்துவம் போன்ற பல செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. வரிசை எண் 406 போன்றது.

4. —.

5. தானென்ற சரிகையிலே நின்று தேறில்
சார்ந்துநின்ற கிரிகையிலே சாரப் பண்ணும்
தேனென்ற கிரிகைமுற்றி யுரைத்த தானால்
தேவியுட யோகத்தைச் சேரப் பண்ணும்
மானென்ற யோகமுற்றி யுரைத்த தானால்
மவுனமாம் ஞானமென்ற வரையில் வைக்கும்
ஊனென்ற சடத்துக்குள் ளெடுத்த வாறும்
உத்தமனே யிவைதாண்டி யுரைத்தி டாயே. 3

6. கேளப்பா பூசைவிதி சக்கரத்தைச் சொல்வோங்
கெடியான அரையெட்டு யிதனெட் டாகும்
தாளப்பா நடுமையை மறையொன் றாகும்
அப்பனே ரிஷிபதத்தை நடுவே சேர்த்து
கோளப்பா ரோகணியின் முன்னே யான
குன்றாத மனோன்மணிக்குப் பீடம் போட்டு
வாளப்பா மூன்றுவரை வாசல் நாலு
வாகாகச் சூலமதில் சூழப் போடே. 153

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில், வடமொழி எழுத்துக்கள் கலந்தும் எழுதப்பட்டுள்ளன. ர/ற, ழ/ள வேறுபாடு இல்லை. முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. பாட பேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் எழுதப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 177, R. 193(d), R. 268 (i), R. 1454 (a), T.R. 1380, R.3677, R. 4493, R. 4754, R. 4910, R. 6205, R. 7875, D. 1888, D. 2314, R.6141. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 537, 751(z), 775, 1383 (e),. 370, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a), 870. த.சு.ம.நூ. எண் 324(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சா விதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலின் 116 ஆம் பாடலில் 'சதுரகிரி மகத்துவம்' என்ற தலைப்பில் உள்ள செய்திகள் பின்வருமாறு: மகேந்திர மலை என்னும் இடத்திற்குத் தெற்கே ஒரு நாழிகைப் பொழுது நடந்தால் பொன்மலை என்ற இடம் வரும். அம் மலையில் ஒரு குகையுண்டு. அக்குகையில் ஆயிரம் சித்தர்கள் தவம் செய்வார்கள். அவர்களைப்பார்த்து நமக்கு வேண்டும் பொருள் எல்லாம் கேட்டால் தருவார்கள். மேலும் குளிகை, கற்பம் போன்ற உயர்ந்த பொருள்களும் தருவார்கள் என்றும் கூறுகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 216

I. 1. **422.** 2. அ. R. 6141. ஆ. T.R. 2590. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216. இ. அகஸ்த்தீஸ்பரர் பூரண சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 21 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 32; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 69 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், தீட்சை விளக்கம், யோகம், தத்துவம், மருத்துவம் போன்ற பலவகைச் செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. வரிசை எண் 406 போன்றது.

4. கார்செறி மெய்யன் வெண்மைக்
கடவுளுங் காணாப் பாதம்
பேர்பொரு ளுண்மை தன்னைப்
பூரண நூலி லோதத்
தார்செறி கொன்றை சூடித்
தாய்சர சோதி கந்த
னார்மத வானைப் பிள்ளை
யார்பதங் காப்ப தாமே.

5. ஒன்றான பூரணமும் ஆறா தாரம்
உரைத்தற்கு மேலாறுந் தொண்ணூற் றாறும்
பன்றான தீட்சைபதி னொன்று ரெட்டிப்
பத்துடனே முப்பத்தி ரெண்டு தீட்சை
ஒன்றான சமாதிகற்பம் வாசி நேர்மை
உரைப்பான சிவயோகம் பிரணா யாமம்
நன்றான வாதத்தின் தீட்சை யோடு
நலமான சவுக்காரத் திறவு கோலே. 1

6. காட்டுறேன் காந்தமது முன்னூ றுள்ளே
கலந்துரைத்த படியுருக்கிக் கருவில் வாரு
மூட்டுறேன் கிண்ணியைப்போல் வார்த்துக் கொண்டு
முனையான கிண்ணியிலே பாலை வார்த்தால்
ஆட்டுறேன் பொங்கியது மேலே நிற்கும்
அப்பனே காந்தத்தின் அதிகம் பாரு
நாட்டுறேன் தயிர்போலா மந்தப் பாலை
நலமாகக் கொண்டிடநோய் நாடா தென்னை. 69

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள், வடமொழிச் சொற்கள் பயின்று வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 177, R. 193(d), R. 268 (i), R. 1454 (a), T.R. 1380, R.3677, R. 4433, R. 4754, R. 4910, R 6205, R. 7875, D. 1888, D. 2314, D.2347, R 4192, R. 6141. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 751(z), 775,

1383(e), 370, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a), 870 த.ச.ம.நூ. எண் 324(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சாவிதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. 216 பாடல்கள் பெற்ற அகத்தியர் பூரண சூத்திர நூல்களில் உள்ள 207 ஆம் பாடல் கல்வியொழுக்கம் பற்றிக் கூறுகிறது. வேதங்கள் நான்கும் விளக்கமாகச் சொல்பவர் வேதாந்தி ஆவார்கள். அவர்களுக்கு அடக்கம் வேண்டும், அடக்கம் இல்லா விட்டால் அவர்கள் படித்த படிப்பு பயன் இல்லாமல் போய்விடும். அவர்கள் கனிவாக மனத்துக்குள்ளே அடக்கமாக இருந்தால் எல்லா சித்திகளும் கைவரப் பெற்று, சித்தராகும் பேறுகிடைக்கும். மானிடர்கள் பேசுவார்கள், சித்தர்கள் பேசமாட்டார்கள் என்றும் இந்நூல் கூறுகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 216-ல் சில

I. **1. 423**. 2. அ. R. 6211. ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216-ல் சில. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216-il cila. இ. அகத்தியர் பரிபூரணத்தின் படி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 30 x 3 செ மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 12; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், யோகத்தின் வாசிநிலை போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. ஆறாதாரம், யோகம். 3. வரிசை எண் 406 போன்றது.

4. —.

5. அடுக்குநிலை யறியவென்றால் கடின மெத்த
அருளான பூரணத்தா லறிய லாகும்
நடுக்கமலப் பூரணத்தைக் காணு தற்கு
நன்மைஉள்ள நல்மனதாய்க் கருவைக் கார்த்தால்

தொடுக்கும்வழி யென்னவென்று கேட்பா யாகில்
சொல்லுவேன் சத்திசிவ பூசை பண்ணித்
திருக்கருத்து வாலையுட திறத்தில் நின்றால்
திருவான பூரத்தில் சேர லாமே. 1

6. கேளடா சதுரகிரி வளமை தன்னைக்
கேட்டவர்க்குக் கெதிமோட்சங் கிட்டுங் கிட்டும்
ஆளடா சதுரகிரி யெண்கோண மாகும்
அருளான கோணமெனுங் குகைதா னுண்டு
சூளடா கிரிமுடிவில் குகைதா னுண்டு
சொன்னகுகை ஒன்பதிலும் நவசித் தாதீ
தாளடா மேருவிலே தவசு பண்ணித்
தன்னருளால் பிரம்மமய மானார் பாரே. 19

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர/ற வேறுபாடின்றி வட மொழி எழுத்துக் கலப்புடன் காணப் படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற நூலின் 19 பாடல்களை எடுத்து இந்நூலை செய்திருக்கின்றார்கள். 11. இல்லை.

IV. 1. R. 177, R. 193(d), R. 268 (i), R. 1454 (a), T.R. 1380, R.3677, R. 4493, R. 4754, R. 4910, R. 6205, R. 7875, D. 1888, D. 2314, D.2347, R. 4192, R. 6141. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 751(z), 775, 1383(e), 370, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a), 870 த.ச.ம.நூ. எண் 324(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சாவிதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலில் அடுக்குநிலைப் போதம், குண்டலினி சக்தி, மூலாதாரம், ஓங்காரம் என்னும் பிரணவத்தின் பெருமை, பக்தி, முக்தி ஆகியவை சிறப்பாகப் பேசப்படுகின்றன.

அகத்தியர் பூரண சூத்திரம் 216-ல் சில

I. 1. **424**. 2. அ. R. 6210. ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216-ல் சில. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216-il cila. இ. அகத்தியர் **216** ன்படி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 10; இருபக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகருமங்கள் வாசி நிலைபற்றிக் கூறும் நூல். 2. யோகம், மாந்திரீகம். 3. வரிசை எண் 406 போன்றது.

4. —.

5. நிசமான பூரணத்தைச் சொல்லக் கேளு
நிர்மலத்தாய் யெந்தனுக்கு உபதே சித்தாள்
வசமான அடிமூலங் கிணேசன் கோவில்
வட்டமடா அய்ங்கோணந் திரிகோ ணத்தின்
நிசமான கிணேசனொடு வல்ல பையுங்
கூடியிருக் குமடாஓங் கிரீம் ஸ்ரீரீம்மாக
வசமான சிவசிவாகெண தேவா யென்று
வாழ்த்தடா குண்டலித்தாய் வணங்குந் தானே.1

6. ஆறாறு பனிரெண்டு தலமுஞ் சொல்லி
அதில்நிற்கு மட்சரமுங் சக்கரமுஞ் சொல்லி
ஏறாத வாசியது யேற்றஞ் சொல்லி
ஏகாடசற் பூரணமுக மடுத்துக் காட்டி
கூறாத கருவையெல்லாங் கூறி னேன்நான்
கூத்தனின்ற யிடமிதுதான் குறித்துப் பாரு
தேறாத பேருக்குத் தேறுந் தேறுந்
சிவசிவா பூரணத்தில் திறந்தான் காணே. 19

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். இது ஒரு திரட்டு நூல். 11. இல்லை.

IV. 1. R. 177, R. 193(d), R. 268 (i), R. 1454 (a), T.R. 1380, R.3677, R. 4493, R. 4754, R. 4910, R. 6205, R. 7875, D. 1888, D. 2314, D.2347, R. 4192, R. 6141. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 751(z), 775.

1383(e), 370, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a), 870 த.ச.ம.நூ. எண் 324(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜாவிதி 200, தீட்சாவிதி 200 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூலில், வணங்கும் சக்கரம், அச்சரம், வணங்கும் முறை, தீபம், நெய்வேத்தியம் இலட்சம் உரு ஏத்துதல், வாசி நிலை போன்றவை சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. இக்கட்டில் அகத்தியர் பூரண சூத்திரம் 216-ல் சில என்ற இதே நூல் R. 6212 என்ற எண்ணிலும் உள்ளது. ஆனால் பாடல்கள் வேறு பட்டுள்ளன.

அகத்தியர் பூரண சூத்திரம் 400

I. 1. 425. 2. அ. R. 190(c). ஆ. T.R. 174. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 400. ஆ. Akattiyar pūraṇa cūttiram 400. இ. அகஸ்திய சுவாமி அருளிச்செய்த வயித்திய பரிபூரணம் நானூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர்பைக்சாகிப், திருவெல்லிக்கேணி, சென்னை. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 77. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 154; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 401 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களை நாடிபார்த்து அறிந்து அவற்றுக்குப் பற்பம், செந்தூரம், இலேகியம் முதலான மருந்துகள் செய்யும் முறைகளையும், சில மாந்திரீக, யோக முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம், யோகம், மாந்திரீகம். 3. அகத்தியர் பரிபூரணம் 400 என்ற இந்நூல் கடவுள் வணக்கத்தில் தொடங்கிப் பல நூல்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. மேலும் அவற்றில் உள்ள பல புதிய மருத்துவ முறைகளையும், நோய்கள் அறிவதற்கான நாடி பார்க்கும் முறையையும் கூறுகின்றது. நாடிகளில்

புருசநாடி என்னும் ஆண் இனத்தவரின் மொத்தநாடி 10. அவற்றில் சூரியன், சந்திரன், நெருப்பு இவை முறையே வாதம், பித்தம், சிலேத்துமமாகி நம் உடம்பில் பரந்து காணப் படுகின்றன. இவற்றை அறிவதற்கு ஆடவரின் வலது கையைப் பிடித்து, நெட்டைவாங்கி, பெருவிரல் ஓரங்குலத்துக் கப்பால் (மணிக்கட்டு) மூன்று விரல்களால் அழுத்திப் பார்த்தால் முதல் விரலில் வாத நாடியும், நடுவிரலில் பித்த நாடியும், கடை விரலில் சிலேத்துமநாடியும் நடக்கும் விதம் தெரியும். இவற்றில் வாதநாடி மயில், அன்னம், கோழி இவற்றின் நடை போலவும், பித்த நாடி ஆமை நடைபோலவும், சிலேத்துமநாடி தவளை போல் குதித்துக் குதித்தும் நடக்கும் என்று கூறப்படுகின்றது. பெண்களுக்கு இடது பக்கம் பதிவாகப் பார்த்தால் வாதநாடி சர்ப்பம் போலவும், பித்த நாடி தவளை நடை போலவும், சிலேத்துமநாடி சிறுநடை அன்னம் போலவும் நடக்கும் என்று இந்நூல் கூறுகின்றது. நோய்கள் அறிய: சந்திரனில் வாத மோடில் கனமான சளியிருமல் இரைப்பு உண்டு. செவ்வாயில் வாதமோடில் நன்மையுள்ள சுரம், புதனில் வாதமோடில் சீதளம், சன்னி, வியாழனில் வாதமோடில் தேகமெல்லாம் வலியாக இருக்கும் என்று நோய்களை அறிவதற்கான முறைகள் முறையாகச் சொல்லப் படுகின்றன. குருநாடி இருக்குமிடம், மரண நாடி பற்றிய செய்தி, வாய்வுக்கும் மந்தத்திற்கும் கர்ப்பிணிக்கும் நோய்நாடி. அட்ட கர்மப் பாவை, தம்பனம், வித்துவேசணம், பேதனம், முப்பு, சவுக்காரவைப்பு, முப்புவின் பெயர் பற்றிய செய்திகள், வசியம் பற்றிய செய்திகள், இரசகற்பூர வைப்பு, பச்சைக் கற்பூர வைப்பு, வாலை இரசத்திற்குத் தீரும் வியாதிகள், சர்வ சுரத்திற்கும் சாம்பிராணி பதங்கம், தாளக பற்பம், கன்ம வரலாறு பற்றிய செய்திகள், கருமம் தீர வழி வகைகள், பலவகைப் பற்பங்கள், செந்தூரங்கள், பெரும்பாடு தீர மிளகுலேகியம், திரிகடுகுலேகியம் போன்ற இலேகிய வகைகள், சுக்கு சூரணம், மிளகு சூரணம் போன்ற பல சூரண வகைகள், வாத சுரம், பித்த சுரம், சிலேத்தும சுரம் போன்றவற்றிற்குக் கசாய முறைகள், நோய்கள் குணமாக மூக்கில் விடும் நசியமருந்துகள், கபால சூலைக்குச் சவுரித்தயிலம், சிரசுநோய், சிரசு சூலைக்குத் தயில வகைகள், அகார, உகார, தீட்சை முறைகள், கர்ப்ப நோய், சகல மேகத்துக்கும் மருந்து செய்முறைகள் போன்ற அனைத்தும்

இந்நூலுள் கூறப்பட்டுள்ளன. நல்லவர்களுக்கு மட்டும் இந்நூலைக் காட்டுமாறும் தீயவர்களுக்குக் காட்டாதே என்றும் கூறி இந்நூல் முற்றுப்பெறுகின்றது.

4. அகஸ்தியர் அருளிச்செய்த வயித்திய பரிபூரண சூத்திரம் 400. தேவி சகாயம்.

5. பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றி
புகழ்பெரிய வயித்தியபூ ரணத்தைப் பாட
தாரணமாய் கருவுருவாய் யெங்குந் தானாய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
ஆரணமாய் முக்கோணத் தடிநடுவில் நின்ற
அம்பரத்தை அனுதினமும் அறிவாய்ப் போற்றி
வாரணமா முகத்தோனை யனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே. 1

6. முத்தான புலத்தியனே புலத்தியாமகா ரிஷியே
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்தியபூ ரணமீ தப்பா
தேசத்தில் கிட்டாது தினமாய்க் கேளு
முத்தான பதிதனிலே வைத்துப் பூசி
முதிவான வாசியது சித்தி யாமே
வித்தான பிள்ளையட்கு ஞான சித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முற்றே. 400

7. பொதிகாசல வயித்திய னாயனார் அருளிச் செய்த வைத்திய பூரண சூத்திரம் 400 முகிந்தது. தேவி சகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பிலுள்ளன முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் பாரப்பா, கேளப்பா போன்ற பேச்சு வழக்குச் சொற்களும் வடமொழி எழுத்துக்கள் கலப்பும் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். அகத்தியருக்குப் பொதிகாசல நாயனார் என்ற பெயரும் உள்ளது. புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. இந்நூலில் நாடி பார்க்கும் முறை மிகச்சிறப்பாகக் கூறப் பட்டுள்ளது. மரணநாடி, கற்பநாடி போன்றவையும் இதில் அடங்கும். நாடிபார்த்து நோய்களை அறிவது அன்று முதல் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 192 (a), R. 928, D. 1891. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 351, 380 (c), 435 (a), 491, 578, 585, 751 (p), 800, 831. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின நாயகர் & சன்ஸ் (பதி.), 'அகத்திய முனிவர் அருளிய பரிபூரணம் 400', திருமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1964. 3. இல்லை.

VI. அகத்தியர் பரிபூரண சூத்திரம் நானூறு என்ற இந்நூலுள் முதலாவதாக ஒரு மனிதனின் உடம்பில் உள்ள நோய்களை அறிந்து கொள்வதற்கு முதல் படியாக நாடிபார்த்தல் கூறப்படுகிறது. பின்பு நோயறிதல், நோய்க்கு மருந்து செய்தல் அதை நோயாளிகளுக்குக் கொடுத்து நோயைக் குண மாக்குவதும் சொல்லப்படுகின்றன. இதில் ஆண், பெண் இருபாலரும் அடங்குவர். நோய்களை முழுமையாகக் குணப்படுத்துவதால் இந்நூலுக்குப் பரிபூரணம் என்ற பெயர் அமைந்தது.

அகத்தியர் பூரண சூத்திரம் 400

I. 1. **426**. 2. அ. R. 192(a). ஆ. T.R. 176. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 400. ஆ. Akattiyar pūraṇa cūttiram 400. இ. அகத்தியர் வயித்திய பரிபூரணம் நானூறு. 4. —. 5. —. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன், பிரபவ வருடம் மாசி மாதம் முதல் தேதி. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 55. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 110; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. 20, 53 ஆகிய இரு இதழ்கள் இல்லை. 16. முழுமை. 17. 400 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களை நாடி பார்த்து அறிந்து அவற்றை நீக்குதற்குரிய பற்பம், செந்தூரம், இலேகியம் போன்ற மருந்துகள் செய்யும் முறைகளையும், யோக, மாந்திரீக முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம், யோகம், மாந்திரீகம். 3. வரிசை எண் 425 போன்றது.

4. அரிஓம் நன்றாக. குருவாழ்க குருவேதுணை. அகஸ்திய நாயனார் அருளிச் செய்த வயித்திய பரிபூரணம் நானூறு.

5. பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றி
புகழ்பெரிய வயித்தியபூ ரணத்தைப் பாட
காரணமாய் கருக்குருவா யெங்குந் தானாய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
ஆரணமாய் முக்கோணத் தடிநடுவில் நின்ற
அம்பரத்தை அனுதினமும் அறிவாய் போற்றி
வாரணமா முகத்தோனை யனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே. 1

6. முத்தான புலத்தியனே புலத்தியமகா ரிஷியே
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்தியபூ ரணமீ தப்பா
தேசமதில் கிட்டாது தினமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தி யாமே
வித்தான பிள்ளையட்கு ஞான சித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முற்றே. 400

7. அகஸ்தியர் அருளிச்செய்த வயித்திய பரிபூரணம் நானூறு எழுதிநிறைவேறியது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும், பேச்சு வழக்குச் சொற்கள் நிறைந்தும், ர/ற வேறு பாடில்லாதும் அமைந் துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். புலத்தியரை விளித்துக் கூறுவதாக உள்ளது. 11. திருச் சிற்றம்பலம் துணையுண்டாவ தாகவும். சிவசண்முக மெய்ஞான தேசிகன் திருவடி வாழ்க. சிவாய குருவாழ்க. தேவிசகாயம். பிரபவ வருடம், மாசி மாதம் முதல் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதினது.

IV 1. R. 190(c). R. 928, D. 1891. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 351, 380 (c), 435 (a), 491, 578, 585, 751(P), 800, 831. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின நாயகர் & சன்ஸ், 'அகத்திய முனிவர் அருளிய பரிபூரணம் 400', திருமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1964. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் உள்ள பிற நூல்கள் வருமாறு:

a. அகத்தியர் அம்மை சாத்திரம்.

b. நந்தீசுவரர் மதிவெண்பா நூறு.

c நந்தீசுவரர் கைத்தாள சூத்திரம் ஐந்து.

d. நந்தீசுவரர் கைத்தாள சூத்திரம் எட்டு.

e. நந்தீசுவரர் கைப்பா ஐந்நூறு.

f. வயித்திய அகராதி.

g. அகத்தியர் ஞானம் முப்பத்தாறு.

h. தன்வந்திரி நாடி சாத்திரம்.

i. வாகட சுரநூல்.

j. வைத்திய சாத்திரம்.

k. அகத்தியர் பின்னூல் எண்பது.

l. அகத்தியர் சவுக்காரத் திறவு கோல்.

m. இராம தேவர் கேசரி ஐம்பது.

n. கருவூரார் சூத்திரம் நூற்றுப் பதினாறு.

o நாடி சாத்திரம்

ஆகியன.

அகத்தியர் பூரண சூத்திரம் 400

I. 1. **427**. 2. அ. R. 928. ஆ. T.R. 748. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 400. ஆ. Akattiyar pūraṇa cūttiram 400. இ. அகத்தியர் வயித்திய பரிபூரண சூத்திரம் 400. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 131. 5. 22 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 262; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 400 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களை நாடிபார்த்து அறிந்து அவற்றைப் போக்கக்கூடிய பற்பம், செந்தூரம், இலேகியம் போன்ற மருந்துகள் செய்யும் முறையையும், யோக, மாந்திரீக முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம், யோகம், மாந்திரீகம். 3. வரிசை எண் 425 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை. அகஸ்திய சுவாமியருளிச் செய்த வயித்திய பரிபூரணம் 400.

5. பூரணமாய் நிறைந்தபூர ணத்தைப் போத்திப்
புகழ்பெரிய வயித்தியபூ ரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருக்குருவா யெவருந் தானாய்க்
கண்மணியி னடுவான கருணை தன்னை
ஆரணமாய் முக்கோணத் தடிநடுவி னின்ற
அம்பரத்தே யனுதினமு மறிவால் போத்தி
வாரணமாய் முகத்தோனை யனுதினமும் போத்தி
மகத்தான வேதியனை வணங்கி னேனே. 1

6. முத்தான புலத்தியனே புலத்தியமா ரிஷியே
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்தியபூ ரணமீ தப்பா
தேசத்தில் கிட்டாது திறமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தி யாகும்
வித்தான வெளியொளியாம் ஞான சித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முத்தே. 400

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பூரணம் என்பது பூறணம் என்றும், ர/ற வேறுபாடில்லாதும், ரிஷி, அகஸ்தியர் போன்ற சொற்களில் வட எழுத்துக்கள் கலந்தும் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பட்ட நூல். புலத்தியருக்கு உபதேசித்ததாக அமைந்துள்ளது. 11. இல்லை.

IV 1. R. 190(c), R. 192(a), D. 189. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 351, 380(c), 435(a), 491, 578, 585, 751(p), 800, 831. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின நாயகர் & சன்ஸ், 'அகத்திய முனிவர் அருளிய பரிபூரணம் 400', திருமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1964. 3. இல்லை.

VI. இந்நூல் முடிந்தபின் வைத்தியம் தொடர்பாக ஓர் இதழும், மந்திரம் தொடர்பாக ஓர் இதழும் உள்ளன. இந்நூலில் யோகம் தத்துவ விளக்கங்களாகக் கூறப்பட்டுள்ளது. பஞ்சபூதங்களை யோகி தன் ஆளுகைக்குள்ளாக்கலாம். இயற்கையிலுண்டான, பேதங்களையும் மாற்றலாம். சிருஷ்டி வகையில் எவ்விதமான ரூபமும் எடுக்கலாம். தன்னுடைய உடம்பையே போக்கவும் செய்யலாம், ஆக்கவும் செய்யலாம் என்று யோகம் என்ற தலைப்பில் சாம்பசிவம் பிள்ளை தன் அகராதியில் குறிப்பிடுகின்றார்.

அகத்தியர் பூரண சூத்திரம் 400

I. 1. 428. 2. அ. D. 1891. ஆ. T.D. 745. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 400. ஆ. Akattiyar pūraṇa cūttiram 400. இ. அகஸ்த்தியர் அருளிச்செய்த வயித்திய பூரணம் 400. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 55. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 110; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 401 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் உள்ள நோய்களை நாடி பார்த்து அறிந்து, அவற்றைப் போக்க பற்பம், செந்தூரம், இலேகியம் போன்ற மருந்துகள் செய்யும் முறையையும், யோக, மாந்திரீக முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம், யோகம், மாந்திரீகம். 3. வரிசை எண் 425 போன்றது.

4. அகஸ்த்தியர் அருளிச்செய்த வயித்திய பரிபூரணம் நானூறு.

5. பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றிப்
புகழ்பெரிய வயித்தியபூ ரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருக்குருவா யெங்கும் தானாய்க்
கண்மணியின் னடுவான கருணை தன்னை

பூரணமாய் முக்கோணத் தடிநடுவில் நின்ற
அம்பரத்தை யனுதினமு மறிவால் போற்றி
வாரணமாய் முகத்தோனை யனுதினமும் போற்றி
மகத்தான வேதியனே வணங்கி னேனே. 1

6. முத்தான புலத்தியனே புலத்தியமா ரிஷியே
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்தியபூ ரணமி தப்பா
தேசத்தில் கிட்டாது திறமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தி யாகும்
வித்தான வெளியொளியாம் ஞான சத்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முத்தே. 400

7. திருச் சிற்றம்பலம். அகஸ்த்தியர் அருளிச் செய்த பூரணம் நானூறு முற்றும். குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. போற்றி என்பது போத்தி என வந்துள்ளது. வடசொற்களும் நிறைந்து காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 190(c), R. 192(a), R. 928. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 351, 380(c), 435(a), 491, 578, 585, 751(p), 800, 831. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின நாயகர் & சன்ஸ், 'அகத்தியர் அருளிய பரிபூரணம் 400', திருமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1964. 3. இல்லை.

VI. **யோகம்:** பரிசுத்தமான மனதே, யோக விசயத்தில் ஒரு குருவாகத் தனக்குள் நின்று காட்டிக் கொடுக்கும். ஏனெனில் தெய்வபக்தி மேலுக்கு ஓங்க, தன்னைத் தானறிவதற்கு உண்டான அறிவு விளக்கமும் மேம்பட விருத்தியாகும். அப்போது அந்த உயர் நிலை பெற்ற மனதே குருவாக நிற்கும் என்று சாம்பசிவம் பிள்ளை அகராதி கூறுகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 1200

I. 1. **429**. 2. அ. R. 5825. ஆ. T.R. 2499. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 1200. ஆ. Akattiyar pūraṇa cūttiram 1200. இ. கும்ப முனி சுவாமிகள் பரிபூரணம் 1200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 237. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 474; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1201 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனிதர்களின் உடம்பில் உள்ள நோய்களை அகற்றி இறவா நிலை பெறுவதற்கான யோக, மருத்துவ முறைகளை முழுமையாகக் கூறும் நூல். 2. யோகம், மருத்துவம். 3. அகத்தியர் பூரண சூத்திரம் 1200 அல்லது அகத்தியர் பரிபூரணம் 1200 என்ற இந்நூல் முதலாவதாக மனோன்மணித்தாயை வணங்கித் தொடங்குகின்றது. கைலாய மலையின் மகிமை, அகத்தியர் கும்ப முனியானதன் விவரம், சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளான பதி, பசு, பாச விவரம், அவற்றின் தத்துவங்கள், அகார உகார மார்க்கங்களின் விவரம், ஆறாதார விளக்கம், சனிபகவானின் குணம், சிவதீட்சை, சக்தி தீட்சை பற்றிய செய்திகள், அட்டகருமங்களின் விவரம், குரு தியானம் போன்ற பல தியான முறைகள் கூறப்பட்டுள்ளன. மேலும் வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரைக் கற்பங்கள், சிதம்பர சக்கரம், வாலைபூசை, மஞ்சள் நிற தும்பைச் செடியின் மகிமை, மேருமலைக் கருகில் கிடைக்கும் மஞ்சள் தும்பைச் சாறு ஆகியவை கூறப்படுகின்றன. மேலும் வாசியோகம் செய்வதற்கு முன் இச்சாறுதனைப் பருகி யோகம் செய்துவந்தால் இறப்பு இல்லாமல் நீண்ட காலம் வாழலாம் என்றும் இந்நூல் கூறுகின்றது. அடுத்து அமுர்தரசக் கற்பம், கஞ்சமலை அதிசயம், நம்பிமலை அதிசயம், குற்றால மலை மகிமைகள், அட்டகர்ம சவுக்காரம், முப்பு விவரம், கற்பூரச் சுண்ணம், பூரண மெழுகு, பிண்டத்தின் விவரம், வியாதி வரும் காலம், தலை நோவுக்குப் பற்பம், தலை முதல் சகல நோய்களுக்கும் தலைமுழுக நெய், தயிலம் செய்யும் முறைகள், வசிய முறையில் நோய்தீர்க்கும் முறைகள், சரக்குகளைக் கட்டும் விதம் போன்ற செய்திகளையும் பாடல்கள் கூறுகின்றன.

4. ஹரிஓம்.

5. பூரணமாய் நிறைந்தபூ ரணமே காப்பு
போதமய மானபூ ரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருக்குருவா யெங்குநிறைந் திருந்த
கண்மணியின் நடுவாகிக் கருணைதரும் பொருளை
யாரணமாய் முக்கோணத் தடியில் நடுவாகி
யசையாத பொருளாகி யருவு மாகி
வாரணமாய் மூலமதில் நந்தியெனும் பிள்ளை
வாசியெனும் பூரணமனோன் மணிகாப் பாமே. 1

6. முத்தான புலத்தியனே அய்யா கேளு
முழுதுமிதை ஆதியொடு அந்த மாகச்
சித்தான நின்றபரிபூ ரணத்தை நீயும்
செம்மையுடன் பூரணமாய்ப் பார்த்தா யானால்
வத்தாத பாக்கியமும் வயதுஞ் சித்தி
மகத்தான லோகமொடு ஞான சித்தி
வித்தான மாய்கையது சுத்த மான
வேதபர வெளியிற்மனம் வெளிசேர் முற்றே. 1201

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் பாரப்பா, கேளப்பா போன்ற சொற்களைக் கொண்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. ஆயிரத்து இருநூறு பாடல்களைக் கொண்டு மருத்துவம் பற்றிக் கூறும் சிறந்த நூல். 11. பிலவங்க வருசம் கார்த்திகை மாதம் 14 ஆம் தேதி சுக்கிரவாரம் புனர்பூச நட்சத்திரம் யிப்படிப்பட்ட சுபதினத்தில் வேத பரிபூரணம் 1201-ம் எழுதி நிறைந்தது. வில்லயபாக்கம் தளம்பாளையப் பட்டு பால குருவப்ப னாயக்கர் குமாரனான சின்ன நாயக்கன் இந்த வேதபரிபூரணம் படிக்கப்பட்ட தம்பியாகிய கீலி பட்டாளம்சிக்கினி கும்பினி வீராசாமி அவல்தார் சொந்தமாய்ப் படிக்கப்பட்டது. நாகப்பூருக்கு அடுத்த காமுட்டியில் எழுதினது.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை. ஆ.நி. எண்கள் 61, 414(c), 750(e). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. ந.தெய்வ சிகாமணி முதலியார் (பதி.), 'அகத்திய மாமுனிவர் அருளிச்செய்த பரிபூரணம் 1200', திருவத்திபுரம், செய்யாறு. 3. இல்லை.

VI. அகத்தியர் பூரண சூத்திரம் 1200 என்ற நூலினைத் தாமரை நூலகத்தார், 'அகத்திய மாமுனிவர் அருளிச்செய்த பரிபூரணம் 1200' என்ற பெயரில் பதிப்பித்துள்ளது அறியத் தக்கதாகும்.

அகத்தியர் மணிக்கடை சூத்திரம்

I. 1. **430**. 2. அ. R.8892. ஆ. T.R.3189. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் மணிக்கடை சூத்திரம். ஆ. Akattiyar maṇikkaṭai cūttiram. இ. அகஸ்தியர் மணிக்கடை சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 10; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. வெண்பா. 15. இறுதியில் 70 பாடல்கள் இல்லை. 16. குறை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மணிக்கட்டில் ஓடும் நாடி ஓட்டத்தை ஆராய்ந்து உடம்பில் இருக்கும் நோயை அறிவதற்கான நிலையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. நம் கையில் உள்ள மணிக்கட்டின் பகுதியில் மூன்று விரல்களால் அழுத்திப் பிடித்துப் பார்த்தால் வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி, சாத்திய நாடி, அசாத்திய நாடி, வாதபித்த நாடி, பித்த சிலேத்தும நாடி, கன்னிநாடி, மரண நாடி ஆகிய நாடிகளின் நடைகள் விளங்கும். இந்நாடி வாலிபருக்கு நிமிடம் ஒன்றுக்கு 70 முதல் 74 தடவையும், பெண்களுக்கு நிமிடம் ஒன்றுக்கு 76 முதல் 80 தடவையும், ஒரு சில பேருக்கு நிமிடம் ஒன்றுக்கு 59 முதல் 60 தடவையும், அபூர்வமாக நிமிடம் ஒன்றுக்கு 80 தடவையும் துடிக்கும். இதற்குக் குறைந்தால் உடல் நலம் சரியில்லை யென்று கருதவேண்டும். நாடியின் வேகமும் குறைவும் இருதயத்தின் வலிமையையும் பலவீனத்தையும் ஒட்டியிருக்கும். ஒழுங்கீன

நாடி உடம்பிற்கு அபாயமெனக் கருதவேண்டும். அசீரண நாடி, மந்திரிதய நாடி, பெண் சங்கை நாடி, மலபந்த நாடி, சன்னிவாத நாடி ஆகிய நாடி வகை களையும் இந்நூல் கூறுகிறது. இருதயத்தின் இடது சரம் குவியும்போது தண்டரையின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் இரத்தம் பரவும். அப்போது நாடிகள் விரியும். மறுபடியும் இடதுசரம் விரியும்போது நாடி நரம்பிலிருக்கும் இரத்தம் குறைந்து நாடி சுருங்கும். இவ்விதமாக இருதயம் விரியவும் சுருங்கவுமாக இருத்தலால் அதனுடன் சேர்ந்த நாடி நரம்புகளுக்கும் இவ்விதத் தன்மையுண்டு. இச்செய்கைதான் நாடி நடை என்று சொல்லப்படும் என்று இந்நூல் கூறுகிறது.

4. —.

5. கமலனை மணிகணா கயிலைத்தாய் சூத்திரம்
விமலனை நோக்கியே வேடமாமுனி - துமலமாம்
பிணியது சேரச்செப்பியே அமலனா முனிக்கி
முன்னரு ளிச்செயித் தே. 1

6. யந்தமுறா முனிவனீயம் நனுநேந் தனுக்கு
அந்தரமஞ் சாத்திரத்தில் சூஷகமாம் - மிந்தரணி
யுள்ளோர் னோயிரு குணங்கள் தானறியவேஷை
அள்ளுற்றாற் தென்றே யறி.

7. சூடாமணிக் கடைசூத்திரம் முற்றியது. அகத்திய முனிவர் நாடிக்கோனூறு முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் வெண்பாவில் அமைந்துள்ளன. எளிய நடையில் வடசொற்கள் கலந்து எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். சூடாமணிக் கடை சூத்திரம் என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நம் உடம்பில் ஓடும் மூன்றுவித நாடிகளான வாதம், பித்தம், சிலேட்டுமம் என்பவை உடலில் காணப்படும் அனைத்து நரம்பு இழைகளுடன் தொடர்புடையவை. இம்மூன்று நாடிகளும் கை மணிக்கட்டின் பகுதியில் உள்ளன

என்பதும் இவற்றை ஆராய்ந்துதான் சித்த மருத்துவர்கள் நோய்களைக் கண்டுபிடிக்கின்றார்கள் என்பதும் எல்லோருக்கும் அறிந்ததே. இவற்றையே இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. நூறு பாடல்களில் 30 பாடல்களே கிடைத்துள்ளன.

அகத்தியர் மாந்திரீகம்

I. 1. **431**. 2. அ. R 942(d) ஆ. T.R. 761. இ. —. ஈ. —. 3 அ. அகத்தியர் மாந்திரீகம் ஆ. Akattiyar māntirīkam. இ. அகஸ்தியர் அருளிச் செய்த மாந்திரீகம் அல்பது. 4. —. 5. —. 6. மு.வெ முத்துசாமி நாயக்கர். 7. —. 8. அ.கி.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 17. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 34; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மந்திரம் சொல்லி, செபம் செய்து நோய், தோசம், பில்லி, சூனியம் முதலியவற்றை நீக்குதல் பற்றிக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அகத்தியர் மாந்திரீகம் என்ற இந்நூல் முதலாவதாகப் பக்தியுடன் பார்வதி தேவியையும் குறுமுனியாகிய அகத்திய முனிவரையும் வணங்க வேண்டும் என்று கூறுகிறது. முறைப்பாடு, ஏவல், பில்லி, சூனியம், சைத்தான், தெய்வ குற்றம், சார தன்பம் இவற்றின் குணம், குறி ஆகியவற்றை நீக்குவது பற்றியும் அதற்கு மீண்டும் உமையவளை வணங்க வேண்டும் என்றும் இந்நூல் கூறுகின்றது. மேலும் பில்லி, சூனியம் பற்றிக் கூறும்போது சூனியம் செய்பவர்கள் ஆண் பெண் இருபாலரிலும் உண்டு. ஆண்வர்க்கத்தைச் சூனியக்காரன் என்றும் பெண்வர்க்கத்தைச் சூனியக்காரி என்றும் கூறுவர். கொடிய தேவதைகளை மந்திர சக்தியால் தன்வசப்படுத்தித் தனக்கு வேண்டாதவர்களின் செயல்பாடுகளை முடக்குமாறு ஏவுதல். பில்லி, சூனிய ஏவலாகும். இவ்வித்தைகள் செய்யும் குருவின் அறிவுரைப்படி

நடந்து கொள்ள வேண்டும். மேலும் ஒருவருக்குப் பில்லி சூனியத்தால் இழைத்த தீங்கை மருந்துகளின் மூலம் நிவர்த்தி செய்வதற்குரிய வழி வகைகளையும் இந்நூல் கூறுகிறது.

4. —.

5. பத்தியுடன் பார்வதியைப் போற்றி செய்து
பரிவான குருமுனிதான் பாரி லோர்க்குச்
சத்தியமா முறைப்பாடு வேவல் பில்லி
சயித்தானாம் தெய்வகுத்தம் சரீர துன்பம்
முத்தியெழுங் குணங்குறிகள் நீங்கு னோர்மை
முறையென்ன சொல்லென்று முனிந்து கேட்க
வஸ்த்துவென்ற வுமையவள்தான் மனம கிழ்ந்து
வன்மையுடன் வையத்து 1

6. கரையான அதானத்துக் கிதுவே யாதி
கண்டிட்ட மந்திரத்தைக் கருத வேண்டாம்
பரையான உமையவளே பணிந்து போத்தி
பார்தனிலே யித்தொழிலை யாடிப் பாடு
வரையாட்டுக் குள்ளிருப்போர் உனக்கீ டாமோ
மாந்திரீகர் உனக்கடுமை மகிழ்வார் பாரே
உரையிட்ட அன்பதுடன் முறைதப் பாமல்
உலகத்தோர் துயர்னீங்கி ஊழி வாழ்வார். 50

7. அகஸ்தியர் அருளிச் செய்த மாந்திரீகம் அன்பதும் எழுதி நிறைந்தது. முற்றும். குரு பாதார விந்தமே துணையாகவும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பக்தி என்பது பத்தி என்றும், அடிமை என்பது அடுமை என்றும் பேச்சுவழக்குச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 'பதிவான குருமுனிதான் பாரிலோர்க்கு' என்ற பாடல் அடியிலிருந்து இந்நூல் அகத்தியர் பாடியதாகக் கூறப்பட்டுள்ளது. 11. சுக்கில வருடம் மார்கழி மாதம் 8 ஆம் தேதி மங்கள வாரம் பூச நட்சத்திரம் எழுதி நிறைவேறியது. முத்துசாமி நாயக்கர் பௌத்தரும் ம.வெ. வெங்கடசாமி நாயக்கர் புத்திரருமாகிய ம.வெ. முத்துசாமி நாயக்கர் எழுதியது.

IV 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. R.2230 என்ற எண் பெற்ற 48 பாடல் கொண்ட பாட வேறுபாடுகளுடன் கூடிய சுவடி ஒன்று உள்ளது. பில்லி சூனியம் அக்காலம் முதல் இக்காலம் வரை நடைமுறையில் இருந்து வருகிறது.

அகத்தியர் மாந்திரீகம்

I. **1. 432.** 2. அ. R.3689. ஆ.T.R. 1799. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் மாந்திரீகம். ஆ. Akattiyar māntirikam. இ. அகஷ்தியர் மாந்திரீகம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 8. 5. 25 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப் பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 16; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம். 15. 2 ஆவது இதழ் இல்லை. (14 ஆம் பாடலிலிருந்து 21 ஆம் பாடல் வரை). 16. குறை. 17. 52 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வசியம் செய்வதற்கான மருந்து, மந்திரம் போன்றவற்றையும், பில்லி சூனியம் செய்யும் முறை களையும் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அகத்தியர் மாந்திரீகம் என்ற இந்நூல் முதலாவதாகப் பராபரனுக்கு வணக்கம் செலுத்துகிறது. அடுத்து மூலிகைகளின் பயன்பாடு கூறப்படுகிறது. அட்ட கருமங்களான வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகர்சணம், வித்து வேசணம், மாரணம் என்னும் எட்டும் பயன்படும் விதம் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. மேலும் இவைகளுக்கு மந்திர உருவேற்றும் முறைகள் போன்றவை கூறப்படுகின்றன. மேலும், பில்லி சூனியம் போன்ற மாந்திரிக வேலைகளைச் செய்து ஒருவரை முழுமையாகச் செயல் படாதவாறு செய்வதற்கான நிலைகளையும், மந்திரங்கள் உச்சரிக்கின்ற முறைகளையும் கூறுகின்றது. நமசிவய, மசிவயந, சிவயநம, சிவயநம, யநமசிவ போன்ற மந்திரங்களும், ஓம், அய், உய்,

சிங், வய, யங், ங்ய், டிங், சர்வதூபம், நசிமசி, சகலவியாதி நசிமசி, சகலகிரகம், மசிமசி, சகலவல்லி, சூனியம் நசிமசி, நசிமசி, நசிமசி ஆகிய மந்திரங்களும் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக.

5. ஆதியாம் பராபரனைப் போற்றி செய்து
அம்மையவள் உலகத்தோர் பிழைக்க வென்று
நீதியாம் மாந்திரீகம் சக்கரங் கள்மூலி
நிசமாக உரையென்று அரனைக் கேட்டுச்
சோதியாம் உமையவளே நீகே ளென்று
சொல்லுகிறேன் பஞ்சாட்சரத் தின்சொரூபந் தன்னை
வாதியாம் பெரியோர்க்கும் புத்தி யுள்ள
மன்னவர்க்கும் இதுவாகும் வகையாய்க் கேளே. 1

6. கரையான அதானத்துக் கிதுவே யாதி
கண்டகண்ட மந்திரத்தைக் கருத வேண்டாம்
பரையான உமையவளைப் பணிந்து போற்றி
பார்தனிலே யித்தொழிலை யாடிப் பாரு
வரையெட்டுக் குள்ளிருப்போ ருனக்கு யீடோ
மாந்தரீகர் உனக்கடிமை மகிழ்வா ரப்பா
உரையான அன்பதுடன் முறைதப் பாமல்
உலகத்தோர் துயர்நீக்கி யுகந்த வாறே. 60

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும் பலமந்திரச் சொற்கள் கலந்தும் பாடப்பெற்றுள்ளன. ர/ற வேறுபாடு இல்லாது வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். மாந்தரீக நூல்களும் அகத்தியர் பெயரில் பாட்டப் பெற்றுள்ளமைக்கு இதைப்போன்ற நூல்கள் சான்றுகளாம். 11. இல்லை.

IV 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை முதல் தொகுதியில் வரிசை எண் 39 இல் அகத்தியர் 'அட்ட கருமம் பத்து' என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் அமைந்த நூல் உள்ளது. இவ்விரு நூல்களின் முதல் பாடல் ஒத்து வருவது நோக்கத்தக்கது. மேலும்

அகத்தியர் பெயரில் பல மாந்திரீக நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள், எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் மாந்திரீக காவியம் 1000', தாமரை நூலகம், சென்னை, 1993 என்ற நூலும் ஒன்றாகும்.

அகத்தியர் மாந்திரீகம்

I. 1. **433**. 2. அ.R. 6142. ஆ. T.R.2590. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் மாந்திரீகம். ஆ. Akattiyar māntirikam. இ. அகஸ்தியர் மாந்திரீகம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 34. 5. 21 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 68; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் 11 பாடல்கள் இல்லை. 16. குறை. 17. 89 பாடல்கள் மற்றும் உரைநடை.

ஆ. —.

III. 1. மந்திரம் சொல்லி, செபம் செய்து, பில்லி சூனியம் போன்றவற்றை விலக்கல் பற்றிக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. வரிசை எண் 432 போன்றது.

4. ஆதியா மாந்திரீகம் ஆய்ந்தவர் முனிவர் தம்மில்
நீதிசேர் சல்லிய னென்போன் நிசத்தினால் சொன்ன நூறு
தீதிலாத் தமிழி னாலே செப்பவே துதிக்கை யானை
சோதிசேர் செம்பொற் பாதஞ் சூட்டினேன் சென்னி மீதே.

5. ஆதியிலே மாந்திரீக மாயிருக்கிற சாஷ்த்திரங்களை ஆய்ந்தறிந்த முனியீஷரிலே சல்லிய மாரிசி நிசமாகச் சொன்னேன் நூறு பாட்டும் தமிழினாலே சொல்லுதற்கு யானை முகமுடைய விக்னேஷ் பரனைத் தோத்திரம் பண்ணி சோதிநிற மாகிய பரமசிவன் பாதாரவிந்த கமலங்களைச் சிரசின் மீதில் தரித்துக்கொள் வோமென்ற வாறு.

6. பூசையும் பொலியுஞ் செய்யப்
பொருந்தியே ஆடி நிற்கும்
பூசையும் பொலியுஞ் செய்யப்
பூவைபோல் முன்னே நிற்கும்

பூசையும் பொலியுஞ் செய்யப்
பூரண மாகி நிற்கும்
பூசையும் பொலியுந் தானே
பொருந்துவள் சக்க தேவி. 89

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன; சில பாடல்கள் யமகம், திரிபில் பாடப்பெற்றுள்ளன. மந்திரச் சொற்களும் வடசொற்களும் கலந்து வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். சல்லியரால் செய்யப் பெற்ற மாந்திரீக நூலும் இதைப் போன்றதே. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இம் மாந்திரீக நூல் முதலில் 'அ'விலிருந்து 'ஃ' வரையிலும், பிறகு 'க' முதல் 'ன' வரையிலும் தனித்தனியாக அட்சரத்தைச் செபித்துச் சித்தி செய்து கொண்ட பிறகே மற்ற மாந்திரீகக் கருமங்கள் செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்யும்போது பஞ்சபூதங்களை முதலில் சித்தி செய்து கொண்டே மற்ற கருமங்கள் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. இந்நூல் மிகவும் பழமையானதாகக் காணப் படுகிறது.

அகத்தியர் மாந்திரீகம்

I. **1. 434.** 2. அ. R. 189(b). ஆ. T.R. 173. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் மாந்திரீகம். ஆ. Akattiyar māntirīkam. இ. அகஸ்தியர் மாந்திரீக நிகண்டு சாஸ்திரம். 4. —. 5.—. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 34. 5. 26 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. பிளைவுட். 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 68; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 95 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அழைப்பு வித்தை, நித்திரையையுண்டு பண்ணும் வித்தை, கண்ணைக் கெடுக்கும் வித்தை போன்ற பல சால வித்தைகள் பற்றிக் கூறும் நூல். 2. மாந்திரீக சாலம். 3. அகத்தியர் மாந்திரீகம் என்ற இந்நூல் அழைப்பு வித்தை, நித்திரை (தூக்கம்) உண்டு பண்ணும் வித்தை, கண்ணைக் கெடுக்கும் வித்தை, சுப்பிரமணியர் மந்திரம், அனுமார் மந்திரம், இலக்க சக்கர மாறல், மோடிச் சக்கரம், சடாட்சர மாறல், சக்கர மந்திரம், பஞ்சபூத மாந்திரீகப் பெருமை, வனத்து மிருக மந்திரம், பாதாள அஞ்சன மந்திரம் போன்ற பலவகையான ஜாலவித்தை மந்திரங் களையும், சக்கரம் வரைந்து உருவேற்றும் முறைகளையும் கூறுகின்றது. மேலும் வரிசை எண் 432 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை. அகஷ்தியர் மாந்திரீக நிகண்டு சால நிகண்டு.

5. யேத்த சால நிகண்டிரு நூறையும்
சாத்த மூலம் வருத்திய னாமுமே
பூத்த தாரணி பூமதி நந்தியை
மூத்த வேலன்முகன் கணபதி காப்பு. 1.

6. பாவமே போகப் பாடினோம் பாவம்
சாபம் மூவாதனக் கேற்றி தென்றால்
கோபம் பெறாமல் கோபமற கேட்கும்
ஞாபக மாக நவின்றோன் பாரே. 95.

7. குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. மந்திரச் சொற்கள் கலந்து வருகின்றன. 'நூறு' என்ற சொல் 'நூரு' என்றும், 'பாரே' என்ற சொல் 'பாறே' என்றும் ர/ற வேறுபாடின்றியும் வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற நூல். மாந்திரீக நூல்களுக்குச் சல்லிய மூனிவரே முன்னோடி என்பர். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் மாந்திரீகம் என்ற இந்நூல் மாந்திரீகச் செய்திகளை நிகண்டு போல் தொகுத்துக் கூறுகின்றது. நூல் தலைப்பு அகத்தியர் மாந்திரீகம் என்று இருந்தாலும் சுவடியில்

எழுதியுள்ள பாடல்களை வைத்துப் பார்க்கும்போது அகத்தியர் சால நிகண்டு போன்று அமைகிறது. மேலும் காப்புப் பாடலில் 'யேத்தசால நிகண்டிரு நூறையும்' என்பதால் இருநூறு பாடல்கள் கொண்ட நூலிருந்து 95 பாடல்களில் திரட்டப் பெற்று இந்நூல் முற்றுப் பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது.

அகத்தியர் முப்பு 16

I. **435**. 2. அ. R. 9224. ஆ. T.R. 3410. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் முப்பு 16. ஆ. Akattiyar muppu 16. இ. அகஸ்த்திய நாயனார் முப்பு அன்பதுக்குச் சுருக்கம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறையைப் பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்திய நாயனார் முப்பு அன்பதுக்குச் சுருக்கம் பதினாறு என்ற இந்நூல் அகத்தியர் பெயரில் அமைந்த ஐம்பது பாடல்கள் கொண்ட நூலின் சுருக்கமாக அமைந்துள்ளது. கடவுள் வணக்கம் கூறப்பட்டு, முப்பு தயாரிக்க உதவும் பூநீறு, அண்டக்கல், நிலவுப்பு ஆகியவற்றின் இயல்பும், வெடியுப்பு, செயநீர் போன்றவைகளைப் பயன்படுத்தும் வித்தும், சித்தர்களின் செய்கைகள் பற்றியும் கூறுகிறது. மேலும் முப்பு செய்து அதை மருந்துகளில் கலந்து நோய்களுக்குக் கொடுக்கும் முறையும், அறுவகைநிறச் சுண்ணம், நவலோகப் பொன் போன்றவை பற்றியும் கூறுகிறது. சட்டைநாதர், திருமூலர், கொங்கணர் ஆகியோர்களின் பெருமைகளும் கூறப்படுகின்றன.

4. அகத்திய னாயனார் முப்பு அன்பதுக்குச் சுருக்கம் பதினாறு.

5. பூரணமாம் புங்கவன்றன் பாதம் போற்றி
புகழ்பெறவே சிவகாமி ஆத்தாள் பாதம்
காரணமாம் அறிவில்நின்று மனதைப் போற்றி
கந்தனுக்குக் கருணைபெற சீஷி னாகி
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வல்லபையாள் இந்நூலின் பொருளைக் காண
சீரணமாய்ப் போகாது தெளிந்து சொல்வேன்
சித்தர்பதம் மனதில்வைப் பாய்ஒன்று மில்லை. 1

6. ஆறியபின் வில்லை ..... செய்து
அடவாக நூறெருவில் புடத்தைப் போடு
தேறியபின் நாலிலொன்று சாரங் கூட்டி
சிறப்பாக .....பீங் கானில் வைக்க
கூறியபின் னீராச்சு வீரம் பூரம்
கூடவிட்டு சரக்குகளில் தடவி வாட்டி
மாறியபின் கடிகையஞ்சு சுருக்குத் தாக்க
.... பொன்னாம் பாரே. 16.

7. பாரிந்த நூலைக் கரத்தால் நரகமாம்
பாரிந்த நூலைப் பண்பாகப் பூசை செய்ய
பாரிந்த நூலை ....
பாரிந்த நூலைத்தான் பதினாறு சுருக்கமே.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும் எளிய நடையிலும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் முப்பு பற்றித் திரட்டப்பெற்ற மிகச் சிறிய நூல். 11. இல்லை.

IV. 1. R.168(e), R.267(p), R.3633(a), R.4858, R.6070, D.1892, D.2305. 2. உ.த.நி. எண் 532:86. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. சித்தர்களால் தயாரிக்கப்பட்ட முப்பு, பூநீறுவிலிருந்து எடுக்கப்பட்ட உப்பு, அண்டக்கல்லிலிருந்து எடுக்கப்பட்ட உப்பு, சாப்பாட்டிற்குப் பயன்படுத்தும் கல்லுப்பு, இவற்றைத் தனித்தனியாகச் சுத்தி செய்து இறுதியில் கிடைக்கும் உப்பு மூன்றையும் சேர்த்தால் முப்பு கிடைக்கும் என்று இதன் மூலம் அறியப்படுகிறது.

அகத்தியர் முப்பு 50

I. 1. **436**. 2. அ. R. 267(e). ஆ.T.R. 251. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் முப்பு 50. ஆ. Akattiyar muppu 50. இ. அகஸ்திய மாமுனியருளிச் செய்த முப்பு சூத்திரமன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மருத்துவர் R.Y. ரெங்கசாமி ஐயங்கார், மைசூர். *10.1914-15.*

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 19; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. முழுமை. 17. 2+50 பாடல்கள்.

ஆ. —.

III. 1.முப்பு தயாரிக்கும் முறைகளையும், அதில் சேருகின்ற மருந்துகளையும், அம்மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் முப்பு ஐம்பது என்ற இந்நூலில் இரண்டு பாடல்கள் கடவுள் வணக்கமாகவும், மூன்றாவது பாடல் வாதிகளுக்கும், 4ஆவது பாடல் சுண்ணம் பற்றியும், 5 ஆவது பாடல் சாத்திரத்தின் பெருமைகளையும், 6ஆவது பாடல் முன்பு சொன்ன முப்புவெல்லாம் சித்தருக்கும், சிவயோகிக்கும் தான் என்றும் கூறப்படுகிறது. இங்குக் கூறப்படும் முப்பு, மனிதர்களின் நோயைக் குணமாக்குவது. முப்பு தயாரித்தல் முறை வருமாறு: உவருப்பு கொண்டு வந்து நல்லநீர் விட்டுக் கலக்கிப் பின்பு தெளிவை எடுத்துக் காய்ச்சி நன்றாக வற்றியபின், மறுபடியும் நீர் விட்டுக் கலக்கி, தெளிய வைத்து, பின்பு முன்போலவே பத்து முறை செய்து வந்தால் தூய்மையான உப்பு கிடைக்கும். பின்பு சாப்பாட்டு உப்பை எடுத்துக்கொண்டு மேலே செய்ததுபோல் பத்துமுறை காய்ச்சி, சுத்தி செய்த உப்பை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து நிலவுப்பைக் கொண்டுவந்து மேலே செய்ததுபோல் பத்துமுறை காய்ச்சி எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்நிலவுப்பிற்கு மூதண்டம், பிர்மண்டம், விந்து, பின்னை, பூமியுடநாதம்,

ஆதியுப்பு, சிவனுப்பு எனப் பல பெயர்கள் உள. அடுத்து உவர்மண்ணைக் கரைத்துக்கொண்டு அதில் சுண்ணாம்புக் கல்லைப் போட்டுக் காய்ச்சினால் கட்டியாகும். இதற்கு வேதாந்தமூர்த்தி என்று பெயர். பின்பு இச் சுண்ணாம்புக் கல்லை நீற்றிக் கொண்டு அண்டநீரில் கலந்து வில்லை செய்து பீங்கானில் வைத்து மறுபடியும் நீற்ற வேண்டும். அதில் நீர் விட்டு வெயிலில் வைத்தால் நீர் ஆவியாகிவிடும். அதில் படிந்துள்ள உப்பைச் சிறுகச் சிறுகச் சேகரித்துக் கொள்ள வேண்டும். இதுவே முப்பு என்று சொல்லப்படுகிறது. இதில் ஒரு பலமுடன் அண்டநீர் விட்டு ஆட்டி வில்லை செய்து பின்பு ஊற வைத்துச் சீலைமண் செய்து மேலோடு மூடி முழுப்புடம் போட நீறிப் போகும். பின்பு வீரம் பூரம் வகைக்கு ஒரு களஞ்சி கூட்டி, பழச்சாறு விட்டு ஆட்டி வில்லை செய்து வெயிலில் போட்டு, முழுப்புடம் போட்டால் அதுவே பூநீறு குருவாகும். இதைச் செந்தூரம் போன்றவற்றுடன் கலந்து நோய்களுக்குக் கொடுக்கலாம் என்றும் இந்நூல் கூறுகிறது. இம்முறைகளை எல்லாம் ஒருகோடி நூலுக்குள் சித்தர்கள் ஒழித்து வைத்து விட்டார்கள் என்றும் கூறுகிறது. உருக்கினம், மருத்துவர்களுக்கு அறிவுரைகள், காரசாரம், உபசாரம், பாசாணம், நவரத்தினம்போன்ற பல செய்திகள் கூறப்படுகின்றன. இவ்வாறு முப்பு தயாரிக்கும் முறை பற்றியும் அதில் சேரும் சரக்குகள் பற்றியும், மருந்துகள் பயன்படுத்தும் முறை பற்றியும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது. இம்மருந்துகளை அனுபானமறிந்து உண்டால் குணமாகும் நோய்கள் வருமாறு: குட்டம், பாண்டு வகைகள், வாய்வு, நீரிழிவு, கண்ரோகம், சன்னி, சயம், ஈளை, இளைப்பு, பித்தம், மகோதரம், பெரும்பாடு, அஸ்திசுரம், வெட்டை, சகல கழிச்சல், உள்வறட்சி, கனரோகம், சயரோகம், சுரசன்னி, சூலை முதலியனவாம். இறுதி நான்கு பாடல்களில் இந்நூற் பயனும் முறையாகப் பின்பற்றி நடந்து மருத்துவம் செய்தால் பிரம்மன் ஆகிவிடலாம் என்றும் கூறி முற்றுப் பெறுகிறது.

4. தாரண யோகசமாதி கைகூடுந் தவப்பொதிகை
பூரண கும்பமுனி யாசிரியம் புகழ்வதற்கு
வாரண மும்மதநால் வரோர்வெண் மருப்பலவுங்
காரண சின்மயமூல வினாயகன் காப்பதுவே.

வானும் புவியும் மதியும் கதிரொளியுந்
தேனும் தெளிந்த சிவகுருவே - தானுந்தன்
நான்மறையு மாராய்ந்து நன்னூலா யைம்பதையுந்
தானருளுங் குஞ்சரத்தின் தாள்.

5. மயமான முப்புவின் மார்க்கந் தன்னை
வயித்தியத்தி லாக்கியே விரித்துச் சொல்ல
செயமான கணபதியுங் கந்தன் தானும்
சிவனோடே வுமைபார் வதியும் நிருவாணி
நயமாக வப்பொழுது முன்னே நின்று
நாடியே முப்புவை நயந்து கேட்க
மயமாகச் சொல்லுகிறே னைம்ப துக்குள்
வயித்தியரே னீர்தானும் வணங்கிக் கேளீர். 1

6. காலான வயித்தியத்தை யுறுதி யாகக்
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய பிரம னாவான்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான குருவுடைய செல்வ னாவான்
சிந்தையிலே கலக்கமறச் சித்த னாவான்
நாலான மணிபோத்து பரமன் சொன்ன
நலமுடைய முனிவன்மொழி நாடி முற்றும். 50

7. சிவமயம். குருவாழ்க குருவே துணை.

8. மூலம். *9.* பாடல்கள் அந்தாதியிலும், பாரப்பா, கேளப்பா போன்ற முன்னிலையாரை அழைத்துக் கூறும் சொற்களும், பேச்சுவழக்குச் சொற்கள் நிறைந்தும் அமைந்துள்ளன. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்ட முப்பு என்னும் இக்கற்ப மருந்து மனிதன் மூப்பு, பிணி, சாக்காடு இன்றிப் பல்லாண்டு காலம் இம் மண்ணுலகில் வாழ்வதற்குக் கிடைத்த ஓர் அரிய மருந்தாகும்.

IV. 1. R. 172, R. 249(k), R. 4714, R. 4693, R. 8998, R. 3606, R.4775, R. 4388, R. 1079(a), D.2389, D.2398, D.1872. *2.* உ.த.நி. எண் 532:860, த.ச.ம.நூ.எண்கள் 321(g), 357(b). *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* (i). எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் குருநூல் முப்பு 50', அகத்தியர் முப்பு சூத்திரங்கள்,

தாமரை நூலகம், சென்னை, 1992. (ii). எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் வைத்தியக் குருநூல் முப்பு 50', அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இச்சுவடியின் முதல் இதழில் அகத்திய மாமுனி அருளிச் செய்த முப்பூ சூத்திரம் ஐம்பது என்று எழுதப்பட்டுள்ளது. இச்சுவடிக்கட்டில் உள்ள பிற நூல்கள்: (a). கொங்கணர் முதற் காண்டம் நாற்பத்தொன்று, (b). அகத்தியர் வழல்ல பதினாறு, (c). தட்சிணாமூர்த்தி வழலை முப்பது, (d). கொங்கணர் முதற் காண்டம் நாற்பத்தொன்று, (e). அகத்தியர் சூத்திரம் நாற்பத்தெட்டு, (f). உரோமரிஷி சூத்திரம் இருபத்தைந்து, (g). அகத்தியர் வழலை முப்பது, (h). அகத்தியர் கலை ஞானச் சுருக்கம் பன்னிரெண்டு, (i) இடமரானந்தர் சூத்திரம் பதினாறு, (j). உரோம ரிஷி நாயனார் சூத்திரம் ஐம்பது, (k). உரோம ரிஷி சூத்திரம் பதினாறு, (l). உரோமரிஷி சுருக்கம் பதினாறு, (m). அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் பன்னிரெண்டு, (n). கூர்மானந்தர் சூத்திரம் ஐம்பத்தொன்று, (o). அகத்தியர் முப்பு பதினாறு, (p). அகத்தியர் புட்ப மாலிகை ஐம்பத்தொன்று.

அகத்தியர் முப்பு 50

I. 1. **437**. 2. அ. R. 172. ஆ. T.R. 156. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் முப்பு 50. ஆ. Akattiyar muppu 50. இ. அகஸ்த்தியர் அருளிச் செய்த முப்பு அன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர்பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914-15.

II. அ.1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 20; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. 4 ஆவது இதழ் விடுபட்டுள்ளது. 16. குறை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறையையும், அதில் சேருகின்ற மருந்துகளையும், அம்மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 136 போன்றது.

4. அகஸ்தியர் அருளிச் செய்த முப்பூ அன்பது.

வானும் புவியும் மதியுங் கதிரொளியுந்
தேனும் தெளிந்த சிவகுருவும் - தானுந்தன்
நான்மறையு மாராய்ந்து நன்னூலா யன்பதையுங்
கோலமுடன் கிணேசனருள் காப்பு.

5. மயமான முப்புவின் மார்க்கந் தன்னை
வயித்தியத்துக் காதியாய் விரித்துச் சொன்னேன்
செயமான கணபதியுங் கந்தன் தானும்
சிவனோட பார்வதியும் நிருவாணி தானும்
நயமாக எப்போதும் முன்னே நின்று
நாமறிய முப்பூவை நயந்து காத்து
வயமாகச் சொல்லுகிறேன் எண்ப துக்குள்
வயித்தியரே யெப்போதும் வணங்கிக் கேளே. 1

6. முத்தறிந்த வின்னூற்றான் றுணையே யென்று
முன்முறைகள் .... கொண்டு
சித்திகொண்ட வைம்பதுக்குள் செந்தூ ரத்தைச்
செய்யவென் றுலகத்தோர் பிழைக்க வேண்டி
அத்திமுக ....இக் கேழ்க
அமுதுனக் கின்னூலை அருளிச் செய்தார்
பத்திகொண்டு குருபதத்தைப் பணிந்து போற்றிப்
பார்தனிலே முப்பூவை அறிந்தி டீரே. 52

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. கேட்க என்பது கேழ்க என்றும், பக்தி என்பது பத்தி என்றும், பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்தும் வருகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 267(e), R. 249(k), R. 4714, R. 4693, R. 8998, R.3606, R.4775, R. 4338, R. 1079(a), R. 2389, D. 2398, D. 1872. 2. உ.த.நி. எண். 532:860, த.ச.ம.நூ.எண்கள் 321(g), 357(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் குருநூல் முப்பு 50', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் முடிந்த பின்னர்த் தொடர்ந்து அனுபவ வயித்தியம் தொடர்பான இதழ்கள் மூன்றும், சோதிடம் தொடர்பான இதழ் ஒன்றும், பத்திரகாளி பேரிலும், துர்க்கை பேரிலும் பாடப்பட்ட பாடல்கள் உள்ள இதழ் ஒன்றும், சிவதோத்திரப் பாடல்கள் உள்ள இதழ் ஒன்றும் உள்ளன.

அகத்தியர் முப்பு 50

6. தானென்று அலைந்ததினால் வருவ தேது
சமுசார ஞானிகட்கே மோட்ச மெய்தும்
கூனென்றுங் குருடனென்றும் முடவ னென்றுங்
குலயீனன் செவிடூமை யாகா தென்றுங்
கோனென்ற தத்துவங்கள் குறைவில் லாமல்
குடிகெடுத்த வியாதியினால் கிடந்தி டாமல்
பானென்ற சந்திரன்போல் திரேக முண்டாம்
பரமோட்சம் பூரணத்தைப் பாரு முற்றே. 11

7. வாசி சூஷ்த்திரம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. எளிய பேச்சுமொழிச் சொற்கள் பயின்றுள்ளன. 10. அகத்தியர்

பெயரில் பாடப்பெற்றுள்ளது. புலத்தியரிடம் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வாசி வருமிடம் என்பது மூச்சு பிறக்குமிடம் என்று பொருளாகும். அதாவது நுரையீரல், வாசி, வாசிகட்டல், வாசிகலை, வாசிகூட்டம், வாசிசித்தி, வாசிநிலை, வாசித்தலம், வாசிப்பழக்கம் முதலான சொற்களிலிருந்து வாசியின் முக்கியத்துவம் விளங்குகின்றது.

அகத்தியர் வாதம்

I. 1. **482.** 2. அ. R. 6074. ஆ.T.R. 2546. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாதம். ஆ. Akattiyar vātam. இ. அகஸ்தியர் வாதம் 111. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 33. 5. 27 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 66; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 11 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உலோகங்களைப் பொன்னாக்கும் இரசவாத முறையினைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. அப்பு, பிருதிவி, தேயு, வாயு, ஆகாசம் முதலான பஞ்ச பூதங்கள் உடம்பில் பரவிநிற்கும் நிலைகள் விளக்கமாக இந்நூலில் கூறப்படுகின்றன. கெந்திரசம், துருசுச் சுண்ணம், தாம்பிரச் சுண்ணம், இரசகுளிகை, இரசகுளிகைச் செந்தூரம், இரசகெந்திச் செந்தூரம், கருவங்கம், இரசகற்பூரம், மிருதார சிங்கி, வெள்ளைப் பாசாணம் முதலான இரசாயனக் கலவைகளின் தயாரிப்புகளையும் இந்நூல் கூறுகின்றது. தேவையான துருசைக் கல்வத்தில் பொடித்து நவச்சார செயநீரை விட்டுப் பன்னிரண்டு மணி நேரம் அரைத்து, பிறகு நவச்சாரச் செயநீரைத் தெளித்து எரித்து வறுக்க வேண்டும். ஆறுமணி நேரம் வறுத்தபின் உலரவைத்து மீண்டும் மீண்டும் இதேபோல்

ஆறுதடவை செய்தால் துருசுச்சுண்ணம் கிடைக்கும் என்று அதன் தயாரிப்பினைக் கூறுகிறது. வெள்ளைப் பாசாண மானது பூமியில் இயற்கையாகக் கிடைக்கிறது. இது சீமைச் சுண்ணாம்பு போல் இருக்கும். இப்பாசாணம் உடலைத் தேற்றும்; நரம்புத் தளர்ச்சியை நீக்கும்; சுரத்தை அகற்றும்; இதயம், நுரையீரல், குடல், பிறப்புறுப்புகள் முதலியவை களைத் தூண்டும் தன்மையும் இதற்கு உண்டு. இரசவாதம் என்ற சொல் இரசத்தைக் கொண்டு வேதைப்படுத்துதல் அதாவது பாதரசத்தைக் கொண்டு உருமாறச் செய்தல் என்ற பொருளில் உண்டாகியிருக்க வேண்டும்.

4. ஹரிஓம் நன்றாக.

5. பாடுகிறேன் சாஷ்த்திரத்தின் கருவை யெல்லாம்
பாங்கான கணபதிதன் பாதம் போத்தி
நீடுகிறேன் இவைகளெல்லாம் விரைந்து பார்த்து
நிட்செயமாய் சாஷ்த்திரத்தின் பாதம் போத்தி
வீடுகிறேன் வெளியாகி விதமு மாகி
வேதாந்த மனோன்மணித்தாய்ப் பாதம் போத்தி
போத்தி நின்ற பூரணத்தின் ஞானம் நூல்கள்
புகழ்ந்திட்டேன் வேதாந்தக் கருவில் சேர்த்தே. 1

6. உரைத்திட்ட வாதமுறை கண்டு நீங்கள்
உண்மையுடன் உலகத்தோர் களுக்கு ....
....
....
கொள்ளப்பா தேவியுட பூசை செய்து
குணமாக வாலையைத்தான் தியானஞ்
செய்யே. 111

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 'அகத்தியர் வாதம்' என்னும் இந்நூலுடன் அகத்தியர் வழலை 16 (R.6070), அகத்தியர் சூத்திரம் 48 (R.6072), அகத்தியர் பின் 80 (R.6075) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் வாலை பூசாவிதி 14

I. 1. 483. 2. அ.R. 3690. ஆ.T.R. 1799. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாலை பூசாவிதி. ஆ. Akattiyar vālai Pūcaviti. இ. வாலை பூசாவிதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1952-53.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 25 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப் பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாலை எனும் தெய்வத்தை(சக்தி) வணங்கும் முறையும் பிறவும் கூறப்பட்டுள்ளன. 2. பூசாவிதி. 3. இந்நூல் சிவன், வாலை(சக்தி), குண்டலினி தொடர்பானது. சிவனைத் துதிக்கும் முறைகளும், சக்தி எனும் பராபரை வாலை எனும் பெண் தெய்வத்தைப் பூசிக்கும் முறைகளும் கூறப்பட்டு உள்ளன. வாலை என்பது சித்தருக்கெல்லாம் தெய்வம் எனக் கூறப்படுகிறது. வாலையை வணங்கி, நவகோணமிட்டு விநாயகன் உட்பட பல தெய்வங்களையும் வணங்கி, அகாரம், உகாரம், மவ்வும் சவ்வுமிட்டுத் தொழுதால் சகலமும் சித்தியாகும் எனக் கூறப்பெறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.

5. சொன்னாளோ சிறுபிள்ளை வயதோ கொஞ்சம்
சொல்திறமாய்ப் பேசறியா மவுனி யப்பா
யென்னாளோ யெவ்வுகமோ யானுங் காணேன்
இப்படியே சிறுபெண்ணா யிருந்த டைத்தாள்
தன்னாளோ வயதுபத்து சந்திரன் வீட்டில்
தாயாருங் குடியிருப்பு தாய்க்கிப் பாரு
பன்னாளு மாவிகோடி பாடி விப்பள்
வாலையடா சித்தருக்குத் தெய்வந் தானே. 1

6. கூடியங்கே யவரவரே கண்டு பேசி
கூசாம லவரவர்தம் வார்த்தை சொல்லி
தேடிலெங்கு மிந்தமுறை கிடையா தப்பா
தேவிமுதல் சதாசிவனுமங்கே திருநடனஞ் செய்வார்

நாடிநின்று வாடாதே யென்தாய் பூசை
நல்லோருக் கெய்துமடா கருமிக் கில்லை
பாடியிந்தப் பதின்மூன்று பாட்டுக் குள்ளே
பரைபூசை சிவபூசை பணிந்திட் டேனே. 14

7. வாலை பூசாவிதி முற்றுப்பெற்றது. குமரகுருபரர் துணை. நாயன் துணை. தேவி சகாயம்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளதாயினும் வாலை எனும் தெய்வத்தைப் பரவுவதும் ஆகும். 11. இல்லை.

IV. 1. R. 9(b). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி R.9(b) எண்ணில் உள்ளதின் ஒரு பகுதியாகும். அந்நூலில் 200 பாடல்கள் உள்ளன. அதன் உட்பகுதியாக இந்நூல் விளங்குவதாகத் தெரிகிறது. இங்குத் தனிநூலாக உள்ளது. இந்நூல் உள்ள சுவடிக்கட்டில் வேறு இருநூல்களும் உள்ளன. அவை: 1. அகத்தியர் மாந்திரீகம் 60 (R.3689) (1 முதல் 9 இதழ்கள் வரை), 2. தட்சிணாமூர்த்தி வாகடம் (R.3691) (13 முதல் 17 இதழ்கள் வரை). இந்நூல் 10-லிருந்து 12ஆம் இதழ்கள் வரை உள்ளது.

அகத்தியர் வாலை வாகடம்

I. **1. 484.** 2. அ. R. 3704. ஆ. T.R. 1808. இ.—. ஈ. —. 3. அ. அகத்தியர் வாலை வாகடம். ஆ. Akattiyar vālai vākaṭam. இ. வாலை வாகடம் வயித்தியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மகாலிங்கம் பிரஸ், வத்திராயிருப்பு. 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 14. 5. 35 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 28; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. 74 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வயிறு தொடர்பான பலவகை நோய்களும் அவற்றுக்கான மருந்துவகைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. மாந்தம் தொடர்பான பலவகை நோய்களை இந்நூல் குறிக்கின்றது. அவற்றுள் சில நோய்களும் மருந்துகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. நோய், தோசக்குறி, மாந்தக்குறி, காமாலைக்குறி, கருங்கிரந்திக் குணம், மருந்து, தோசப்பிணிக்கு வாலை, மாந்த குணம் மருந்து, செரியா மாந்த குணம் மருந்து, சகல மாந்தத்துக்கும் கிசாயம் என்பவற்றுடன் கர்ப்ப வேதனைக்கு உரிய மருந்து, வயிற்றில் குழந்தை இறந்துபோனால் அதை வெளியே எடுத்தற்குரிய மருந்து, பட்சி தோசத்துக்கு மருந்து என்பவை இடம் பெற்றுள்ளன. கிரந்தி இருவகைப்படும். அவை: கருங்கிரந்தி, செங்கிரந்தி என்பன. மாந்தம் எட்டு வகைப்படும். இவ்விரண்டு நோய்களும் பெரும்பாலும் குழந்தைகளுக்கே ஏற்படும்.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க. குருவே துணை.

5. வாலைக்கிறக் குணக்கவியும் மருந்து மந்திர யெந்திர
.... வேருடனே
கோலைக்குளையும் மெண்ணைதனைக் குணத்தி....
.... சிந்தித்தார் சஞ்சீவி யென்றே. 1

6. விட்டிடுஞ் சாரணைவேர்ப் பட்டை தட்டி விதமுடனே
கிட்டிடுந் தேசர்புறஞ் சமன்கூட்டிக் கிதைபொடியாய்
மட்டிடுந் தேனிலேகிய மாக்கி யதனை யுண்ண
பொட்டண மாந்தகுணத்தின் பொருமலும் போய்விடுமே.
74

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. வடமொழி எழுத்துக்கள் வந்துள்ளன. (எ.டு. தோஷம், கிஷாயம்). 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றதாயினும் 'வாலை எனும் தெய்வப்' பரவலும் உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 169. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் R 169 எண்ணில் உள்ளதைப் போன்றது. இந்நூல் இடம்பெறும் சுவடிக்கட்டில் மேலும் இரு நூல்கள் இடம் பெறுகின்றன.

அவை: 1. அகத்தியர் சூத்திரம் 50 (R.3703) (1 முதல் 10ஆம் இதழ்கள் வரை), 2. அகத்தியர் வைத்தியம் பின் 80 (R.3705) (27 முதல் 45 ஆம் இதழ்வரை) இந்நூல் 11 ஆம் இதழிலிருந்து 26 ஆம் இதழ் வரை உள்ளது.

அகத்தியர் வாலை வைத்திய நாடி

I. 1. **485**. 2.அ. R. 940(b). ஆ. T.R. 759. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாலை பரிபூர்ண வைத்தியநாடி சூத்திரம். ஆ. Akattiyar vālai paripūrṇa vaittiya nāṭi cūttiram. இ. அகத்தியர் அருளிச்செய்த வாலை பரிபூரண வயித்திய காண்டம் யெட்டில் முதல் காண்டத்தில் சொல்லிய நாடி நூத்திமுப்பது. 4.—. 5.—. 6.—. 7. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. ஐம்புலிங்கம் பிள்ளை, மைலாப்பூர், சென்னை. 10. கி.பி.1927-28.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 43. 5. 29 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 106; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 4 முதல் 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 139 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாதம், பித்தம், சிலேத்துமம் எனும் நாடிகளின் இயல்பும், அவை மூலம் அறியவரும் நோய்கள் பற்றியும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் தசைநாடியும், திசைவாய்விலடக்கலும், திசனாடி, திசவாயு, திசவாய்வுதலம், நட்சத்திர மரணக்குறிப்பு, வாதனாடிகுணம், (நூறாண்டு), மரணக்குறிப்பு, வாதம், பித்தம், சிலேத்துமம், பித்தசுரம், வாதசுரம், பித்தனாடி வாதசுரம், நோய் வருகிற விதமறிதல், சிலேத்தும குன்மம், பித்த குணம், வாதகுன்ம குணம், சிலேத்தும சூலை, பித்த சூலை, வாதசூலை, சிலேத்தும சன்னி, பித்த சன்னி, வாதசன்னி, சன்னியின் சாத்தியம் அசாத்தியம் அறிதல், பஞ்சபூத இலட்சணமறிதல், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், தோச குறி சாத்தியம் அசாத்தியம் அறிய, தோச மரணக்குறிப்பறிய, இடகலையின் கலை சுழிமுனை, மலக்குறி மரணக்குறிப்பு, தோசக்குறி, தோசஅசாத்தியமறிய, பித்ததேகி, அய்யதேகி, நூறாண்டு இருக்கிற குறி, சாத்தியமறிய, அசாத்தியமறிய, எச்சில்குறி, அசீரணக்குறி, சுன்னத்தினா

லாகுங் குறியறிய, மேக உற்பத்தி இலட்சணக் குறியறிய, கிரந்தி உற்பத்தியறிய, வாதபித்த சிலேத்தும மேகமறிய, வாதமேகம் பித்த மேகம், சிலேத்தும மேகமறிய, மலசலக்கட்டு படுகிற குறியறிய, சுகசன்னி, சன்னி தோசம், தோசத்தின் குணமறிய, தோச அசாத்திய மூலம், மூலரோகமறிய, சுட்ட மூலதாது, மூலக்கிராணி ஆற, மேகக்குறியறிய, கல்லடைப்பு, நீர்க்கட்டு, வெகுசலமறிய, மேகநீர் அசாத்தியமறிய, மேகம் இருபத்தொன்றுமறிய, எலும்புருக்கி, நிகர்ப்பமேகம், கனத்த நோய், குன்மம், சூலை குன்மம், பித்தகுன்ம சூலை, வாதகுன்ம சூலை, சிலேத்தும வாதபித்த குன்ம சூலை, சூலை பதினெட்டில் சாத்தியம் அசாத்தியமறிய, ஸ்திரீகள் கர்ப்பக் கோளறிய, ஆறுசூலை அறிய, மாதர்கள் பிறப்பறிய, கெர்ப்பிணிக்குச் சன்னி வருகிற விதமறிய, மலடிகள் சன்னி, கண்ணோய் வருகிற விதமறிய, குட்டம் பதினெட்டுமறிய, திசைநாடியில் மூன்று நாடி அறிய போன்ற செய்திகள் பாடப்பெற்றுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குருவே துணை. அகத்தியர் அருளிச் செய்த வாலை பரிபூர்ண வைத்யக் கருக்கிடை காண்டம் எட்டில், முதல் காண்டத்தில் சொல்லிய நாடி நூற்றுமுப்பது.

5. குருநம சிவாயமெனுஞ் சிவஞ்ஞான சத்தியருள்
குமரன்பாதம்
திருவரு மனுமண்டமண்டம் நிறைந்துநின்ற சாம்பவியி
னாதிபாதம்
மருவளரும் நவசித்தர் வடமொழியின் நந்திகுரு
மறையோர் பாதம்
திருவுருவா அலங்கிறதமாய் யோதுதற்குத் தேவி காப்பே. 1

6. உரைத்திடும் னாடிசூஸ்திரம் யோகவானவர்க்கே சித்தி
விரைத்திடும் வித்துதாது விளங்கிய கருக்களெல்லாம்
திரைத்திடும் ராசயோகம் நிலைத்திடும் வாழ்கென்னாளும்
மறைத்தமிழ்முரைக்கனாடி மாமறை தாதுமுத்தே. 139

7. முற்றும். அகஸ்திய ரருளிய வாலை பரிபூரணத்தில் முதல் காண்டத்தில் சொல்லியனாடி யெழுதி நிறைந்தது. முற்றும்.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடின்றி எழுதப் பட்டுள்ளது.

பிழைகள் மலிந்துள்ளன. 10. பலவகை விருத்தங்களால் ஆகிய நூல். அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் வாலை பரிபூரணம் என்ற பெரிய நூலின் ஒரு பகுதியாகும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் வருமாறு: 1. அகத்தியர் அருளிச் செய்த குருனாடி, 2. வால்மீகர் அருளிச்செய்த நாடி சூத்திரம், 3. வால்மீகர் அருளிச்செய்த மணிக்கடைக் கயறு சூத்திரம், 4. வால்மீகர் அருளிச்செய்த பலஹார சூத்திரம், 5. வால்மீகர் அருளிச்செய்த தீபசூத்திரம், 6. சிவவாக்கியர் அருளிச்செய்த நாடி சூத்திரம் (குணவாகடம்) 7. திருமூலர் வாகடம் முதலிய பல நூல்கள்.

அகத்தியர் விசபேதி வைத்தியம்

I. 1. **486**. 2. அ. R. 2499. ஆ. T.R. 1367. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் விஷபேதி வைத்தியம். ஆ. Akattiyar visa pēti vaittiyam. இ. அகஸ்தியர் நாயன் விஷபேதி வயித்தியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கிருஷ்ணமாச் சாரியார், ஜடாமுனிக் கோயில், மதுரை. 10. கி.பி.1951-52.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லை. 4. 5. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 9; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 11 பாடல்கள்.

ஆ. —.

III. 1. குடல்புண் போன்றவற்றுக்கு மருந்தும் அது செய்முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் கொம்பன் குணம் குடல்புண்ணுக்கு மருந்து அக்கர்க் குணம், அக்கரத்துக்குப் பிணிநீர், மூன்றுவகைப் பேதிக்கு மாத்திரை போன்ற மருத்துவ முறைகள் கூறப்படுகின்றன. விசபேதி வகைகள் வருமாறு: 1. கொம்பன் குணம். 2. படுவன் குணம். 3. அக்கர்க் குணம். இம்மூன்று விச பேதிகளின் அசாத்திய, சாத்திய நிலைகள் கூறப்படுகின்றன. இவற்றுள் கொம்பன் குணம் எனும் உயர்ந்த விசபேதி கண்டால் ஒரு

பகலிலே உயிர் போய்விடும் என்று சொல்லப்பட்டுள்ளது. படுவன் குணம் கண்டால் கிடப்பில் போட்டுவிடும் என்றும், அக்கர்க் குணம் கண்டால் உடம்பு களைப்பாகும் என்றும் தெரியவருகிறது. இம்மூன்று வகைப் பேதிகளுக்கு மருந்தும் கூறி, பொங்கல் வைத்துத் தெய்வத்தைப் பூசித்தால் பேதி போகும் என்றும் கூறப்படுகிறது.

4. அகஸ்தியர் நாயன் விசபேதி வயித்தியம்.

5. சொல்லுகிறேன் விசபேதி உலகுள் ளோர்க்குத்
தோன்றிவிடும் மூன்றுவகை அதின்பேர் கேளு
வல்லதொரு கொம்பனென்றும் படுவ னென்றும்
வகையான அக்கரத்தின் கழிச்ச லென்றும்
அல்லல்செய்யும் கழிச்சல்வகை மூன்றுக் குள்ளே
அசாத்தியமும் சாத்தியமும் அறியச் சொல்வோம்
வெல்லுமடா கொம்பனென்ற கழிச்சல் வந்தால்
வெகுசுருக்காய் ஓன்பகலில் வினவிக் கொல்லும். 1

6. நயந்திட்ட கழிச்சலுக்குத் தெய்வந் தூர்க்கை
நலமில்லா முணிப்பாய்ச்சல் நடுவும் பாரு
பயந்திட்டுத் திரிந்தாலும் விடாது கர்மம்
பண்பாக வருமுனீக்குப் பாய்ச்சல் பண்ணு
துயர்ந்திட்ட காளிக்குக் காவு செய்து
சுகமாக ஊர்வழைத்துப் பொங்கல் செய்தால்
செயந்திட்ட மாய்த்தீரும் அம்பாள் காப்பாள்
திக்கிலுள்ள தேவதைக்குஞ் சிறப்புச் செய்யே. 11

7. விசபேதி வயித்தியம் முற்றும். பதினெண்போர்கள் துணை.

8. மூலம். 9. ழ/ள வேறுபாடின்றி உள்ளன. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. விச பேதியில் 'கொம்பன் குணம்' பற்றிய சிறப்புச் செய்திகள் காணப்படுகின்றன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்த நூல் 42 ஆம் ஓலையின் பின்பக்கம் முதல் 46 ஆம் ஓலை வரை உள்ளது. இந்நூல் உள்ள சுவடியில், 1. அகத்திய நாயனார் வாகட வெண்பா (R. 2496) (1 முதல் 21 ஆம் இதழ்

வரை), 2. அகத்திய நாயனார் திரட்டு 80 (R. 2497) (22 முதல் 35 ஆம் இதழ் வரை), 3. அகத்தியர் 300-இல் சொன்ன அட்சர மகிமை (R. 2498) (36 முதல் 42 ஆம் இதழ்வரை) எனும் பிற நூல்களும் உள்ளன.

அகத்தியர் வேதாந்த நவசிந்தாமணி

I 1. 487. 2. அ. R. 4721. ஆ. T.R. 2081. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வேதாந்த நவசிந்தாமணி. ஆ. Akattiyar vētānta navacintāmaṇi. இ. அகஸ்த்தியர் வேதாந்தத்தில் சொன்ன நவசித்தாதியர் குழம்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. எஸ். பரமசிவம் பிள்ளை, கவரைப்பட்டி, திருச்சி. 10. கி.பி.1953-54.

II அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 89. 5. 36 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 178; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம், உரைநடை. 15. இறுதி ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. பல பாடல்களும் உரைநடைப் பகுதியும் உள்ளன.

ஆ. —.

III 1. உடம்பில் தோன்றும் சிலவகை நோய்களுக்குக் குழம்பு மருந்தும், அதன் செய்முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் குழம்பு, குளிகை, இலேகியம் போன்றவற்றின் செய்முறைகளும் பலன்களும் குறிப்பிடப் பெற்றுள்ளன. பாண்டு, சோகை, நீராம்பலுக்குக் கசாயம், மேகம், நீர்க்கடுப்புக்கு மருந்து, மூலவாய்வு, மூலக்கிராணி, வயிற்றுக்கடுப்பு, ஈளை, இருமல், மகோதரம், மலக்கட்டு, இரைப்பு இவற்றிற்கு இலைக்கள்ளிச் சூரணம், இலைக் கள்ளிச்சாறு மூலங் கொண்டுவந்து துண்டு துண்டாய் நறுக்கிப் பசுவின் பாலில் வடிகட்டி, வெயிலில் உணர்த்தி, இடித்துச் சூரணம் பண்ணி, வைத்துக் கொணடு தலைமுழுகி, தேனில் கொள்ளவும்.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க. குருவே துணை.

5. காசினியில் மானிடர்க்குப் பிணியே நீங்க
கருத்துடைய அகஷ்த்தியனார் பாடல் செய்த
வேசினிய நவசித்தர் குழம்பு தன்னை
வேதாந்தம் பாடிவிட்டேன் சுத்தி யாக
ஆசியதோர் சித்தாந்தம் அடக்கிப் போட்டேன்
அறியார்கள் சுத்திசெய்து ஆட்ட மாட்டோம்
மோசினிய சாபங்கள் நிவர்த்தி செய்து
முன்வகுடு கருந்தாமமூலம் ஆதி சொன்னேன். 1

6. **சிந்தாதி இலேகியம்**: புளி பலம் 50, இரும்பு பலம் 50, ஒரு பாண்டத்தில் போட்டு பதினாறு வல்லம் நீர்விட்டு ஒரு வல்லமாய்க் காய்ச்சி யதில் கையாந்தகரைச்சாறு 2, கீழாய்நெல்லிச்சாறு 1, நெல்லிக்காய் சாறு 1, சித்திரமூலச் சாறு 3, பொன்னாங்கன்னிச்சாறு 1 இவை முன் கசாயத்தில்விட்டு, திரிகடுகு, திரிபாலை, வாய்விளங்கம், இந்துப்பு, மஞ்சவேர், கல்லுப்பு இவை வகைக்கொரு பலம் பொடித்துப் போட்டு.... காமாலை சோகை இவை தீரும்.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பாட்டிலும் உரைநடையிலும் பேச்சுவழக்குச் சொற்கள் கலந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். நவசித்தர் குழம்பு என்றும் இந்நூல் குறிப்பிடப்பெற்றுள்ளது. மலைவாகடம் என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. R. 4713. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 'அகத்தியர் குழம்பு' என்ற பெயரில் விளங்கும் மருத்துவ நூல்களில் கூறப்பெறும் குழம்பும் இந்நூலில் கூறப்பெறுவது குறிப்பிடத்தக்கது. இந்நூல் R.4713 ஐப் போன்றது எனக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து குழம்பு எனும் மருந்து செய்முறை முதன்மையாகக் குறிக்கப் பெற்றுள்ளது என அறியலாம்.

அகத்தியர் வேதாந்தம்

I. **1. 488.** 2. அ. R. 3654. ஆ. T.R. 1790. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வேதாந்தம். ஆ. Akattiyar vētāntam இ. அகஸ்த்தியர் வேதாந்தம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ.,

சென்னை-5. 9. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1952-53.

II. அ.1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 11. 5. 32 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 22; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 13 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. சில பாடல்களும் உரைநடைப் பகுதியும் உள்ளன.

ஆ. —.

III 1. சைவசித்தாந்தம், யோகம், சில மருத்துவ முறைகள் தொடர்பான கருத்துகள் கூறும் நூல். 2. யோகம், மருத்துவம், தத்துவம். 3. இடகலை, பிங்கலை, சுழிமுனை முதலிய நாடிகள் இந்நூலில் விளக்கப்பட்டு, யோக தத்துவக் கருத்துகளும் இடம் பெறுகின்றன.

4. —.

5. **....தனை யருத்த சித்தர் யினையடி பாதம் போற்றி துருவெளி யகண்ட சோதி சொக்கனார் அருளி னாலே விரவிய ..... ஞான வெட்டியான் கதையைப் பாட கருவினி லுமையாள் மைந்தன் கணபதி காப்புத் தானே.** 1

6. **வாய்வு பத்தும் அடையாளங் கேளீர் நல்லவ னுமைபிரானன் அபானன் வியானன் தாவும் உதரன்ன சமரன்ன தேவதத்தன் தனஞ்செயன் கிரிதரந்தன் கூர்பின் பிரணபிரனன வா... வாய்வுமூலந் துடங்கி பன்னிரண்டுங் குலங்கொண்டு ஏட்பு தடிக்கினால் ஓடிக்கழிந்துவிடு அபானனும் திசனாடி யிருந்தும்...**

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பாட்டிலும் உரைநடைப் பகுதியிலும் பேச்சுவழக்குச் சொற்கள் கலந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூலாயினும் 'ஞான வெட்டியான் கதை' எனக் காப்புப் பாடலில் குறிப்பிடப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலின் தொடக்கப் பாடல் 'ஞானவெட்டியான் கதை' எனக் குறிப்பிடுவதிலிருந்து இது ஒரு மருத்துவ ஞான தத்துவநூல் எனத் தெரிகிறது.

அகத்தியர் வைசூரி வாகடம்

I. 1. **489**. 2. R. 1815. ஆ.T.R. 1039. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைசூரி வாகடம். ஆ. Akattiyar vaicūri vākaṭam. இ. அகஸ்த்தியர் வைசூரி வாகடம். 4. —. 5. —. 6. —. 7. — 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மிருதங்கம் சுப்பையர், சத்தபுரம், பாலக்காடு. 10. கி.பி.1948-49.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 34 x 5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப் பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 12; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 15 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 83 பாடல்களும் உரைநடைப் பகுதியும் உள்ளன.

III. 1. அம்மை நோய், அதற்கான மருந்துகள், அவற்றைச் செய்யும் முறைகள் போன்றவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அம்மை நோய் மருத்துவம் தொடர்பான இந்நூலில், அம்மை நோய் உண்டாகும் விதமும், அது தணிக்கும் விதமும். முறை மாறி நடந்தால் அதனால் ஏற்படும் நோய்களும் கூறப்பெறு கின்றன. மேலும் மண்ணை கட்டுக்கு, மலசல கட்டுக்கு, தாகத்துக்கு, கண்ணுக்கு ஒத்தடம், தலைமுழுக, பேதிக்கு மருந்து ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

4. —.

5. பூரணமாய் நிதிநிறைந்த சோதி பாதம்
போத்திசெய்து தினந்தினமும் புகழ்ந்தங் கேத்தி
காரணமாய் மாலயனுந் தேடிக் காணா
கடவுள்பதம் போத்திசெய்து கருணை பெற்ற
ஆரணமால் மருகனெனும் முருகன் கந்தன்
அடியிணையைப் போத்திசெய்து அன்பி னாலே
வாரணமும் மதம்பொழியும் மங்கரனை நித்தியம்
மனோகரமாய் வணங்கியே போற்றி யேற்றே. 1

6. முத்தான வயற்களைந்து கடுப்புக் கண்டால்
முறையாய்ச் செய்வதொன்னை முறையைச் செஞ்சு
சித்தான குடங்கரெண்டு மூன்றி னுள்ளே
தோயமெல்லு மேலிடவே யிருத்துப் போட்டு

பத்தான சேரட்ச லதுவே யெல்லும்
பண்கைச் சட்டிதனில் வழித்துப் போட்டு
தெத்தான விரையத னாறுள் வைத்துத்
தெளியவே வடித்தெடுத்து செய்யச் சேரே. 83

மாதளம் விரை வறுத்து, சோத்துடனே தயிரில் கொள்ள தீரும். பேதி.... சுக்கு வில்லை பழத்தோடு தசமணி கஷாயமிட்டு .... போட்டுக் குடுக்க பேதி தீரும். மாதளம் பூ வறுத்து யிதில் கிராம்பு சேர்த்துக் கிஷாயமிட்டு கொடுக்கவும் பேதி 2ம் தீரும்.

7. வைசூரி முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பாடல்களில் 'ற்ற' என்பன 'த்த' ஆகவும், ஒற்றுமிகுந்தும், எளிமையாகவும் அமைந்துள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். வைசூரிக்கு அம்மை நோய் என்பதும் பெயர். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில்

1. நயனவிதி (R.1803) 1 - 16 இதழ்கள்
2. குருநாடி (R.1804) 17-24 இதழ்கள்
3. அகத்தியர் தருக்கம் (R.1805) 25-27 இதழ்கள்
4. பதார்த்தகுண சிந்தாமணி (R.1806) 28-38 இதழ்கள்
5. கருவூரார் நொண்டிச் சிந்து (R.1807) 39-40 இதழ்கள்
6. வைத்திய நூல் (R.1808) 41-58 இதழ்கள்
7. வைத்திய நூல் (R.1809) 59-75 இதழ்கள்
8. சுத்திமுறைகள் (R.1810) 76-78 இதழ்கள்
9. மூலிகைக் குணம் 60 (R.1811) 79-81 இதழ்கள்
10. அவத்தைக்குறி (R.1812) 82 ஆம் இதழ் மட்டும்
11. நாடிவகை (R.1813) 83-84 இதழ்கள்
12. தட்சிணாமூர்த்தி முப்பு 50 (R.1814) 85-88 இதழ்கள்
13. அகத்தியர் அகராதி (R.1816) 95-103 இதழ்கள்
14. சட்டைமுனி நிகண்டு (R.1817) 104-115 இதழ்கள்
15. தட்சிணாமூர்த்தி விநோதம் 43 (R.1818) 116-118 இதழ்கள்

16. சித்தர் ஆரூடம் (நொண்டிச் சிந்து) R.1819 119-139 "

17. கொக்கோகம் (வசனம்) (R.1820) 140 இதழ் மட்டும்

18. இராமதேவர் பட்சிணி (R.1821) 141-143 இதழ்கள்

எனும் நூல்களும் உள்ளன. இந்த நூல் 89 ஆம் இதழ் முதல் 94 ஆம் இதழ் வரை உள்ளது.

அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360

I. 1. **490**. 2. அ. R. 941(a). ஆ. T.R. 760. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம். ஆ. Akattiyar vaittiyam. இ. அகத்தியர் அருளிச் செய்த இரத்தினச் சுருக்கம். 4.—. 5. —. 6. ம. வெ. முத்துசுவாமி. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 96. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 192; இரு பக்கங் களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 364 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் உண்டாகும் நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. ஆனந்த பைரவி மாத்திரை, இரசானந்த பைரவி மாத்திரை, சுயமக்தினி மாத்திரை, சுரம், குளிகை மாத்திரை, கபாட மாத்திரை, கிராணி மாத்திரை, பூபதி மாத்திரை, இரச சிந்தாமணி மாத்திரை, கோரோசனை மாத்திரை, பூமணி உருண்டை, அர்த்தநாரீஸ்பரன் மாத்திரை, சிலோதாரி சிந்தாமணி கருசாலை இலேகியம். காமாலை இலேகியம், அசுவகெந்தி இலேகியம், கண்டாத்திரி இலேகியம், குமரித்தயிலம், முழுக. பஞ்ச தீபாக்கினி இலேகியம், அரக்குத் தயிலம் முழுக கண்டகத்திரி இலேகியம், சிந்தாதி இலேகியம், மகாவில்லாதி இலேகியம், இரசபங்கி வில்லாதி இலேகியம், மகாகண்டங்கத்திரி இலேகியம், கபாட இலேகியம், திப்பிலி இரசாயனம், கூம்பாண்ட இலேகியம், அசுவகெந்தி சூரணம், கண்டாத்திரி சூரணம், தாளிசபத்திரி சூரணம், பஞ்சதீபாக்கினி சூரணம், நிலவாகைச் சூரணம், வல்லாரைச் சூரணம், யேலாதிச் சூரணம், அசுவகெந்தி தைலம், வில்லாதித் தைலம், குமரித் தைலம், கொம்பரக்குத் தயிலம், சந்தனாதித் தைலம், பொன்னாங்

கன்னித் தைலம், கீழாநெல்லித் தைலம், தலைச்சூலைக்கு ஆண்டைத் தைலம், நிலைப்பனைக்கிருதம் பெரும்பாட்டுக்கு, பொன்னாங்கன்னித் தைலம் மூலச்சூட்டுக்கு, புளியாரைக் கிருதம், வல்லாரைக் கிருதம், கூழ்பாண்ட கிருதம், தூதுவளைக் கிருதம், கண்டாத்திரி இலேகியம், கணத்தெண்ணெய், கரப்பானெண்ணெய், சுழிமாந்தயெண்ணெய், மேகத் தெண்ணெய், கெர்ப்பநோய் கருவழியெண்ணெய், கலிங்காதியெண்ணெய், வாதத்துக்குயெண்ணெய், சுகசீதபேதியெண்ணெய், எலும்மிச்சப்பழயெண்ணெய், வீரபத்திரகலிக்கம் நசியம், கெண்டாவிழ்தம் சூரணசுத்தி, செந்தூர பஸ்பம், சிங்கி முப்பு விபரம், உலோக செந்தூரம், காந்த செந்தூரம், அயக்காந்த செந்தூரம், திரிலோக செந்தூரம், பஞ்சலோக செந்தூரம், மண்டூர செந்தூரம், அப்பிரகச் செந்தூரம், துருசுகுரு, இரசபற்பம், தாளக பற்பம், வங்க பற்பம், நாகபற்பம், தாம்பிர பற்பம், வெள்ளி பற்பம், தங்க பற்பம், சிங்கி வெண்காரம், பவழபற்பம், சன்னிக்கி அஞ்செண்ணெய்த்தைலம், வாதசுரக்கிருதம், பித்தசுர கசாயம், சன்னி பதிமூன்றுக்கும் பேர், தோசம் எழுபதுக்கும் பேர் கெந்தி இரசசெந்தூரம், இரசலோக செந்தூரம், இரச கற்பூர பற்பம், காரீய செந்தூரம், பூரண சந்திரோதயம் முதலான மருந்துகள் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க. குருவே துணை. அகஸ்தியர் அருளிச் செய்த இரத்தினச் சுருக்கம்.

5. **பூரணமாய் நிறைந்தகுரு பரைதாள் போற்றி**
புகலுகிறேன் வயித்தியரத்தினச் சுருக்கம் தன்னை
வாரணமா முகத்தானைப் பணிந்து போற்றி
வயித்தியந்தான் முன்னூற்று யறுபதுக் குள்ளே
காரணமாய்ச் செந்தூர பற்பம் லேகியம்
கருவான தையிலமொடு கிருத மெண்ணைச்
சூரணமாகக் கிராணமொடு கலிக்க மாத்திரைச்
சுருக்குகுரு னாடிமுதல் சொன்னேன் பாரே. 1

6. **முகிழவே வியாதியெல்லாங் கடலே புக்கு**
முக்கியமாய் அகத்தியர்க்குச் சிபந்தான் பண்ணு
நெகிழவே தியானமது யென்னேரமும் பண்ணு
நேரான தேவியைத்தான் தியானம் பண்ணு

நிகழவே சிவன்தனையே பூசை பண்ணு
நேராத வியாதியெல்லாம் தவறுண் டேபோம்
மகிழவே யிருந்திடாமல் வயித்தியஞ்செய்தா னாகில்
வையகத்தி லொப்பாருயீ சன்தான் முத்தே. 364

7. —.

8. மூலம். 9. பேச்சுவழக்குச் சொற்கள் கலந்து எளிமையாகப் பாடல்கள் அமைந்துள்ளன. அந்தாதி அமைப்பிலும் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். வைத்திய இரத்தினச்சுருக்கம் என்றும் இரத்தினச்சுருக்கம் என்றும் பெயர் பெறும். மருந்துகளைச் இரத்தினச்சுருக்கமாகச் சொல்வதால் இப்பெயர் அமைந்தது. 11. ஏர்விளம்பி வருடம் ஆடி மாதம் 1ந் தேதி சுக்கிர வாரம் யேகாதேசி மிருகசீரிடம் கன்னிகா லக்கினத்தில் எழுதி நிறைந்தது. ம.வெ.முத்துசுவாமி இரத்தினச் சுருக்கம். ஸ்ரீரங்கநாயகர் பாதமே துணை.

IV. 1. D. 1905, D. 2234. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. கே.பி. தியாகராசன் (பதி.), 'அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360', சண்முகானந்தா புக் டிப்போ, சென்னை, —. 3. இல்லை.

VI. இந்நூல் 'வைத்திய இரத்தினச் சுருக்கம் 360' என்றும் 'இரத்தினச் சுருக்கம் 360' என்றும் அழைக்கப்பெறுகிறது. பார்க்க: (இதே தொகுதி) R. 8951.

அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360

I. 1. **491**. 2. அ. D. 2234. ஆ. T.D. 862. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360. ஆ. Akattiyar vaittiya rattiṉac curukkam 360. இ. அகஸ்தியர் அருளிச்செய்த ரத்ன சுருக்கம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 35.5. 20 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. அதிகமான சிதைவு. 12. 70; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இடையே 29 முதல் 95 வரையிலான ஏடுகள் இல்லை. 16. குறை. 17. 10க்கு மேற்பட்ட பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிலவகை நோய்களுக்கு மருந்தும், அவை செய்முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 490 போன்றது.

4. அகஸ்தியர் அருளிச்செய்த ரத்ன சுருக்கம்.

5. பூரணமாய் நிறைந்தகுரு பரைதாள் போற்றி
புகலுகிறேன் வயித்தியரத்தினச் சுருக்கந் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து வாழ்த்தி
வயித்தியந்தா னிந்தமுன்னூற் றறுப துக்குள்
காரணமாய்ச் செந்தூர பற்பம் லேகியம்
கருவான கிருதமொடு தயில மெண்ணை
சூரணமாக் கிராணமொடு கலிக்க மாத்திரை
சுளுக்குகுரு நாடிமுதல்(ச்) சொன்னேன் பாரே. 1

6. மிகவும் சிதைவு.

7. சிவஞான தேசிகன் துணை. வாணி தேவி சகாயம். திருச்சிற்றம்பலம்.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் கலந்துள்ளன. ஒற்று மிகுதி. எளிய நடை. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. வைத்திய நாடி என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. R.941(a), D. 1905. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. கே.பி. தியாகராசன் (பதி.), 'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360', சண்முகானந்தா புக் டிப்போ, சென்னை, —. 3. இல்லை.

VI. முதல் ஓலை நரம்பு ஓலை. 36, 37 எண்ணுள்ள ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம்

I. **1. 492**. 2. அ. D. 1905. ஆ. T.D. 692. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம். ஆ. Akattiyar vaittiya rattiṉac curukkam. இ. அகஸ்தியர் அருளிச்செய்த ரத்தினச் சுருக்கம் 360 நாடி சுருக்கம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 18 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 18; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவம், நாடி தொடர்பான செய்திகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 490 போன்றது.

4. —.

5. பூரணமாய் நின்றகுரு பரத்தாள் போத்தி
புகலுகிறேன் வயித்தியரத்தினச் சுருக்கந் தன்னை
வாரணமாய் முகத்தோனைப் பணிந்து போத்தி
வயித்தியந்தான் முன்னூத்து அறுப துக்குள்
காரணமாய்ச் செந்தூரம் பஸ்பம் லேகியம்
கருவான தயிலமொடு பற்பம் எண்ணை
சூரணமாய்க் கிராணமொடு கலிக்க மாத்திரை
சுருக்காகும் நாடிமுதல் சொன்னோம் பாரே. 1

6. தானென்ற சூலத் துள்ளே
தயங்கிய நாடி பார்க்கில்
வானெனு மின்னே கேளாய்
வரும்பலன் சொல்லக் கேளு
தானென புருஷர்க் கெல்லாம்
தான்வ லக்கை ஆகும்
தேனென்று மடவார்க் கெல்லாந்
திடம்பெற இடக்கை பாரே. 30

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 941(a), D. 2234. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. கே.பி. தியாகராசன் (பதி.), 'அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360', சண்முகானந்தா புக் டிப்போ, சென்னை, —. 3. இல்லை.

VI. இந்நூல் மூவருட விளக்க அட்டவணை R. 941(a) போன்றது. அதில் வரும் நாடி நிதானம் என்ற முதல் பாகம்

மட்டுமே இங்கு எழுதப்பட்டுள்ளது. 32 பாடல்கள் உள்ளன. இதன் பாயிரத்தின் முதல் செய்யுளில் ''வைத்தியந்தான் முந்நூற்றறுபது'' என வருவதால் இவ் வைத்திய நூல் 360 செய்யுள்கள் கொண்டதாக அறிய முடிகிறது.

அகத்தியர் வைத்தியக் கும்மி

I. 1. **493.** 2. அ. R. 238(f). ஆ.T.R. 222. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியக் கும்மி. ஆ. Akattiyar vaittiyak kummi. இ. அகத்தியர் வயித்தியக் கொம்மி. 4. —. 5. —. 6. —. 7.—. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கேசவ பிள்ளை, நுங்கம்பாக்கம், சென்னை. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறுசிதைவு. 12. 5; ஐந்து பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பெற்றுள்ளது. 13.பக்கத்திற்கு 7 வரிகள். 14. கும்மிப் பாடல்கள் (கண்ணிகள்) 15. பிற்பகுதி ஓலைகள் விடுபாடு. 16. குறை. 17. 37 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூலில் உடம்பில் தோன்றும் சில நோய்களும், அவற்றுக்கு மருந்தும், அவை செய்முறையும் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. தேங்காய்ப்பாலில் சிறுகுறிஞ்சான் வேரிட்டுக் குடித்தால் தீராத மேகநோயைத் தீர்க்கலாம் என்றும், பரங்கிப்பட்டையைத் தூளாக்கி ஆவின் பாலுடன் இருகாசு எடை கலந்து குடித்தாலும் மேகம் தீரும் என்றும் கூறுகின்றார். இதைப் போன்றே, சூலைநோய், வாத, பித்த நோய்கள், வெடிப்புகள், வீக்கங்கள் போன்றவை தீர மருந்துகள் கூறப்பெற்றுள்ளன.

4. கும்பமுனி யருளிச்செய்த வயித்திய கொம்மி.

5 தேங்காய்ப் பாலில் சிறுகுறிஞ்சான் வேரும்
தினமும் மூன்றுனாள் கொண்டிடவே
வாங்கா மேகம் வாங்குமென்று சொல்லி
வாழ்த்திக் கொம்மி யடியுங்கடி. 1

பரங்கிப் பட்டையைத் தூளாக்கி ஆவின்
பாலுடன் காசிடை யிரண்டருந்து
ஒருங்கக் காச்சிக் குடித்திடவே மேகம்
ஓடுமென்றே கொம்மி யடியுங்கடி. 2

6. வெள்ளாட்டுக் கோமியம் கோசலமும்
வேண்டிய சங்கம் வேரரைத்து
மெல்லக் குடித்திட வீக்கங்க ளெல்லாம்
விட்டோடிப் போமென்றே கொம்மி யடியுங்கடி. 36

ஆத்து மணலைத் தான்வறுத்து
அதுபோல் முசுமுசுக்கைத் தண்ணீரைவிட்டு
பாத்துப் பதமாய்க் குடித்திடவே பித்தம்
பறக்குமென்றே கொம்மி யடியுங்கடி. 37

7. —.

8. மூலம். 9. பாடல்கள் ஓசைநயத்துடன் அமைந்துள்ளன. பிழைகள் மிகுந்துள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் கலந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியருக்குக் கும்பமுனி என்ற பெயருமுள்ளது. இலக்கியங்கள் போல மருத்துவ நூல்களும் கும்மி, நொண்டி, பள்ளு எனப் பெயர் பெற்றுள்ளன.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை. ஆயின் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் R.4668 என்ற சுவடியும், R.6078 என்ற சுவடியும் இதே பெயர் கொண்டவை.

VI. இச்சுவடிக்கட்டில் உள்ள பிற நூல்கள் வருமாறு:

1. கருட பஞ்சாட்சரம் (R.238(a)) 1-14 இதழ்கள்
2. இராசியறிதல் முதலியன (R.238(b)) 15-32 இதழ்கள்
3. நட்சத்திரமாலை முதலியன (R.238(c)) 33-34 இதழ்கள்
4. அகத்தியர் 8 (R.238(d)) 35-36 இதழ்கள்
5. அகத்தியர் சூத்திரம் 5 (R.238(e)) 36-37 இதழ்கள்
6. ஸ்தம்பன சக்கர முதலியன (R.238(g)) 43-47 இதழ்கள்
7. நீலகண்ட சாஸ்திரம் (R.238(h)) 48-67 இதழ்கள்
8. இருது நூல் முதலியன (R.238(i)) 67-75 இதழ்கள்
9. சாமுத்திரிகா லக்ஷணம் (R.238(j)) 76-98 இதழ்கள்
10. சோதிடம் (R.238(k)) 99-108 இதழ்கள்
11. கணக்கதிகாரம், உரையுடன் (R 238(l)) 109-139 இதழ்கள்
12. மனைவாஸ்து லக்ஷணம் (R.238(m)) 140-154 இதழ்கள்
13. ஆரூடம் முதலியன (R.238(n)) 160-165 இதழ்கள்
14. மனை சாஸ்திரம் (R.238(o)) 166-172 இதழ்கள்

15. கேதாரேசுவரர் பூசை (R.238(p)) 173-178 இதழ்கள்
16. கேதாரி நோன்பினால் பேறுபெற்ற கதை (238(q)) 179-184 இதழ்கள்

இந்நூல் 40 ஆம் இதழிலிருந்து 42 ஆம் இதழ்வரை உள்ளது. கும்மி என்ற இலக்கிய வகையில் பல நூல்கள் தோன்றிய காலத்தில் மருத்துவக் கும்மிப் பாடல்களும் எழுதி வைக்கப் பெற்றன. இவ்வாறான மருத்துவ நூல்கள் எளிமையாகவும் ஓசை நயத்துடனும் இருந்ததால் மக்களிடம் எளிதாகச் சென்றடைந்தன. அதனால் வீட்டு வைத்தியம் விரைவாக வளர்ந்தது.

அகத்தியர் வைத்தியக் கும்மி 36

I. 1. **494**. 2. அ. R. 4688. ஆ. T.R. 2068. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியக் கும்மி 36. ஆ. Akattiyar vaittiyak kummi 36. இ. அகஷ்தியர் வயித்தியக் கும்மி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 17 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 14; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. கும்மிப் பாடல்கள் (கண்ணிகள்). 15. இல்லை. 16. முழுமை. 17. 36 பாடல்கள்.

ஆ.—.

III. 1. சுர நோய்களையும் அந்நோய்களை நீக்கும் மருந்து முறைகளையும் கூறும்நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் பலவகைச் சுரநோயைப் போக்குவதற்குக் குரிய கீழ்க்கண்ட மருந்துகள் கூறப்பட்டுள்ளன. அவை: பேறாமுட்டி, திப்பிலி மூலம், விட்டுணுகிரந்தி, இலுமிச்சை, பற்படாகம், சிறுதேக்கு, நன்னாரி, உத்தமதாளி, இருவேலி என்பனவாம். இவைகளைக் கூட்டிக் கசாயமிட சுரங்கள் நீங்கம்.

4. —.

5. மானே கும்மி யடியுங்கடி - மட
மாதே கும்மி யடியுங்கடி
தேனே கும்மி யடியுங்கடி - தேசம்
செழிக்கவே கும்மி யடியுங்கடி.

அச்சுக் கடையான பெருச்சாளி - அய்
யன்னத்தின் மேலெ முந்தருளி
இச்சியடியில் வினாயகன் - முன்னே
இசைந்து கும்மி யடியுங்கடி - பெண்ணே. 2

6. பஞ்ச தாரை னால்கழஞ்சி
பருத்த மதுரம் முக்கழஞ்சி
இஞ்சி திப்பிலி இருகழஞ்சி
ஏலந் தானும் முக்கழஞ்சி. 35

அஞ்சுங் கூட்டிப் பொடிசெய்து
ஆவின் பாலில் கொள்வீராய்
மிஞ்சு பித்தம் நாற்பதும்விட்டே
ஓடுமென்றுதான் நீங்கள் சத்தே கும்மியடியுங்கடி. 36

7. —.

8. மூலம். 9. பாடல்கள் ஓசைநயம் கொண்டவை. எளிய நடையில் பாடப் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்திருந்தாலும் குருமுனி வைத்தியக் கும்மி என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு. 11. இல்லை.

IV. 1. R.238(f). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 1 முதல் 7 இதழ்கள் வரை பிரம்மமுனி சூத்திரம் 11 (R.4686) என்ற நூலும், 8 முதல் 17 ஆம் இதழ்கள் வரை மச்சமுனி ஞானம் 30 (R.4687) என்ற நூலும் உள்ளன. அகத்தியர் வைத்தியக் கும்மி என்ற இந்நூல் 18 முதல் 24 ஆம் இதழ்கள் வரை உள்ளது. தேசிய உணர்வுடனும் சில சொல்லாட்சிகள் பயன்படுத்தப் படுவதையும் காண்க.

அகத்தியர் வைத்தியக் கும்மி 43

I. 1. **495**. 2. அ. R. 6078. ஆ. T.R. 2549. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியக் கும்மி 43. ஆ. Akattiyar vaittiyak kummi 43. இ. அகஸ்தியர் வைத்தியக் கும்மி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர்சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 16 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை.

10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 17; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. கும்மிப் பாடல்கள் (கண்ணிகள்). 15. இல்லை. 16. முழுமை. 17. 43 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சில நோய்களுக்கு மருந்தும் அவை செய்முறையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் சில சரும நோய்கள், சுரநோய்கள், தோசங்கள் தீர மருந்துகளும், அம் மருந்துகள் செய்முறைகளும் விளக்கமாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன.

4. —.

5. வையஞ் செழிக்கக் குறுமுனிவரின்
வைத்தியக் கும்மித் தமிழ்ப்பாட
கையெந்து கரனாங்கு புயநிரு
காலன் கணபதி காப்பாமே. 1

6. பத்தியமன் றிப்பெரியோர்கள் சொன்ன
பாகமறிந் தமுர்தங் கொடுத்தாய்
சத்தியம்நோய் தீருமா மொன்பத்தஞ்சு கண்ணி
சாற்றினேன் முற்றுஞ் சம்பூரணமே. 43

7. ராமசெயம். அகத்தீசர் வயித்தியக் கும்மி முற்றும். ராமசெயம்.

8. மூலம். 9. எளிய நடையிலமைந்த கும்மிப் பாடல்கள். 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். 45 கண்ணிகள் கொண்டதாகத் தெரிகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் உள்ள பிறநூல்கள்:

1. திரிபுரமாலை (R.6079) 10-27 இதழ்கள்
2. சுப்பிரமணியர் அகத்தியர்க்கு உபதேசித்த விஞ்சை (R.6079(a)) 28-39 இதழ்கள்
3. கணபதி மந்திரங்கள் (R.6079(b)) 40-53 இதழ்கள்
4. சுப்பிரமணியமாலை (R.6079(c) 54-62 இதழ்கள்

இந்நூல் முதல் ஓலை முதல் ஒன்பதாம் ஓலை வரை உள்ளது.

அகத்தியர் வைத்திய சரக்கு அகராதி

I. 1. **496**. 2. அ. R. 1816. ஆ. T.R. 1039. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சரக்கு அகராதி. ஆ. Akattiyar vaittiya carakku akarāti. இ. அகத்தியர் அகராதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 34 x 5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப் பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 20; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 15 வரிகள். 14. உரைநடை.15. இல்லை. 16. முழுமை. 17. 300 வரிகள்.

ஆ. —.

III. 1. அகர வரிசையிலும் பொருள் அடிப்படையிலும் மருத்துவச் சொற்களுக்குப் பொருள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் இரும்பு - கருஞ்சீரகம், இந்து - பச்சைக் கற்பூரம், உரிதாரம் - அரிதாரம் என்பன போன்ற பல்வேறு மருத்துவக் கலைச் சொற்களுக்கு அகராதி முறையில் விளக்கம் தருகின்றது. மேலும் பல மருத்துவ மூலிகைகள், சரக்குகள் முதலிய அருஞ் சொற்களுக்குப் பொருள் கூறியும் அமைகிறது.

4. —.

5.
அடயன்	–	கடுக்காய்
அரிதக்கி	–	கடுக்காய்
அமுர்தம்	–	கடுக்காய்
அந்தன	–	கடுக்காய்
அரீசக்கி	–	கடுக்காய்
அகறான்	–	தான்றிக்காய்
அருக்கம்	–	சுக்கு
அருட்டம்	–	மிளகு
அருட்டி	–	மிளகு
அடம்	–	அதிமதுரம்

6.
நற்பால்	–	ஆலம்பால்
கோளம்	–	ஆலம்பால்
வாலுருவை	–	கம்புலிப்பி
னீலஞ்சோதி	–	திருகுகள்ளி
நாகு	–	திருகுகள்ளி

7. அகராதி முற்றும்.

8. மூலம். 9. மருத்துவக் கலைச்சொற்கள் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன. பரிபாசைச் சொற்களின் பொருட்பெயர்கள் எளியதாகவும், எல்லோருக்கும் தெரிந்ததாகவும் கூறப் பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்ற நூல். வைத்திய சரக்கு அல்லது வைத்திய அகராதி என்றும் பெயருண்டு. 11. இல்லை.

IV. 1. R. 192. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் மருத்துவச் செய்யுள் நூல்களைப் படித்தறிய நன்கு பயன்படும். இந்நூலில் மருந்து செய்தற்குரிய பொருள்களின் பெயர்கள் அகர வரிசையில் எழுதப் பெற்றுள்ளன. அவற்றுக்கு நேர் எதிரில் பொருள் விளக்கமும் தரப்பெற்றுள்ளது. இது தற்கால அகராதி (dictionary) முறையைப் போன்றதாகும். இந்நூல் வைத்திய அகராதி என (R.192(g)) இல் வந்துள்ளது.

அகத்தியர் வைத்திய சாரம்

I. 1. **497**. 2. அ. R. 3410. ஆ. T.R. 1732. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சாரம். ஆ. Akattiyar vaittiya cāram. இ. அகஸ்தியமூலர் அருளிச் செய்த வைத்திய சாரம். 4. —. 5. —. 6. —. 7.—. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. டாக்டர் டேவிட், அரசரடி, மதுரை. 10. கி.பி.1951-52.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 31. 5. 32 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 62; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 126 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவச் செய்திகளின் சாரங்களாகச் சில செய்திகளும், அறிவுரைகளும்கூறப்பெற்றுள்ளன. 2. மருத்துவம். 3. இந்நூலில் வைத்தியம் பார்க்கப்படாதவர்கள் யார் யார் என்றும், வாதம், பித்தம், சிலேட்டுமம் முதலானவைகளின் குணங்களும் கூறப்பெற்றுள்ளன.

4. அகஸ்திய மூலர் அருளிச்செய்த வைத்திய சாரம். கணபதி துதி வெண்பா.

சொல்லிய வயித்தியசாரம் சுருக்க முப்பத்தாறும்
அல்லும் பகலு மறிவுரை - நல்ல
குணபதியாம் பூரணத்திற் கூடியே வாழும்
கணபதியின் பாதமலர் காப்பு.

5. அன்னியதா ரத்தாசை கொள்வோன் வஞ்சக
னாலுகஞ்சா கள்ளுலோடி பிலுண்போன் றீமை
துன்னியசூ னியக்காரன் சண்டைக் காரன்
துரும்புகிள்ளி விருந்துண்பான் திருடன் துஷ்டன்
குன்னியநித் திரைமிகுந்தோன் கொடாத லோபி
குணமில்லான் மதியில்லான் மான மில்லான்
பன்னியபண் டிதர்பகைஞன் செவிட னூமை
பாசுமரி யானைப்பார்க் கத்தான் தோணாதே. 1

6. வியாதிகள் போக வெகு நாட்டமுற
வியாதி நரைதிரை பாங்காத்த விரைந்திடக்
கயாதிக் கவுனங் கலந்தே பூஞ்சுற்றிட
அயாதியா ஞான மஞ்சாகுஞ் சித்தியே. 126

7. முற்றிற்று. நந்திசுவாமியார் துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. எழுத்துப்பிழைகள் மிகுதி. 10. அகத்தியருக்கு 'அகத்தியர் மூலர்' என்ற பெயருள்ளது தெரிகிறது. இந்நூலின் இறுதியில் 'திருமூல நாயனார் அருளிச்செய்த குணவாகடம் முற்றிற்று' என வருதல் காண்க. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1.இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் வைத்திய சாகரம் 41', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இதுபோன்ற வேறு நூலினைத் தாமரை நூலகம் பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை என்ற நூலில் 'அகத்தியர் வைத்திய சாகரம் 41 என்ற பெயரில் பதிப்பித்துள்ளது. இப்பதிப்பில் பாடல் எண்ணிக்கை வேறுபாடுடையதாகவும், பாடல்களில் பாடவேறுபாடுகள் நிறைந்தும் உள்ளன.

அகத்தியர் வைத்திய சிந்தாமணி

I. 1. **498**. ஆ. R. 4731. ஆ. T.R. 2086. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சிந்தாமணி. ஆ. Akattiyar vaittiya cintāmaṇi. இ. அகஸ்தியர் வைத்திய சிந்தாமணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. எல். பரமசிவம்பிள்ளை, கவரைப்பட்டி, திருச்சி. 10. கி.பி.1953-54.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 225. 5. 29x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 450; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. உரைநடை. 15. இல்லை. 16. முழுமை. 17. ஏறத்தாழ 2250 வரிகள்.

ஆ. —.

III. 1. பலவகை நோய்களுக்குரிய மருந்துகளும் அவை செய்யும் முறைகளும் கூறப்பெற்றுள்ளன. 2. மருத்துவம். 3. இந்நூலில் வாதசுரம், பித்தசுரம், சிலேத்தும சுரம் ஆகிய சுரங்களுக்குக் கசாயம் தயாரிக்கும் முறை, விச சுரத்துக்கு, சன்னிக்கு, மூடுசன்னி குணம், காச்சலுக்குக் கசாயம், சன்னி பதின்மூன்றுக்கும் குளிகை, சன்னிக்கு அஞ்சனம், சுரத்துக்குக் குளிகை, வண்டுகடி புண்ணுக்குக் குடிமருந்து, கண் வெள்ளைக்கு அரக்கெண்ணெய், அசுவகெந்தி இலேகியம், தாளிசபத்திரி சூரணம், நாவல் நெய், வங்கசெந்தூரம், இருமலுக்கு, பிள்ளையுண்டாக மருந்து என்பன கூறப்பட்டுள்ளன. பிள்ளை உண்டாக மருந்து வருமாறு: இந்திரகோபப்பூச்சிலையை உலர்த்திப் பொடி செய்து பசுவின் பாலில் மூன்று நாள் கொடுக்க, பிள்ளை உண்டாம். வேறு மருந்து வருமாறு: பூமிசக்கரைக்கிழங்கை அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்க பிள்ளையுண்டாம். இவ்வாறு பலவகை நோய்களுக்குப் பல மருந்துகளும் அவை செய்யும் முறைகளும் கூறப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க குருவே துணை.

5. **வாத சுரத்துக்கு, பித்த சுரத்துக்கு:** வேலிப்பருத்தி வேர் தழிஞ்சி வேர் திப்பிலி சுக்கு விஷ்ணுகரந்தி இது கசாயம். வேறு: ஆலம் விழுது வெட்டிவேர் மஞ்சள் நீலிதழிஞ்சி சுக்கு இது கசாயம் பண்ணி குடுக்கவும். வேறு: திப்பிலி

மூலம் செவ்வியம் வாய்விளங்கம் சுக்கு இது கசாயம் பண்ணிக் குடுக்க வாத சுரம் தீரும். பித்த சுரத்துக்கு கசாயம்: பாசிப்பயிறு வெட்டிவேர் பேராமுட்டி சித்தாமுட்டி சுக்கு சீரகம் சீந்தி தண்டு வள்ளி கோரைக்கிழங்கு இது கசாயம் பண்ணிக் குடுக்க பித்த சுரந் தீரும்.

6. **சீரகத் தயிலம்:** சீரகம் படி-2 இடித்து பதக்கு நீரில் போட்டு எட்டொன்றாய்க் குறுக்கியெடுத்துக் கொண்டு அதில் நல்லெண்ணெய்ப் படி 1 கார்போக அரிசி பலம்-2 பச்சைக் கருகப்பிலை பலம்-1 வெள்ளுள்ளி ரசம் பலம்-1 கல்கண்டு பலம்-1 மிளகு பலம்-1 ஆவின் பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளுகிறது.

7. —.

8. மூலம். 9. பேச்சுவழக்குச் சொற்கள் மலிந்த நடை. பிழைகளும் வடமொழி எழுத்துக்கள் கலப்புமுள்ளன. பலம் என்பது குறியீட்டில் காட்டப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளதாயினும், தற்கால உரைநடையில் அமைந்த நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் மூவருட விளக்க அட்டவணை R 163(d) இல் 'அகத்தியர் பச்சை 16' என்ற பெயரில் வந்துள்ளதைப் போன்றதாகும். இந்நூலில் பற்ப முறைகள் விளக்கப் பட்டுள்ளன.

அகத்தியர் வைத்திய செந்தூரம் 300

I. 1. **499**. 2. அ. D. 2419. ஆ. T.D.946. இ. R.No. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய செந்தூரம் 300. ஆ. Akattiyar vaittiya centūram 300. இ. அகஸ்திய சுவாமியருளிச் செய்த சூத்திரம் - செந்தூரமுறை முன்னூறு வயித்திய சிரோமணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஒரளவு தெளிவு. சிறிய கையெழுத்து. 4. 44. 5. 49 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11 சிறுசிதைவு. 12. 87; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்

பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 301 பாடல்கள்.

ஆ. 1. 30 x 23 செ.மீ. 2. 104 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. தெளிவான கையெழுத்து. 5. 5-6-1955. 6. சந்திரமௌலீஸ்வரன். 7. —. 8. கி.பி.1955-56 இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III 1. பலவகை நோய்களுக்குரிய செந்தூர மருந்துப் பொருள்கள் தயாரிப்பும் அந்நோய்களைக் குணமாக்கும் முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் பலவகைச் செந்தூர வகைகள், பற்ப வகைகள், இலேகிய வகைகள் குறிப்பிடப்படுகின்றன. செந்தூரங்களாவன: ஆண்டச் செந்தூரம், இரசவங்கச் செந்தூரம், இலிங்கச் செந்தூரம், காந்தச் செந்தூரம், சலகாசத்துச் செந்தூரம். செயசெந்தூரம், துய்யானச் செந்தூரம், நாகசெந்தூரம், நாகலோக செந்தூரம், நிமிகளச் செந்தூரம், பதங்கச் செந்தூரம், பவளவங்கச் செந்தூரம், பொன்னி மிளைச்செந்தூரம், மண்டூரச் செந்தூரம், முத்துச் செந்தூரம், வெண்கலச் செந்தூரம், வெள்ளீய செந்தூரம், வெள்ளை வங்கச் செந்தூரம் போன்ற செந்தூரங்களின் தயாரிப்பும், பயன்பாடும் கூறப்படுகின்றன. மேலும், இவற்றுடன் நாகபற்பம், அயக்காந்த பற்பம், கற்பூர சீலாசத்து, சூதபற்பம், அப்பிரகச்சத்து, குட்டம் நீங்கத் தைலம், தாளகபற்பம், சூதபற்பம், கந்தக பற்பம், தாமிர பற்பம், தங்க பற்பம், நாக பற்பம், வைர பற்பம், முத்துப் பற்பம் போன்ற பற்ப வகைகள் தயாரிக்கும் முறையும் பயனும் கூறப்படுகின்றன. இலேகிய வகைகளாக, ஆடாதோடை இலேகியம், அமுத சர்க்கரை இலேகியம், நவசிந்தாமணி இலேகியம், நவலோகம், பேதிக்கு இலேகியம், அமுத சஞ்சீவி இலேகியம், வேப்பம்பட்டை இலேகியம் போன்ற இலேகிய வகைகள் கூறப்படுகின்றன. வாதம், பித்தம், சிலேற்பனத்தால் வரும் நோய்களுக்குரிய மருந்துகள், தைலங்கள் தயாரிப்பும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளது. சில செந்தூர வகைகளின் தயாரிப்பும் தரப்பெற்றுள்ளது.

4. —.

5. பூதலத்திற் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவனே யையா
மாதவத்தால் அட்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்திநூல் வகையாச் சொல்வேன்

போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட் டானை
புழுக்குழியில் வீழ்ந்தானைப் புதல்வன் றன்னைச்
சாதகமாய் மனமடக்கி யறிவிற் கூடி
தற்பரமாய் நின்றகண பதிகாப் பாமே. 1

6. மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
மூடினால் வடுகனங்கே நிர்த்தஞ் செய்வான்
ஆலத்தின் குண்டலிக்குள் ஆடிப் பாரு
ஆசையவன் வைப்பதற்கு வடமாலை சாத்து
சீலத்தில் நந்தியுட பூசை பண்ணு
சேகண்டி நாதவொலி மணியி னோசை
காலத்தில் கருவறிந்து பூசை தீர்ந்தால்
கைக்குள்ளாம் வயித்திய முன்னூறு முற்றே. 301

7. —.

8. மூலம். *9.* பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. பாடபேதங்களும் காணப்படுகின்றன. ஆணவம்-ஆணுவம் எனவும், நர்த்தம்-நிர்த்தம் எனவும் சில சொற்கள் திரிதல் காண்க. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். நந்தி உபதேசித்ததாகக் கூறப் பெறுகின்றது. அகத்தியர் பெயரிலன்றி வேறு சித்தர்கள் பெயரிலும் செந்தூரம் செய்யும்முறை பாடப்பெற்றுள்ளது. *11.* சோபகிருது வருசம் சித்திரை மாதம் 14 ஆம் தேதி எழுதி நிறைவேறியது. சிவகுருவே நம.

IV. *1.* D. 1893, R. 149(c), R. 3614(a), R. 3696, R. 3728, R. 4455(a), R. 4492, R. 4776(a), R. 8803, R. 9054, R. 9250, R. 9251. *2.* ஆ.நி.எண் 416(c), சி.ம.மை.ஆ.நி.எண்கள் 187(a), 480, 517, 522(a), 569(a), 616(a), 661, 751(k), 786(a), 790(b), 864, 868(b), 958, 1133(b), 1377, உ.த.நி.எண்கள் *183: 383, 562:908*, த.ச.ம.நூ. எண்கள் 235(a), 251(b), 366(b), 433(c), 439(a), 455. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* (i). கருணானந்த சுவாமி (பதி.), 'அகத்தியர் செந்தூரம் *300*', பிரபாகர அச்சுக்கூடம், சென்னை, *1865*. (ii). இரத்தின நாயகர் & சன்ஸ் (பதி.), 'அகத்தியர் வைத்திய செந்தூரம் *300*', சென்னை, *1992*. *3.* இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் செந்தூரம் 300, அகத்தியர் வைத்திய சூத்திரம் 300, அகத்தியர் வைத்திய செந்தூரம் 300, அகத்தியர்

வாகடம் 300 எனும் பெயர்களிலும் வழங்கப்படுகின்றது. பழைய பதிப்பு இப்போது கிடைப்பதில்லை. புதிய பதிப்புகளை இரத்தினநாயகர் அண்ட் சன்ஸ், தாமரை நூலகம் எனும் வெளியீட்டு நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன.

அகத்தியர் வைத்திய செந்தூரம் 300

I. *1.* **500.** *2.* அ. D. 1893. ஆ. T.D. 746. இ —. ஈ. —. *3.* அ. அகத்தியர் வாகட சூத்திரம் 300. ஆ. Akattiyar vākaṭa cūttiram 300. இ. அகஷ்த்தியர் வாகட சூத்திரம் 300. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* தனிக்கட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 68. 5.* 22 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* வர்ணக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 136;* இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. மூன்று வகையான கையெழுத்து. *13.* பக்கத்திற்கு *10* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 300 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* பலவகை நோய்களுக்குரிய செந்தூர மருந்துப் பொருள்கள் தயாரிப்பும் அந்நோய்களைக் குணமாக்கும் முறைகளும் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* வரிசை எண் 499 போன்றது.

4. —.

5. பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தின் அட்டசக்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியநூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட் டானைப்
புழுக்குழியில் விழுந்தானைப் புதல்வன் றன்னைச்
சாதகமாய் மனமடங்கி அறிவிற் கூடித்
தற்பரனாய் நின்றகண பதியே காப்பு. 1

6. மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
மூட்டினால் வடுகனங்கே நிருத்தஞ் செய்வான்
ஆலத்தின் குண்டலிக்குள் ளாடிப் பாரு
ஆசையவன் வைப்பதற்கு வடைமாலை சாற்று

சீலத்தின் நந்தியுட பூசை பண்ணு
